

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

தருமையாதீனம் ஆறுவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருமூர்த்த நூதன ஆலய

# மகாகும்பாபிஷேக மலர்

குரோதி ஆண்டு ஆவணித்திங்கள் 6 ஆம் நாள்

21—8—1964.

வெளியீடு எண். 557

உ

குருபாதம்

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்

அருளிச்செய்த

# கந்த புராணச் சுருக்கம்

இது

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவுளப்பாங்கின்வண்ணம் வெளியிடப்பெற்றது.

தருமையாதீனம்

1964

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ

குருபாதம்

# முன்னுரை

உண்மை அறிவு ஆனந்தமே உருவமாகிய இறைவனது பொருள்சேர் புகழை, யாவரும் உணர்ந்து உய்யும் வண்ணம் எடுத்தோதுவன புராணங்கள். அவை, 'பதினெட்டு' என்னும் வரையறையை உடையன. பதினெண் புராணங்களிலும் பொதுவாகச் சிவபிரானது புகழே பேசப் படுவதாயினும், அதனைச் சிறப்பாகக் கூறும் சிவபுராணங்கள் பத்து. அவைகளில் ஸ்காந்தம் என்பது, முருகன் பெருமையையும் உடன் விளக்கும் தனிச் சிறப்பையுடையது. அதனைத் தமிழில், 'கந்த புராணம்' எனப் பெயரிட்டுப் பதினாயிரம் செய்யுட்களுக்கு மேலான பெருங்காப்பியமாக, ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்தார்கள்.

வேதம், வேதாந்தம், சிவாகமம், பதினெண் புராணங்கள் இவை எல்லாவற்றினும் அறியத்தக்க அரும்பொருள்கள் யாவும் கந்த புராணம் ஒன்றிலே அறியலாகும். 'எந்தப் பொருளும் கந்த புராணத்தில் உண்டு' என்பது பழமொழி. சிறப்பாகத் திருமுறைகளில் சிவபிரானது பெருமைகளை விளக்குவனவாகக் குறிப்பிடப்பெறும் வரலாறுகளைக் கந்த புராணம் வாயிலாகவே நாம் செம்மைபெற உணரமுடியும்.

மற்றும், புறச்சமயிகள் கற்பித்துக் கூறுகின்ற கூற்றுக்களால் ஐயுறுது சிவபரத்துவத்தை இனிதுணர்ந்து சிவஞானத்தை எய்துதற்கு உற்ற துணையாய் நிற்பதும் கந்த புராணமே. இதனை,

" தேவரில் ஒருவர் என்பர் திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்ற தோரார் முதலுருப் பாதி மாதர்
ஆவது முணரார் ஆதி அரியயற் காக நீண்ட
மேவரு நிலையு மோரார் அவனுரு விளைவு மோரார் "

" கண்ணுதல் யோகி ருப்பக் காமன்நின் றிடவேட் கைக்கு
விண்ணுறு தேவ ராதி மெலிந்தமை ஓரார் மால்தான்
எண்ணிவேள் மதனை வேவ எரிவிழித் திமவான் பெற்ற
பெண்ணினைப் புணர்ந் துயிர்க்குப் பேரின்பம் அளித்த
தோரார் "

( சிவஞான சித்தியார் )

என்றாற்போலச் சாத்திரங்களில் எடுத்துக் காட்டப்படும் செய்திகளால் நன்குணரலாம். இன்னோரன்ன பல பெருமைகளைக் கருதிக் கந்த புராணத்தினை, 'புராணவரசு' எனப் போற்றிப் புகழ்கின்றனர் அறிஞர்.

இத்தகைய பெருநிலையை உடைய கந்த புராணத்தின் சிற்சில பகுதிகளைத் திருத்தருமையாதீனத் திருக்கூட்டத்து அடியார்களுள் ஒருவராகிய ஸ்ரீ சம்பந்த சரணுலய சுவாமிகள் எடுத்து விளக்கக் கேட்ட மைசூர் மன்னர், அதில் மிகவும் ஈடுபட்டு, 'இந்நூல் மிக விரிவுடையதாய் இருத்தலின், எம்போலியர்க்குப் பயன்படுமாறு இதனைச் சுருக்கிச் செய்தருளல் வேண்டும்' என்று அச் சுவாமிகளையே

வேண்டிக்கொள்ள, அவர்கள் உளமகிழ்ந்து, சுருக்கிப் பாடியருளியதே, 'கந்த புராணச் சுருக்கம்' என்னும் நூல்.

கந்த புராணச் சுருக்கத்தின் ஆசிரியர் வரலாறு, நூலின் நயங்கள் முதலியன இப்பதிப்பின்கண் தரப்பெற்றுள்ளன. ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள், திருத்தருமையாதீனம் ஆறுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெற்றவர் களாதலின், அக் குருமூர்த்த நூதன ஆலய மகாகும்பாபிஷேக மலராக, இவ்வாதீனம் இருபத்தைந்தாவது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள் திருவுளப் பாங்கின் வண்ணம் வெளிவருகின்றது. அக் குருமூர்த்திகள் வரலாறும் முதற்கண் தரப்பெற்றுள்ளது.

ஆறுவது குருமகாசந்நிதானத்தின் வாயிலாகப் பல அற்புதச் செயல்கள் திருவருளால் நிகழ்ந்துள்ளன. அங்ஙனமே மைசூர் மன்னர் வேண்டுகோளின்படி பாடியருளப் பெற்ற இந்நூல், இன்றும் மைசூர் மன்னர் நம் மாநிலத்து ஆளுநராக வந்து ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்களது அருளாசியைப் பெற்றஞான்று திருவருளால் வெளிவருவது அற்புதமே. இக்குருமூர்த்திகள்மீது ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் பாடிய சிகாரத்ன மாலையும் தரப்பெற்றிருப்பது இப்பதிப்பிற்குச் சிறப்புத் தருவதாகும்.

கந்த புராணப் பெருங்கடலை முற்றும் பருகிய ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகளாகிய குறுமுனிவரது கந்த புராணச் சுருக்க நூல், சைவ நன்மக்களிடையே ஒரு

பாராயண நூலாய் விளங்கிவருவது. ஐப்பசித் திங்களில் வரும் மகாசஷ்டி விரத நாட்களாகிய ஆறு தினங்களிலும் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியரது கந்த புராணத்தைப் பாராயணம் செய்பவர்கள் மாதந்தோறும் வரும் சஷ்டி நாட்களில் கந்த புராணச் சுருக்க நூலையே பாராயணம் செய்வது மரபு. முருகன் திருவருளுக்கு உறைவிடமாகிய இந்நூலை வெளியிடத் திருவருள் பாலித்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் கருணைத் திறத்திற்குச் சைவ உலகமும், தமிழுலகமும் கடப்பாடுடையன.

இவ்வுயரிய நூலை அன்பர்கள் பலரும் பெற்றுப் பயன் எய்துவார்களாக.

இங்ஙனம்,

ஒடுக்கம்

தருமையாதீனம்
21—8—1964

வித்துவான். சோமசுந்தரத் தம்பிரான்.

உ

குருபாதம்

# கந்த புராணச் சுருக்கம்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை .... .... | v |
| 2. | ஆறுவது குருமகாசந்நிதானம் அவர்கள் அருள் வரலாறு .... .... | xi |
| 3. | ஸ்ரீ சம்பந்தசரணலய சுவாமிகள் வரலாறு | xvi |
| 4. | சிகாரத்ன மாலை .... .... | xxvi |
| 5. | கந்த புராணச் சுருக்கம் | |
| | பாயிரம் .... .... | 1 |
| | புராணவரலாறு .... .... | 6 |
| | உற்பத்தி காண்டம் .... .... | 12 |
| | அசுர காண்டம் .... .... | 49 |
| | மகேந்திர காண்டம் .... .... | 92 |
| | யுத்த காண்டம் .... .... | 115 |
| | தேவ காண்டம் .... .... | 190 |
| | தக்ஷ காண்டம் ... ... | 200 |
| 6. | செய்யுள் அகராதி .... .... | 257 |

குருபாதம்

தருமையாதீனம் ஆருவது குருமகாசந்நிதானம்

*ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக*
*பரமாசாரிய சுவாமிகள்*

# அருள் வரலாறு

வெய்யவனும் அயல்வழியை நினைந்தேக வுயர்வேலன்
விலங்கல் தன்னிற்
செய்யதிரு வள்ளியம்மை யில்லையோ வென்னவவள்
சிரத்தை நீட்டி
வையமறிந் திடவிருக்கின் றேனென்ற மொழிகேட்டு
மகிழ்ந்து நின்ற
தூய்யவனுந் தருமைவரு திருஞான சம்பந்தன்
துணைத்தாள் போற்றி.

சிவன்எனும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி எம்மானது திருக்கோயில்கள் பல சிறந்து விளங்கும் சோழநாட்டின்கண் காவிரியின் தென்கரையில் மாயூரத் திற்குக்கிழக்கே விளங்குவது தருமபுரம் என்னும் தலம். முற்பிறப்பில் தாம் பூஜித்து வந்த ஆன்மார்த்த மூர்த்தி யாகிய சொக்கலிங்கப்பெருமானை மதுரைப் பொற்று மரைத் தீர்த்தத்திலிருந்து கைவரப் பெற்ற ஸ்ரீகுருஞான சம்பந்த தேசிக சுவாமிகள், ஆலவாய்ப் பெருமான் அருளாணையின் வண்ணமே கமலை ஞானப்பிரகாச தேசிகர்பால் அருளுபதேசமும், ஆன்மார்த்த வழிபாடும்

பேற்று, அவரது கட்டளைப்படியே போந்து ஆச்சிரமம் அமைத்துச் சோக்கலிங்க மூர்த்தியை வழிபட்டுக் கொண்டு ஆதிபரமாசாரிய மூர்த்திகளாய் வீற்றிருந் தருளிய ஞானபீடம், என்றும் வழிவழியாய் நின்று நிலவி வருவது இத்திருத்தலம்.

இவ்வாதீனத்தின் ஆறுவது குருமகாசந்நிதானமாய் விளங்கியவர்கள் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவர்கள் காலத்தில் தருமை யில் சொக்கநாதர் பூசை மடத்தின் பின்புள்ள சோடச கலாப் பிராசாத யோகத்துக்குரிய பதினாறுகட்டும் மிக்க சிறப்பைப் பெற்றது. இக்குருமூர்த்திகள் தங்கள் அடியார்களுடைய வேண்டுகோளுக்கிணங்கிச் சிவதல யாத்திரையை மேற்கொண்டு சென்று திருநெல்வேலியில் உள்ள சிந்துபூந்துறையில் தங்கியிருந்தார்கள். அப் பொழுது அங்குள்ள 'அறச்சாலை' என்னும் மடத்திற்குச் சிதம்பரம் குகைமடத்து ஞானப்பிரகாசரிடம் உபதேசம் பெற்ற ஆன்மானந்தவாதியான பெரும்புலவர் ஒருவர் தலைவராய் இருந்தார்.

தருமையாதீன முதற்குரவராகிய ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளிய 'முத்தி நிச்சயம்' என்னும் நூலுக்கு மறுப்பு எழுதினவர் அப் புலவர். ஆயினும் அவற்றாலெல்லாம் அவருக்கு மன அமைதி கைகூடவில்லை. அவர் இக்குருமூர்த்திகளைக் கண்டதும் மனோலயம் வரப்பெற்று, இவர்களது திருவடி களில் வீழ்ந்து, தம் பிழையைப்பொறுத்து ஆட்கொள்ளு மாறு வேண்டினார். குருமூர்த்திகள் அவருக்குச்

சித்தாந்தமுத்தி ஞானத்தை உபதேசித்து, 'தமிழாகரர்' என்று தீட்சாநாமம் வழங்கி ஆட்கொண்டருளினார்கள்

இக்குருமூர்த்திகள் மற்றைய தலங்களை வணங்கிச் சென்று வேள்வி மலையை (குமரகோவிலை) அடைந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானை வணங்கிய பொழுது, வள்ளியம்மையாரது திருவுருவம் தமது கண்ணிற்கு இலக்காகாமையால், 'இங்கு வள்ளித்தாய் இல்லையோ' என்றார்கள். முருகப்பெருமான், "திரு முன்னிற்கும் சம்பந்தனுக்கருள்செய்" என்றருளியபடி, 'இதோ இருக்கின்றேன்' என்று சொல்லித் திருமேனியை வளைத்து வள்ளியம்மையார் தமது அருட்காட்சியை வழங்கியருளினார். இத்தலத்தில் வள்ளி நாயகியாரது திருவுருவம் இப்பொழுதும் இந்தத் திருக்கோலத்திலே இருத்தல் காணலாம்.

"உம்பர்பணி யாரூர னருளினா லானந்த
ஒளிவடிவ மானகுரவன்
ஒருசெந்தி லம்பதியி லுன்னருளி னாற்பாடும்
உயர்குமர குருபரமுனிக்
கம்புயத் தாள்சென்னி சூடினேன் எலிபூனை
அரவுபோத் துக்குயில்கிளி
அத்துவித மாகவே சத்திநிரு வாணமெனும்
அருள்ஞான தீட்சைசெய்தோன்
எம்பவ மகற்றினோ னெண்ணிலா அடியவரை
இன்பவா ரிதியில்வைத்தோன்
எழில்வேள்வி மலையிலோ ரம்மையெங் கேயென்
றியம்பியே திருமுனிற்கும்

சம்பந்த னுக்கருள்செ யென்றுவள் ளிக்கருள்செய்
சைவநா யகன்வருகவே
தருமையம் பதிமுருக ஒருநாலு பாதமுந்
தருகுமர குருவருகவே. "

என்னும் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ் இவ்வற்புதத்தை இனிது விளக்குகின்றது.

வடமொழி, தென்மொழி இருமொழிகளிலும் வல்லவராய், திருச்செந்தூர்ச் சிந்துபூந்துறையில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிக்குப் பேரிலக்கணங்களை உணர்த்தி, அவரைக்கொண்டு திருச்செந்தில் நிரோட்டக யமக அந்தாதியைப் பாடுவித்து, ஆதீன முதற்குரவர் அருளிய முத்தி நிச்சயத்திற்குப் பேருரை, மற்றும் ஞானவரணவிளக்க பாடியம் முதலியவற்றை ஆக்கிய வெள்ளியம்பலவாண முனிவருடன் ஒன்றாய் இருந்து குமரகுருபரசுவாமிகளிடம் கல்வி பயின்ற படிக்காசு தம்பிரான் இவ் ஆறாவது மகாசந்நிதானத்தில் சைவ சந்நியாசம் பெற்றவர்கள். இப்படிக்காசு தம்பிரான் சுவாமிகளது தமிழ்ப் பாடல்கள், 'வரைந்த ஏட்டைத் தொட்டாலும் கை மணக்கும்; சொன்னாலும் வாய் மணக்கும்' என்பர் தமிழறிஞர். இத்தம்பிரான்சுவாமிகள் வேளூர்க் கட்டளை விசாரணையில் இருந்தபோது எழுதிய நூல் 'புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகமாகும்'

இக் கந்தபுராணச் சுருக்கத்தைப் பாடியருளிய ஸ்ரீ சம்பந்தசரணாலய சுவாமிகள் வெள்ளியம்பலவாண

முனிவரிடம் கல்வி கற்று இவ் ஆறாவது குருமூர்த்திகளிடம் ஞானோபதேசம் பெற்றவர்களே. இவர்கள் வரலாறு தனியே தரப்பெற்றுள்ளது.

இவ்வாறு சிறந்த சிவதல யாத்திரைகளைச் செய்தவர்களும், தெய்வத் தமிழ்க் கலைஞர்கள் பலரை உருவாக்கியவர்களும், அற்புதங்கள் பலவற்றை நிகழ்த்தியருளியவர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ திருஞான சம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தருமையாதீனத்தின் ஞானபீடத்தை அலங்கரித்திருந்து; தமக்குப்பின் ஸ்ரீ திருவம்பல தேசிகரிடத்தில் ஞானபீடத்தை ஒப்புவித்து சுத்தாத்வைத சித்தாந்த முத்திநிலை கூடியருளினார்கள்.

குருபாதம்

# ஸ்ரீ சம்பந்த சரணுலய சுவாமிகள் வரலாறு

அமிழ்தினும் இனிய நம் தமிழ்மொழி வழங்கும் நாட்டை ஆண்ட அரசர் மூவரும் சிவனடி வணங்கும் சீரியோரே. அதனால், அவர்கள் காலத்தில் தமிழும், சைவமும் தழைத்தினிது ஓங்கின. இடைக்காலத்தில் இந் நிலை சிறிது மாறியபோதிலும், சைவ சமயாசாரியர்கள் தோன்றி, அம்மாற்றத்தினை அடியோடு களைந்து, தமிழகத்தினைப் பண்டுபோலவே வாழச்செய்து சென்றார்கள். அவர்களது அருள்நெறியினைப் பிற்காலச் சோழர்கள் பெரிதும் போற்றி வளர்த்தார்கள்.

வேற்று நாட்டவர் நுழைவால் தமிழ் வேந்தர்களும் மறைந்து, தமிழ்மொழியும் கேட்பாரற்ற நிலையை எய்திய காலத்தில் தமிழையும், சைவத்தையும் ஒருங்கு காத்து, இன்றுகாறும் மக்கட்குப் பயன்பட வழங்கிவரும் மாபெரு நிலையங்கள், சைவ ஆதீனங்களாகிய மடாலயங்களே.

தொல்காப்பியம் முதலாக, இலக்கண விளக்கம் ஈறாக உள்ள இலக்கண நூல்கள், பாட்டும் தொகையும் முதலாக பல பிரபந்த வகைகள் ஈறாக உள்ள இலக்கியங்கள், திருக்குறள் முதலாக நீதிநெறி விளக்கம் ஈறாக உள்ள பொதுநூல்கள், திருமுறை சாத்திரங்கள் முதலாக, பண்டார சாத்திரங்கள் ஈறாக உள்ள சிறப்பு நூல்கள், சாத்திரங்களின் சிற்றுரை பேருரைகள் முதலிய எல்லா நூல்களின் கருவூலங்கள் சைவ மடாலயங்களே.



தருமையாதீனம் ஆறுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

குருமூர்த்த நாதன ஆலயம்

சைவ ஆதீனங்களின் திருக்கூட்டத்து முனிவர்கள் பலர் தங்கள் குருமகாசந்நிதானங்களின் அருள்வழி நின்று தமிழையும், சிவநெறியையும் பல்லாற்றானும் பலவிடத்தும் பரப்பினர். அவர்களுள், ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள், கச்சியப்ப சிவாசாரியார் பதினாயிரம் செய்யுட்களில் இயற்றியருளிய பெருங் காப்பியமாகிய கந்த புராணத்தை ஒரு சிறுபகுதியையும் விடாமல் ஆயிரம் செய்யுட்களில் தமிழ்ச்சுவை ததும்பப் பாடியருளினார்கள் என்றால், இவர்களது புலமையையும், வாக்கு வன்மையையும் நாம் எவ்வாறு அளவிட்டுச் சொல்ல இயலும்

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள், தருமையுங் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசுவீற்றிருந்து, ஞானச்செங்கோல் செலுத்திவரும் தருமையாதீனத் திருக்கூட்டத்து முனிபுங்கவர்களுள் ஒருவர். இவ்வாதீனத்தின் ஆறாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளிடமே இவர்கள் துறவுபூண்டு உபதேசம் பெற்றார்கள். நான்காவது மகாசந்நிதானமாகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள்பால் ஞானோபதேசம் பெற்று உலகறிய விளங்கிய திருவருட் பெரும்புலவராகிய ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளிடம் கல்வியயின்று வடமொழி தென்மொழிகளின் கரைகண்டு துறைபோன ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவரிடம் இவர்கள் சிறந்த இலக்கிய இலக்கண சாத்திரக் கல்விகளை நன்கு பயின்று, சொல்நயம் பொருள்நயம் செறிந்து விளங்கும் சீரிய செந்தமிழ்க் கவிகளை மிக எளிதில் இயற்றியருளும் பெரும்புலமை பெற்றுத் திகழ்ந்தார்கள்.

அதுகாலை மைசூரை ஆண்ட மன்னர் தம் தாய்மொழி யாகிய கன்னடத்திலன்றி, வடமொழி தமிழ் மொழி களிலும் வல்லுநராய், சமய நூல்களை ஆராய்வதில் பேரார்வங் கொண்டிருந்தார், அதனால் அவர் பற்பல சமய சாத்திரங்களிலும் வல்ல புலவர் பலரை ஆங்காங்கிருந்து வருவித்து அவர்களிடத்திலே தமக்கிருந்த ஐயங்களை வெளியிட்டு விளக்கம் வேண்டினார். அவர், அத்தகைய புலவர் ஒருவரை அனுப்பியருளுமாறு தருமையாதீனத் திற்கும் விண்ணப்பம் செய்துகொண்டார். குருமூர்த்தி களாகிய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீசம்பந்தசரணாலய சுவாமிகளையே அங்ஙனம் செல்லப்பணித்தருளினார்கள். ஆசாரியரது அருளாணையின் வண்ணமே சுவாமிகள் மைசூரை யடைந்து அரசரது அவையிற் சென்றார்கள். அரசர் சுவாமிகளது தோற்றத் தைக் கண்டு 'இவர் ஓர் அண்டங் காக்கையோ' என்று தம் அருகிருந்த சிலரை நோக்கிக் கூறினார். அச்சொல் சுவாமிகளது செவியில் விழ, அவர்கள், 'அது நானல் லேன்' என்றார்கள். அரசருக்குச் சிறிது சினம் மூண்டது. சுவாமிகள், 'அரசரே, அண்டத்தைக் காக்கும் ஆற்றல் உமக்கன்றி நமக்கு ஏது?' என்று கேட்டார்கள். அரசர், சுவாமிகளது சொல் திறனை வியந்து மகிழ்ச்சியுற்றார். அரசர், பின்பு சுவாமிகளை நோக்கி 'தங்கள் ஆதீனத் திருக்கூட்டத்தவர்கள் செய்வனயாவை?, என்று வினவிய பொழுது சுவாமிகள்,

**ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை**
**ஆய்ந்தறிந்து**
**காய்வார் பிரபஞ்ச வாழ்க்கை யெல்லாம் கல்வி**
**கேள்விஅல்லல்**

ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேஇன்
றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்
தொண்டர்களே.''

என்னும் செய்யுளால் விடையிறுத்தார்கள்.

பின்னர் அரசர் தமது ஐயங்களுக்குச் சுவாமிகள் தரும் விளக்கமே பொருந்துவதாய் இருந்ததைப் பல முறையுங் கண்டு, இவர்களைச் சிறிது காலம் தம்முடனே இருக்குமாறு வேண்டிக்கொள்ள, சுவாமிகளும் அதற்கு இசைந்தருளினார்கள்.

இவ்வாறு சுவாமிகள் அங்கு இருக்கும் நாட்களில் இவர்கள் திருவமுது முதலியவற்றிற்கு வேண்டும் பொருள்கள் பலவற்றையும் மன்னர் அனுப்ப, சுவாமிகள் அவற்றுள் ஒரு சிறிதையும் தமக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல் சிவனடியார் முதலிய பிறர்க்கே அளித்துவிட்டுத் தாம் தக்கார் இல்லங்களில் சென்று மாதுகரிபிட்சை ஏற்று உண்டுகொண்டு, நல்லொழுக்கத்தையும், சமய ஞானத்தையும் பலர்க்கும் அறிவுறுத்தி வந்தார்கள். இதனை அரசர் அறிந்து, எவ்வாறேனும் தமது பொருள் சுவாமிகளுக்குப் பயன்பட வேண்டும் என்று நினைத்து, சுவாமிகள் செல்லும் வீடுகள்தோறும் தம் பொருள்களை அனுப்பி அவர்கள் வாயிலாக அப்பொருள் சுவாமிகளுக்குப் பயன்படச் செய்தார்.

மைசூர் மன்னரது அவையில் எழுந்தருளியிருந்த நாட்களில் சுவாமிகள் அவ்வப்பொழுது கந்த புராணத்தை நயம்பட எடுத்து விளக்கினார்கள். அதனால் அப்புராணத்தில் ஈடுபட்ட அரசர் ஒருநாள், சுவாமிகளிடம்,

'கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த கந்த புராணம் கடல்போலப் பரந்து கிடக்கின்றது; அதன் பொருளை யாவரும் எளிதிற் கற்றும் கேட்டும் உணர்ந்து பயன்பெறும்படி சுவாமிகள், சுருக்கிச்செய்து தரல் வேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். அரசரது வேண்டுகோளுக்கு இணங்கிச் சுவாமிகள், ஒரு நல்ல நாளில், "பொங்கு கந்த புராணச் சுருக்கநூல்" என்று விநாயகர் காப்புச் செய்யுளைத் தொடங்கி, ஆயிரத்து நாற்பத்தொன்பது செய்யுட்களில், அழகாகக் கந்த புராணம் முழுவதையும் சுருக்கிப் பாடி முடித்தருளினார்கள்.

அதனையறிந்த அரசர், 'இதனை அரங்கேற்றியருள வேண்டும்' என்று வேண்ட, சுவாமிகள், 'அது செந்திற் பெருமான் திருமுன்பில் செய்யத் தக்கது' என்றார்கள். மன்னர் அங்ஙனமே அமைச்சர் முதலிய பலரும் புடை சூழச் சுவாமிகளுடன் திருச்செந்தூரை அடைந்து, செந்தில் ஆண்டவன் திருமுன்பில் சுவாமிகளைக் கந்த புராணச் சுருக்கத்தை அரங்கேற்றியருளச் செய்தார். அரங்கேற்றம் மிகச் சிறப்பாக நிறைவெய்தியது. அரசர் அகம்மிக மகிழ்ந்து, பொன்னையும், நவரத்தினங்களையும் பொற்றட்டிலே மிகுதியாக வைத்துச் சுவாமிகளுக்குக் காணிக்கையாக வழங்கினார். சுவாமிகள் அவற்றை ஏற்று, 'குருவுக்குப் பிரீதியாகுக' என்றுசொல்லி அப்பால் வைத்தார்கள், அரசர் மறுமுறை அவ்வாறு கொடுக்க அவற்றையும், 'சிவனுக்குப் பிரீதியாகுக' என்று வைத்தார்கள். மூன்றும்முறையும் மன்னர் அங்ஙனமே கொடுத்தார்; சுவாமிகள் அப்பொழுதும் 'இவை அடியார்களுக்குப் பிரீதியாகுக' என்றுசொல்லித் தொலைவில் வைத்தார்கள். 'சுவாமிகள் என்ன மூன்றுமுறையும் இப்படிச்

செய்தார்களே' என்று மன்னர் நினைக்கும் பொழுது, அறிஞர்சிலர், 'அரசர் பெருமானே, இவர் இதுவரையில் எப்பொழுதாயினும் எந்தப் பொருளையாயினும் தமக் கென்று வைத்துக்கொண்டது உண்டோ?' என்றார்கள். அரசர், சுவாமிகளது பற்றற்ற உள்ளத்தை யறிந்து அமைதியுற்றார்.

பின்பு, மன்னர் சுவாமிகளை நகர்வலம் செய்வித்துமகிழ விரும்பி, அதனைச் சுவாமிகளிடம் தெரிவிக்க, 'எம் ஆசாரியரது திருவுள்ளம் அறியாமல் இதற்கு நாம் இசையோம்' என்று சொல்லிவிட்டார்கள். அரசர்தமது கருத்தைக் குருமூர்த்திகளுக்கு விண்ணப்பித்து, அவர்களது அனுமதி பெற்றுச் சுவாமிகளைச் சிறப்பாக நகர்வலம் செய்வித்து மகிழ்ந்தார்.

சுவாமிகளது புலமையாலும், சீலத்தினாலும் அரசர், தருமையாதீனத்தின் பெருமையை உணர்ந்து, 'அதுவன்றோ பூலோக சிவலோகம்' என்று வியந்து, ஆதீனத்தினிடத் திலும் குருமூர்த்திகளிடத்திலும் அளவற்ற பற்றும் பக்தி யும் கொண்டவரானார். அதனால் இலக்கணம் வாய்ந்த நல்லபசுக்கள் பலவற்றையும் தேவையான அளவு சந்தனக் கட்டைகளையும் ஆதீனத்திற்கு ஆண்டுதோறும் அனுப்பி வரும் ஒருவழக்கத்தையும் மேற்கொண்டார். அவ்வழக்கம் நெடுங்காலம் நடைபெற்றுவந்தது.

இவற்றால் எல்லாரும் சுவாமிகளது தமிழ்ப் புலமை, துறவுள்ளம் என்பவற்றோடு குருபீடத்திலும். குருமூர்த்தி களிடத்திலும் அவர்களுக்கு இருந்த பக்திப் பெருக்கு நன்கு வெளியாகின்றது.

சுவாமிகள் தமது கந்த புராணச் சுருக்க நூலின் முதல், நடு, முடிவு என்னும் மூன்றிடங்களிலும் தமது குருமூர்த்திகளையே உள்ளத்தில் வைத்துப் பாடியிருத்தல் போற்றி மகிழ்தற்கு உரியது.

" தனக்கிணை தானே யான சம்பந்தன் கமலை வேந்தன்
கனக்கவே என்பால் அன்பால் கருணைவைத் திடுதலாலே
உனற்கருங் காந்தந் தன்னை உரைத்தனன் சுருக்கி அல்லால்
எனக்கும்இக் கதைக்கும் நாடில் எத்தனை தூரம் ஆமால் "

என்பது பாயிரத்தில் அமைந்த அவையடக்கச் செய்யுள்.

நூலின் இடையில் சூரியோதயத்தை வருணிக்கும் இடத்தில், சூரியன் தோன்ற இருள் நீங்கினமையை,

" கந்த மாமலர்ப் பொதும்பர்சூழ் கமலைமா நகர்வாழ்
எந்தை ஞானசம் பந்ததே சிகன்றனை எதிர்ந்தோர்
பந்த ஆணவப் படலம்விண் டிரிந்திடும் படிபோல்
அந்த ரம்புவி மறைத்தபே ரிருளகன் றதுவே "

என்று கூறி, இன்பம் அடைகின்றார்கள் சுவாமிகள்.

இறுதியிலும்,

" மெத்தும் இன்ப வியாபக மாகிய
முத்தி தந்தெனை யாட்கொண்ட முன்னவன்
பத்தர் மொய்த்தசம் பந்தன் கமலைவாழ்
அத்தன் வாழி ! அடியவர் வாழியே "

என்று குருமூர்த்திகளையும், திருக்கூட்டத்தையும் வாழ்த்தி நூலை முடிக்கின்றார்கள்

சிறிது குறையப் பதினாயிரத்து முந்நூற்றைம்பது செய்யுளையுடைய கந்தபுராணத்தை, ஆயிரத்து ஐம்பது பாடலுக்குள்ளே அடக்கி, வரலாறு முழுவதும் அந்தப் போக்கிலே நன்கு அமைய, ஒரு சிறு செய்தியையும் விடாமல் சுருக்கிப் பாடியருளிய சுவாமிகளது புலமைத்திறம் மிக மிக வியக்கத்தக்கதாய் உள்ளது. இதற்கிடையில், சொற்பின்வருநிலை, சிலேடை, யமகம், திரிபு, முரண் தொடை முதலிய சொல்நயங்களை அழகுபடக் காட்டியுள்ளமை, படிப்பவர் அறிவிற்கு விருந்தாய் அமைகின்றது. எடுத்துக்காட்டாகக் கீழே சிலவற்றைக் காணலாம்.

" எமையாளும் உமையாள் செம்பொற்
காற்கமலம் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலம் குவித்தருந்துங் கமலர் தீர்வாம் "

[பக்கம் - 2.]

" உலகை முடும் அல்லின்
புகைவனவன் பகைவனவன் பகைவ ணுஞேன்

[பக்கம் - 3.]

" மால்மகன் மகன்மகன் மகன்ம டிந்திட
லால்மக பதிமுதல் அமரர் துன்னினர் "

[பக்கம் - 16]

" இற்றைவரை வரைவளைத்த கரத்தோய் நின்னை
எண்ணுத தக்கன்மகள் என்னும் நாமம் பெற்றனன் "

[ பக்கம் - 12]

" இப்படி இப்படிவானத் திருந்துவாழும்
எவ்வுயிரும் உறுங்காலத்து " [ பக்கம் - 15]

" சென்னி ஆறுள தேவன் அளித்த
சென்னி ஆறுள தேவை வணங்கி " [ பக்கம் - 192]

" வேங்கை உரித்த பரம்பரன் மாமகன்
வேங்கை உருக்கொளவே " [ பக்கம் - 246]

" சிறுமான் செங்கைப்
பெருமான்இவ் வாறிருப்ப " [ பக்கம் - 14]

இந்நூலின் சில பாடல்கள் கந்தபுராணச் செய்யுட்களின் சொல்லையும் பொருளையும் அடியொற்றிச் செல்வது காணலாம். எடுத்துக்காட்டாக,

" மண்ணி லுலாவுறும் விண்ணி லுலாவும்
வண்ண வயன்பதம் நண்ணி யுலாவும் "

[ பக்கம் - 29]

என்னும் பாடலை,

" மண்ணிடை யுலாவும்நெடு மாதிர முலாவும் "

[ திருவிளையாட்டுப் படலம்-6. ]

என்னும் கந்தபுராணச் செய்யுளோடும்,

" கூற்றுமென ஒருபால்வரும் ஒருபால்வரும் இருள்போற்"
குவடாமென ஒருபால்வரும் ஒருபால்வரும்
குறள்போல் " [ பக்கம் - 187]

என்னும் பாடலை,

" ஓவா இயல் பொருமூவரில் ஒருசார்வரு மொழியும் "

[ சூரபன்மன் வதைப்படலம்-410—415 ]

என்பது முதலாக உள்ள செய்யுட்களோடும் வைத்துக் காண்க.

கந்தபுராணச் சுருக்கத்தில் பல பாடல்கள் சந்த விருத்தங்களாய் மிக மிடுக்கான நடையுடன் காணப்படுகின்றன. சில விருத்த வகைகளைச் சுவாமிகள் புதிய அமைப்பிலே தந்துள்ளார்கள். அவற்றுள் பதின்சீரடிகளால் ஆகிய பாடல்கள் குறிப்பிடத் தக்கவை. "முச்சிர முள்ளவன் வச்சிர முள்ளவன் – மொய்ம்பினன் முன்பினன் மூரணுறு மிரணியன்" என்றாற்போல்வன அடுத்து நோக்கத் தக்கவை.

மைசூர் மன்னரது மனவேட்கையை இங்ஙனம் மிகச் சிறந்த வகையில் முடித்தருளும் முகத்தால் உலகிற்கு ஒருபெரு நலத்தினை உதவியருளிய ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள், பின்பு பன்னாட்களாகச் சிவதல யாத்திரையைச் செய்துமுடித்து, தருமபுரத்தை அடைந்து குருதரிசனம் செய்து வாழ்ந்து, சிலகாலத்திற்குப் பின் சிவபதம் அடைந்தார்கள். இச் சுவாமிகள் தம் ஞானாசாரியராகிய ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்மீது, 'சிகாரத்ன மாலை' என்னும் ஓர் அரிய தோத்திர நூலைப் பாடியுள்ளார்கள். அதனையும் இங்குக் காணலாகும்.

உ

குருபாதம்

கந்தபுராணச் சுருக்கம் இயற்றியருளிய

ஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள்

தம் குருமூர்த்திகளாகிய

ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிகர் மீது

அருளிச்செய்த

# சிகாரத்ன மாலை

ஆதிகா லந்தொடுத் தடியனுன் னடியிணைக்
காளாக மீளாதபே
ரன்புசெய் தாயதன் பின்புமுத் தமிழிலும்
அதிகரிக் கப்புரிந்தாய்
ஈதெலாந் தெரிவுறச் சாத்திரம் படியென்
றிசைத்தினிமை தந்திருந்தாய்
இத்தனை வரக்கருணை வைத்தனை யுனக்குநா
னென்னகைம் மாறுசெய்வேன்
வேதமுடி வானபொரு ளேதென்று மாதவர்கள்
வினவவட வானீழலின்
வீற்றிருந் தறநான்கு தோற்றுவித் துந்தயவு
மிகுதியான் மீண்டுமீண்டுந்
தீதகல நரர்வடி வெடுத்தள விறந்தோர்கள்
சிவஞான மருவவந்தாய்
சீர்த்தருமை வாழுவரு ஞானசம் பந்தனாந்
தேசிக சிகாரத்னமே. 1

அன்றுதொட் டின்றளவு மெண்பத்து நான்குநூ
　　ருயிரஞ் செனமபேதத்
　தடியனே னடிபட் டலைந்துளே னென்புத்தி
　　யணுவளவும் வந்ததில்லை
யின்றுதொட் டினிமேலு மிதனையே யின்பமென்
　　றினிதினி தெனக்கருதுமோ
　ரேழைக் கிரங்கிவினை தாழத் துரந்துகதி
　　யேறப்ப ணித்தருளுவாய்
நன்றிக்கு வித்தாகு மணிஞான மணிகூட
　　னந்தாத சிந்தாமணி
　நாவலர்கள் யோகர்சிவ ஞானிக டவத்தோர்க
　　ளுடிடுஞ் சூளாமணி
தென்றமிழ்க் கடல்வட கலைக்கட லிரண்டினுந்
　　திகழ்மாசி லாமணியெனுஞ்
　சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
　　தேசிக சிகாரத்னமே. 2

விஞ்சுதிரை யெறிபவக் கடலிற் குளித்துமிகு
　　வெஞ்சினக் கோபமாகும்
　விரியெரி யினிற்கருகி வெகுகால மிப்படி
　　மெலிந்தே னலிந்தேனெனை
யஞ்சுபுலன் வென்றுநின் னருணினைந் தனுதினமு
　　மானந்த மாக்கடலுளே
　யமைவுறத் தூங்குமுன் னடியவர் குழாத்தில்வைத்
　　தகமகிழ்ந் தருள்வதெந்நாள்
கொஞ்சுகிளி மறையோது கூடலம் பதியினுங்
　　குலவுகமல லாபுரியினுங்
　குருமணிப தித்தொளிகண் மருவுமா ளிகைகளுங்
　　கொண்டறவம் மண்டபஞ்சேர்

செஞ்சொலவர் பரவவளர் தருமைநக ரினுமருட்
    செங்கோ னடாத்துகுருவே
  சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
    தேசிக சிகாரத்னமே. 3

பாகுபடு மொழிமாதர் தமதாசை முதலான
    பலவாசை யுந்துறந்தே
  பாதபங் கயமலரி லாதரவு பண்ணலும்
    பதைபதைத் துருகியெழலுந்
தாகமுடி பெரியபரி பாகமொடு மோகமுந்
    தாரக மிலாதருளுவார்
  தந்திவை யெலாமுனது சுந்தரத் திருவார்த்தை
    துங்கவிங் கருள்கூருவாய்
ஆகம புரணங்கள் வேதங்கள் சகலகலை
    யாய்வதுவு முனதுபுகழே
  யாயுநற் கலைவிரித் தறிவோர்கள் புகழ்வதற்
    கையமுள தோவில்லைகாண்
தேகமிது பொய்யென்று மெய்யொன்று சிந்தைச்
    சிவாகமிக ணின்றுபோற்றுஞ்
  சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
    தேசிக சிகாரத்னமே. 4

கானமே வியதோர் கருங்குயில் பசுங்கிளி
    கடுக்குடி யிருந்தபகுவாய்க்
  கட்டரவ மட்டிலுயிர் கண்டுண்ட பூனைபெலி
    காமரு சகோரமுமுயர்
ஞானமே வியதோர் பதம்பெறவு மருள்செய்த
    நன்மையா லெனையுனடியார்
  நடுவினு ளிருத்தியுன தடிமையாக் குவையந்த
    நாளெந்த நாளறிகிலேன்

வானமே வியதோ ரிளம்பிறை வளம்புனலு
மதுவொழுகு கொன்றைமலரு
மங்கையொரு பாகமெனு மங்கமுஞ் செங்கையனன்
மாறிவந் தூறுமன்பாற்
சேனையடி யவர்கட்கு நானு விதக்கருணை
செய்த சைதன்யகுருவே
சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
தேசிக சிகாரத்னமே. 5

பரவுபதி பசுபாச மறியாத நெறியோடு
பார்முழுதி னுந்திரிந்து
பரமநா மென்றுபோ மென்றுபா சவ்வினை
பணிமினுல கீர்களென்றென்
றுரைசெய்து குரல்கம்மி யொருபொருளு மடையாம
லுடைமையா லுரைதவிர்ந்தே
யூமரா னோர்பெரிய நாமநீர் வைப்பினி
லுனக்கிணை யெனக்கூடுமோ
வரைகளிற் பொன்மேரு வரைதிரைகள் வருநதியுள்
வளர்கங்கை புங்கவர்க்குள்
மாதேவன் முதலான வாறுபோ லறுசமய
மரபினுட் கருவகற்றுஞ்
செருவான கருவியெனு மொருஞான சமயமுதல்
சென்றிட வுதித்தகுருவே
சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
தேசிக சிகாரத்னமே 6

உலகின்மா னிடரா யுதித்தவர்க ளெல்லோரு
மொருபிறப் பொருவடிவரா
யொப்பரா யினுமிக் குயர்ந்தவ ரிழிந்தவர்க
ளுண்டென்று கண்டுகொளலால்

இலகுதே சிகரா மெனப்பெய ருனைப்போல
வெழில்பெறப் புனைவரெனினு
மென்றனைப் பணிகொள்ளு முன்றனக் கிணையாக
வேத்தநாத் தோற்றுவிடுமே
கலகவைம் புலனலைய நிலையிதென் றடியருன்
கருணைமலை நிலவிப்பவக்
காடுவெட் டிப்பரம வீடுறும் படிகடைக்
கண்ணளித் திடுமண்ணலே
இலகமென் றுலகுபுகழ் தரவளந் தரநின்ற
தென்கமலை நற்கூடல்வண்
சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
தேசிக சிகாரத்னமே. 7

கல்வியிற் கவிதையிற் போதனையி னிற்கலை
கருத்துறு மருத்தத்தினிற்
கவிவாணர் புகழமிகு நவமான பொருளொடு
கலந்தகூர் மையினிலவையைச்
சொல்வளம் பெறவிரித் தியாவருந் தெளிவுறச்
சொல்லும்ப்ர சங்கத்தினிற்
றொல்லுலகி லொருவர்க்கும் வல்லமைக ளிலையென்று
தோன்றியவை தோன்றவந்தாய்
நல்வரம் பெறுசெவ்வெ ளுந்துங்க மங்கையொளி
நளினமணி முளைநகையென
நாடிவரு மளிகளெனு மாடவர்கள் புடைமொய்ப்ப
நானில மெனுங்குடிக்குச்
செல்வமென வளர்கமலை பாண்டிநா டேத்தவரு
திருமலிந் திட்டமதுரை
சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
தேசிக சிகாரத்னமே. 8

கோவாத மூவாத மணியே மருந்தே
குருந்தடி யிருந்தகருணைக்
குன்றே யெனப்பிடித் தன்றே யுனக்கடிமை
கொண்டருள் குணக்கொண்டலே
யோவா தினித்தினித் துள்ளூறி யள்ளூறு
மொழுகுமது ரக்கனியென
வுன்னையுன் னாதுன்னி யென்னையுன் னாதநெறி
யொருமொழியி னான்மொழிந்தாய்
நாவாண ரொருபுறம் பாமாலை பொழியவொரு
ஞாங்கர்பட் டாங்குசொல்வோர்
நகைமணிக ளுமிழ்மகுட சேடனா யிரநாவி
னாரிவ ரெனத்துதிப்பத்
தேவார மொருபுற முழங்கவொரு புறமடியர்
சேவித்து நின்றுவாழ்த்துஞ்
சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனாந்
தேசிக சிகாரத்னமே. 9

கொன்றையுன் றார்விடைக் கொடியுனது கொடிசார்ந்து
கூர்ந்தவெண் ணீறுதவளக்
குளிர்மதிச் சடைமுடிபொன் மகுடமா பரணங்
குலவுகண் டிகைமாலைமால்
வென்றவடி யார்களுன் வீரதண் ணளியுனது
வெண்குடைநின் விமலசத்தி
விரிபுவன மண்டலங்கள் கொண்டசெங் கோன்ஞான
வேந்தனென் றுனையடைந்தேன்
நன்றுதீ தெனுமிரு விலங்கினை முறித்துவர
நலிகுறும் பறவெறிந்து
நாடொறு முத்தியினை நாடுறு மருட்செல்வ
நான்மறைச் செங்கரத்தாற்

சென் றுதவி யின்றெனது மூடமா கியவறுமை
தீரக் கொடுத்தருளுவாய்
சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
தேசிக சிகாரத்னமே. 10

கயிலாய மலையுன் றிருக்கோயி லம்பலங்
காசிகம லாலயமுதற்
கருதுதெய் வீகதலம் யாவையும் யாவருங்
காணவரு கொலுமண் டபம்
பயிலும்வா னோர்கங்கை யாடுமஞ் சனசாலை
பருதிமதி யிருவிளக்காம்
பகர்திகம் பரஞான முருநினது பெருமையைப்
பகருதற் கெளிதாகுமோ
குயில்கூவ மயிலால வஞ்சுகஞ் செஞ்சொற்
குழாம்பல மிழற்றநெடுமால்
கொண்டதிண் டோண்மலர்த் தண்டுழா யந்தொடைக்
கொத்தினுட் பத்தியாயுஞ்
செயிர்தீர் மணிக்கொத் தெனப்பொழிலின் மிடைதருஞ்
சிறைவண் டலம்பிநிற்குஞ்
சீர்த்தருமை வாழவரு ஞானசம் பந்தனுந்
தேசிக சிகாரத்னமே. 11

சிகாரத்ன மாலை முற்றிற்று.



தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# கந்தபுராணச் சுருக்கம்

## பாயிரம்

### காப்பு

பொங்கு கந்த புராணச் சுருக்கநூல்
இங்கி சைத்திட வின்பொடு முற்றுவான்
மங்கை பாலகன் மாதங்க மாமுகப்
புங்க வன்றுணைப் பொற்பதம் போற்றுவாம். 1

### சிவபெருமான்

சீர்கொண்ட வானந்த மாகி யெங்குஞ்
செறிவாகிப் பரமாகித் திரம தாகி
யேர்கொண்ட கருணைத்திரு வுருவ மாகி
யெழில்கொண்ட மலைமகளை யிடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவுங் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவ னடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம். 1

## சிவ சத்தி

மாற்கரிய செம்பதத்தோன் றேவி யாகி
வல்வினையே னெனதாவிக் காவி யாகி
மேற்கருணைத் திருவுருவ முடையா ளாகி
வித்தகமா யைந்தொழிற்கும் வித்தாய்நின்ற
சேற்கருங்கட் டளவநகைக் களபக் கொங்கைச்
சிற்பரையிங் கெமையாளு முமையாள் செம்பொற்
காற்கமலந் தலைக்கமலம் பொருந்தத் தாங்கிக்
கைக்கமலங் குவித்தருந்துங் கமலந் தீர்வாம். 2

## விநாயகக் கடவுள்

மாவேலை யாலமதை யடக்கித் தன்னுண்
மண்டுலக மண்டமெலாம் வளர்ந்து தானோர்
காவேயின் முன்னுதித்த வரசிற் றோன்றிக்
கடம்புபுனை குருந்தினுக்குத் துணைய தாகித்
தூவேதந் தலைகாண்டற் கரியதாகித்
துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர் வெய்யி
லாவேனைத் தன்னடியா நிழலிற் சேர்த்த
வத்திதனைப் பத்திசெய்து முத்தி சேர்வாம். 3

## சுப்பிரமணியக் கடவுள்

தேவர்குலப் பெருங்கமல மிடுக்க ணுனை
திமிரமகன் றளியோடு சிறந்து வாழ
மாவலிசே ரவுணர்குலக் குவளை வாடி
மண்ணினிடைச் சுருங்கியிட வந்த பானு
தூவடிவேற் குமரேச னடிய னேன்புன்
சொல்லினுக்கு மிரங்கியருள் சுரக்கும் பெம்மான்
பூவடியா மிருபோது மூன்று போதும்
பூசைபுரிந் தன்பினொடு புகழ்ந்து வாழ்வாம் 4

## வீரவாகு தேவர்

பொங்குகிரி களிற்றலைமை யோதும் போது
 பொற்புடைய பொற்கிரிமுன் னிற்கு மாபோற்
றுங்குதிறற் புகழ்வீரர் தம்மை யெண்ணிற்
 றுனேமுன் னெண்ணவருந் தலைமை யாளன்
பங்கமிலா நீடுலகை மூடு மல்லின்
 பகைவனவன் பகைவனவன் பகைவ ஞமேன்
மங்கலிலாப் புகழ்வீர வாகு வாய
 வரிசிலைக்கைக் குரிசிலையாம் வணங்கல் செய்வாம். 5

## சைவ சமயாசாரியர்கள்

வெங்குருவிற் சற்குருவா யுதித்துக் கூடன்
 மீனவன்மேல் வினைதீர்த்தோன் விரைத்தாள் போற்றி
துங்கமுறு மலைகடலிற் சிலைய தான
 தோணியில்வந் தவன்பாத தூளி போற்றி
யெங்கள்பிரான் றனையிருளிற் பரவை வாசற்
 கேவல்கொண்டோன் பதப்பதும விருதாள் போற்றி
புங்கவர்சூழ் திருவாத வூரில் வந்த
 புண்ணியனு ரிணையடிகள் போற்றி போற்றி. 6

## ஞானப்பிரகாச தேசிகர்

கடியதிரி மலவிருளைக் கடியஞான
 கரமுதவ வெதிர்செறிந்து கண்டோர் தங்கள்
வடிவுடைய விதயசரோ ருகங்க ளெல்லா
 மலரவவ மதிநிலவு மழுங்கித் தாழப்
படியடியர் கண்டுதொழ மண்டு சீர்த்திப்
 பரன்கமலை யெழுந்தவருட் பானு வெண்மைப்
பொடியணியு மெழின்ஞானப் பிரகா சன்றன்
 பூங்கமல மலரடிகள் போற்றி போற்றி.

## ஞானசம்பந்த தேசிகர்

சிரணியு நுதலின்விழி மழுமா னுகந்
    திருந்துமெரி பொருந்துவிடந் தெரிந்தி டாமற்
குரணியன் பரையாள வவர்போல் வந்த
    சைவசிகா மணியெவர்க்குந் தலைவ னெங்கோன்
காரணியு நெடியபொழிற் கமலை வேந்தன்
    கருணைமழை பொழியுமிரு கடைக்க ணுளன்
பூர்புகழு ஞானசம் பந்த னெந்தைப்
    பரமனிரு சரணமலர் பரவி வாழ்வாம். 8

## கச்சியப்ப சிவாசாரியர்

போதமுறு சூதமுனி புகன்ற காந்தப்
    புகழ்க்கடலிற் படிந்ததன்கட் பொருள் தான்
மேதகுவண் புனலருந்தி வைய முய்ய
    வெய்யதுயர்ப் பிறவியெனும் வெம்மை தீரத்
தாதவிழ்பூம் பொழிற்காஞ்சிக் குவட்டி லேறிச்
    சலதியுமு தினைநிகர்செந் தமிழ தான
காதன்மழை பொழிந்தவருட் கொண்ட லான
    கச்சியப்ப னிருபாத முச்சி வைப்பாம். 9

## நூல்வந்தவழி

நன்புவி யிடத்துமிக்க நைமிச வனத்து வாழுந்
துன்பில்சீர் முனிவர்கேட்பச் சூதனங் குரைத்த காந்த
மின்புறு கச்சியப்ப னியம்பினன் றமிழா லன்று
னன்புறு தமிழைப்போற்றி யறிந்தவா சுருக்கிச் சொல்கேன்

## அவையடக்கம்

கருக்கடன் முருக்கி முத்திக் கரைதரு காந்த நூலைச்
சுருக்கவே கல்வி யில்லாத் தொண்டனேன் றுணிந்த வாறு
திருக்கில்வான் முழுது மிங்கோர்செங்கையிலடக்குவேனென்
றுருக்கர மில்லா னெண்ணு மூக்கமே போன்ற தன்றே. 11

அத்தமுஞ் சொல்லுஞ் சொல்லு மாதிமா தாத லானு
மெத்திய வனப்பு வேலோன் வியன்கதை யுறுத லானும்
பித்தனேன் றனது பாட்டிற் பிழைகள்வந் திடினுந் தீர்த்திட்
டுத்தமர் கொள்வ ரென்னு முரத்தினு லுரைக்க லுற்றேன்

தனக்கிணை தானே யான சம்பந்தன் கமலை வேந்தன்
கனக்கவே யென்பா லன்பாற் கருணைவைத் திடுத லாலே
யுனற்கருங் காந்தந் தன்னை யுரைத்தனன் சுருக்கி யல்லா
லெனக்குமிக் கதைக்கு நாடி லெத்தனை தூர மாமால் 13

பாயிரம் முற்றிற்று.

# புராண வரலாறு

விரிகின்ற கடற்புனலுண் டிருண்டு மின்னி
விண்மூடி வருங்கருமைக் கொண்மூ வீறி
யெரிகின்ற வொளித்தாவ மொளிப்ப வோங்கு
மெழினந்தி வரையும்ப ரிம்பர் வாழச்
சொரிகின்ற வெள்ளமிகு பாலி சூழ்ந்த
தொண்டைவள நாட்டுளது தொண்டைச் செவ்வாய்ச்
சிரிகின்ற வளைத்தளிர்க்கைம் மடவார் மேவுந்
தடமாட நெடுவீதித் தமிழ்சேர் காஞ்சி. 1

இன்னபரி சென்னவெழி லென்ன மேய
விறையாலு மெவராலு மியம்ப வொண்ணு
மந்நகரின் வளர்பெருமை சொன்னு லென்னு
லடங்குமோ வடங்காதா லதன்கண் முன்னுட்
பொன்னவிருந் திருமார்பன் கமட மாகிப்
புரங்கடிந்த கடவுளடி போற்றி வாழ்ந்த
நன்னலஞ்சேர் கச்சபா லயமென் றேது
நாமவா லயமொன்று நண்ணிற் றன்றே. 2

அனையசின கரமதனின் மதனை வென்ற
வமலனிரு கமலமல ரடிகள் போற்றிப்
புனையுநறுந் துழாய்மௌலிக் கடவு டந்த
போதனுறு போதுவளர் போத மேவு
முனைவர்பல ரடைந்தவன்செம் பதங்க டாழ்ந்து
முண்டகமேன் முதல்வவொரு முதுசீர்க் கானந்
தனையினிதி யாங்கடவம் புரிந்து வாழச்
சாற்றுகென வனையானித் தன்மைசெய்வான். 3

ஒருதருப்பை யெடுத்துவளைத் தவனி மீதி
ஓருட்டியிது நின்றவனத் துறைதி ரென்ன
வருமுனிவ ரெல்லோரும் பின்ன ரேக
வதுசென்று துன்றியவோ ரடவி யூடே
மருவியல ணின்றிடவங் கிருந்தா ரன்ன
வனநைமி சாரணிய வனமென் றுகப்
பொருவில்புகழ் மாதவரோர் வேள்வி யாங்கே
புரிந்தமலம் பொருந்தியினி திருந்த போது. 4

சூதமுனி யிதறிந்து வரலு நேர்போய்த்
தொழுதன ரங் கெழுதனலிற் றேய்ந்தா லொப்ப
மேதகுமன் புளமுருக முகமன் கூறி
வீறுதம தாச்சிரம மேவச் சேர்த்திச்
சோதிமணிப் பெரும்பீட மொன்று நாப்பண்
டுலங்குறவிட் டதன்மீது துகளி லாவம
மாதவனை யினிதிருத்தி யருத்தி யோடு
வல்லையிலர்க் கியமுதல வழங்கி னரால். 5

மற்றதுபின் பின்னநெடுஞ் சடிலச் சென்னி
மன்னியமா தவரனையான் மருங்கு வைகிப்
பற்றலர்தம் புரமெரிய நகைத்த செவ்வாய்ப்
பாலவிழித் தனிக்கடவுள் பால னான
செற்றநெடுங் கதிர்வேற்கைப் பெரியோன் காதை
சிறியோமிங் கறியவுரை செய்வா யென்னக்
கொற்றமுனி யதுவினவி விழிகள் வெள்ளங்
கொள்ளவவ ரோடின்ன கூற லுற்றான். 6

ஒன்னலார் சோரிகுடித் தொளிருஞ் செவ்வே
லொருவனது பெருங்காதை யுரைப்போர் கேட்போர்
முன்னெலாம் புரிந்தவினை யனைத்துந் தீர்த்து
முத்திதரு மதுகேட்ப முயன் றீர் மன்னோ

பின்னலான் மறைந்தபிடர் முனிவீர் நீவிர்
பெருங்காத லொடுகேண்மின் பேசு கேனென்
றின்னலா னவைநவைக ளெவையும் போக்கு
மேதமில்சீர்ச் சூதமுனி யியம்ப லுற்றான். 7

முற்காலத் தரன்புகன்ற மறைகள்யாவு
முதன்முடிவு தடுமாற முனிவர் தேவர்
கற்காருந் தரையிருந்த மாக்க ளெல்லா
நல்லறிவு நீங்கிமய லெண்ணி னாரா
யற்காள கண்டனையு மறந்து வீறு
மறமாற்றி மறமாற்ற வாற்றன் மாயோன்
விற்காமர் நெடும்புருவ வாணிகேள்வன்
விண்ணவர்சூழ் தரக்கயிலை மேவி னாரால். 8

விண்ணவர்கண் மகுடமுடி தடவுஞ் செந்தாள்
விறனந்தி தேவரொடு விமலன் பால்யார்
நண்ணியது புகன்றருள வேண்டு மென்ன
நம்பனெதி ரடைந்திறைஞ்சி நவிற்ற லோடுந்
தண்ணருளெம் பெருமானிங் கவரை வல்லே
தருதியென மீண்டுநெடுஞ் சார்ங்க பாணிக்
கண்ணன்முத லிமையவரை விடுப்ப நாதன்
கழறொழுது பணிந்தின்பங் கலந்து நின்றார். 9

நின்றுபுகழ் மான்முதல்வா னவரை நோக்கி
நிமலனும தரசுபுரி நெறிக ளெல்லா
நன்றுபெற நடந்தனவோ வென்ன மாயோ
னாதவுன தின்னருளி னடந்த விந்நா
ளின்றுமெமக் களித்தருள்வ தொன்றுண் டன்ன
தியம்புவனம் புவிமாந்த ரெவருந் தென்றற்
கன்றுலவுங் குளிர்சோலைக் கயிலை மேய
கடவுளினை மறந்துமறந் தருதி னாரால். 10

ற்போத மவர்படைத்து வினது யாத
நணுகும்வகை யருள்சிறிது நல்கு வாயென்
றற்போடு மொழிந்திடலு மொழியாச்சீர்த்தி
யருளாள னொருகலையோ டவனி மேனி
பொற்போடு வியாதனென வுதித்து வேதப்
புகழ்க்கடலை நான்குவகை புரிந்தி யாருங்
கற்போலுந் திரண்டபயப் [illegible]லே யின்பக்
கதியடையும் படிபுகறி கடிதின் மாதோ. 11

ஓங்குமறை யுணர்ந்துமுளந் தேறு தாரு
மூணராரு மையமகன் றய்யு மாறு
பாங்குறுமொன் பதிற்றிரட்டிப் புராண முண்டு
பண்டுநா நந்தியொடு பகர்ந்தா மன்றான்
றாங்குபுகழ் படைத்தசனற் குமர னென்னுந்
தவமேவு முனிதனக்குச் சாற்றி னானல்
வாங்குதிரைக் கடலுடுத்த புடவி மீது
மற்றவன்பாற் கேட்டினிது வாழ்தி யென்றான். 12

இப்பணியை யப்பணியும் பணிசேர் சென்னி
யிறையருள முடிமேற்கொண் டிறைஞ்சி யாங்கே
கைப்பதுமங் குவித்துவிடை கொண்டு நீங்கிக்
கடிதுதன திடத்தடைந்து கடைந்த வேற்கட்
டுப்பனைய துவரதர வாணி கொங்கைச்
சுவடுபடும் புயனுதிச் சுரர்கள்யாரு
மொப்பகறம் பதம்புகுத விடுத்து வைகி
யொருகலையோ டுதித்திடவங் குன்னி னானல். 1[illegible]

புண்டரிகக் கடவுள்வழிப் பராச ரப்பேர்ப்
புகழ்மேவு முனிவனிமம் பொழியும் போது
தண்டரளந் திரையிறைக்குங் கங்கை தன்னிற்
றன்னிகர்யோ சனகந்தி தடந்தோ டோய

வெண்டரங்கப் புவிபோற்ற வவள்பாற்ளுன் றி
வெதரிகமா வனத்திருந்து வேதம் யாவும்
பண்டையுணர் வாலுணர்ந்தி யாரு முய்யப்
படிமிசைமா ளுக்கராற் பரப்பி ஞைல். 14

ஆங்கதுபின் சனற்குமரன் பாலீ ரொன்பா
ளுனபுரா ணங்களுணர்ந் தடியேற் கீந்து
தீங்ககல வனேவோர்க்கு முரைத்தி யென்று
செப்பிஞ னன்னவற்றுட் டிங்கள் வேணிக்
கோங்கலர்மென் முலேப்பாகத் திறைக்கீ ரைந்து
கொலேத்திகிரிப் படையோற்கு நான்கு கோலப்
பூங்கமலைத் தவிசிருந்தோற் கிரண்டு செந்தீப்
புகழ்த்தபனற் கோரொன்ருப் பொலிந்த வன்றே. 15

புரமூன்று மெரிக்களித்தோற் போற்றுஞ் சைவம்
பொருவில்சீர்ப் பவிடியமே பொற்பு மிக்க
வரமாரு மார்க்கண்ட மிலிங்கங் காந்தம்
வராகமே வாமனமே மச்சங் கூர்மம்
பிரமாண்ட மிவைகள்சிவ புராண மாயோன்
பெருங்காதை காருடநா ரதமே விண்டாங்
கருண்மேவு பாகவத மாகு மென்ப
வயன்காதை பதுமமே பிரம மாமால். 16

கூறுபிர மகைவர்த்த மிரவி காதை
கொடுந்தழலின் கதையாக்கி நேய மாமென்
றாறில்பரன் கதைபத்திற் பத்தர் போற்று
மூயர்குமரன் கதைசுருக்கி யுரைத்தா னென்ப
மாறில்புகழ் வதரிகமா வனத்து வைகி
வார்தரா யணஞகி மறைகள் யாவும்
வீறுபெற நான்குநிலே புரிந்த வாற்ருல்
வியாதனெனும் பெயர்படைத்தோன்
வியன்மா ளுக்கன். 17

வளங்குலவு மலையரையன் மகளா யம்மை
வளர்ந்தசெயன் முதலாக மன்னுஞ் செவ்வேள்
விளங்குசுர ரரசளித்த கொம்பி னோடும்
வேடர்குலக் கொடியோடும் வேழக் கூற்றின்
களங்கமில்செக் கர்த்தவிசி லிருந்த தீருக்
கவின்முனிவன் றொகையாகக் கழற லோடு
முளங்குளிர்ந்து முனிவோர்கள் விரிவா லெங்கட்
குரைத்தருள வேண்டுமென வுரைக்க லுற்றான் 18

புராண வரலாறு முற்றிற்று.

ஆக திருவிருத்தம் 31.

## முதலாவது

# உற்பத்தி காண்டம்

திருமருவு கயிலைமிசைக கனக மான
சினகரஞ்சேர் மண்டபத்துச் சிறந்த சீயப்
பொருவிலெழி லணைமீது கணைமீ ளுட்டப்
பூவையொடு புரமெரித்தோன் பொருந்து போதின்
முருகுமலர்க் குழலுமையா ளெழுந்து நாதன்
முண்டகத்தா ளிணைவணங்கி முன்னு நின்று
குருகுவளைக் குலநெருங்கு கரங்கள் கூப்பிக்
குமுதவாய் திறந்தினைய கூற லுற்றுள் 1

இற்றைவரை வரைவளைத்த கரத்தோய் நின்னை
யெண்ணுத தக்கன்மக ளென்னு நாமம்
பெற்றனன்மே லதுபரிப்ப வெருவி னேனப்
பெயரகல வருடியெனப் பேச லோடுந்
தற்றுபொழி லிமயநெடுஞ் சைல வேந்தன்
றன்மகளா யுனைப்பெறுவான் றவஞ்செய் கின்றுன்
மற்றவன்பால் வளர்ந்திடு வந்தி யாம்பின்
மணத்துமென விடைகொடிம மலையிற் சேர்ந்தாள். 2

அங்கொருபூந் தடத்தினிடைக் கமல மீதி
லமலநா யகிகுழவி யாகி மேவ
மங்கைதனை யாண்டுதவம் புரிந்து நின்ற
மலையரையன் கண்டெடுத்து மகிழ்ந்து வான்றோய்

துங்கமலைக் கொடுபோகி மேனை யான
துணைவிகரத் தளிப்பவ டொழுது வாங்கிப்
பங்கமற வளர்த்தனளா யாண்டு செல்லப்
பரனையுற வம்மைதவம் பண்ண வெண்ணி. 3

வென்றியுறு தந்தையொடு மிந்த வாறு
விளம்புதலு மலையரையன் விளம்பு வானி
யின்றுதவம் புரிந்திடவே பொருதுன் மேனி
யிளம்பருவ மிதுதவிர்தி யென்ன வன்னை
மன்றலுறு கொன்றைமுடிப் பரமன் காப்பன்
மறுத்தரையே லெனவிசைந்து மாத ரோடு
குன்றிலொரு பாங்கர்தவச் சாலை யூடு
கோதிறவம் புரிந்திருப்பக் குயிற்றி னாள். 4

செல்லாரும் பொழிலிமயத் தரனைச் சேரத்
திருந்துதவம் புரிந்துமையா ளிருந்த காலை
யெல்லாருந் தழனுதற்கட் பெருமான்விண்ணோ
ரெல்லாரும் பரவவர மீந்த வாற்றால்
வில்லாருங் கனகநெடு மாட நீடு
வீதிமகேந் திரமூதூர் மீது வெம்மை
யல்லாருங் கடுவினைய தகுவர் சூழ
வரசுபுரிந் திருஞ்சூர னமர்ந்தானன்றே. 5

சொற்றருமக் காலத்தின் ஞானத் தின்பாற்
றொல்லைமறைப் பொருளினைமுன் சோதி பாங்கர்ப்
பெற்றசன காதிமுதன் முனிவர் நால்வர்
பெருந்தவங்கள் பலபுரிந்து பின்னு முன்னும்
வெற்றிநெடுங் கயிலையெனுஞ் சைல மேவி
வீறுமெழி னந்திவிட விடஞ்சேர் கண்டக்
கொற்றவன்ற னடிவணங்கி முடிமேற் செங்கைக்
கோகனதங் குவித்தினைய கூற லுற்றார். 6

அருமறையின் பலபொருடேர்ந் திங்ஙான் காறு
மடியரேம் புந்திவிரிந் தலைந்த தீண்டுப்
பொருவிடையோ யறிவடங்கி யாங்க ளுய்யம்
புரிந்தருள வேண்டுமெனப் புகற லோடுங்
கருமறலி யுரங்கிழித்த பதுமச் செந்தாட்
கருணைநெடுங் கடலிருமின் காமர் நன்னூன்
மருளூறு நும் முணர்வொடுங்க வுரைப்பா மென்ன
மன்னுமவன் றிருத்தாண்முன் னிருந்தார் மன்னோ 7

சங்கரன்முன் னவரிருப்ப நந்தி தன்னைத்
தந்திதனை யுரித்ததரத் தலைவ னோக்கிப்
புங்கவர்க ளெவர்வரினும் விடுவா யல்லை
போர்மதவேள் வரில்விடுதி போதி யென்ன
வங்கவனே கினன்முனிவர் மகிழ்ந்து கேட்ப
வாகமத்தின் பொருண்மூன்று மாதி யோத
விங்கெமது புந்திவிரி வொடுங்க ஞான
மிறைவபுகன் றருள்வாயென் றியம்பினாரால் 8

என்றிட லு நகைத்தருளி யாது மாங்கே
யிசைத்திலனப் பொருளிருப்ப திவ்வா றென்று
துன்றுநெடுஞ் சடைமுனிவர்க் குணர்த்து மாற்றாற்
றுலங்குமொரு கரமுரத்திற் றோயச்சேர்த்தி
மூன்றகுவர் புரமெரித்த பரமன் ஞான
முத்திரையாங் குறிகாட்டி முனிவ ரேபோ
லொன்றொருநுண் கணப்பொழுதி யோக மாகி
யுறைந்தனனங் கவரருள்பெற் றுய்யுமாறு 9

பிள்ளைச்சந் திரமவுலிச் சிறுமான் செங்கைப்
பெருமானிவ் வாறிருப்பப் பெருமை சான்ற
வுள்ளத்தன் பினராநற் றவருந் தத்த
முணர்வொடுங்கி ஞானமுணர்ந் துறும்போனின் ப

வெள்ளத்துட் படிந்துசெய லொன்று மின்றி
மேவினரோ ரிறைப்போது விமலற் காய
தள்ளற்றெண் டிரையுடுத்த புடவி மாக்கட்
கமரர்தமக் கெண்ணிலுக மாயிற் றம்மா 10

விரிபதுமத் திருமருமப் பெருமா னாதி
விண்ணவர்க்கு மண்ணவர்க்கும் வேந்த னாகிப்
பொருவிலவ ருயிர்க்குயிரா யுணர்வு நல்கும்
பொருவிடையோ னுமையோடு பொருந்த லின்றி
யருமுனிவர் பொருட்டாக யோகி போல
வமர்தலா லனைவோரு மரிவை மார்தோண்
மருவிமுயங் குதலின்றி யிருந்தார் கஞ்ச
மலர்விதிக்கும் விதிக்குமுறை மாறிற் றன்றே. 11

இப்படியிப் படிவானத் திருந்து வாழு
மெவ்வுயிரு முறுங்காலத் திருணஞ் சேய்க்குந
துப்பவுணர் பெருந்தகையாஞ் சூரன் செய்யுந்
துயரினா லுயர்துறக்கந் துறந்து நீங்கிக்
கைப்படுவெங் குலிசநெடும் படையான் முன்னங்
கனவரைக ளிறகறுத்த கடவுள் கோல
மைப்பொலியு நயனவயி ராணியோடும்
வானவரோ டும்புவியின் மருவி னானல் 12

வெள்ளிவரை யடைந்தரனை வணங்கு மாறு
வேலையலா திருந்திடலும் வேலை நஞ்சங்
கொள்ளுமடன் மிடறுடையோன் குனித்த செம்பொற்
கோதண்ட வேதண்டங் கூடி யாங்கே
கள்ளுகுதார்ச் சயந்தனெடுங் கடவு ளோரைக்
காரவுணன் சிறைபுரிந்த கடுஞ்சொற் கேட்டுத்
தள்ளுமதற் கரியதுயர் கொண்டு நாதன்
றாட்கமல மலர்நினைந்து தவம் புரிந்தான். 13

புரிந்திடலு மிறைத்தவள விடைமேற் றேன்றிப்
பொருவிறவத் தினைத்தனை நீ புந்தி தன்னில்
விரும்பியதே தெனவறியான் போன்று கேட்ப
வெஞ்சூர்க்காய்ந் தெமையாள வேண்டு மென்னத்
திருந்தலனல் வருந்தலெலாந் தக்கன் வேள்வி
சேர்ந்திருந்த தீமையெனச் செப்பி நந்த
முரந்திகழு மகவொருவ னவுணர்ச் சாடி
யுமைப்புரப்பா னெனவருளா லுரைத்துப் போனன். 14

ஆங்கமல னீங்குதலு மமரர்கோமா னுக்குலமு
மின்பமுங் கொண் டனைய வெற்பிற்
றீங்குபுக முயிராணி யென்னு நாமத்
தன்மனைவி பொன்மனைவி தன்பால் வைத்துத்
தேங்கமழுங் கமலநிதிப் பொகுட்டின் மன்னுஞ்
செந்நிறான் குடையானைச் சேர்ந்து தாழ்ந்து
தீங்குபெறு சூர்புரியுந் துயருநாதன்
செப்பியது மவனோடு செப்பி னுனல் 15

போயமரர்க் கிறையுரைத்த வாறு தேர்ந்து
புகுந்தபடி முகுந்தனுக்குப் புகல வெண்ணித்
தூயகம லத்திருந்து திருந்து வேதன்
சுரர்குழுவு மகவானுஞ் சூழ வேகி
மாயனுட னரன்யோகத் திருந்த வாறும்
வானவர்க டானவரால் வருந்து மாறு
மேயபல வுங்கூற வரியு மோர்ந்து
விதிபதும முகநோக்கி விளம்பலுற்றான். 16

எம்பெருமான் முனிவோர்கட் காக யோக
மிருந்திடுத றவிர்ந்தருளி யிமய வெற்பி
லம்பிகையை மணம்புரிந்தோர் சுதனை நல்க
வரன்பான்மா ரனைவிடுகென் றறைத லோடு

மும்பர்பெருங் குழூவோடு மகவா னோடு
மொளிதருபா ரதிகேள்வ னுவந்து மீண்டு
செம்பதும வகத்தினிதுற் றகத்து வேளைச்
சிந்தனைசெய் திடவவனுஞ் சேர்ந்தா னன்றே 17

வந்தமதன் றனைநோக்கி யேகன் யோக
மருவுதல்விட் டுமையவளை மருவு மாறுங்
கந்தமலர் சிந்திவரு வாயென் றோதக்
கரங்கொடிரு செவிமூடி யரன்பே ரோதி
யந்தமிலா வையனைச்சென் றெய்ய வஞ்சி
யனேகவித மறுத்தறைய வலரோன் சீறி
இந்தமொழி மறுத்திடிற்கு ளறைவோ மென்ன
விசைந்தனனிவ் வாசகமங் கிசைக்க லுற்றான் 18

மண்டுபவக் கடற்படிய நினது பாங்கர்
வருஞ்சூளின் மாணாதலின் வாணா லாவுந்
துண்டமதிச் சடையோன்பாற் கணைக டூவித்
துஞ்சினுநன் றுஞ்சுவருந் தொழிலு முண்டா
முண்டகவண் டவிசிருந்த முனிவ வென்பான்
முனியலையா னிறைவனொடு முரட்போராற்றத்
திண்டிறலி னேகுவனென் றியம்ப வஞ்சேல்
செல்கவெனத் தனதுலகஞ் சேர்ந்தான் மன்னோ 19

இருங்கிளைப் பரித்தென்கா விரத மீதே
யிரதியொடு புகுந்துபடர்ந் திந்து வேணிக்
கருங்கண்டன் கயிலைமலை கண்டு வல்லே
கரஞ்சிரமேற் கூப்புபுதேர் கடிது நீங்கி
மருங்குள்ள தனதுபரி சனங்களாங்கே
வைகும்வகை நிறுவிநறு மலர்த்தண் சோலை
நெருங்கந்த வரைமீது மாதி னோடு
நெடுஞ்சிலைவே ளேறியிது நினைந்து செய்வான். 20

விண்டுவரு கீணைகணவே ளனைய தான
விலங்கலிடை விலங்காப்புள் விலங்கு மோகங்
கொண்டிடவெஞ் சரந்தூண்ட நந்தி சீறக்
கொடுவாளி நெடுவானிற் குழுமி நிற்பக்
கண்டுமத னிறைஞ்சவர லென்கொ லென்று
காரணங்கேட் டணிமேலை வாச றன்று
லண்டர்பிரான் மொழிப்படிபோ கென்னப் போந்தாங்
கரனையெதிர் கண்டாங்கே யயர்ந்து வீழ்ந்தான். 21

பின்னிரதி தேற்றவெழீஇப் பொருவா னிற்பப்
பிரமன்முத லோர்மதன்செய் பெற்றி காண்பா
னன்னகிரிக் கொருபுடைபோய் மருவி னூர்வே
கீணைகணைவிட் டானவைசென் றரன்பான் மேவ
வன்னிவிழி திறப்பமத னிறப்பத் தேவி
வருந்துமது தெரிந்தமரர் வருந்தி நாதன்
பொன்னடிநின் றேத்துதலு மியோக நீங்கிப்
புந்திதனி னந்திதனைச் சிந்தை செய்தான். 22

அண்ணனினைந் திடவறிந்து நந்தி யேகி
யடிதொழுது நின்றிடநீ யலரோ னாதி
விண்ணவரைத் தருதியெனத் தருத லோடும்
வேண்டியதே தெனவுமையை விமலநீ வேட்
டெண்ணில்புகழ்க் குமரனைத்தந் தருள்வா யென்ன
விசைந்தவரை விடுத்திரதிக் கிமய மாதை
வண்ணமணம் புரிந்துனது கணவ னுவி
வழங்குதுமே கெனவிமய வரையிற் சேர்ந்தாள். 23

இன்னமொழி மொழிந்தருளிப் பின்ன ரீச
னிட்டமுட னிட்டையனுட் டித்து வாழு
மென்னவுரைத் தருண்மேவுஞ் சனக னாதி
யிருந்தவரா யிருந்தவர்க ளேக வோதிக்

கன்னிதவங் காணமுது மறையோன்போலக்
கௌரிபா லுறவெழுந்து கரங்கள் கூப்பி
யன்னவணின் றிடுதலுமோர் தவிசின் மேவி
யருந்தவநீ புரிந்திடலே தறைதி யென்றான். 24

என்றிடலும் விசையையுமை பரனைச் சேர்தற்
கிச்சித்தா ளெனப்பரனை யிகழ்ந்து கூற
நின்றவுமை சினம்புரிந்து போதி போதி
நீதியிலா வேதியநீ யென்ன வுன்னை
யின்றுமணந் திடவணைந்தே னென்று கூற
விடர்மூழ்கி யிணையறுதா ளிணைக ணோவக்
குன்றினொரு புடைபோக விடையின் மீது
குழகனு யெதிர்காட்சி கொடுத்தா னன்றே. 25

நாயகனும் பரம்பரனை யெதிர்கண் டம்மை
நாணமொடு பணிந்துகர நளினங் கூப்பிப்
பேயனையே னுனையறியா துரைத்த வெஞ்சொற்
பிழைபொறுக்க வேண்டுமெனப் பேச லோடுந்
தூயநதிச் சடைக்கடவு ளவைக ளெம்மைத்
துதித்தனவாக் கொண்டோநீ சோரே லுன்னை
நேயமொடு நாளைமணம் புரியச் சேர்து
நீயரிய தவம்புரித னீங்கு கென்றான். 26

பொன்றாங்கு கனகவரை குனித்தோ னின்ன
புகன்றகலச் சிலவரிது பொருப்பன் முன்போய்
நின்றாங்கு மொழிந்திடலு முவகை யென்னு
நெடுங்கடலி னிடைப்படிந்து நிமலை பால்வந்
தென்றாயே வருகவென மனையிற் சேர்த்தா
னிறைவனுயர் கயிலையடைந் திலங்குமோ ரேழ்
பின்றாழ்செஞ் சடைமுனிவர் தம்மை யுன்னப்
பிஞ்ஞகன்முன் னடைந்திறைஞ்சல் பெற்று நின்றார்.

## வேறு

அன்ன மாதவரை யாதி தெரிந்தே
மன்னு கின்றவிம வான்மக ளாகு
மின்னினைத் தரவி ஞவுதி ரென்னப்
பொன்னு லாவுமிம யக்கிரி புக்கார். 28

மாத லங்கொளிம வானெதிர் கொண்டே
யாத னங்கண்மிசை யன்பொ டிருத்தி
யேது வெஃகியிவ ணெய்திய தென்ன
வாதி யோதிய தறைந்தன ரன்றே. 29

கூறு தற்கிசைவு கொண்டது கண்டே
யாறுலாவு சடை யண்ணலை நண்ணி
மாறிலாத விம வானியை வோதி
வீறு தத்தமிடை மேவின ரன்றே. 30

ஈது நின்றிட விமக்கிரி மன்னன்
காத லோடமரர் கம்பியனைக்கொண்
டோதிமக் கிரியி லூர்புனை வித்தே
யாதி முன்புற வணைந்து பணிந்து. 31

ஒன்று பங்குனியி லுத்திர மாகு
மின்று நன்றுபொழு தென்றிரு மாதை
மன்றல் செய்யவரு வாயென முன்போ
வென்றி தன்னெடுபின் மேவுது மென்றான். 32

நார வேணியர னந்தியை நோக்கிச்
சீரு லாவிய சிறப்புடை மன்றற்
கியாரை யுந்தருதி யென்றலும் யாருஞ்
சேர நந்தியிறை சிந்தனை செய்தான். 33

உன்ன வக்கினி யுருத்திர ராதி
மன்னு ருத்திரர்கள் மான்முதல் விண்ணோர்
துன்னு மாமுனிவர் துன்று கணங்கண்
மின்னுறுங் கயிலை வெற்பிடை வந்தார் 84

வந்து நந்தியுறு வாயிலி னண்ண
முந்து நந்தியரன் முன்பு விடுப்ப
வெந்தை தாளிணை யிறைஞ்சினர் சூழ்ந்தா
ரந்த வேலையல ரோனிது செய்வான். 85

ஆசி லாமகுட மாதி கலன்க
ளீச னங்கணிய வின்பொடு நல்க
மாசிலா முதல்வன் மற்றிது கொண்டா
நேச மோடென நெடுங்கரம் வைத்தான். 86

வைத்து மெய்ப்பணிகள் வண்பணி யாக
நித்த னன்பொடு நினைந்து தரித்தே
மொய்த்தி யாவரு முரண்கொடு சூழ
வித்த கன்றிரு விடைப்புற முற்றான். 87

ஏற தேறின னெழிற் கயிலாய
வீறு கின்றதிரு வெற்பை யகன்றே
யூறி லும்பரொ டுருத்திரர் சூழ
மாறி லாவிம வரைப்புடை யுற்றான். 88.

வேத மேவுதிரு வீதியி னண்ணிக்
காதன் மாதர்நனி கண்டு மயங்கக்
கோதி லாதவிம வானுறு கோயின்
மாத வங்கொடலை வாயிலில் வந்தான. 89

ஏங்கு ளுவிடை யிழிந்தவ ணிறப்ப்
பாங்கு மேனையெதிர் பால்கொடு வந்தே
யோங்கு தாளிணை யுவந்து விளக்கித்
தீங்கி ளுணமொடு சென்றன னன்றே. 40

ஆறுலாவு சடை யண்ண லதற்பி
னூறில் யாவரு முவந்தயல் சூழ
மாறிலா தவது வைக்கள நண்ணி
வீறு சிங்கவணை மீதுறு போது. 41

## வேறு

தென்பால் வடபா லுயர்ந்திழியத்
தெரிந்து தேவர் வருந்துதலாற்
றன்பா சகன்ற குறுமுனியைத்
தொலையா மலயந் தனிலேவ
முன்பா னதுபோற் படியிருப்ப
முனிவ ரமரர் முகமலர்ந்தா
ரன்பா யரம்பை யர்கள்சூழ
வரன்பால் வந்தா ளம்பிகையே. 42

வந்து பரனைப் பணிந்திடலும்
வள்ள றவிசி னிருத்தியென
வெந்தை யோடு முமையிருப்ப
விமலா னடைந்தங் கெழின்மனைவி
யுந்து கரக நீர்வார்ப்ப
வுயர்மாற் கரிய வொளிப்பதத்தைப்
பந்த வினைக ளறவிளக்கிப்
பரிந்து பூசை புரிந்தனனே. 43

பூசை புரிந்து நாரிகரம்
புனிதன் கரத்திற் கொடுத்தரனுக்
காசை பொருந்து மம்பிகையை
யளித்தே னென்ன வறைந்திடலு
மேசி லிமையோர் புகழ்ந்தார்க
ளிருவர் கீத மிசைத்தார்கள்
மாசில் கணங்கண் முழவறைந்தார்
மடவார் பல்லோர் வாழ்த்தெடுத்தார் 44

அங்க ணினைய நிகழ்ந்ததற்பி
னசல வேந்த னசலமூலத்
திங்கண் முகத்தம் பிகைகேள்வன்
றிருமுன் கனிபால் கொடுவந்தே
யிங்கி தயில வேண்டுமென
விவைகொண் டாமென் றவைதம்பின்
மங்குன் மிடற்றோன் கரந்தொடலு
மலரோன் சடங்கு தொடங்கினனே. 45

மன்றற் சடங்கு முடிந்ததற்பின்
மாலு மயனு மகபதியுந்
துன்றுஞ் சுரரு மிமவானுஞ்
சுற்றத் தோரு மற்றெவருங்
கொன்றை முடித்த நெடுவேணிக்
குழகன் றனுங் குழகனிட
மென்றும் பிரியா வுமைதானு
மிணங்கு மன்பால் வணங்கினரே. 45

ஈது புரிந்து முற்றுதலு
மெமையா ளுமையா ளிருந்தாளை
யாதி கரமுன் றெடுஞ்சேட
மனைவர் தமக்கு மளித்தனனப்

போதி விரதி வந்தெந்தாய்
போர்வே டன்னை யளித்தியெனச்
சோதி மதனை நினைந்திடலுஞ்
சுரர்கள் வெருவத் தோன்றினனால். 47

மருவா ரிதழி மதிபொதிந்து
வளர்செஞ் சடில வானவனத்
திருமா லளித்த மலர்ப்பகழிச்
சிலையான் வதனந் தெரிந்தருளி
யுருவா யிரதிக் கிருத்தியரோ
வொழிந்தோர்க் கெல்லா முருவல்லா
தருவா யிருந்துன் னரசுப்ரி
கென்றே யவளோ டவன்விடுத்தான். 48

கன்னற் சிலைவே டனைவிடுத்துக்
கௌரி யோடும் விடையேறி
மின்னுங் கயிலை யடைந்தெவர்க்கும்
விடையை யுதவி விடையையிழிந்
துன்னற் கரிய வரியணைமே
லுமையோ டிருப்ப வுயிரனைத்து
மின்ன லகல விருங்காம
வின்ப மேவி யிருந்தனவே. 49

பின்ன ரொருநா ளரிமுதலாம்
பெருஞ்சி ரிமையோர் மேருவின்பான்
மன்னி யிருந்தே யெமைவருத்தும்
வலிய சூரன் வலிகெடுப்ப
வன்ன நடைமா தினைமணந்து
மரனீந் திலன்மைந் தனையெனவே
யுன்னிக் கயிலைப் பரம்பரனே
ருற்று வேண்ட நச்சினரால். 50

வேளை யெரித்த விழியாளன்
வேளை யறிந்து மீளுதற்கு
நாளு முலவு காலைவிட
நந்தி தனைக்கண் டஞ்சியது
மீள வரலுங் கயிலைதனில்
விண்ணோ ரடைந்து நந்திவிட
வாளும் பரனைத் தொழுதேத்த
வரனிங் கேது வேண்டுமென.

சற்றுந் தகவில் கொடுஞ்சூரன்
றன்னு லிந்நா ளின்னன்மிக
வுற்று வருந்தித் திரிந்திளைத்தோ
முன்னைப் போல வொருசுதனை
வெற்றி பொருந்த வளித்தெமது
விழுமந் துரப்ப வேண்டுமென
வற்றுன் றியசீர்க் களப்பெருமா
னறுமா முகங்கொண் டாங்கிருந்தான். 52

## வேறு

செம்மைகொ ளாறு முகத்தொ டிருந்தே
தீவிழி யாறினு மாறு புலிங்கம்
வெம்மை யொடுந்தர வங்கவை சென்று
வீறுல கத்தும் விரிந்திட வஞ்சிப்
பொம்ம றருங்கவி னம்மை யெழுந்து
புலம்பு சிலம்பு பொலன்கழன் மோத
விம்மென வோடி யிருக்கை புகுந்தா
ளெங்க ணுமாகி யிரிந்தனர் விண்ணோர் 53

ஓடிய விண்ணவர் கூடினர் வந்தே
யுந்திய தானவ ரானவர் தம்மைச்
சாடிய விங்கொரு மைந்தனை யெந்தாய்
தந்தரு ளென்றுனை வந்தனை செய்ய
வீடுறு வெம்மைகொ ளங்கிய ளித்தா
யெங்ஙன முய்வதி யாமென வோதப்
பீடுறு மோர்முக மாகி யிருந்து
பெருந்த முன்முன்பு வரும்படி முன்ன 54

அங்கிலை தன்னின் விரிந்திடு செந்தீ
யாறு பெரும்பொறி யாகிய ரன்றன்
முன்னுற வந்திட வண்ண றெரிந்தே
மொய்ம்புள தேயுவை வாயுவை நோக்கி
மன்னிய விப்பொறி தன்னை யெடுத்தே
மங்கலில் கங்கையுள் வைத்திடு மென்றே
யின்னலில் சத்தி கொடுத்திட மாறி
யெடுத்துயர் கங்கை யடுத்ததில் வைப்ப. 55

மங்கலில் கங்கையு மப்பொறி தன்னை
வண்ணமு றுஞ்சர வணமிசை வைப்பப்
பொங்கெழி லையிரு திக்கினு மான்முற்
புங்கவர் நின்று புரந்தன ரப்போ
தங்கதி லாறு முகத்தொடு மீரா
றத்தமொ டுங்கம லத்தி னிடத்திற்
சங்கர னேமுரு கேசனெ னச்சீர்
தங்க விருந்திட வண்டார்கள் கண்டார் 56

பன்னிரு மொய்ம்பு செடுந்தகை தன்னைப்
பால தருத்தி வளர்த்திட மார்பிற்
பொன்னை யிருத்திய பச்சுரு வத்துப்
புங்கவன் முற்படு புங்கவ ரெல்லா

மின்னறு மீனை விடுத்தது கண்டே
வீறிய வாறுசி ருரென மேவ
வன்ன மடந்தைய ரன்னமு லாவு
மன்னத டத்தி லடைந்து புரந்தார். 57

ஓதிது நின்றிட முன்ன ரெழுந்தே
யோடிய சங்கரி பின்புதி ரும்பிச்
சோதி யிடத்தி லடைந்து மடங்கல்
சுமந்திடு கின்ற துலங்கணை மேவக்
கோதில் சிலம்ப துடைந்ததின் முன்வீழ்
கொன்னவ மாமணி யன்னவள் சாயை
யெய்தலு மொன்பது மங்கைய ராகி
யெந்தை விளித்திட வின்பொடு வந்தார். 58

வித்தக மங்கைய ரெம்பெரு மானை
விருப்பொடு கண்டு கருப்பம தாகச்
சத்தி சினந்து கருப்பய வாதே
தாங்குமி னென்றிட வேங்கின ராங்கே
மெத்திய மேனி வியர்ப்பி லிலக்க
வீரரு தித்தன ராரியை சொல்லா
லுத்தம மாதர்கள் பின்பொரு நாளில்
ஒன்பது மைந்தரை யன்பொடு தந்தார். 59

மாசறு மன்னவர் தம்பெயர் வீர
வாகு வெனுந்திரு வள்ளல் வளைக்கைக்
கேசவ னும்பர் புகழ்ந்திடு வீர
கேசரி வீர மகேந்திர னென்போன்
வீசு புகழ்ப்பெறு வீரம கேசன்
வீர புரந்தரன் வீர வரக்க
னுசறு வீர திவாகரன் வீர
ராந்தகன் வீர மடைந்திடு தீரன். 60

மற்றவர் தங்களை யாதி தெரிந்தெம்
மைந்தர்க ளென்றுமை மாதொடு கூறி
நற்றிறல் கொண்ட விலக்கர்க ளோடு
நந்திரு மைந்தன தேவல் புரிந்தே
யுற்றிடு வீரென வோதுபு மாதோ
டுந்து விடைப்புற மொல்லை புகுந்தே
யற்ற மறுஞ்சர வணம தடைந்தா
ளைசறு வானவ ரானவர் சூழ. 61

மாசிலி மக்கிரி யின்புடை தன்னின்
மன்னு செழுஞ்சர வணமுன மெய்தத்
தேசுறு மன்னதில் வைகிய செவ்வேள்
சிற்பர னரி செறிந்தது கண்டான்
பாச மகற்றர னம்பிகை யோடுன்
பாலகனைக்கொடு வாவென வோத
வாசறு பூவி விழிந்து நடந்தே
யாறுரு மைந்தனை யம்மையெ டுத்தாள். 62

அம்மை யெடுத்துழி யாறுரு மைந்த
னாறுமு கங்களு மாறிரு கையும்
செம்மை பொருந்தொரு மேனியு மாகச்
செப்பினை யொத்த திருத்தன நின்று
பொம்ம லுடன்சொரி பால தருத்திப்
பொற்புறு சிற்பர னைப்பணி விக்க
நம்மை யளித்திடு கந்தனை யன்பா
னைத னெடுத்துர மீதி லணைத்தே. 63

அந்தரி யோடு விடைப்புடை வைத்துங்
காரன் மடந்தைய ருக்கருள் செய்தான்
சுந்தரி மைந்த னருந்து முலைப்பா
றுண்ணென முன்னர் சொரிந்தது தன்னிற்

சிந்திய தோடுபு கந்தன் வளர்ந்த
செழுஞ்சுனை யூடு செறிந்திட வங்கண்
வெந்திறன் மீனென வாழ்ப வருண்டே
வீறிய தொல்லுரு மேவினர் மன்னோ 64

கொற்றம துற்ற பராசர னல்குங்
கோதக லாறு குமாரரு மன்னன்
சொற்றிடு சூள்கொடு மீனென வாழுந்
துன்ப மகன்றுயர் தொல்லுரு வுற்றே
பெற்ற மிசைக்கிரி மாதொ டிருந்த
பெருந்தகை முன்றுதி பேசி வணங்க
வற்றம தற்ற புகழ்க்கொள் பரங்குன்
றத்திடை நீவி ரடைந்திடு மென்றான். 65

அந்தர மீதுறு மாரலை விண்ணோ
ராரையு மன்புட னங்கண் விடுத்தே
யெந்தை பிரானுயர் வெள்ளி விலங்க
லிணங்கி யதன்க ணிருந்திடு போதின்
வெந்திறல் கொண்ட விலக்கர்க ளொன்பான்
வீரர்கள் கந்தனை வந்தனை செய்தார்
சுந்தரி மைந்த னெழுந்தவ ரோடுந்
தூவிளை யாட றொடங்கின னன்றே. 66

மண்ணி லுலாவுறும் விண்ணி லுலாவும்
வண்ண வயன்பத நண்ணி யுலாவுங்
கண்ண னிருந்த தலத்தி லுலாவுங்
கண்ணுத னண்ணிய கண்ணி லுலாவு
மெண்ணில் வளம்பெறு மண்புன றீகா
லின்புறு விண்டனி லண்ட முலாவும்
பண்ணியல் வீணை யிசைத்தினி தாடும்
பாடு மரன்றரு பாலக னம்மா. 67

நீடு கடற்களை யொன்று படுத்து
நேமி நகத்தை நிலத்தி லழுத்து
மீடுறு திக்கர வங்களை வெற்பூ
டின்பொடு கட்டி யிழுத்திடு மாகத்
தோடிரு வோரையு முன்னியல் பன்றி
யொருத்தர் பதத்தி லொருத்தரை யுய்க்கும்
பீடுறு மெண்டிசை யாளர் பதங்கள்
பிடுங்குபு வல்லை பிறழ்ந்திட வைக்கும். 68

தண்டரு கொண்டல் விளிம்பி லுறுங்கோ
தண்டம் வளைத்துயர் தாரகை யெல்லா
முண்டை யெனும்படி கொண்மை யோர்க
ளுரங்கள் சிரங்களி னூடு தெறிக்கு
மண்டிது போல வனேக மியற்ற
மற்ற நியற்றிய வன்மைய ராரென்
றண்டரு மன்னனு மேருவி னின்று
மயற்கிது கூற வகன்றன ரங்கண். 69

## வேறு

அங்நே ரத்தினி லன்ன நகத்தை யலைத்தே
முன்னே நின்றுர் முகத்தொடு மாறு முகத்தோ
னன்னே யத்துட னுடி யுலாவுத னுடி
யின்றே னேயிவை செய்தவ னுமென வெண்ணி. 70

வெவ்வே ளாக மெரித்தவன் மைந்தனை வெல்வா
னவ்வேள் விக்கிறை யும்பர்க ளோடு மவற்குழந்
தெவ்வே றன்னையு மூய்த்தன னுய்த்தமை யெல்லாஞ்
செவ்வேண் மீதல ருற்றன வொத்தன சென்றே. 71

பிள்ளைத் தண்மதி சூடிய கண்ணுதல் பிள்ளை
யுள்ளத் தாலொரு விற்கொடு நற்கணை யொன்றால்
வெள்ளைத் தந்தியை யட்டன னட்டபின் விண்ணோர்
வள்ளற் கேழ்கணை யுய்த்தவ சத்தை வழங்கி. 72

நாலம் பால்வரு ணன்றனை யொன்றுறு நான்மைக்
கோலம் பாவிய மன்றனை வென்றிரு கோலா
லாலம் பாவிய வங்கியை யங்கடல் செய்தான்
வாலம் பான்மொழி யந்தரி தந்திடு மைந்தன். 73

குன்றா நின்றவ ரல்ல ரவன்புடை கூடி
நின்றார் யாவரு மோடுத லோடு நெடுஞ்சீர்
துன்றா றுமுக னங்கது கண்டு துரந்தே
மூன்றா னுற்ற களத்திடை வந்தனன் மொய்ம்பால். 74

## வேறு

மற்றதனை நாரதனு மாமுனிகண் டண்டர்குரு
வுற்றுழிச்சென் றோதுதலு முட்பர்கடம் வாழ்வெல்லா
மிற்றதுகொ லெனவேங்கி யெழுந்துகுக னிடத்தடைந்து
பொற்றிருத்தா ளிணைதொழுது புகழ்ந்திணைய புகல்கின்றான்

அத்தநினை யறியாம லமர்புரிந்த வண்டர்கடம்
மெத்துபிழை பொருத்தெழுப்ப வேண்டுமென வெண்மை
தத்தியையு மத்தியின்மே லரசையுமற் றனைவரையும் [நிறத்
வித்தகனங் கெழுப்புதலும் விழுந்தார்க ளெழுந்தார்கள். 76

உஞ்செழுந்த விமையோர்க ளுயர்குகனென் றுணராதே
வெஞ்சமராற் றினமெனவே மிகநடுங்கி யவனடிதாழ்ந்
தஞ்சலிசெய் தேத்துதலு மஞ்சலிரென் றருள்கூர்ந்து
குஞ்சரமா முகற்கிளைய குமரவேள் கூறுவான். 77

சேயெனமுன் பெமைக்கருதிச் செருப்புரிந்தீ ரினியெமது
தூயவிறல் காணுமெனத் தொல்லுலக மண்டமுயி
ராயவெலாந் தனதுருவே யல்லால்வே றில்லையென
நேயவொரு வடிவு கொடு நின்றனெம் பெருமானே. 78

அன்பொடுமற் புதத்தோடு மமரரெல்லாந் தொழுதேத்தக்
கொன்பொலிமுன் னுருவாகிக் குமரவே ணின்றிடலு
மின்பொடுநீ விளையாட விவ்விடைவே றுற்றவெலா
முன்பெனவைத் தருடியென முகிலூர்தி வேண்டினனால். 79

மகவேந்தன் வேண்டவுமை மகவேந்த றம்பொருட்டான்
மிகவேயே றுற்றவெலாம் வேறின்றி முன்னுளவாந்
தகவேய்க வெனவெவையுஞ் சார்ந்தனவப் படிநவிரப்
பகைவேலோன் குகன்றாள்கள் பணிந்தினைய பகர்கின்றான்.

இங்குன்னை யருச்சிக்க வேண்டுமென விசைந்தருளிப்
பொங்குகயி லைக்கொருசார் பொருப்பினிடை
விருப்பொடுபோ
யங்கமரர் பூசனைகொண் டருங்கயிலை மருங்கடைந்தான்
றங்குபுகழ்ப் புலவருமத் தனிவரையைத் தணந்தனரால். 81

வீசுபுக ழாறுமுக வித்தகனை யும்பரெல்லாம்
பூசைபுரிந் திடலாலே பொற்புறுமவ் வெற்பதுதான்
காசின்முரு கற்கிடமாய்க் கந்தவெற்பென் றொருநாமம்
பேசும்வகை பெற்றதினிப் பெருந்தகரே றியதிசைப்பாம். 82

நாடுபுகழ் நாடுதனி னாரதன்செய் வேள்வியின்மாட்
டாடுபிறந் துயிர்கடமை யழித்திடலு மம்மகத்திற்
கூடுமுனி வருஞ்சுரருங் கோதிலரு நாரதனும்
பீடுடைய கயிலையெனும் பிறங்கன்மிசை யுற்றனரால். 83

உற்றபொழு திலக்கமுட னொன்பதுவீ ரருஞ்சூழ
வெற்றிபுனை யருட்குமர வேளிருந்த படிநோக்கி
மற்றிவணங் குறைமுடிக்க வல்லவனென் றெல்லோரு
நற்றிருத்தா ளிணைவணங்க நம்பெருமா னவின்றருள்வான்.

நொந்தனைந்தீர் புகுந்தபடி நுவன்றிடுதி ரென்றருளச்
சிந்தைமகிழ்ந் தொருவேள்வி செய்யவொரு செச்சையதில்
வந்தெமையிங் கடரினைய மகந்தணந்து வந்தனமவ்
வெந்தகர்மண் ணுயிர்களொடு விண்ணுயிர்கொன்
றுலவியதே. 85

வெய்யவத னடலடக்கி வேள்விமுடித் தடியேங்க
ளுய்யவளித் தருளெனவே யுயர்வீர வாகுவைப்பார்த்
தையவது தனைப்பிடித்திங் கணைதியென வவனேகிக்
கையில்விறற் றகர்பிடித்துக் கந்தனிடை வந்தனனே. 86

அத்தகரைப் பரியாக்கொண் டவர்வேள்வி செயவிடுத்து
வித்தகனு முருகேசன் விளையாடி யுறுநாளிற்
றத்தைமொழிக் கலைமாது தலைவனுயர் கயிலையடைந்
தத்தனடி பணிந்துபுறத் தணிவாயி லிடையடைந்தான். 87

ஆலயத்தின் முன்பிருந்த வணிமணிக்கோ புரத்தலத்திற்
கோலமுட னிருந்தருளுங் குமரவேள் கண்டருளி
ஞாலமளித் திடுவோனை நம்முன்வரு கெனவேகிச்
சீலமுறப் பணிந்திடுதல் செய்யாமற் பரவுதலும். 88

ஏதுபுரி வாயென்ன யான்படைப்பே னெனவருமோ
வேதமென வருமென்ன வியனிருக்கு விளம்பென்ன
வாதியினிற் குடிலையெடுத் தறைகுதலு மதன்பொருளை
யோதியபின் னோதெனவே யோதினு னுமைபாலன். 89

மன்னுகுடி லைப்பொருளை யறியாமன் மயங்குதலுங்
கொன்னுடைய நரசிங்கக் குட்டிதலைக் குட்டியுதைத்
தின்னலுறக் கந்தவெற்பிற் சிறையிடுவித் ததிலேகி
யன்னநடை யுமைபால னுவிகள்பன் னுட்படைத்தான். 90

அங்கதுபின் னொருநாளி லண்டரொாடு முனிவரொடுஞ்
செங்கண்மால் கயிலைநெடுஞ் சிலம்படைந்து நந்திவிடச்
சங்கரனைப் பணிந்தயனைச் சண்முகத்தோ னிட்டசிறை
நங்கள்பிரான் றவிர்த்தியென நந்தியொடு நவின்றருள்வான்.

வென்றியுறு குமரனிடை மேவியாம் விடச்சொன்னே
மென்றுவிதி சிறைவிடுவித் திங்கணைவா யெனவெதிர்போய்
நின்றிதனைப் புகன்றிடலு நின்றிடிலிங் குன்றனையு
மின்றுசிறைப் படுத்திடுவே னென்றிடமீண் டிறைக்குரை
தான் 92

இந்தமொழி கேட்டுநகைத் தேறேறிக் குமரனுறு
கந்தமலைப் புகுந்திடலுங் கழல்பணிந்தென் வந்ததென
வந்தணனை விடுத்திடென வதுசெய்யே னெனச்சினப்போ
லந்தமிலா னேதுதலு மயன்றனைமுன் புறவுய்த்தான். 93

அந்தணனுக் கருள்புரிந்தே யறுமுகனைக் கவானிடைவைத்
துந்துகுடி லைப்பொருணீ யுரைத்தியென வுரைத்ததுகேட்
டெந்தைமகிழ்ந் தருங்கயிலை யெய்தினன் குறுமுனிக்குச்
சுந்தரமூ லப்பொருளைச் சொல்லினன் குமரேசன். 94

## வேறு

அணியார்முரு கேசன்வளர்ந்த தடத்
தமுதக்கொடி சுந்தரி யென்றிருவோர்
தணியாநசை யிற்குக னைத்தழுவத்
தவமுற்றது கண்டவர் தங்க ளுறப்

பணியாவெதிர் நிற்ப விரும்பியதென்
பகர்வீரென வெம்மை மணத்தியெனப்
பிணியான தறுத்தெனை யாளுமருட்
பெருமானவ ரோடிது பேசுவனால். 95

பேரன்பு பொருந்திய நுங்கடமைப்
பின்மன்ற லியற்றுது மவ்வளவுஞ்
சீரிந்திரன் வேடர்கள் பான்மகவாய்ச்
சென்றேயிரு மென்றரு ளோடுவிடுத்
தாருந்தொழு கந்த விலங்கலில்வந்
தணிசேர்கயி லாய மடைந்தரனோ
டேருந்துமை யாளை வணங்கியவர்க்
கிடையாக விருந்தன னெம்பெருமான். 96

அப்போதினி லண்டர்க ளிந்திரன்மா
லயன்மாகயி லாய மடைந்திடலுந்
துப்பா ரரு ணந்தி தடுத்துவிடத்
தோகைக்கொரு பாகனை யன்பொடுகண்
டெப்போது மிடுக்கண் விளைத்திடுசூ
ரென்போன்புரி துன்ப மிசைத்திடலு
மெய்ப்பார்குக னோடவு ணன்றனைநீ
வென்றேவரு கென்று விளம்பினனே. 97

அப்பான்மை புரிந்திடு வேனெனவே
யுடல்சேர் பதினொன்றெ னுருத்திரரை
மெய்ப்பார் பதினோர்படை யாவருளி
வேலொன்று குகன்கர மீதுகொடுத்
தொப்பான திலாத விலக்கர்களோ
டொன்பானெனு முத்தமர் கைத்தலமேற்
றுப்பார்பல வெம்படை யுங்கருளித்
துணையாக வுறும்படி சொற்றனனே. 98

இத்தன்மை நிகழ்ந்தபி னூறுடனே
யெட்டாகிய பூத விராசர்தமைச்
சுத்தன்பரி வோடு தெரிந்தருளித்
தொல்பூத விராயிர வெள்ளமுட
னத்தம்பதி னென்றுட னென்றுடையா
னடல்சேர்படை யாவுறு மென்றருளி
மெத்துந்திறல் கொண் டிடுமோரிரதம்
வேலோனுற நல்கினன் வித்தகனே. 99

இவ்வாறு கொடுத்து மறிச்சடையோ
னேகென்ன வலங்கொ டிறைஞ்சுதலுஞ்
செவ்வானுர மீதி லணைத்தருளிச்
சீர்தங்கிய நாரி திருக்கரமேன்
மைவாழ்வுறு கண்ட னளித்தருள
மாதன்பில் வயிற்றி லணைத்திமையோ
ருய்வானவு ணப்படை முற்றுமழித்
துறுவாயிவ னென்ன வுரைத்தனளால். 100

ஈதம்மை யிசைத்திட லுந்தொழுதே
யிருவோரையு மன்புட னேவிடைகொண்
டோதும் புகழ்வேல னகன்றுயர்தே
ருற்றென்பது பேரு மிலக்கர்களு
மேதந்தவிர் சாரத மன்னவரு
மிமையோரு மிராயிர வெள்ளமெனும்
பூதங்களு மெங்க ணு மங்க ணுகிப்
புடைசூழ வடைந்தன னம்புவிமேல். 101

## வேறு

பாருலக மீதிலுமை பாலன்வரு போதிற்
றாரக னெனும்பெயர் தரித்தவொரு வெய்யோ
னோரரண மானகிர வுஞ்சகிரி கண்டார்
வீரமுறு வேலனயன் மேவிவரு விண்ணோர். 102

கண்டனர் வெருண்டனர் கலங்கின ரிடுக்கண்
கொண்டனரு ளங்குலை குலைந்தனர் தளர்ந்தார்
திண்டிறல்கொள் வேலனிரு சேவடி வணங்கி
யண்டர்புகழ் நாரத னறைந்திடுத லுற்றான். 103

உற்றகிரி யீதுகிர வுஞ்சமதி னோர்சார்
மற்றுமிக ரற்றவொரு மாயநக ருண்டே
சுற்றவுணர் சேனையொடு சூரிளவ லாகும்
வெற்றிபுனை தாரகன் விருப்புட னிருப்பான். 104

வென்றியுற வின்றிவனை வென்றிடுவை யாயின்
வன்றிறல்கொள் சூரனை வதைப்பதெளி தென்னத்
துன்றுகதிர் வேலன்முனி சொன்னவை வினாவிச்
சென்றிவன தாருயிர் சிதைத்திடுது மென்றான். 105

என்றுபி னடற்பெறு மெழிற்புயனை வேலோ
னன்றொடு தெரிந்திளைய நாகமதி னோர்ச்சார்
வென்றியுள மாயநகர் மீதவுண ரோடும்
வன்றிறல்கொ டாரகன் வயத்தொடு வதிந்தான். 106

அம்புவி யழுந்தவரு மாயிரநல் வெள்ளத்
தும்பர்தொழு சாரத ருவர்க்கிறையி னோருன்
றம்பியர்க ளோடுமிகு தானவர்க ளோடு
மொய்ம்பொடு செருப்புரிய முந்துபட ரென்றான். 107

என்னவிது நன்றெனவி றைஞ்சிமுரு கேசன்
றன்னைவிடை கொண்டினிய தம்பியர்க ளோடு
மின்னுகதிர் வேலனருள் வீறிரத மேறி
மன்னுபடை யோடவுண னன் மாயநக ருற்றான். 108

ஒற்றரிது சொற்றிட வுணர்ந்தவுணர் மன்னன்
செற்றமிக மூளவொரு தேரின்மிசை யேறித்
துற்றவனி கங்கள்புடை சுற்றவெதி ருற்றா
னற்றமறு பூதரு மவர்க்கெதிர் புகுந்தார். 109

தெண்டிரை கடுத்தவிரு சேனையு மெதிர்ந்தே
மண்டுபடை சிந்தியமர் வல்லைபுரி போதிற்
சண்டமிகு தானவர்கள் சாரதர்க டம்மா
லொண்டிற விழுந்துதொலை வுற்றனர்க ளன்றே. 110

வாரண முகத்தவுணர் மன்னனிது கண்டே
தேரினு மிறங்கியொரு திண்கதை பிடித்தே
பாரிடர்கள் பாரிடை பதைப்புற வதைப்ப
வேருறு மிலக்கரு மெதிர்ந்துசமர் செய்தார். 111

போரினி லெதிர்ந்துழி புழைக்கைகொடு சுற்றி
வாரியி லெறிந்தன னெழுந்துபினும் வந்தா
ரேருலவு கோளரி யெதிர்ந்துகணை நூறாற்
கோரவவு ணன்றன்மகு டத்தைவிழ வெய்தான். 112

சென்னிமுடி வீழ்தலுமொர் திண்கதை யெறிந்தே
பொன்னிரத மீமிசை புகுந்தன னெதிர்ந்தான்
மன்னுகதை பட்டிட மயங்கவது கண்டே
துன்னுவிறல் கொண்டுவளர் தோளின னெதிர்ந்தான். 113

வந்தெதிர் புகுந்ததிறல் வாகுமிசை வெய்யன்
சுந்தர விறற்கொளொரு சூலமது கைத்தா
னுந்தெழி லுரத்தினிடை யுற்றிடலு மீசன்
மைந்தனிளை யோன்மிகு வருத்தமொடு நின்றான். 114

மொய்ம்புடைய வாகுமிகு மோகமொடு நின்றேழ்
தம்பிய ரெதிர்ந்துடைவ தானது தெரிந்தே
வெம்பதகன் முன்பணுக வெய்யனு மெதிர்ந்தா
னம்புமழை சிந்தியிரு வோருமமர் செய்தார். 115

பொற்சகட மீதிலுறு புல்லனது போதின்
விற்சமர் புரிந்திவனை வெல்வதரி தென்றே
கற்பொருவு தோளுடைய காளைமிசை செல்ல
விற்குலவு மும்பர்கள் விறற்படைகள் விட்டான். 116

விட்டிடலு மப்படைகள் விட்டருளி வெய்யன்
றொட்டபடை முற்றுமிகு துண்டமது கண்டான்
மட்டிலுரு வங்கொடு வளைந்துசம ராடக்
கட்டழகு கொண்டதொரு காளையிது செய்தான். 117

மெத்துமுரு வத்தவுணன் மீதுவிட வீர
பத்திர னெடும்படை பரித்திடலு மாயக்
கொத்தற வுடன்றனிமை கூடியொ ருபாயஞ்
சித்தமிசை கொண்டுகிர வுஞ்சகிரி சென்று. 118

மற்றதி னொளித்திடலும் வாகைபுனை வாகு
சுற்றமொடு தம்பியர்க டோன்முக னொளித்த
பொற்றைபுக வாண்டுமயல் பூண்டனர் கிடந்தா
ரற்றமறு சூரிளவ லன்னது தெரிந்தான். 119

தெரிந்துமகிழ் வாகியொரு தேரின்மிசை யேறி
யருந்திறல்கொ டண்டமொ டமர்க்கள மடைந்தே
விரிந்துசெறி பூதர்மிசை வெங்கணைகள் சிந்த
விரிந்தனர்க ளும்பரினு மிம்பரினு மன்னார், 120

நண்ணினைய கண்டுபுகழ் நாரத னெனும்பேர்ப்
பண்ணவ னிடர்க்கொடு படர்ந்தமரர் செய்த
புண்ணிய முறைந்துழி பொருந்தியடி தாழூஉ
விண்ணவர் மெலிந்திட விளைந்தன விளம்ப. 121

அங்கதை வினாவியெமை யாளுடைய செவ்வே
ளிங்கவனை நூறுவ னிறைப்பொழுதி லென்றே
துங்கமுறு பூதர்க டுவன்றியயல் சுற்றச்
செங்குருதி தங்கிய செருக்கள மடைந்தான். 122

ஈடுசெறி பூதரு மிருந்தகுவர் யாருஞ்
சாடுசம ராடமிகு தானவ ருடைந்தே
யோடவது கண்டன னுருத்தவுணர் மன்ன
னீடிய கரத்துறு நெடுஞ்சிலை வளைத்தான். 123

வெங்கணைக ளும்பல வியன்படையு நேரே
யங்கணை கணக்குழுவி னங்கமுற வுந்திக்
கங்கைமுடி யானுதவு கந்தனெதிர் வந்தே
சங்கையில் பவங்குலவு தாரக னுரைப்பான். 124

மேதகு மரிக்குமலர் மீதிலய னுக்கு
மாதவள வும்பலிறை வற்குமல னின்றோ
ளாதிபர னுக்குமெம ருக்குமம ராட
வேதுவிலை வந்தபடி யேதுமொழி கென்றான். 125

நற்றொழில் புரிந்திடு நதிச்சடில நம்ப
னற்றமறு வானவர்க ளானவர்க டம்மைச்
செற்றமொடு நீவிர்சிறை செய்ததை யுணர்ந்தே
மற்றெமை விடுத்தனனும் வன்மைவிறல் சிந்த. 126

என்றுபல வேலவ னிசைத்தமொழி கேளாக்
குன்றுறழு மொய்ம்புள கொடுந்தகுவர் மன்னன்
வன்றனு வளைப்பவுமை மைந்தனும் வளைத்தான்
றுன்றிரு வருங்கணை சொரிந்தமர் புரிந்தார். 127

கையன்விடு வெங்கணைகள் கந்தனெதிர் சிந்துந்
துய்யன்விடு வெங்கணைகள் சூர்துணை யகற்றும்
வையமிசை யோர்வெருவ வையமிசை நின்றே
வெய்யசம ரிவ்வகை விளைத்தனர் வெகுண்டே. 128

இந்தவகை விற்சம ரியற்றுமது போதிற்
கந்தன புயங்களுள கந்தன்முரு கேசன்
வெந்திறல்கொ டாரகன் விடுங்கணை விலக்கிச்
சிந்தினனொர் கோடிகணை தீயன்மிசை செல்ல. 129

கோடிகணை பட்டுழி கொதித்ததி னிரட்டி
நீடுகணை விட்டிடலு நேசமுரு கேச
ளூடிமிகு கோல்சிதறி நண்ணலன் விடுப்பக்
கூடிவரு வாளிகள் குறைத்தன னறுத்தே. 130

கன்னியிட நண்ணுமிறை கண்ணில்வரு மண்ணல்
பின்னரு மிலங்கிரு பெருங்கணை துரந்தே
மின்னல்புரி சூரனிளை யானுட லினைப்பக்
கொன்னுறு முகக்கையொடு கோடுக ளறுத்தான் 131

சந்துறு முகக்கைநெடி தானதன தந்தஞ்
சிந்தனு மனத்திடை சினத்தவுணர் செம்மல்
வெந்திறல்கொ ளாயிரம் விறற்கணை விடுத்தே
கந்தனிர தத்துறு கவின்கொடி யறுத்தான். 132

அப்பொழுது வேலவ னருங்கணைக ளெட்டு
மெய்ப்புற விடுத்தவுணன் விற்றனை யொடித்துத்
துப்புடைய வாயிர நெடுங்கணை துரந்தே
யொப்பிலவ னேறிரத மொல்லைதுகள் கண்டான். 133

தேரழிய வேறுமொரு தேரின்மிசை யேறி
வீரமுற மற்றுமொரு விற்றனை யெடுத்தே
சீரிய குகன்றனது தேர்கடவு கான்மே
லாரும்வகை யாயிர மடற்கணை விடுத்தான் 134

மன்னுகணை மேனிபட மாருதம் வருந்த
வன்னது தெரிந்துகுக னாயிர நெடுங்கோல்
கொன்னவுணர் மன்னது குளத்தினு ளழுத்தப்
பொன்னினிர தத்திடை புலம்பினன் விழுந்தான். 135

சோரியொடு சோகமொடு சூரிளவல் வீழ
வீரமுற வன்படைஞர் வேலனை வளைந்தே
போரது புரிந்துழி பொலிந்தகணை தூவிச்
சீரிய குகன்றகுவர் சேனைக ளறுத்தான். 136

மையல தொழிந்திட வெழுந்தவுணர் மன்னன்
செய்யமுரு கன்புடை சிவன்படை செலுத்தக்
கைகொடு பிடிப்பவது கண்டுபல மாயை
வெய்யமலை யோடுசெய வேலினை விடுத்தான். 137

வென்றிபுனை யெஃகமது விஞ்சைதரு குன்றை
வன்றிறல்கொ டாரகனை வல்லையி லழித்தே
யொன்றுதிறல் வீரரை யெழுப்பியுயர் கங்கை
சென்றதனி லாடுபு திரும்பியதை யன்றே. 138

வெந்திறல்கொள் வேலது விசாகனது கைமேல்
வந்தினி திருப்பவடல் வாகுமுதல் வீர
ரெந்தையெதிர் வந்திட விலங்குமுரு கேசன்
புந்திகள் களிப்பவவ ருக்கருள் புரிந்தான். 139

மற்றதுபி னுந்துதிறல் வாகுவை விளித்தே
வெற்றியொடு தாரகன் விடுத்துழி பிடித்த
தற்றமி லரன்படை யவன்கையி லளித்தான்
நற்றுமிகு தானவர்க டங்கள்குல காலன். 140

இறந்தமிகு பூதர்க ளியாரையு மெழுப்பி
நிறைந்தபடை சூழ்தர நிவந்திடு கவந்தப்
பறந்தலை கடந்தடல்கொள் பன்னிரு புயத்தோன்
சிறந்தவிம யக்கிரியி னெல்லையது தீர்ந்தான். 141

தென்றிசையி னேகியுயர் தேவகிரி நண்ண
வன்றிறல்கொ ளாதவன் மறைந்தனனவ் வேலைக்
குன்றுத லிலாவணைய குன்றின்மிசை வென்றிப்
பொன்றிகழு மெஃகமுள புங்கவ னிருந்தான். 142

ஆசிலருள் வேலவனை யவ்வரையின் விண்ணோர்
பூசனை புரிந்தனர் புகன்றவிது நிற்க
வீசுபுக ழும்பன்முகன் வீடியது கேளா
மாசவுரி யென்னுமனை மாதுதுய ருற்றாள். 143

மையுறு தடங்கண்மட மங்கையரோ டேகிச்
செய்யதொரு மின்னனைய செல்வமெனு மாயப்
பொய்யினில் விழுந்துபல புன்மைகள் புரிந்தோன்
மெய்யினில் விழுந்தலறி மெத்துதுய ருற்றாள். 144

அந்தவமை யத்தின்முன மாசுர மடைந்த
சுந்தர மிருந்தவசு ரேந்திரன் விறைவி
வந்துதன தத்தன்மடி வானசெயல் கண்டு
வெந்துயர் பொருந்திட விழுந்தலறி னாள். 145

அங்குள கடன்செய்தவ னைத்தகன மாற்றித்
திங்கண்முக வன்னையர்கள் யாருமெரி சேரப்
பொங்குதுயர் கொண்டுசில போரவுண ரோடு
மங்கலக றென்கடன மகேந்திர மடைந்தான். 146

அங்கரி னுள்ளவ ருருந்துயர் பொருந்தக்
கொன்னுடைய சூரனுறு கோயிலவை யுற்று
மன்னவ னடித்துணையின் வல்லையின் விழுந்தே
யின்னலொ டரற்றின னிகழ்ந்தன விசைத்தான். 147

தம்பிமடி வானமொழி தன்செவியி லேற
வெம்பின னரித்தவிசின் மீமிசை யிருந்தோ
னம்புவி விழுந்தன னரற்றின னதற்பின்
மொய்ம்புடைய வேலனொ டமர்க்கெழ முயன்றான் 148

அன்னசெயல் கண்டன னமைச்சரி லமோகன்
முன்னுற வடைந்துசில புந்திகண் மொழிந்தே
மன்னவ னமர்க்கெழன் மறுத்திட விருந்தே
யின்னல்புரி சூரனவ னின்னதை யியற்றும். 149

மற்றிணையில் வேலவன் மருங்கினி னெருங்கும்
வெற்றியுறு சேனையை வினவிவரு மாறங்
கொற்றரை விடுத்துவிட மொத்தவ னிருந்தான்
கொற்றமுரு கேசனது கொள்கையுரை செய்வாம். 150

தேரினொடு வாரிமிசை செங்கதி ரருக்க
னேரினொ டெழுந்தன னெழுந்தவது மானச்
சாரதர் குலாவவரு சையநகர் வையம்
வீரநெடு வேலுள விசாகனினி துற்றான். 151

மாருதவ லவ்வன்விடு வையமிசை மேவிச்
சீரிலகு வானவர் செழுங்கிரி யகன்றே
வீரமுறு சேனையுடை மேவுற விறற்கே
தாரகிரி கண்டது தணந்தருளி னானால். 152

கருக்கடல் கடப்பவருள் காசிநகர் கண்டு
பருப்பத மெனும்பெயர் பரித்தகிரி கண்டு
விருப்பமுள வேங்கட வியன்குவடு கண்டு
மருக்குலவு தென்கயிலை வண்சிகரி கண்டு. 153

ஆலவன மாகிய வரும்பதி தெரிந்து
ஞாலமுயர் கச்சியெனு நன்னகர் தெரிந்து
சீலமு றழற்கிரி தெரிந்துநவ நீதக்
கோலநக ரோடுமுது குன்றது தெரிந்து. 154

வல்லிய மிடற்பதன் மகிப்பணி துதிப்பப்
பல்லிய முழங்கவுமை பார்வைகளி கூர
வல்லணைய கண்டமுள வண்ணனட மாடுஞ்
செல்லுறு பொழிற்குலவு தில்லைநகர் கண்டு. 155

சீரினொடு மன்னிவளர் சென்னிவள நாட்டு
வாரிங்கர் காவிரி வடாதுதிசை தன்னி
லேரிலகு மண்ணிநதி யின்கரை யடைந்தான்
காரிலகு கண்டனது கண்ணில்வரு மண்ணல். 156

அந்தவமை யந்தனி லருக்கன்மறை வானுன்
கந்தனது போதமரர் கம்மியனை நோக்கி
யிந்தவிடை யொன்றுநக ரின்றுபுரி கென்று
னுந்துமவ னப்பொழுதி லோர்நகர் புரிந்தான். 157

தாரணியி னப்பதி தனக்கமரர் சேய்கு
லூரென வரும்பெய ருரைத்தன ரதன்க
ணுருமெழில் வேலவ னமர்ந்தினி திருந்தான்
சீருலகு விண்ணிறை செயற்கையை யிசைப்பாம். 158

முன்னமொரு வைகலின் முரட்குலிச வேலோ
னின்னலொடு காழியி னிருந்தபொழு தங்கண்
மன்னுமொரு தெய்வத மருங்கணிகள் வைத்தா
னன்னது கலன்களை யளித்ததவண் வந்தே. 159

அண்டர்புகழ் தெய்வத மளித்தவணி தன்னிற்
கொண்டலி னிருண்டிடு குழற்சசி யிடும்பூண்
கண்டவனை யுன்னிமிகு காமமெனும் வெந்நோய்
கொண்டவன் வருந்தியது கூறவரி தம்மா. 160

ஆயதொரு வேலைதனி லாதவ னெழுந்தான்
றாயமுரு கக்கடவுள் சோதிவடி வங்க
ணேயமொடு செய்துமிகு பூசனை நிரப்பி
நாயக னளிப்பவொரு நற்படை படைத்தான். 161

வெற்றியணி கஞ்சுலவு வீறிரத மேறி
மற்றிணையி லாதவிடை மாமருது மேன்மை
யுற்றமயி லாடுதுறை யொண்பறிய லூர்கண்
டற்றமில் வளங்கொள்கம லாலய மடைந்தான். 162

அந்தமில் வளங்குலவு மப்பதி தணந்தே
வெந்துயர் தருங்கொடிய பாலைதனின் மேவத்
தந்திமுக வற்கிளவல் சாருதலு மன்ன
செந்தழல் வனங்குளிர்மை சேர்ந்தது சிறந்தே. 163

பரிந்திடு வளங்கிளர் பரங்கிரியின் மீதே
யிருந்திடு பராசர னிரும்புதல்வர் வந்தே
திருந்தடி வணங்கவருள் செய்தவர்க ளோடு
மருந்துதிகொள் செந்திலி னடற்குமர னுற்றான். 164

அருந்திறல் பொருந்தமரர் கம்மியனை யங்கண்
டெரிந்தருளி யெஃகமுன சிற்பரனி யாமிங்
இருந்திடவொ ராலய மியற்றிடுதி யென்ன
விரிந்தபுகழ் மந்திரம் வியப்புற விதித்தான். 165

வாங்கமுன் மிடற்புரவி வையமதி கந்தே
தேங்கமழ் பொதும்பர்செறி செந்தினக ருட்போ
யோங்கமரர் சேனைதொழ வொண்சினக ரஞ்சேர்ந்
தாங்குறு மடங்கலணி யாதன மமர்ந்தான். 166

மங்கலமொ டங்கணுறு மாமுருக வள்ளல்
புங்கவர் வணங்குறு புரந்தரனை நோக்கித்
துங்கமுறு நீதியறு சூரன்முதல் வெய்யோ
ரிங்குற வுதித்ததுவும் யாவுமுரை யென்றான். 167

என்றிடலு மின்னதை யிசைத்திடுதி யென்றே
வன்றிறல்கொள் பொன்னொடு மகத்திறை விளம்பச்
சென்றுமுரு கக்கடவுள் சேவடி வணங்கி
நின்றவுணர் வந்தது நிகழ்ந்தது முரைப்பான். 168

உற்பத்தி காண்டம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 200.

## இரண்டாவது

# அசுர காண்டம்

அற்றமறு காசிப னளித்தவறு பான்மே
லாறுபடு கோடியவு ணர்க்கரச னுனோன்
பெற்றசுர சைப்பெயர் மகட்குயர் மழைக்கோள்
பீடுபெறு மாயவகை பேசுபு தெருட்டி
மற்றதனி லன்னமயில் வல்லப முணர்ந்தே
மாயையென வோர்பெயர் வழங்கின னதற்பின்
னற்றிறல்கொ ணாந்திமுன் மொழிந்த மொழியுன்னி
நங்கைவரு கென்றிவை நவின்றிடுதலுற்ருன். 1

மங்குல்புரை மாயன்முதல் வானவர்க டம்மால்
வல்லவுண ரெண்ணிலர் மடிந்தனர்கண் மாதோ
விங்குன தருங்குல முயர்ந்திட நினைந்தே
யின்பமொடு காசிப னிருந்துழி பொருந்தி
யங்கவ னெடுங்கலவி செய்தவுண ரைத்தந்
தன்னவர் தவஞ்செய விடுத்துவரு கென்னச்
செங்கனக மானவொரு மேருவட பாலச்
சீர்முனி தவஞ்செயு மிடந்தனி லடைந்தாள் 2

மன்னியிடு காசிப னிருக்கையி லடைந்தே
வாவியொடு தண்டலையு மண்டபமு மங்கண்
கன்னிகடி தேபல வளத்துட னியற்றக்
கண்டன னியாவரிது கண்டவர்க ளென்றே
யுன்னின னிருந்துழி யவன்றனது நேரே
யுற்றிடலு மற்றவ ளுருபமது கண்டு
முன்னைவினை யாலிடர்செய் காமநதி யூடே
மூழ்கின னியாரெனினு முன்னைவினை போமோ. 3

ஆயவடன் மூன்பணுகி யூர்பெயர் வினவி
யன்பினெடு கூடியெனே யாள நினே யென்ன
ளாயவள் புகன்றிடுவ ளுத்தர தலத்தேன்
வண்மையுள கங்கைதனில் வல்லேபடர் கின்றே
னீயுள தருந்தவ மொழிந்திது மொழிந்தாய்
நீதிமுறை யல்லவிது நில்லென நிகழ்த்திப்
போயின டொடர்ந்தனன் மறைந்தனள் வருந்திப்
பொற்புமுனி தேடுபு புலம்புபு திரிந்தான். 4

தேடிமயல் கொண்டுமுனி வாடுமது போதிற்
செம்பரிதி பச்சிம திசைக்கட லடைந்தா
னீடுமிருள் வந்ததெழின் மாயைதனே யன்று
னினேந்தற வரற்றுதலு நேர்பட வணேந்தாள்
கூடியெனே யாளென விரந்தடி யிறைஞ்சக்
கூறுவ ளியான்வடிவு கொண்டபடி கொண்டா
லாடல்புரி வேனெனலு மங்கனெருபுத்தே
ளங்கமது கொண்டன னயன்றனது மைந்தன். 5

அங்கவ ளிசைந்துமுத லானவொரு சாமத்
தன்பினெடு கூடலு மருந்திறல்கொள் சூரன்
றுங்கமொ டுதிப்பவவ ரங்கவியர் வின்கண்
டுப்புடைய முப்பதெனு மாயிரவெள் ளத்தோர்
பொங்கவுணர் வந்தன ரிரண்டுபடு சாமப்
போதிலரி மேனிகொடு புல்லுதலும் வல்லே
சிங்கமுக னுயிர நெடுந்தலேக ளோடுஞ்
சேணிலுறு மண்டர்க டிடுக்கிட வுதித்தான். 6

அங்கவர்க ளங்கமிசை பொங்கிய வியர்ப்பி
னற்றமறு நான்குபதி னுயிரவெள் ளத்தோர்
தங்கிய விறற்றகுவர் வந்தனர்கண் மும்மைச்
சாமமதின் மாயையொடு சைவமுனி வோனும்

வெங்கரி யுருக்கொடு புணர்ந்துகளி கூர
வேழமுக மோடுமுயர் தாரக னுதித்தான்
றுங்கவெழின் மேனிமிசை வந்தகசி வின்கண்
டோன்றினர்க ணன்குபதி னுயிரவெள் ளத்தோர்.

மற்றதுபின் னன்குபடு சாமமது தன்னில்
வன்றகரு ருக்கொடு மகிழ்ச்சியொடு கூட
மூற்றுமெழில் பெற்றவச மாமுகி யுதித்தாண்
முப்பதெனு மாயிர முரண்டகுவர் வெள்ள
முற்றது வியர்ப்பினி லியாளிமுதலாகு
முந்திய விலங்கின துருக்கள்கொடு கூடப்
பொற்றுதிகொ ளாறுபதி னுயிரவெள் ளத்தோர்
பொருக்கென வுதித்தன ரருக்கனு முதித்தான். 8

அப்பொழுது தொல்லுருவ மாயவள் பொருந்த
வந்தண்மலர் மீதுறு மயன்றனது மைந்தன்
மெய்ப்படு தனதுருவ மேவினனவ் வேலை
வேலைநிகர் தானையொடு மேவுமொரு சூரன்
றுப்பரி முகத்தனொடு தாரகனொ டேகித்
தூயமுனி மாயவ டுணைப்பத மிறைஞ்சி
யெப்பரிசி யாமினி யியற்றுவ தெனச்சீ
ரெய்தியிடு காசிப னிசைத்திடுத லுற்றான். 9

மாதவ மெழிற்றொழி லனைத்தினு மினித்தான்
மற்றது குயிற்றிடின் மனத்திடை நினைத்த
தேதையு மளித்திடு மிடர்ப்பவ மறுக்கு
மின்பமுறு நற்கதியு மீயுமிதன் மிக்க
தோதிடி லியாதுமிலை யாதலி னனைத்தே
யுள்ளமிசை யன்பொடு முவந்திடுதி ரென்றே
மேதகு மருந்தவ முயன்றுபுகழ் மேனாண்
மேவியபெருங்கதை விளம்பிடுத லுற்றான். 10

கொற்றமு றெழிற்கடக மேவுமறை யோனற்
குச்சக னளித்தருள் கவுச்சிக னெனும்பே
ரூற்றிடு புகழ்ச்சுத னருந்தவ மியற்றற்
குன்னியொரு துன்னுமல ரோடையய லெய்திப்
பற்றலர் புரம்பொடி படுத்தவனை யுள்கிப்
பற்றுமிகு முண்டிகள் பகர்ந்திட லிகந்து
குற்றியி னிருந்தன னருந்தவ மியற்றக்
கோகனத மின்றமுவு கொண்டலவன் வந்தான். 11

மன்னிய தவம்பயிறல் கண்டுவகை கொண்டு
மாதவ னினதுபெயர் மாமிருக கண்டூ
யன்னென மொழிந்திட வெழுந்துதொழ மாயோ
னுதியரு ணின்புடையி னுகவென வோதித்
துன்னுமிமை யோரொடு மறைந்தன னதற்பின்
றாயமுனி தந்தையிடை வந்துதொழ தன்னுன்
பொன்னடி வணங்கலு மெடுத்துநனி புல்லிப்
பொற்புறு தவத்திடை புகுந்ததுரை யென்றான். 12

அம்மொழி வழங்கலு நிகழ்ந்தசொல வின்புற்
றன்பொடினி யில்லற மமர்ந்திடுதி யென்ன
வெம்மைநிரை யந்தரு மடந்தையர் துவக்கின்
வீழ்கில னெனப்பல விளம்புதலு மன்னுன்
செம்மையுறு வீடுபெறு நன்னெறியி தாகுந்
தீதல வெனப்பல திறத்தினி லுரைத்தே
யிம்மொழி மறுத்தறைய லாணை நம தென்று
னென்றிட விசைந்தன னிறைஞ்சின னிசைப்பான். 13

மனந்தனின் முனிந்திடன் மொழிந்தநெறி நிற்பன்
மற்றெனை துரைப்படி மருதவியல் புள்ள
கனந்தரு பெருந்தன மடந்தையுள ளேலக்
கன்னியை மணம்புரிதல் கண்டிடுவ னென்ன

வனந்தனி லிருந்தவ முழந்தவன் மகிழ்ந்தே
யன்னகுண மேயுடைய வன்னநடை மாதை
தளந்தலை பொருந்திய பெரும்புவியி னேடி
நல்குவ னுனக்கெனலு நற்சுத னவிற்றும். 14

ஐயனை யிழந்தவர்க ளன்னையை யிழந்தோ
ராதிநவை யாயின வகன்றமட மானார்
வையமிசை யுண்டெனில் வரைந்திடுவ லென்ன
வல்லையது செய்வனென வண்கமல மேவுந்
தையன்மிக மன்னிவளர் சென்னிவள நாடு
தன்னிடை யனுமய மெனத்திகழ் வனத்தின்
மெய்யில குசத்திய னிடத்தினொரு கன்னி
மேயது வினவியவண் மேவினன் விருப்பால். 15

அன்பினொடு குச்சக விருந்தவனை நேர்கண்
டசத்திய மகன்றிடு முசத்தியன் வணங்கா
வென்புடை யடைந்தபடி யென்னபுக லென்ன
வென்னொரு மகற்குன தெழிற்புதல்வி தன்னை
யின்பினொடு பேசும்வகை யுன்னியிவண் வந்தே
னென்றிடலு நன்றென விசைந்துமுனி யோடு
தன்குபெறு மவ்விடை யிருந்தன னிருந்த
நாளினிகழ் வுற்றது நவிற்றிடுது மாதோ. 16

வன்றவ வுசத்தியன் மகிழ்ந்தமனை மாதா
மங்கலை விடுப்பவெழின் மாமகள் விருத்தை
சென்றுமட வாரொடு நறும்புனல் படிந்தே
திரும்புமமை யத்தினனி சீறுமத வேழ
மொன்றெதி ரடைந்திடலு மேவரும் வெருக்கொண்
டோய்யென விரிந்தன ருரக்கரி விருத்தை
பின்றொடர வோடியொரு நீடுபுதன் மூடு
பீடுபெறு கூவலிடை பெய்வளை விழுந்தாள். 17

விழுந்தனள் பொருந்துயிர் பிரிந்தனள் கிடந்தாள்
வேறுள மடந்தையர் விருத்தைதனை தேடி
யழுந்துதுய ரத்தினொடு கண்டிலர்களாகி
யன்னவட னன்னையொ டறைந்திட வரற்றிச்
செழுங்கணவ னோடிது புகன்றிடலு மன்னன்
செல்லல்கொடு சென்றுநனி தேடின னெடுத்தங்
கொழிந்திடுத லற்றதுய ருற்றிடலு மிவ்வா
றேதமிகு குச்சக னுணர்ந்தவ னடைந்தான். 18

வந்துசில புந்திசொலி நாளையுயி ரீவன்
மண்டுதயி லத்துடலை வைத்திடுக வென்றே
யுந்தொரு தடத்தணுகி யந்தகனை யுள்ளத்
துன்னின னருந்தவ முழந்திடலு மன்னோன்
முந்தவ னடைந்தகரி யெய்திமுனி தன்னை
மொய்ம்பினொடு பற்றுபு முரண்கொள்பிடர் மீதே
சுந்தர முறக்கடிது கொண்டுவரை யென்னத்
துண்ணென நடந்தது வசுந்தரை துளங்க. 19

தடந்திகழ் விலங்கல்கள் பிலந்தனி லழுந்தத்
தாள்கொடு மிதித்துயர் தருத்திரள் பறித்தே
மடங்கலு நெடுந்தல மடங்கலு நடுங்க
வல்லைவரு மும்மத வரைக்களிறிவ் வாறே
நடந்தது விருந்தவ நெடுந்தகை தெரிந்தே
நம்மையி தெடுத்ததெவ னுடுது மெனக்கொண்
டிடந்தரு தனுதறிவி னோடின னுணர்ந்தா
னெவ்வகை யுணர்ந்ததெனி லிவ்வகை யுணர்ந்தான்.

நந்துறு தடம்பல கருன்றிடு கலிங்க
நாடுதனி லீடுபுகழ் நன்னகர மொன்றுண்
டத்திரு நகர்ப்பெய ரிலங்கரி புரஞ்சீ
ரப்பதியின் மேவிய வருந்துதிகொ டேவ

தத்தனெனு நாய்கனுத வுந்தரும தத்தன்
றன்னையரு ளன்னையொடு தந்தையு மிறப்ப
மெத்துவிழு மத்திடுெ டிளைத்துறு தினத்து
மேவின னவன்புடையொர் வீறிரத வாதி. 21

அருந்தவ னெனும்படி யடைந்தவனை நேர்கண்
டன்பொடு வணங்கின னணைந்ததெவ னென்னத்
திருந்துமொரு விஞ்சையுள தென்றுபல மேன்மை
செப்பியொரு பொன்னைவளர் கோடிநிதி செய்வா
மிருந்திடு நிறைதுபொரு டந்திடினு னில்லை
யில்லைநிதி வைக்குமிட மென்னும்வகை யின்னே
புரிந்திடுது மென்றிடலு மாடைமனை வீடு
பூணிவை பகர்ந்தெழில் பொருந்தறமும் விற்றான். 22

அன்னபொருள் கொண்டுகர வன்றனை யடைந்தே
யங்கவன்முன் வைத்திட வருங்குகையு ளிட்டு
மன்னுதழ றாமமவ னோர்நனி துரப்ப
மற்றவன் மயங்கநிதி வண்குகை கரந்தே
பின்னொர்குகை யப்படி யிருந்ததது தன்னைப்
பீடுபெற வைத்துயர் பெரும்புகை தணித்தே
யின்னதை யிருங்கனலில் வைத்திடுக வென்று
னொன்றிடலு நாய்கனு மெடுத்தழலின் வைத்தான். 23

முப்பகன் மனத்தெமை நினைத்துறைதி நீலி
முன்னொரு மகம்புரிபு மூத்தின மகன்று
லிப்புடை யடைந்திடுது மென்றவனை வைத்தே
யேகுதலு நாய்கனுமவ் வெல்லையு மிருந்தே
யப்படி றனைப்புவியி னோடிநனி காணு
தல்லல்கொடு வந்தன னருங்குகை யெடுப்பக்
கைப்படு மிருங்குகை யிரும்புருவ மாகக்
கண்டனன் மிகுந்துயர் கலந்தன னிறந்தான். 24

நற்றருமம் விற்றதொரு குற்றமது தன்று
　　ளுகவுரு நண்ணின னெனக்கடி துணர்ந்தே
மற்றிவ்வுரு வந்தனை யகற்றுவ னெனுவோர்
　　வைகல்புரி தன்றவம் வழங்குதலும் வல்லே
வெற்றிகொள் களிற்றுருவ மற்றமரர் மேனி
　　மேவுபு புகழ்ந்தெழிலின் விண்ணுலக முற்று
னற்றமறு பூசுரனு மோடையிடை முன்போ
　　லருந்தவ முயன்றிடலு மந்தக னடைந்து. 25

விருத்தையுயிர் நல்குதலு மன்னவ ளெழுந்தாண்
　　மெய்த்தவன் மகற்கவளை வீறுவது வைசெய்
தருத்திகொள் வடாதுபுல மேகலு மவன்சே
　　யன்பினொடு மில்லற மமர்ந்துறையு நாளிற்
பெருத்திடு வனப்புமிரு கண்டெனவோர் பாலற்
　　பெற்றுவட திக்கிடை பெயர்ந்திடலு மன்னோ
திருத்தகு மவன்குமரன் முற்கல னளித்த
　　சேயிழை மருத்துவதி யைவதுவை செய்தான். 26

மண்டெழில்கொள் காசிநக ருற்றரனை யுன்னி
　　மாதவ முயன்றமலன் மன்னருளி னுன்மார்க்
கண்டனை யளித்திடலு மன்னவன் வளர்ந்தே
　　கண்ணுத லருட்கொடுயர் காலனையும் வென்று
திண்டிறல் படைத்தன னெனச்சொல மறுத்துச்
　　செல்வமதி கம்மது பெறச்சிவனை நாடி
வண்டவ மியற்றிடுதி ரென்றுகடி தேவி
　　வல்லிதனின் முல்லைநகை மாயவ ளெழுந்தே. 27

ஏகுறு மருந்தவ விருத்தியகல் கின்றே
　　னென்றவ ணடந்திடலு மேகன்முறை யோவென்
ஞரிடர் பொருந்தியவள் பின்படர வன்னு
　　ளன்பினொடு மைந்தரை யளிப்பது பொருட்டால்

வாரிதி நிலத்திலுனை நண்ணினனினி யானோர்
மாயையென வோதினனண் மறைந்திடலு முள்ளஞ்
சோர்வுற வருந்தவிதி வந்துசில புந்தி
சொல்லியக லத்துயர் துறந்தினி திருந்தான். 28

முன்னென வடங்குத ருடங்கினன் மடங்கன்
முகத்தனு மடற்கரி முகத்தனு முகத்தீற்
றின்னலுற வேழ்கடலு மொன்றுபடு மாபோ
லெங்குநிறை தானையு மிலங்குபுடை மேவ
வொன்னலர் நடுங்கவரு சூரனொரு பாலி
னெல்லையி னடைந்திடலு முந்துபுகர் வந்தே
யந்நிலை மகத்தொழி லினைத்தென வனைத்து
மங்கவ னறிந்திட வறைந்தனன் மறைந்தான். 29

பண்டென வடாதுபுல மேவியசு ரேசன்
பாங்குபுனை மாயைபொரு ளாங்குற வியற்ற
வண்டர்புகழ் வேள்விபதி னாயிரம தாகு
மாண்டுசெய வாண்டுநமை யாண்டவ னடைந்தே
மண்டருள்செ யாதவது கண்டவுணர் மன்னன்
வானிடை யெழுந்துதசை யானவை யரிந்து
குண்டமதி லாயிர முருண்டுநனி சிந்தக்
குன்றவிலி வந்திலன் மகத்தெரியில் வீழ்ந்தான். 30

தீயிடை மடிந்தது தெரிந்தரி முகத்தோன்
சென்னிக ளரிந்துமக வன்னிமிசை சிந்தி
மாய்வுற நினைப்பமறை யோனுருவ மாகி
வந்துபர னைந்திடுவ தென்னெனலு மன்னு
னிடை நிகழ்ந்தசொல வீரமுறு சூர
னங்குற வெழுப்பிமறை யோனுரு வகன்று
காயமிசை பெற்றமிசை மாதொடு விளங்கக்
கண்டடி பணிந்தவுணர் காவலன் மகிழ்ந்தான். 31

இன்னரு ளரன்புகல்வ னிங்கெமை நினைந்தே
யெண்ணில்பக னற்றவ மியற்றினை மனத்தி
லுன்னியது கேளென வுரைத்திட வுரைப்பா
னுந்துபுவி கொண்டபல வண்ட மரசாள
மன்னியழி யாமலுற யாவரையும் வென்றே
வாழ்வுற வெனப்பல வரங்கள திரப்பக்
கன்னியொரு பாலுடைய கண்ணுதல் விறலிக்
கண்டுதொழு சூரனொடு கட்டுரைசெய் கிற்பான். 32

மண்ணதனி லாயிரம தாகிவளர் கோடி
மண்டுபுக ழண்டமுள மற்றவை தனக்கு
ளெண்ணிலகு மாயிரவொ ரெட்டளவை நூறே
டெட்டுக மிருந்தர சியற்றிடுதி யென்றே
தண்ணளியி னோடருளி நெஞ்சினும் விரைந்தே
சாருமொரு தேருமொரு சக்கரமு நல்கிப்
பண்ணவர்க ளஞ்சுமொரு சிங்கமு மளித்துப்
பன்மையுறு வண்மைகொள் படைக்கலமு நல்கி. 33

வேறுபதி னுயிர முடன்றழுவு கோடி
வெள்ளமுறு தந்திமிகு வெந்திறல்கொ டேர்கள்
பேறுறு பரித்திரள் கடற்றகுவர் சேனை
பிஞ்ஞக னளிப்பவது பின்னரரன் முன்னர்ச்
சீறரி முகத்தனொடு தாரகன் வணங்கத்
தீரமுறு சூரனென வீரம தளித்து
வீறுநம தானதொரு சத்தியல தும்மை
வெல்லுமவர் யாரென விளம்பியக லுற்றான். 34

கண்ணுத லகன்றிட வகன்றபடை யோடுங்
காசிப னிடத்தவுணர் காவல னடைந்தே
யுன்னய மொடும்பணிய வங்கவ னுரைப்பா
னுங்கள்குரு வெள்ளியிடை யுற்றிடுதி ரென்ன

வண்ணமுற வன்பத மடைந்து புகர்நேரே
வந்திட வுவந்தடியில் வந்தனை புரிந்தா
னண்ணரியிடு தேசிகனு மாசிபல பேசி
நஞ்சனைய சூரனொடு நன்மனை புகுந்தான். 35

மற்றொரு பெருந்தவி சளித்ததி லிருத்தி
வந்ததெவ னென்றிடலு மன்னவுணர் மன்னன்
வெற்றிபுரி வேள்விய தியற்றியது முக்கண்
வித்தக னடைந்துபுகழ் மெத்திய வரங்க
ளாற்றிற லளித்தது மொளித்தது மதற்பின்
னன்குபெறு தந்தையிடை நண்ணியது மன்னன்
சொற்றது முரைத்தினி யியற்றுநெறி யெந்தாய்
சொல்கவென மல்குபுகர் சூரனொடு கூறும். 36

ஆவியென வொன்றிலை யருந்தனையு மித்தை
யண்ணலுரு வங்கடொறு மங்கடவி னத்துண்
மேவிய வியோமமென மேவியழி வின்முன்
விண்ணென விருப்பன்வினை புண்ணிய முயன்று
ளீவதவை யென்னபலன் மித்தையத னானீ
யின்னவற மின்னமற மென்னவுள முன்னே
றேவுரை வருத்துதி மகத்திறை நுமக்குத்
தெவ்வனவ னைச்சிறைசெய் செய்தியிது செய்தி. 37

கூடரிய வாயிரவொ ரெட்டளவை யண்டங்
கூடியவை கண்டுவிறல் கொண்டனை திரும்பி
வீடுசெறி தேவரொடு தாபதர்க ளிங்குன்
னேவல தியற்றிட வியற்றுபு விருத்தி
நீடிய கொலைத்தொழின் முதற்பவ மனைத்து
நிந்தனை யெனக்கருத ளீபுரிதி யென்றே
நாடுபுகழ் சூரனுட னிவ்வகை மழைக்கோ
னல்லன விலக்கியவை யல்லன வுரைத்தான். 38

அற்றமறு மாயிரவொ ரெட்டளவை யண்டத்
தங்கவ னறிந்திடவொ ரண்டவியல் போதிக்
கொற்றமுற வேகுதியெ னப்படைகண் மும்மைக்
கோடியு றியோசனை பரப்பிவர வேகி
வெற்றிகொ ளுருத்திர னலாததிசை யோரை
வென்றிகொடு பாதல மிழிந்தவரை வென்றே
நற்றுதி பெறும்படியின் முந்தென வணைந்து
நத்துறு கரத்தனுறு நற்கட லடைந்தான். 39

தற்றவுண ரக்கடல் கலக்குதலு மாயன்
சாபநவிர் தண்டுவளை சக்கர மெடுத்து
வெற்றியுவ ணத்தின்மிசை யேறிநனி சீறி
வீறுகொலை செய்யவுண வெய்யரெதிர் சென்றே
கொற்றமுகி லென்னமிகு வாளிகள் சொரிந்தே
கோளவுணர் சேனைபல கொல்லவது கண்டே
செற்றமொடு தாரக னரிக்கெதிர் புகுந்தே
தீயகணை மாரிபல சிந்தியமர் செய்தான். 40

கண்ணனது போதுகணை மாரிகள் சொரிந்தே
கையனுறு கின்றசக டத்தினை யழிப்ப
வெண்ணுமொரு தேரணுகி மாயனுடன் மீது
மேறுவண மீதினு மிராயிர நெடுங்கோ
லுண்ணென விடுப்பவர வின்பகை வருந்தத்
துங்கநெடு மாலளவி லங்கமது கொண்டே
தண்ணரியெதிர் போர்புரிய வன்னபடி கொள்ளா
நாலுதின மாவினொடு நற்சமர் புரிந்தான். 41

அப்பொழுது மாயனொரு கோடிகணை விட்டே
யண்டர்பகை வன்றன தருஞ்சகடும் வில்லுந்
துப்பொடு துணிப்பவொரு தண்டமது கொண்டு
தூயபுகழ் மாயனெதிர் சூரிளவ லேக

மெய்ப்புறு பெருங்கணை திருந்தரி சொரிந்தான்
வீறுகதை கொண்டவை விலக்கியெதிர் செல்லத்
தப்பிறிகி ரிப்படை விடுத்திட விரைந்தே
தானவன் மிடற்றினிடை தங்கியது மாதோ. 42

அங்கவன் மிடற்றினிடை யாபரண மாகி
யாழியுற வாழியென வாசிக ளறைந்தே
பொங்குதிறன் மாயவ னகந்தனில் வியந்தே
போகவொரு தேரின்மிசை போரவுண னேறித்
துங்கமுறு முன்னெதிரு றக்கடிது புல்லிச்
சூருள மகிழ்ந்துபுடை துன்றுபடை யோடுஞ்
செங்கதி ரருக்கன்முத லானவர் பழிச்சத்
தீதறு துறக்கநகர் சென்றணுகி னானால். 43

அங்கணிது கண்டுசில வொற்றர்க ளுரைப்ப
வஞ்சியிடர் கொண்டுகுயி லாகிமக வானு
மங்கையு மகன்றனர் கொடுந்தகுவர் தேடி
மம்மருற விண்ணவரை வன்மையொடு பற்றி
வெங்கத மொடுங்கடி தடித்தனர் பிணித்து
வீரமுறு சூரனெதிர் விட்டிடலும் விண்ணோர்
பொங்குபுக ழாசிமுக மன்சொல விடுத்துப்
போகமக லோகமிசை போயணுகி னானால். 44

அந்தமக லோகமுத லானவுல கெல்லா
மன்பொடு தெரிந்தவ னமர்ந்தவர் வழுத்தக்
கொந்தலர் நெடுந்தொடைகொ டானவர்கண் மன்னன்
கோகனத மீதிலுறை கோனகர நண்ண
வந்தண னுமிவ்வகை யறிந்தெதி ரடைந்தே
யாசிகள் புகன்றிடலு மங்கவனை வைத்துச்
செந்திரு விளங்குதிரு மார்புடைய செம்மல்
சேருமுல கத்தினிடை சேனையொடு முற்றான். 45

அவ்விடையின் மாயவ னுணர்ந்தெதிர் பொருந்தி
யாசிக ளுரைத்திட வருத்தியொ டிருத்தி
வெவ்விடை யுகைத்தருள் பரம்பொரு ளிருக்கும்
வீறுல கடைந்தனிக வெள்ளம திகந்து
தெவ்வர்புகழ் நந்திவிட வந்திநிற மேனித்
தேவனை வணங்கவருள் செய்தருளி யேனை
யெவ்வமறு மண்டவகை கண்டரசு செய்தே
யின்பொடுறை கென்னவிடை கொண்டுபுற மெய்தி. 46

துங்கமுறு சேனையொடு கூடியதன் மீதே
துன்றுபுக ழண்டவகை தோறுமினி தேகிப்
பொங்கவுண ரிற்சிலவ ரங்குற விருத்திப்
பொன்னுலகி னண்ணவவ னன்னையை யளித்த
செங்கணசு ரர்க்கிறைதன் மேன்மைக ளணைத்துந்
தீதில்புகர் சூரொடு தெருட்டுற விடுத்து
மங்கலி னயப்பினொடு வந்துதொழ லோடு
மற்றவ னொடும்புவியின் மன்னவ னடைந்தான். 47

வேறு

இந்த வேலையிந் திரனய னமரர்க
ளிலங்குபாற் கடன்மேய
வுந்தி பூத்தவ னனைவருங் குழுமியே
யோர்ந்துதா னவனேரே
வந்து வாழ்த்துரை சொற்றனர் நிற்றலு
மற்றவர் தொகையூடே
யுந்து சீருடைப் பதினொரு கோடியா
முருத்திரர் தமைக்கண்டான். 48

துண்ட மாமதி கடுத்தவா ளெயிற்றடற்
சூரனு மசுரேசன்
வண்டு லாவரு மிதழியந் தொடையினன்
வடிவுள வலியோரைக்

கண்டி யாவரிங் கிவரென வவிர்மதிக்
கவிகைவா னவற்றந்த
தண்டு மூாய்முடி முடிப்பவ னுனவன்
ருனவ னெடுசாற்றும். 49

முன்ன மோர்பக லகந்தையாற் பரமனை
முளரியந் தவிசும்பர்
மன்னு நான்முக னயர்த்தலு மவன்றெழின்
மல்கிய திலையற்ருற்
கன்னி பாகனை மறந்தன மெனவவற்
கருதியே பலவைக
லின்ன நீர்தவ மியற்றிட வடைந்தருள்
புரிந்தில னிறையோனே. 50

மன்னு பற்பக லருந்தவஞ் செயப்பரன்
வந்தில னெனமாழ்கி
யன்ன வாகன னழுதனன் விழியினீ
ரலகையா யெழக்கண்டு
துன்னி டுந்துயர் கொண்டவ னயர்ந்திடத்
தொலைவிலா வுயிர்க்கெல்லா
மன்னை பாகனங் கவனது கனவில்வந்
தினையனவறை கின்ருன். 51

இங்கு நீயெமை மறத்தலால் விதித்திடு
மியல்புனக் கிலதாய
தங்க ணம்பதத் திருப்பவர் தமையுன
தகத்தினில் விடுப்பாமென்
றெங்க ளுயகன் கழறலு மெழுந்தினி
திருந்தன னதுபோதிற்
பொங்கு சீர்ப்பதி னென்றெனு முருத்திரர்
விதிநுதற் புடைவந்தார். 52

மன்றன் மாமதுக் கமலவான் றவிசின்மேல்
வதிந்தநான் முகவேத
னென்று மேவிய பதின்மராய் விளங்கிய
வுருத்திரர் தமைநோக்கி
யின்று நீரிவ ணடைந்ததென் னெனவெம
திறைவன தருளாலுன்
னன்று நுந்தொழின் முடிப்பது பொருட்டினு
னண்ணினி மெனச்சொற்றார். 5

சொற்ற வாசகங் கேட்டலு மகிழ்ந்துயிர்த்
தொகையுத வுதிரென்ன
வுற்ற சீர்பெறு பதினொரு கோடியா
முருத்திரர் தமைநல்கிக்
கொற்ற நான்மறை யயன்றனக் கவன்றொழில்
கொடுத்தகன் றனரன்றோர்
முற்றருந்திற லுருத்திர ரிவரென மொழிந்தனன்
முகில் வண்ணன். 54

இன்ன வாசகங் கேசவ னோச்மோ
டிசைத்தலு மிவைகேளாப்
பொன்னு லாம்புக ழுவுணர்கோ னிமையவர்
புனைவனை முகநோக்கி
நன்ன லம்பெற யாமிருந் திடவொரு
நகரது புரிகென்னக்
கொன்னு லாம்புக ரெல்லைக நிடவவன்
குமுறுதென் கடல்சேர்ந்தான். 55

பூங்க தற்கிடை யெண்பதி னாயிர
யோசனை யகலத்தோர்
ங்கி னற்பதி வளத்தொடு புரிந்தனன்
திறன்மகேந் திரமென்றோர்

பாங்கு றும்பெயர் நிறுவினன் வடகடற்
படர்ந்தன னதிஞேருர்
தூங்கு கைக்கரிப் பகைமுகற் காசுரத்
தொன்னகர் புரிந்திட்டான். 56

மற்று முள்ளதெண் டிரைதொறு மிடையிடை
வயங்குதீ வுகடோறும்
பொற்ஞெ டிக்கர மங்கல கேசிதன்
புதல்விதந் திடுசூரன்
கொற்ற நால்வகைத் தானைக ளிருந்திடக்
குலவுபன் னகராற்றிக்
கற்று ணார்ந்தசீர்ப் புனைவர்கோன் கதுமெனக்
கருங்கடற் புவிசேர்ந்தான். 57

பின்பு நாவலந் தீவின்மா யாநகர்
பெருங்கரி முகன்வாழ்தற்
கன்பி ஞேடுசெய் தவுணனுக் குரைத்திட
வடன்மகேந் திரமெய்திப்
பொன்பு னைந்தநற் றெண்டிரை நீரினுற்
புலவராட் டிடவாடி
யின்ப வேதனுன் முடிபுனைந் திருந்தன
னேவருந் தொழுதேத்த. 58

மால வன்றனை விளித்திடும் பொழுதெலாம்
வருகென விடையீந்து
கோல மாமலர்க் கடவுண்மா முகந்தெரீஇக்
குமரர்தம் மொடுநீவந்
தேலு மங்கமோ ரைந்துநா டொறுமுரைத்
தேகுதி யெனவோதிச்
சீல மேவிய வருக்கஞே டினையன
செப்புவன் திறற்சூரன். 59

இன்ன வாணகர்ப் புறத்துறு புரிசைமீ
தேகனிற் கரிதாகும்
பொன்னு லாமணிச் சிகரியு ணெறிக்கொடு
புகுந்துவான் மிசையேகி
மின்ன நீர்தரு மிளங்கதிர் நடத்தியே
மிவ்வகை திரிவாயென்
றன்ன பின்னரே யவிர்மதிக் கடவுளுக் 60
கறைகுவ னடற்சூரன்.

வளரு கின்றதுங் குறைவது மறைவது
மறந்துநீ நிறைவாகிக்
கிளரு மிந்நகர் நாடொறும் வருகெனக்
கிளத்தியே யதுபின்னர்
மூளரி வானவற் றெரிந்துநம் பதியினோர்
முன்னிலங் கவர்பாலுற்
றுளப ணித்திற மியற்றுபு தொடிற்குளிர்ந்
துறைகென வுரைசெய்தான். 61

கொற்ப கட்டிலுற் றெதிர்ந்தவ ருளங்குலை
குலைந்திடப் புவிமாந்தர்
முற்ப கட்டிவந் திடுங்கொடுஞ் சமன்றனை
முகின்மலை முலைமாயை
பொற்ப கட்டில்வந் துதித்தவன் றெரிந்தரும்
பொருகரி பரியாதி
யிற்ப கட்டிய கழற்றகு வர்களுகப்
புரிந்திடே னீயென்றான். 62

விரித்தி டும்புகழ்ப் பவனனை நோக்கியிவ்
வியனகர் மிசைவாழ்வார்
தரித்தி கழ்ந்திடு தொடைமுத லாயின
தன்னுதி யெனச்சாற்றி

திருத்தி கழ்ந்திடு வருணனை நாவிமுற்
சிறந்தன பனிநீரிற்
பொருத்தி யிந்நக ரெங்கணுந் தெளியெனப்
புகன்றனன் புகழ்ச்சூரன். 63

நீளி றக்கட மழைசொரி தருகவு
ணொடியநாற் பெருங்கோட்டு
வானி றக்கரிக் கடவுளை நோக்கிநீ
வானவர் குழுவோடு
மேனை மாதிரத் தலைவர்தங் குழுவொடு
மிடுபணி புரிகென்று
ஞான முற்றிடு மிவைமறுத் திடவெரீஇ
யுரைத்தவா ரெழுகுற்றார். 64

மருமலர்த்தொடைப் பதுமகோ மளைமுதன்
மாதரை மணஞ்செய்தே
யரிமு கற்கெழில் விபுதையை மணஞ்செய்வித்
தானைமா முகத்தோனுக்
கிருமை பெற்றசீர்ச் சவுரியை மணஞ்செய்வித்
திருவரு மிருகோடி
விரிவு சேர்படை வெள்ளமோ டவரவர்
பதிபுக விடுத்தானல். 65

தண்ட ருந்தொடை யிளையவ ரகன்றபின்
றகுவரிற் பலர்தம்மை
மண்டு சீருள நாலிரு திசையினும்
வானகத் துலகத்து
மொண்டி றற்பெறு பாதல வரைப்பினு
மொழிந்தபல் லிடந்தோறு
மெண்ட ரும்பெருந் தானையோ டிருந்திட
விடுத்தன னிருஞ்சூரன். 66

ஏவல் செய்துழ றேவரை யொருபக்
விருங்கடற் பெருமீன்க
ளீவிர் நாடொறுந் தருதிரென் றுரைத்தனு
நெடுந்துயர்க் கடன்மூழ்கிப்
பாவ வப்பணி நாடொறும் புரிந்தனர்
பதுமகோ மனைதன்பாற்
சேவ கத்தனி மைந்தன்வந் துதித்தனன்
றிசையெலா மிசைவீச. 67

உற்ற மைந்தனை மாயவன் மகன்றெரிந்
துவகையங் கடன்மூழ்கி
வெற்றி சேர்தரு மவுணர்தங் கிளைக்கெலாம்
வெறுக்கைகண் மிகவீந்தான்
மற்ற தற்பினக் குமரனை மடந்தையர்
வளங்கொடொட் டிலிலேற்ற
வற்ற மற்றிடுஞ் சிறப்பொடு மதிற்றுயின்
றமருநா ளொருநாளில், 68

வான கத்தெழு மிரவிதன் கதிரவன்
வடிவினிற் படப்பாய்ந்து
தான வன்றனைப் பிடித்துவந் தணிமணித்
தொட்டிலிற் றளைசெய்தே
யீன மற்றவா னவரொடு விதியடைந்
திரப்பவிட் டதனுலே
பானு கோபனாய் வளர்ந்தொரு பகலிலெம்
படைகொண்மா லையும்வென்ருன். 6

பின்னு மக்கினி முகத்தனே யிரணியன்
பீடுவச் சிரவாகு
வென்னு மைந்தர்கள் பதுமகோ மனையகட்
டிடத்துவந் துதித்தார்க

டுன்னு மற்றுள மனைவியர் தங்கள்பாற்
 ருேன்றினர் தொகைசொல்லின்
மன்னிடும்புகழ் கொண்டமூ வாயிர
 மைந்தர்களெனலாமால். 70

அரிமு கன்னதி சூரனை நூறுமைந்
 தர்கடமை யளித்திட்டான்
கரிமு கன்றிறல் பெறுமசு ரேந்திரக்
 காவலன் றனையீன்ருன்
மருவு மின்னவர்க் கிளையளா மசமுகி
 வலிதுபோய்த் துருவாசப்
பெரிய வன்றனைப் புணர்ந்துவில் வலனைவா
 தாவியைப் பெற்ருளால். 71

அன்ன மைந்தர்க ளிருவருந் தவம்புரிந்
 தயன்றரும் வரந்தன்ருற்
பின்ன வன்மறி யுருக்கொள முன்னவன்
 பெருமுனி வரனுகி
மன்னு மாதவர்க் கழ்தொடு கறியென
 . மறிதனைச் சமைத்தூட்ட
வின்னல் சேர்ந்திட வவர்குட ரதுகிழித்
 திளையவன் வருமாதோ. 72

இன்ன பான்மையி னளவிலர்க் கிறுதிசெய்
 திருந்தன ரிதுநிற்கப்
பின்ன ரோர்பகற் சூர்னு மவுணர்கோன்
 பெருகெழி லயிராணி
தன்னை வவ்வியே சிறையிடை மகபதி
 தனையிட மனமீதி
லுன்னி மன்னிய தானையந் தலைவரி
 லொருவனே டுரைசெய்வான். 73

இந்தி ரற்பிடித் தீண்டுமீண் டிடுதியென்
றேவியோன் பதுகோடி
பைந்தொ டிக்கரத் தருவர்தங் குலத்துவெம்
பாவையர் தமைக்கூவி
யந்த மற்றசிர்ச் சசிதனைப் பிடித்திவ
ணடைதிரென் றவண்டுண்டச்
சுந்த ரந்தரு துறக்கவா னுலகினிற்
றுன்னினு ரவரெல்லாம். 74

பொங்கு தானையுந் தானையந் தலைவனும்
பொற்றொடித் தளிர்ச்செங்கை
மங்கை மார்களும் வருவன வொற்றர்போய்
வான நா யகற்கோத
வங்கணி துணர்ந் தருஞ்சசி யொடுங்கரந்
தவனியினி டைச்சேர்ந்தான்
றுங்க வெய்யவர் துருவினர் தெரிந்திலர்
சூரன்முன் னுரைசெய்தார். 75

ஈது சூர றிந் தமரர்கோன் றுணைவியோ
டிருந்துழி யறிந்தெய்தத்
தீதிலொற்றரை விடுத்தன னிந்திரன்
சேயெனுஞ் சயந்தன்றான்
கோதி லாதவை குந்தமுற் றிருந்தனன்
குறுகிய விவைகேளா
வேத மற்றதோர் பொன்னுல கடைந்ததி
விருந்தன னரசாற்றி. 76

மஞ்சு வாகன நர்கர்கோன் புகலியர்ம்
வளமுறு நகரெய்தி
யெஞ்சு றுதவோர் நந்தன வனம்புரிந்
திறைவனை யருச்சித்தே

வஞ்சி யோடுற வொற்றர்க ணேடியே
    வருவதை யறிந்துள்ளத்
தஞ்சி மாதொடுங் கழையதாய்ப் பரமனை
    யருச்சனை புரிந்துற்றான். 77

## வேறு

அந்நாளி னந்தாத நந்தன வனம்பூவி
    லம்பற்று வாடவிமையோர்
மன்னுன விந்திரன் வருந்தா விருந்திட
    வணங்கார் புராரியருளா
னன்று ரதன்பெரிய விந்தா சலத்தினிடை
    நண்ணித் தனுதுயர்விநற்
றன்னேடு வேறுநிக ரில்லென்று பொன்வரை
    தருக்குற்ற தென்றுபுகல, 78

விந்தஞ் சினந்துவிதி யூர்காறு நீள்வுற
    விசும்பூ டருக்கன் முதலோர்
தந்தம் பொருந்துநெறி யில்லாது மேருவிடை
    சல்லாப மோடுமருவு
மந்தண் கடத்துமுனி தன்னைப் புகழ்ந்திடலு
    மன்னு னறிந்தருளியே
யுந்தும் பரன்றனை நினைந்தே தவம்புரிய
    வுற்று னுயிர்க்குளுயிரான். 79

நிற்கேது வேண்டுமென விந்தத்தை வென்றிட
    நிருத்தா பெருத்தவிறலின்
றெற்கேய வேண்டுமென விந்தா சலத்தட
    விறுத்தே யிருதமலயக்
கற்கே யிருத்தியென வோர்பொன்னி நன்னதி
    க்வின்குண்டி கைக்குளுதவத்
தெற்கே நடந்தரி முகன்றம்பி வென்றியொடு
    சேர்மாய வூர்குறுகினுன். 80

கேடற்ற முனியங்கண் வருகின்ற செயல்கண்டு
கிரவுஞ்ச னென்னுமவுண
னீடுற்ற விமையோர்கண் முனிவோர்க ளனிவாட
வெந்நாளு மின்னல்புரிவான்
கோடுற்ற கிரியாகி யதனோடு சரியொன்று
கொண்டங்க ணண்டவதனுட்
பீடுற் றிடுஞ்சா கரத்தைக் கரங்கொண்ட
பெரியோ னடந்தருளினான். 81

சங்கோ லிடுந்தெண் டிரைச்சா கரத்தே
தருக்கோ டெழுந்தவிடநேர்
வெங்கோப நிருதர்க்கு நிருபன் புரிந்திட்ட
வியன்மாயை தன்னையுணரா
னங்கோர் குரோசஞ்செல் பொழுதந்த வழிமாழ்கி
யயலொன்று காணவதன்மீ
தெங்கோ னடந்தா னடந்திட்ட போதங்
கிறந்திட்ட தவ்வதருமே. 82

வீறொன்று கும்பமுனி வல்லே திரிந்துவதி
வேறொன்று கண்டுபடரச்
சீறங்கி சுற்றவொளி சுற்றவிருள் சுற்றமுகி
றிண்மாரி தூவமுனிவன்
மாறங் குருவறிவி னவுணன் புரிந்திட்ட
மாயந் தெரிந்துவெகுளாப்
பேறங் கரங்குலவு கதைகொண்டு குத்திப்
பெருஞ்சாப மோதுவனரோ. 83

நலனுற்ற புலனற்ற கொடியோயிவ் வடிவாகி
நாடோறு நண்ணியதன்மேல்
மலைபெற்ற வுமைபெற்ற குமரேசன் வடிவேலின்
மடிவாதி யென்றவுணர்கோ

ளலனுற் றழுங்கப் புகன்றே யகன்றே
யடற்கொள்விந் தங்குறுகினன்
செலவிற் கிடந்துகிர வுஞ்சஞ்செய் வஞ்சஞ்
செயங்கொண்ட திண்டிறலினன். 84

வீருமல் வெற்பினெடு தெற்கேக வெற்குவழி
விடுவா யெனப்புகறலு
மாருகி விந்தம திகழ்ந்தோத வேதபத
மட்டுங் கரத்தினையெடாப்
பேரு மதன்தலை யழுத்தக் குலைந்தது
பிலத்தூடு போகியதுவெண்
ணீருடி யன்பரொடு வன்பெய்தி னர்நிரைய
நெறிவீழ்தல் காட்டுநிலைபோல், 85

தாதார் மலர்க்கைகொடு வெற்பைப் பிலத்தினிடை
தள்ளிப் படர்ந்தபொழுதின்
வாதாவி வில்வல னெனும்பேர் படைத்துமிகு
வஞ்சங் குயிற்றுகொடியோர்
தீதான தற்றமுனி தன்னைத் தெரிந்துயிர்
செகுப்போ மெனக்கருதியப்
போதாட தாயிளவ லுறவில் வலன்முனிவர்
போலப் பொலிந்தனனரோ. 86

குன்றத்தை வென்றமுனி முன்பாக வின்பான
கோலஞ் சமைந்தகொடியோன்
சென்றத்த வென்றடி பணிந்திற் கொணர்ந்தமுது
செய்தேக வேண்டுமெனவே
நன்றத் தொழிற்புரிவ மெனமூழ்கி வந்தடிசி
னயமோடு செய்துதகரைப்
பொன்றத் தடிந்துகறி யாகச் சிறப்பொடு
புரிந்தே படைத்தனனரோ. 87

இன்பான வமுதங் கருந்தா வருந்தவ
 னிருந்தா னிருந்தபொழுதின்
வன்பாவி வாதாவி வருகென்ன முனிவன்றன்
 வயிறா டெழுந்திரையவே
கொன்பா வகட்டிற் கரங்கொண் டுரங்கொண்ட
 கொண்டற் களத்தனடிகட்
கன்பா னவன்றடவ வாதாவி கோதாவி
 யழிவுற்ற தன்னபொழுதே. 88

பின்னை தன்றம்பி மடிவான செயல்கண்டு
 பெரிதுஞ் சினந்துதகுவன்
முன்னாக மதுகொண்டு முன்னாக வருபோது
 முனியோர் தருப்பையதனைக்
கொன்னாரும் விடையாளி படையாக விடுபோது
 கொடியோனு முடிவாகவே
யன்னா ரிடந்தனை யகன்றே நெடுங்கட
 லயின்று னடைந்தருளினான். 89

முடிவான கொடியோர்க டவமேவு துருவாச
 முனிமைந்த ரானமுறையாற்
படியோர்கள் புகழ்கும்ப முனிபின்பு முனிவோர்கள்
 படிவங்கள் கொண்டுதொடரா
விடிபோ லிரைப்பவுயர் கொங்குக் கணித்தா
 யிருந்தோ ரிலிங்கமதனி
லடியார் மனத்தனை யருச்சனை புரிந்தங்
 ககன்று னவர்க்கொல்பவமே. 90

கொங்குப் பொழிற்குலவு கொங்கிற் பெருந்தவர்கள்
 கோமா னிருந்தருளுநாண்
மங்குற் களத்தனடி சிந்திக்கு நாரதன்
 வயற்காழி நண்ணவதனிற்

றங்குற்றி விண்ணிறை தெரிந்தே யெழுந்துமுனி
தாண்மீ திறைஞ்சவினிதே
யிங்குற் றிருந்தனைகொ லென்னவுன் தின்னருளி
னின்போ டிருந்தனனெனு. 91

ஒப்பான தற்றபொழி லப்பான தற்றுலர்வ
தோதக் கடத்துமுனிபால்
வைப்பான வாறுவரின் மெய்ப்பாதி நந்தன
வனந்தான் வளர்ந்திடுமெனச்
செப்பா யுபாயமென மெய்ப்பாணி யைந்துடைய
சீரோனை யர்ச்சியெனவே
பொய்ப்பாச மற்றமுனி யுரைசெய்ய வவ்வகை
புரிந்தான் விசும்புபுரிவான். 92

அக்காலை வேழமுகன் வந்தேது வேண்டுமென
வந்தண் கடத்துமுனிபான்
மிக்கான குண்டிகை வனத்தைக் கவிழ்த்தருள
வேண்டுங் கணேசவெனவே
மைக்காக மேனிகொடு சென்றுந்து குண்டிகையை
மண்ணிற் கவிழ்க்கவதனிற்
புக்காசி லாதிலகு தண்பொன்னி நன்னதி
புறம்போகி யோடியதரோ. 93

அவ்வேலை யோர்சிறுவ னைப்போல வத்திமுக்
வத்தன் றிரிந்தருளலும்
மைவேலை தன்னையொரு கையூ டடக்குமுனி
வன்றான் வெகுண்டுதொடரா
மெய்வே தனைப்பட விளைப்பத் தனுதுருவ
மேவிப் பயந்தமுனிவற்
குய்வே தரும்பல வரந்தா னளித்தவ
ணொளித்தான் மிகுத்தவொளியான். 94

துதியார் கடத்துமுனி கொங்கைத் தணந்துமிரு
துங்கம் பொருந்துதிருமால்
பதியா யிருந்ததொரு குற்றால முற்றளவில்
பாவங்கொள் பாகவதருட்
கொதியார் விகழ்ந்திடலு மலர்போ லுருக்கொடரி
கோயிற் புகுந்தரிதனைப்
புதிதா யிலிங்கவடி வாகப் புரிந்துபொதி
யத்திற் பொருந்தினனரோ. 95

வேறு

இதுநிற்க முனமைங் கரப்பிள்ளை தன்னு
மெழில்கொண்ட நதிவந் திருங்காழி தன்னிற்
பொதுளூற்று மெலிகின்ற நவநந்த னத்திற்
புகுதத் தழைப்பவரை னைப்பூசை செய்தே
துதியுற்ற மகவா னிருக்கத் திருக்கச்
சூரன்ற னுலே வருந்தமரர் சில்லோர்
கதிருற்ற கனகத் துறக்கந் துறந்தே
காழிப் புறத்திற் கலந்தார்கண் மன்னே, 96

ஆண்டுற்ற தவளக் களிற் றண்ண லைக்கண்
டவனம்பொ னடிமீதி னடைவிற் பணிந்தே
மீண்டுற் றிருந்தாய் புரிந்தெம்மை யாமங்
கிகல்கொண்டு வருசூர னிடுமேவ லெல்லா
மூண்டுற்ற துயரிற் புரிந்தே மெலிந்தே
முடியா தினிச்செய்ய முடியாதெம் மையா
மாண்டுற்ற விறல்கொண்ட சூர்கெட்டி யாமுய்ய
வகையொன்று புரிகென்ன மகவண்ணல் புகலும். 97

துன்றோர் வளைச்செங்கை யெழின்மாயை நல்குஞ்
சூர்மா மகந்தான் றெருடங்குற்ற வன்றே
யின்றே யிழந்தோ மிரும்பொன்னி னன்று
டென்றேது மக்கங் கிசைத்தே னுயர்ந்த

குன்றே யெனுங்கொங்கை யுமைபங்க னல்குங்
குறைவற்று வளர்வெற்றி கூடுற்று நம்மை
வென்றே பதங்கொண்டு பன்னாளு மன்னோன்
மிடலோடு படிமீது மிகுமேவல் கொண்டான். 98

மிடல்கொண்ட நஞ்சென்ன வெஞ்சூர னூனை
மீனஞ் சுமந்தே மெலிந்தோம தல்லா
லிடர்கொண்ட புன்செய்கை யாவும் புரிந்தே
யிவையன்றி யயிராணி யெனுநாம மேவு
மடமங்கை தனைவவ்வி யெனையுஞ் சிறைக்கண்
வைப்பா னினைந்துந்து வானத்து வஞ்சன்
படையுந்த விவ்வா றுணர்ந்தே கரந்தே
படரோடு மாதோடு பதியைத் தணந்தேன். 99

முந்தே பொருந்துற்ற தீதன்றி யீதோர்
முரண்மேவு வசைமேவின் முடியா தெனக்கொண்
டிந்தே புரைந்திட்ட முகமங்கையோடு
மிடர்கொண்ட நுமைவிட் டிரும்பூ தலத்தே
வந்தே கரந்தே வதிந்தே நுதற்கண்
மந்தா கினிச்சென்னி மன்னன் பதத்திற்
செந்தே னறும்போது தூவிப் பணிந்தே
சீர்பெற் றிடும்பூசை செய்தே யிருந்தேன். 100

துன்பந் தருந்தா னவக்கையர் சொல்லுந்
தொழில்செய்து நம்மேன்மை தொலைவுற்ற தினிநா
மின்கொண்ட வெள்ளிக் குவட்டின்கண் மேவி
மேவார் புரஞ்செற்ற விமலற் குரைத்தெம்
புன்கண் டணந்துய்ய வம்மின்க ளென்னப்
பொன்னாடர் மன்னோ மகிழ்ந்தார் புகழ்ந்தா
ரின்பங்கொ ளிமையோரை யிறையிங்ங னுறுமெண்
ணெழின்மேவு மயிராணி யிடைமேவி னுஞல். 101

சீர்கொண்ட வயிராணி கண்டாள் பணிந்தாள்
சேர்வுற்ற தென்னிங்கொ ரெண்ணத்தொ டென்ன
வார்கொண்ட முலைமங்கை யிடரும்ப ரொடுவிண்
மதிகங்கை நதிதங்கு மௌலிப் பிரான்வா
ழோர்கொண்ட கயிலைக் கிரிக்கேகு கின்றே
னிதுகூற வந்தே னெனுவங் கிசைப்பச்
சூர்கொண்டு மண்மேல் விழுந்தா ளயர்ந்தாள்
சுரர்மன்ன னதுகண்டு துண்ணென் றெடுத்தான்.

தன்னாரு விற்கொண்டு தெளிவிப்ப வங்கண்
டளர்துன்பு சிறிதே தணந்தென்னை விட்டுப்
பொன்னாரின் மன்னீ பிரிந்தா லெனைத்தான்
புரப்பா ரியாராவி போமல்ல துய்யே
னுன்னோடு வருவே னெனநிற்ப வைய
னுனையிங் களிப்பா னுளத்தஞ்ச லென்ன
வன்னா ளிடத்திற் சிறப்பென்னை யென்று
ளதுகே ளெனவின்ன தவளோ டுரைப்பான். 103

அல்லோடு நிகர்கண்ட னருளின்றி முன்னா
ளரியாதி யிமையோர்க ளடன்மேவு மவுணர்
கல்லோல மேவுஞ் செழுங்கீர மாரக்
கடலைக் கடைந்திட்ட காலத்தி னலம்
பல்லோரு மிடருற் றிறப்பப் பிறப்பப்
பயங்கொண் டிரிந்தே பரன்சேர் குவட்டுற்
றெல்லாரு முக்கட் கருங்கண் டனைக்கண்
டெழில்கொண்ட துதிசெய்ய விருநஞ் சயின்றான். 104

கன்மா திடங்கொண்ட கங்காள னின்னுங்
கடைமின்க ளமுதங்க ணெழுமென்று கழற
முன்மான வேகிக் கடைந்தார்க ளும்பன் முகத்தானை
வழிபாடு முன்னஞ்செய் தில்லார்

பொன்மேரு மத்தங் குலைந்தே கடற்குட்
புகுந்திட்ட தவனைப் புகழ்ந்தா தரிப்ப
பின்மாக நீள்வெற் பெழுந்திட்ட தெழலும்
மிகுமின் படைந்தே மிடைந்தே கடைந்தார். 105

கடைகின்ற பொழுதின்ப வமுதங்க ணெழலுங்
கண்டண்டர் திண்டான வக்கையர் சூழா
வடைகின்ற வமுதிங் கெமக்கே யெமக்கென்
றடலோடு பொரமுன்ன வப்போதி லப்போர்
கெடவுன்னி யெழின்மேவு முருமாய ளொருமோ
கினியாகி வந்தின்ன கேண்மின்க ளென்று
மிடைகின்ற திரைவேலை யமுதோ வியானே
வேண்டுற்ற திவணென்ன வெய்யோ ரிசைப்பார். 106

எங்கட்கு நீயென் றுரைத்தார் விரைத்தா
ரிமையோர்க ளமுதெங்க ளிடமாக வென்றார்
சங்குற்ற கையானை வெய்யோர்கள் கொண்டோர்
சார்நண்ண வென்மேனி தழுவற்கு வல்லா
ரிங்குற்று ளார்தம்மி லாரென்ன வப்போ
தியானென் றியானென் றிரும்போர் புரிந்தே
மங்குற் றொழிந்தார்க ளவர்தம்மி லிருவோர்
வானோரு ளவர்போல வடிவுற் றடைந்தார். 107

விண்ணோர்க ளார்நண்ணி யமுதங் களிப்ப
வெய்யோர்கள் கடிதுண்ண வதுகண்டு விறல்சேர்
தண்ணோவின் மதிசெய்ய கதிர்கண் டரிக்குத்
தங்கண்கொ டோதத் தடச்சட்டு வங்கொண்
டுண்ணோவ முடிதள்ளி யமுதுண்ட நீரா
லுயர்கோளி னிலைநல்க வுவர்நாக மாகி
விண்ணோடு சசிதன்னை யென்றூழை முன்சொல்
வஞ்சத்தி னல்வான மீதே மறைப்பார். 108

அறைகின்ற விவைநிற்க வமுதம் பகிர்ந்தே
யணிமா துருக்கொண்ட வடன்மாய னுறலுங்
கறைதுன்று கண்டத்த னவன்முன்னர் வந்தே
கலவித் தொழிற்செய்தல் கருதுற் றழைப்ப
முறையன் றெனுமாய னிசையாது நிற்ப
முரனோடு வற்பற்ற முன்னிச்செல் போதி
னறைமன்னு துளவண்ண லோடத் தொடர்ந்தே
நம்பன் பிடித்தோ ரிடத்தெய்தி னுைல். 109

எங்கோனு மாலும் புணர்ந்தார்க ளப்போ
தெழிலோ டுதித்தா னிருங்கொற்ற வையன்
சங்கோ வெனுங்கந் தரத்தைய லவனுன்
றனையாள்வ னென்றச் சயத்தோனை முன்ன
வங்கோர் கணத்தெய்த மனையாளை யனையா
ளரனாக வைத்துந்து திரனாக ரோடும்
பொங்கோத வேலைக் கடுக்கொண்ட கண்டப்
புனிதன் பொருப்பிற் பொருக்கென் றடைந்தான். 110

இன்பான கயிலாய சைலத் தடைந்தே
யெம்மா னியோகத் திருக்குந் திறத்தா
லன்பாக வேகாண லில்லாது பன்னு
ளருணந்தி தலைவாச லதின்மேவு நாளின்
வன்பாவ வடிவான மறிமா முகத்தாள்
வளர்துன் முகங்கொண்ட மடமாதி னோடும்
பொன்பாவு சசிநற் றவஞ்செய் திருந்த
புகழ்மேவு காழிப் பொழிற்பா லடைந்தாள். 111

மானுன வெழில்கொண்ட விளையோரை நாடி
வலிதே புணர்ந்தேகு மறிமா முகத்தாள்
சேனுன பொழிலூடு சசியைத் தெரிந்தே
திறல்கொண்ட சூரோடு சேர்தற் கழைப்பப்

பூணர் பெருங்கொங்கை மடவாண் மறுத்தே
புகனீதி யலவீது போமென் றிசைப்ப
வேணுள வலியோடு வலிதே பிடித்தே
யிடரோடு மவளோல மிடவே படர்ந்தாள். 112

பாகுற்ற மொழிதன்னை யசமா முகத்தாள்
பற்றிப் படர்ந்திடலு மையன்ற னுளாய்
வாகுற்ற சசியைப் புரந்திட்ட வீர
மாகாளர் போகாது நில்லென்று சொல்லிக்
காகத்தை நேரான வாகத்தி னுண்முன்
கடிதேக வவளுங் கறுத்தே திரும்பி
வாகைப் புயங்கொண்ட வீரன்ற னேரே
வலியோடு மொருசூல வைவேல் விடுத்தாள். 113

வன்புற்ற சூலத்தை வாள்கொண்டு வீரன்
வலியோடு மிருதுண்ட மருவத் துணிப்ப
முன்புற்ற வறிவற்ற மறிவத் திரத்தாண்
முரணுற் றிடுந்துன் முகத்தாள் கரத்திற்
கொன்பெற்ற சூலங்கொண் டயிராணி தனையக்
கொடியா ணெடுங்கைக் கொடுத்தே யெதிர்ந்தே
யின்புற்ற மார்பூடு தைக்கச் செலுத்த
வெழில்கொண்ட வாள்கொண் டெறிந்தேதுணித்தான்.

உந்துற்ற வொருசூல மிருதுண்ட மாக
வொருவாத வொருவெற் புரத்தோடு கொண்டே
மைந்துற்ற வீரன்ற னேரே விடுப்ப
வலிகொண்ட வாள்கொண்டு வருகின்ற குன்றஞ்
சிந்துற்று வீழத் தடிந்திட்ட போதிற்
சீர்கொண்ட வாளுஞ் சிதைந்திட்ட தம்மா
முந்துற்ற வயிராணி தன்னைப் பிடித்தே
முன்போ னடந்தாண் முரண்கொண்ட வெய்யாள். 115

அப்போது மாகாளர் கடிதேகி யவடன்
அணியுற்ற வளகத்தை யடலோடு பற்றித்
துப்போடு முடைவாள் பிடித்தோர் கரத்தைத்
துண்டம் படுத்தித் துலங்குற்ற மாதை
மெய்ப்போடு விடுவித் தடற்றுன் முகத்தாள்
வீறுங் கரத்தொன்று வீழத் துணித்துச்
செப்போடு நிகர்கொங்கை யவண்மண்ணில் வீழச்
சீர்கொண்ட தாள்கொண்டு திறலோ னுதைத்தான்.

கரந்தா னிழந்திட்ட சூர்தங்கை சோரிக்
கடலோடு படிமீது கடிதே விழுந்தே
வருந்தா வரற்ரு மருண்டா ளுருண்டாள்
வயமுற்ற வுரையங்கண் வரையற்ற சொற்ரு
ளருந்தார் நெருங்குங் குழற்றுன் முகத்தா
ளதுகண்டு பலபுந்தி யறையத் தெளிந்தே
திருந்தார் வணங்குங் கழற்சூர னேரே
சேரற் குளங்கொண்டு தென்பா னடந்தாள். 117

எண்ணுர் வழுத்துந் திறற்கொண்டவீர
னெழில் கொண்ட வயிராணி யெனுமாது தன்னைத்
தண்ணுரு மருளோடு வதனந் தெரிந்தே
தகுவர்க்கு நெஞ்சூடு சற்றேனு மஞ்சேல்
கண்ணு யிரங்கொண்ட விண்ணுட ரண்ணல்
கவினுற்ற வுனைமேவு காறும் புரப்பன்
பண்ணுரு மொழியிங்ங னுறைகென்று போகப்
பண்டென்ன வவளும் பரிந்தே யிருந்தாள். 118

மேவுற்ற விதுதன்னை யருணு ரதன்போய்
வெள்ளிப் பொருப்பின் விருப்போடு விண்ணோர்
தேவுற் றுழிச்சென் றுறைப்பக் கலங்கிச்
சேணுற்ற விமையோர்க டிரளோடு காழிக்

காவுற்று மாகா ளனைக்கண்டு புல்லிக்
கவின்மாதி நெடுமேரு வரையிற் கலந்தான்
பாவுற்ற படரோடு கரமற்ற மடவார்
பதகேச னரசானு நகரிற் படர்ந்தார். 119

அங்குற்ற பேர்கண்டு மறிமா முகத்தா
ளணியுற்ற கரமா ரறுத்தார்க ளென்றே
பொங்குற்ற பலவான வெண்ணங்க ளெண்ணப்
பொற்புற்ற சூருற்ற பொற்கோயி லுட்போய்த்
தங்குற்ற வலையிற் புரண்டே புலம்பித்
தகர்போல வதனந் தரித்தாள ரற்றக்
கொங்குற்ற மாலைப் புயச்சூர் தெரிந்தே
கூருர் கரத்தைக் குறைத்தார்க ளென்றான். 120

ஆடான முகமுற்ற கொடியா ளுரைப்பா
ளயிராணி புவியு டமர்ந்தா ளுனக்கென்
றீடாக வேபற்றி வருபோது மகவா
னேவற் புரிந்தே யிருந்திட்ட வொருவன்
பாடாக வென்பாணி கொய்தா னெனச்சூர்
பயமுற்ற முகிலூர்தி பணிசெய்யு மவனோ
நாடாம லிவர்கைத் தலத்தைத் துணிப்பா
னென்றென்று விண்ணோர் நடுங்கச் சினந்தான். 121

அப்போது மகனாகி யுறுபானு கோப
னடலோ டெழுந்தே யவன்றாள் பணிந்தே
மெய்ப்பான மகவானை யயிராணி தன்னை
விண்ணோரை யெல்லாம் விரைந்தே பிடித்திங்
கிப்போதி லிவண்மீள்வன் விடுகென்ன வன்று
னேவத்த னுதான் விற்பா லடைந்தான்
மைப்பாவு கடுவன்ன சூரொற்ற ரோடு
மலர்வேத னைக்கொண்டு வம்மின்க ளென்றான். 122

## வேறு

என்றிட வயனை நாடி
　　யேகியே கொடுவந் துய்ப்பத்
துன்றுசீ ரிவர்தங் கையைத்
　　தொன்மைபோற் புரிதி யென்றான்
மன்றல்சேர் வனச மேலோன்
　　மற்றிவர் கரங்கள் வல்லே
நன்றுற வளர்க வென்று
　　நவின்றிட வளர்ந்த வன்றே. 123

அங்கது சூரன் காணா உ
　　வயன்றனை மகிழ்ந்தே யூரிற்
றங்கையை யிருப்பச் செய்து
　　தடங்கொடுன் முகத்தி னாளைச்
செங்கதிர்ப் பகைவ னோடு
　　சென்றிட விடுத்துப் பின்னர்ப்
பொங்குசீ ரொற்றர் தம்மோ
　　டினையன புகல லுற்றான். 124

வெற்றிகொ ளருக்க னாதி
　　விண்ணகந் தன்னி னுளுஞ்
சுற்றியே திரிவோர் தம்மைத்
　　துண்ணெனக் கொணர்தி ரென்ன
மற்றவர் கொடுவந் துய்ப்ப
　　மறிமுகி கரமோர் வீர
னிற்றிடத் தடித னேக்கி
　　யிருந்ததென் னியம்பு மென்றான். 125

என்றிட வனையர் சொல்வா
　　ரெங்கணம் பரத்தின் மீது
சென்றதீ தறியோ மென்னச்
　　சீறியே சிறையிற் சேர்த்தித்

துன்றிய கால்க டம்மைத்
துண்ணெனக் கொணர்தி ரென்ன
வன்திறற் றூத ரேகி
மற்றவர்க் கொடுவந் துய்த்தார். 126

தானவ னவரைச் சீறித்
தகர்முகி தனது கையை
யீனமி லொருவன் வாளா
லெறிதல்கண் டிருந்தி ரென்றே
யூனமார் சிறையிற் சேர்த்தி
யொற்றரைத் தரணி காக்கு
மானவர் தம்மைக் கொண்டு
வம்மினென் றுரைத்தான் மன்னோ. 127

எண்டவி ரவரை யுய்ப்ப
வெங்கைதன் செங்கை துண்டங்
கண்டன னொருவ னீவிர்
காத்தவா நன்றென் றோதித்
துண்டமா மதனைத் தானைத்
தோளினைத் துணிப்பித் தின்ன
தண்டமங் கியற்றிச் சூரன்
றவிசினு மெழுந்தா னன்றே. 128

எழுந்துதன் மருங்கு நின்ற
வினையனை விடுத்துச் செந்தேன்
பொழிந்திடு கமலத் தோனைப்
போகெனச் சிறையாந் துன்பத்
தழுந்துவா னவரை விட்டிங்
கருளென விரப்ப விட்டுச்
செழுந்துதி யனைய ரெல்லாஞ்
சென்றிடப் பணித்தான் றீயோன் 129

அன்னது பின்னர் மைந்த
ரமைச்சர்கண் முனிவ ராஞேர்
துன்னுறு படைஞர்க் கெல்லாஞ்
சூர்விடை கொடுத்துப் போனு
னின்னது நிற்க முன்ன
ரெழுந்துதன் மனையிற் சென்ற
கொன்னுறு பானு கோபன்
செயலினைக் கூற லுற்ரும். 130

நீடுபல் படைகள் சூழ
நெடியதோ ரிரத மேறிக்
கூடுதுன் முகத்தாள் காட்டக்
குறைவில்சீர்ப் புகலி மேவித்
தேடினன் மகவான் மாதைத்
தெரிந்திலன் புவனி யாண்டு
நாடினன் காணு னாகி
நாகமேற் சென்ரு னன்றே. 131

சண்டவெங் கிரணப் புத்தே
டனைச்சிறை பிணித்த தீயோ
னண்டிய தண்டர் காணு
வருந்துயர் பொருந்தி யேங்கி
மண்டுசீர்ச் சயந்தன் முன்போய்
மற்றிறை யுரைத்த லோடுங்
கொண்டலூர் குரிசின் மைந்தன்
கொண்டன னுளத்திவ் வாறே. 132

தந்தையு மில்லை பெற்ற
தாயிலை குரவ னுன
வெந்தையு மில்லை செய்வ
தென்னென விதயத் துன்னி

முந்தையில் விதியை யாரே
 முடித்திட வல்லா ரீண்டு
வந்தது வருக வென்று
 வானவ ரோடும் போனன். 133

வெள்ளைவா ரணத்தின் மீதே
 விண்ணர சானு மண்ணல்
பின்ளைவா னவர்கள் சூழப்
 பெருஞ்செருப் புரிவா னெண்ணிக்
கொள்ளையா மவுணர் நேரே
 குறுகலு மவுணர் தாமு
மெள்ளில்சீ ரிமையோர் தாமு
 மெதிர்ந்தம ரியற்றி னரால். 134

மண்டிரு திறத்தி னேரும்
 வன்சமர் புரிந்த காலை
யண்டர்க ளுடைந்தே யோட
 வவுணர்க டொடர்ந்து பற்றிப்
புண்டரு கயிற்று லன்னர்
 புயம்பிணித் தகல வீது
கண்டனன் வெகுண்டான் வெள்ளைக்
 கயந்தனிற் சயந்த னென்பான். 135

கைத்தனு வளைத்துத் தீய
 கணையெனு மழைபொ ழிந்து
பத்தின்மேற் றெண்ணூ றுற்ற
 படைவெள்ளம் விள்ளச் சிந்தி
மெத்திய தலைவர் தம்மை
 வென்றிகொண் டிடச்சூர் மைந்த
னத்தொழில் கண்டு நேர்வந்
 தடுசர மாரி தூர்த்தான் 136

இந்திர குமரன் காணு
வெண்ணில்கோ றுரந்து நீக்கி
வந்தவன் விசிக மாரி
விடவிட வதனுன் மாற்றி
யந்தமில் வன்மை கொண்ட
வாயிரங் கணைகள் சிந்திச்
சிந்தின னவுண னேந்துஞ்
சிலைப்பெரு நாணி தன்னை 137

நல்லதோர் நாணி போக
நாணியோர் நாணி விற்கொண்
டொல்லையா யிரங்கோல் சிந்தி
யுரந்திகழ் சயந்தன் மீதே
வல்லியி லழுத்த வன்ஞன்
வாளியா யிரதேர் தூண்டிச்
சில்லியந் தேரு மாவுஞ்
சிதைத்தனன் றேவர் துள்ள. 138

மற்றெரு தேரில் வாவி
வஞ்சகன் சிலையைக் கோட்டி
யற்றமில் சரங்க டாநூ
ருயிரங் கோடி தூண்டி
வெற்றிசேர் மகவான் மைந்தன்
மெய்யெலா மழுத்த நொந்து
சற்றுமங் கறிவி லாது
தந்திமேற் சயந்தன் விழ்ந்தான். 139

வீறிய மகவான் மைந்தன்
வீழ்தலும் வெள்ளைத் தந்தி
சீறியொன் னலன்றேர் பாய்ந்து
சிதைத்தவ னுரத்தின் மீதே

கோறுநாற் கோட்டி னலுங்
குத்தலுங் கோடு நாலும்
வேறுவே ருெடிந்து வல்லே
மேதினி விழுந்த வன்றே. 140

கையுடைத் தவள மேருக்
கவுளிடைப் பாணி கொண்டு
வெய்யவ னடிப்ப நொந்து
வீழ்ந்தது சயந்தன் றன்னைச்
சையமே யனைய மொய்ம்பிற்
ருனவர் சுற்றிப் பற்றி
மையல்சேர் கயிற்ருற் கட்டி
யானவ ரோடுஞ் சேர்த்தார். 141

அங்கது பின்ன ரன்ன
வாடகத் துலகத் துற்ற
மங்கையர் தம்மை யேனை
வானவர் தம்மை யெல்லாம்
பொங்குசீ ரவுணர் பற்றிப்
புயங்களைக் கயிற்ருல் வீக்கித்
துங்கவா னகரைத் தீயாற்
சுட்டனர் தூளி யாக. 142

இன்னது நிகழ்ந்த பின்ன
ரிரவியைத் தளைந்த வெய்யோன்
றன்னுள மகிழ்ச்சி யோடுந்
தானவத் தானை யோடு
மன்னிய புவியின் மேவி
மகேந்திர மூதா ருற்றுக்
கொன்னுறு தந்தை மேவு
கோயிலுட் போயி னுனல். 143

தந்தையை வணங்கி நின்று
    சசியெனு மடந்தை யோடு
மிந்திரன் றனையுங் காணே
    னேனைய வானோர் தம்மை
யுந்துசீர்ச் சயந்தன் றன்னை
    யொல்லைகொண் டுற்றே னாரைச்
செந்தழற் கீந்தே னென்னத்
    திருமகற் றழுவிக் கொண்டான். 144

புல்லியே தங்கை காணப்
    போந்திடு சயந்த னாதி
யெல்லவர் தமக்குந் தண்ட
    மியற்றுவித் தவரை யெல்லாம்
வல்லிசேர் சிறைசேர் வித்து
    மைந்தனை மனையிற் போகென்
றொல்லையில் விடுத்துச் சூர
    னுறையுளிற் சென்றா னன்றே. 145

ஆலமுங் கால வேலு
    மடுங்கொடுங் கணையும் வாளு
நீலமு மானு மானு
    நெடுவிழி யரம்பை மாதர்
சாலவுங் கொடிய ரான
    தகுவர்தம் பணிக ளாற்றிச்
சீலமுந் தவமு மில்லாத்
    தீயசூர் நகரி லுற்றார். 146

இன்னவை நிற்க முன்ன
    மிரணிய வுலகந் தன்னிற்
கன்னவில் குலவுத் திண்டோட்
    கதிர்ப்பகை புடைப்ப விழ்ந்த

மன்னெடுங் கரிவெண் காட்டு
வரதனை யருச்சித் தேத்திப்
பொன்னுறு கோடு நாலும்
பொருந்தியாங் கிருந்த தன்றே. 147

ஈதறிந் திடரின் மூழ்கி
யிந்திரன் றவஞ்செய் கின்ற
தாதிய தாக வாதி
யறுமுக னுதித்த தீரு
வோதிய வடைவி னேடு
மொளிதரு வியாழப் புத்தேள்
கோதிலா வமரர் போற்றுங்
குமரவேள் முன்னஞ் சொன்னன். 148

அசுரகாண்டம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 348.

## மூன்றாவது

# மகேந்திர காண்டம்

சொன்னவை யனைத்துங் கேட்டுத்
துலங்கிய வருளி னீரா
லொன்னலன் றனது மாட்டோ
ரொற்றனை விடுப்பா மென்றே
மன்னிய புழ்ச்சி வீர
வாகுவை யருளா னோக்கி
யென்னையா ளுடைய செவ்வே
ளினையன விளம்ப லுற்றான். 1

நாட்டிய புகழ்ச்சூர் முன்போய்
நாகர்தஞ் சிறையை நீக்கி
வாட்டமி-லறத்தில் வாழ்தி
மறுத்தியேல் வந்து நாளை
விட்டுவ நாமென் றோதி
மீள்கென வீர வீரன்
றாட்டுணை பணிந்து வேலோன்
றனைவிடை கொண்டு போனான். 2

பெற்றசீர்க் குலிச வேலோன்
பின்புபோ யும்ப ரோடுஞ்
செற்றவெஞ் சூர னூரிற்
சிறையிடைச் சயந்த னென்போ
னுற்றன னவன்பா லெய்தி
யுளந்தனை யுவந்து தேற்றிக்
கொற்றநின் செயலைப் பின்னர்
குயிற்றுதல் வேண்டு மென்றான். 3

அங்கதற் கிசைவு கொண்டே
யவன்றனை நிறுவி வீரம்
பொங்குதம் பியர்க டம்மைப்
பூதமன் னரைநி றுத்தித்
துங்கவெண் டிரைசே ராழித்
தூயதண் கரையின் மேவி
மங்குரு துயர்ந்த கந்த
மாதனக் குவடு சேர்ந்தான். 4

அங்கதன் மீதி லேறி
யவுணனூர்க் கடைவா னீட்சி
தங்குமோர் வடிவங் கொள்ளத்
தடவரை பொருது தாழ்ந்து
பொங்குசீர்ப் பிலத்தி னூடு
போயதெவ் வுலகுஞ் சூரன்
றுங்கவா ணகருங் கண்டான்
சுடர்விடு வடிவாள் வீரன். 5

அண்டர்சூழ் குமர வேளை
யன்புடன் றொழுது போற்றித்
துண்டவெண் பிறையான் மைந்தன்
றொல்லுரு வமைந்து சூராங்
கண்டக னூரை நாடிக்
ககனமா நெறியூ டேகிப்
பண்டுபோ லெழுதி யென்ன
வெழுந்தது படிந்த குன்றம். 6

சென்றிடு வீரன் சூரன்
திருநகர் வடாது பாங்கர்
வன்றிறல் படைத்த யாளி
மாகமுத் தவுணன் போற்றும்

வென்றிகொ ளிலங்கை யான
    வியனகர்க் கணிய னூ
னன்றவன் சூரற் கான
    வனிகமோ டகன்று னன்றே. 7

அங்கவன் றனது மைந்த
    னூயிர வெள்ள மான
துங்கவெம் படையி னோடுந்
    துலங்கதி வீர னென்போன்
றங்கினன் வடாது வாச
    றன்னிடை மன்னு வீர
சிங்கனுஞ் ஞாறு வெள்ளஞ்
    சேனையோ டிருந்தான் மாதோ. 8

கண்டனன் வீர வாகு
    ககனமேல் வருதல் சீற்றங்
கொண்டன னெமது காப்பிற்
    குறுகின னிவன்ற னுவி
யுண்டிடு வேனென் றெண்ணி
    யுரந்தரு மடங்கற் பேரோன்
மண்டிய படையி னேடு
    மாகமேல் வளைந்து கொண்டான். 9

உற்றசீர் வீர வாகு
    வுறைகழித் தொளிர்வாள் கொண்டு
செற்றவெங் கரிக ளோடு
    சீயமொன் றடைந்த வாபோற்
றற்றிவந் தெதிர்ந்து போர்செய்
    தண்டமுந் தலைவன் றனு
மற்றிடக் கடிது லாவி
    யறுத்தனன் செறுத்து மன்னே. 10

மின்னுலாந் தனிவாள் கொண்டு
வீறிவந் தெதிர்ந்து சூழ்ந்த
மன்னிலா வெயிற்றுப் பேழ்வாய்
வன்மைசே ரவுணற் செற்ற
பொன்னுலா மலங்கற் றிண்டோட்
பொருவிலா வீர வீரன்
கொன்னுலா மிலங்கை யென்னுங்
குன்றின்மேற் குப்புற் றானல். 11

வேறு

குப்புற் றிடுதலு மதுதன் புடையுறு
கொடுவன் றகுவர்க ளொடுதாழா
வுப்புற் றிடுகடல் புகவே யவனுறை
யொருவா விருவிற லதிவீரன்
றுப்புற் றிடுபடை யொடுவந் தடலொடு
சூழத் தனதொரு சுடர்வாள்கொண்
டப்புக் கடலென வுதிரம் பெருகிட
வட்டா னவர்தமை யடல்வீரன். 12

பேரா விறன்மலை கடன்மே லெழும்வகை
பின்விண் ணிடையி னெழுந்தேகிச்
சீரார் சுரர்பகை நகரத் திடைவட
திசைவாய் தலினுற வதிகோர
வீரா திபனவ னொரு யிரமெனும்
வெள்ளப் படையொடு முறவேகண்
டேரார் கரிமுக னிளையோ னிளையவ
னிவ்வா றுரையது செய்வானல். 13

வற்று துறுகட லெனவிங் கவுணர்கண்
மருவுற் றனர்மிக வாய்தற்பா
லுற்று லவர்பொர வருவா ரவர்தமை
யொழியப் பொருதிடி லொழியாதே

செற்ருர் வருகுவ ரவர்தங் களையடல்
    செய்தற் கரிதது செய்தாலுஞ்
சுற்ரு நிறைவுறு திறல்வெம் படையொடு
    சூரன் சமர்செய வருவாருல். 14

ஆதிக் குகனவ னழியப் பொருதிட
    லல்லா தெவரட வல்லாரென்
ருேதிக் குணதிசை வாய்தற் றனில்வள
    ருரமே வியபுய னுறுபோதின்
மேதிக் கணனெடு மாதிக் கதனிடை
    வீரத் தினகரன் வடதிக்கா
ரேதப் படைநிக ரனிகஞ் சுலவவி
    ருந்தா ரிருவர் தெரிந்தானே. 15

பேரா விறனுறு வீரா திபனது
    பின்றென் றிசைவழி பெயர்போதிற்
சூரா னவனது நகர்மேல் வெளிமிசை
    தோய்வோ னமர்புரி தொழில்வல்லோ
ரோரா யிரமுக மீரா யிரமெனு
    மொண்கைக் கசமுக வசுரன்ருன
பாரா விவனுயி ருண்பே னெனவெதிர்
    படவந் தனனிது பயில்கின்ருன். 16

வீரு மொருகிரி பறியா மிடலொடு
    விடவே வளர்புய மிசைபட்டே
நீரு யதுதச நூரு மலைவிட
    நிமலன் றிருவுரு நிலைமேவி
வேரு யளவறு துகளா யினகதிர்
    மிகுவே லிறையவ னிளையோனுட்
சீரு மிளிரொளி வாள்கொண் டவனெதிர்
    சென்ரு னடுதிறல் குன்ருதான். 17

வாள்கொண் டிடுநெடு வாள்கொண் டவன்முக
வண்கைத் திரளினை வலிமேவுந்
தோள்கொண் டிடுமிறை தடியக் குகன்விடு
தூதன் றனையிரு தசநூறு
நீள்கொண் டிடுகர மேகொண் டடலுட
னேசுற் றிடவவை நிலமீதே
வீள்கொண் டிடும்வகை வாள்கொண் டடலொடு
வெட்டா வழிவுசெய் திட்டானல். 18

துன்றுங் கரநிரை தரைமேல் விழவமர்
தோளான் முயறலு நீளாகத்
தொன்றும் படியொரு சரணு லவனை
யுதைத்தே கடிதில் வதைத்தேமுற்
பொன்றும் படிசம னூரமீ துரமொடு
புவியூ டுதைபுரி புனிதன்போற்
கொன்றுன் றியவிறல் மொய்ம்பன் மகிழ்வது
கொண்டா னமரர்கள் கொண்டாட. 19

வேறு

அன்னவனை யட்டபின ரிந்நகரின் வாய்தலெலா
மவுணர் சேனை
துன்னியதா தலினுலே வேற்றுருக்கொண் டேகுதலே
துணிபா மென்றே
மன்னுமணு வுருவாகிக் கீழ்த்திசைக்கோ புரத்திருந்தார்
வளங்க ணேக்கி
மின்னுபுகழ் மகேந்திரமாஞ் சூருருட் போயினன்சீர்
வீர வாகு. 20

பங்கமுள கொடுஞ்சூர்க்கு முதன்மைந்த னனதொரு
பானு கோபன்
றுங்கமுள வக்கினிமா முகத்தோனே யிரணியனுந்
துலங்கு பேரோ

ணங்கடல்வச் சிரவாகு மற்றுமூ வாயிரவர்
தமதின் ஞேக்கி
வெங்குணமந் திரிதரும கோபன்மனைச் சிகரமிசை
மேவி ஞுல். 21

சாற்றியவிங் கிதுநிற்கக் கறையுறுவெஞ் சிறையினிடைச்
சயந்த னென்போ
னேற்றமுள வமரரொடு மவுணர்புரி சிறையதனு
விடரின் மூழ்கி
யாற்றமெலிந் தரனைநினைந் தேத்தியயர்ந் திடவறிந்தங்
கருண்மீக் கொண்டு
சீற்றமுறு வேற்றடக்கைக் குமரனவன் கனவினிடைச்
சென்று னன்றே. 22

சிந்தைமகிழ் வோடுதொழு தையநீ யாரெனவே
திகழுமீ சன்
றந்தருளு மைந்தனியா நன்குறைநின் குறைபுகன்றுன்
றுதை யான
விந்திரன்வந்தெமைவேண்டத்தாரகனைக்கதிர்வேல்கொண்
டெறிந்து சாடிச்
செந்திநகர் வத்ததனி லிருந்தனமிந் திரனயன்மா
றேவர் சூழ. 23

வீரவா கென்னுமொரு தூதுவனை யிங்குவர
விடுத்து வீரச்
சூரனு மவுணன்மக னெருவனெடு பலவவுணர்
தொலையச் சாடிச்
சீருலா நகரழித்து வரப்புரிந்து நானையிவண்
சேர்ந்து சூர்முற்
போருலா மவுணரெலா மைந்திருவை கலின்மாளப்
புரிது மாதோ. 24

பின்புளது திருத்தருது மென்னவவள் றனக்குரைத்துப்
பெயர்ந்து மோகத்
துன்பினுட னுறுமமரர் கனவினிடை மனமகிழத்
தோன்றித் தோன்றி
யன்பிஞெடு சயந்தனுக்குப் புகன்றதுபோற் புகன்றுபுகன்
றகன்று போக
வின்பமுறு கனவினைவிட் டெழுந்து துயர் பொருந்தாம
லிருந்தா ரன்றே. 25

வேறு

கொள்பாவு திறல்கொண்ட குமரேச னமரர்
முன்பாக வந்தேகு முறையிங் குரைத்தா
மின்பான புகழ்கொண்ட வெழில்வீர வாகு:
பொன்பாவு நகருடு புரிசெய்கை சொல்வாம். 26

தண்டாத விறல்கொண்டு தருமங்கொல் கொடியோன்
விண்டாவு சிகரத்தின் மிசைநின் றிழிந்தே
யெண்டான வர்கள்சூழ விமையோர்கள் சிறைசேர்
கண்டார்கள் பயமேவு களமீ தடைந்தான். 27

அங்காரு மகரேச ஏதிமோக மாகச்
சிங்கார வேண்மந் திரத்தைச் செபித்தே
மங்காத வமரேசன் மகஞேடு மிமையோர்
தங்கா விருந்திட்ட தலமுற் றிருந்தான் 28

தண்டாத விறல்கொண்ட தலைவன் றன் மேனி
கண்டான் விருப்போடு கரமுந்து சிரமேற்
கொண்டான் வரத்தென்கொல் கூறென் றுரைத்தா
னண்டார்கள் சிறையூ டமுந்துஞ் சயந்தன். 29

கால்கொண்ட விசைகொண்ட கழல்வீர வாகு
வேல்கொண்ட முருகேசன் விடுதூத னீரிப்
பால்கொண்ட சிறைவிண்டு பதமெய்த வேவெங்
கோல்கொண்ட சூர்முன்பு கூறற் கடைந்தேன். 30

இப்பான்மை கேளா திடும்போ னிருக்கிற்
றப்பாம லிவண்வந்து தசநாள்க டம்மிற்
றுப்பாரு மவுணர்த் தொலைத்தும் பதத்தே
மெய்ப்பாக வைப்பான் விறற்கொண்ட வேலோன் 31

வேறு

என்று பற்பல நன்று புகன்றிட
வேதி லாத சயந்தனு மண்டருந்
துன்று கைக்கம லங்கள் குவித்துநின்
றூய செய்கை தொடங்குதி யையவென்
றென்று மன்பொ டுரைத்திட லங்கண்விட்
டொல்லை யேகியோ ராயிர யோசனைப்
பொன்றி கழ்ந்திடு சூரவை மண்டபம்
போகி முன்னுள பொன்னுரு வெய்தினன். 32

எய்தி யாயிர யோசனை நீளமு
மெள்ளி டம்புரை வெள்ளிடை யின்றியே
வெய்ய தானவர் சூழ்தர வீறிலா
வீறு லாவு வளங்கள் விளங்குறத்
துய்ய மாலை யிலங்கிய மார்பகச்
சூர்ம டங்கல் சுமந்திடு மாதனச்
சைய மீதுறல் கண்டன னண்டர்சூழ்
சண்மு கற்கினி தாகிய தம்பியே. 33

கண்டு திண்டிறல் கொண்டிடு தோளுடைக்
காளை சூரன் கடுந்திறற் சீயமேல்
கொண்ட வாதன மீதி லிருந்திடக்
கொற்ற வேலவ னெற்றென வோதியான்

மண்ட லத்திடை நின்றிட நீசெகு
வள்ள றன்னை மனக்க ணினைத்தனு
மொண்டி றற்குகன் மண்டரு ளாலரோ
வோரரித்தவி சவ்விடை யுற்றதே. 34

வந்து மன்னவன் முன்ன ரிருந்திட
வாகை கொண்டிடு வாகு மகிழ்ச்சியோ
டெந்தை யாகிய கந்த னளித்ததீ
தென்று சென்றதி னெய்திய காலையின்
வெந்தி றற்பெறு சூரிது கண்டுநீள்
வித்தை செய்பவ னென்று வெகுண்டுரைத்
துந்து சீருள வீரனை யாரைநீ
யோது வாயென வோதுதன் மேயினன். 35

தேவர் தங்க ளிடுக்க ணகற்றவே
செந்தின் மேவி யிருந்திடு கந்தவே
ளோவி லாவரு டன்னுட னென்னையே
யுன்னைமேவி யுரங்கிள ரண்டரைப்
பாவ மார்சிறை விட்டிட வெண்ணுதி
பாரி னீதி பயின்றர சாளுதி
யாவ தீது மறுத்திடின் மாள்வையென்
றன்பி னேடு மறைந்திட வேவினன். 36

என்று கூற மிகுந்த சினத்தினே
டிறில் சூர னெனும்பெயர் பெற்றுளோன்
மன்ற வாணகை யின்னு மூளைத்திடா
மைந்த னேவிங் கெனக்கிது செப்புவா
னன்று நன்றிது பேதைய னுதலா
னச்சு ரமொழி நச்சிவந் தோதினு
மின்று நின்னுயிர் தந்தன னேகுதி
யென்றியம்பலு மேந்த லியம்புவான். 37

ஆதி யாகிப் பரம்பர ஞகிய
வாறு மாமுக வண்ணலைப் பாலனென்
ஞேதி ஞயவன் மேன்மைகள் கேளொ ஞ
வொப்பின் மேன்மை யுரைத்திட வெய்யசூர்
காதி யங்கவன் மேன்மைகள் பின்னருங்
கட்டு ரைக்குதி யென்றய றுன்றிய
தாது லாவு தொடைப்புய வாயிரந்
தான வர்க்கிது சாற்றுதன் மேயினன். 38

ஒற்ற ஞகி யடைந்த விவன்றனை
யூறு செய்திடல் வீறல வாதலாற்
பற்று மின்சிறை யூடு படுத்துமி
னென்று பாவி பகர்ந்திட வாயிரந்
துற்ற தானவர் பற்றிடு வானயல்
சூழ வீரன் றுலங்கொரு கையினு
லுற்ற வொன்னலர் சென்னி பிடித்துமண்
மீத டித்திட வொல்லை யிறந்தனர் 39

எந்தை வேலுக் கிளியிரை யாகுதி
யீது திண்ண மிருந்திடு போவனென்
றுந்து சீருள வீர னகன்றிட
வுற்ற வாதன மொல்லை யெழுந்துநீ
ளந்த ரத்தின் மறைந்து படர்ந்ததா
லந்த வேலை யருந்திறல் கொண்டசூர்
வெந்தி றற்புனை யுஞ்சத மாமுக
வீர ஞேடு விளம்புதன் மேயினன். 40

ஆதி மைந்தன் விடுத்திடு தூதனிங்
காயி ரத்தரை யட்டகல் கின்றனன்
காது மன்னவ னுக்கெதிர் கிட்டிநீ
கட்டி வாவென்று கைய னிசைத்தலு

நீதி கொன்ற விலக்கர் களோடுபோய்
நில்லு நில்லென வொல்லை யியம்பியே
போதும் வீரன் வெரிந்புடை கிட்டலும்
பொங்கு கோபம் புரிந்து திரும்பினன். 41

செற்ற மோடு திரும்பிய வீரனோர்
சென்றிலக்கர் திருந்து கரங்களிற்
பற்றுபல்படை விட்டிட மொய்ம்பன் மேற்
பட்டு நுண்டுகள் பட்டன வண்ணலங்
குற்ற சூளிகை யொன்று பறித்துநே
ரொன்ன லார்மிசை யுந்த விரைந்துபோ
யற்ற மற்ற விலக்கர் கலக்கமோ
டாவி விட்டிட வட்டது கெட்டதே. 42

நூறு கொண்ட பெருந்தலை கொண்டவ
னூபுரத்திடை வந்தவர் மைந்தருள்
வீறு கொண்டவன் மீமிசை பல்படை
வீச வீரன் விளங்கொர் சிகரியை
மாறு கொண்டு பறித்து விடுத்திட
வல்லை யாயிர வாளிக ளுவியே
நீறு கண்டொரு நூறு சரங்கடா
நேரி லான்மிசை நீசனெய் தானரோ. 43

விட்ட வாளிகள் பட்டிட மொய்ம்பினன்
வெய்யன் முன்னர் விரைந்து படர்ந்துகைப்
பட்ட வில்லைப் பறித்து முறித்திடப்
பாவி நூறு கரங்கொடு பற்றலு
மட்டில்வீரப் புயங்கொடு தள்ளியே
மார்ப கத்தை மிதித்தொரு தாளினு
லொட்ட லன்றனி நூறு சிரத்தையு
மொல்லை தள்ளி யுயிர்கவர்ந் தானரோ. 44

## வேறு

அட்டது பின்ன ரரும்புகழ் வீரம்
பட்ட புயங்கள் படைத்துள வள்ள
றுட்டர் வெருண்டு தொலைந்திட வங்கோர்
நெட்டுரு வங்கொடு நின்றன னன்றே. 45

வேதர் வணங்கு திறற்புய வீரன்
பூவடி வங்கொடு பூமிசை நிற்ப
மேவிய வைம்பது வெள்ளம தாகுங்
காவல ரன்னது கண்டு வெருண்டார். 46

வந்து விரைந்து வளைந்து சினந்தே
பந்தி பொருந்து படைக்கல முந்தக்
கந்தன் விடுத்திடு காளை கறுத்தே
யிந்த வியற்கை யியற்றுத லுற்றான். 47

அடித்து முதைத்து மரற்ற வெறிந்தும்
பிடித்துட லங்கள் பிசைந்து பிழிந்தும்
வெடிக்குர லைம்பது வெள்ளமும் விள்ள
முடித்தனன் மொய்ம்புள மொய்ம்புள வீரன். 48

அட்டவ தற்பின ரங்கொரு வேரந்
தொட்டறம் விட்டிடு சூரவை மன்றம்
பட்டிட விட்டுழி பட்டது கண்ணா
லெட்டரு மன்ற மிடிந்தது மன்னோ. 49

தீயவர் பண்ணை செறிந்திடு மன்ற
மாய்வது கண்டு வயம்பெறு சூர
னாயிர மொய்ம்புள வாயிரர் தம்மைத்
தூயவ னோடமர் துன்ற விடுத்தான். 50

உந்திடு மாயிர வொட்டவர் கிட்ட
வந்திடு முன்னர் வயம்புனை வாகு
சுந்தர மேவிய சூரன தூரை
யந்தர மாக வழித்திட லுற்றான். 51

மண்டப கோபுரம் வாரி யெறிந்தும்
விண்டு மதிற்றிரள் வீழ வுதைத்தும்
வண்டுறு தண்டலை வல்லை பிடுங்கி
யெண்டிசை யின்கணு மேக வெறிந்தும். 52

அங்கிவை யாதி யனேக விதத்தாற்
பொங்கு வளங்கொள் புரத்தை யழித்தே
துங்க விறற்பெறு தூயவ னிற்ப
வெங்குண வாயிர வீரர் தெரிந்தார். 53

தீங்கிளர் கண்டு சினந்து வளைந்தே
பாங்குறு மெண்ணில் படைக்கல முய்ப்ப
வோங்கு மராமர மொன்று பறித்தே
யாங்கவர் தம்மை யடித்து முடித்தான். 54

பாதக ராயிரர் பட்டது கண்டே
தூதுவ ரோடுபு சூரனொ டோதக்
காதியி ருப்பவோர் காதல னான
மாதிறல் வச்சிர வாகு வெழுந்தான். 55

பற்றுறு தந்தை பதங்கள் பணிந்தே
யொற்றனை வென்றிவ னுற்றிடு கின்றேன்
மற்றெனை யேவுதி வல்லையி லென்ன
வற்றமில் சூரன் விடுத்தன னன்றே. 56

தந்தை யிருந்திடு சங்க மகன்றே
யுந்திய தன்மனை யூடு புகுந்தே
யந்த மிலாத வடற்படை கொண்டே
சிந்தை மகிழ்ந்தொரு தேர்மிசை யுற்றான். 57

## வேறு

தேரைஞ் ஞாறு வெள்ளம தாகுந் திறல்யானை
யோரைஞ் ஞாறு வெள்ளம தாகு முயர்மாக்க
ளீரைஞ் ஞாறு வெள்ளம தாகு மெழிஞுன்கு
பேரைஞ் ஞாறு வெள்ளம தாகும் பிறசேனை. 58

இவ்வா ருகுஞ் சேனைக ளோடங் கிருமைப்போர்
செய்வா னுன்னித் தன்னிக ராம்வச் சிரவாகு
மைவாழ் கண்டத் தண்டர் பிரானுர் மகனேவுஞ்
செவ்வான் மேனித் தூயவ னேரே சென்ருனல். 59

செற்ரு ராகுந் தானவர் ஞானத் திறலோனைச்
சுற்ரு நின்று படைக்கல முந்தத் துகளில்லோன்
குற்ரு நின்று முதைத்து மெறிந்துங் கோபத்தோ
டெற்ரு நின்றுங் கொன்றன னம்மா விறைதன்னில். 60

## வேறு

வேறு மனேக விதத்தாற்
சீறி யெதிர்ந்திடு சேனை
யூறு பொருந்திட வூழிச்
சூறை புரிந்து தொலைத்தான். 61

அங்க ணிறந்தவ ரல்லால்
வெங்கண மாகிய வெய்யோர்
தங்கண் மனங்க டளர்ந்தே
யெங்கணு மாகி யிரிந்தார். 62

மாதிறல் வச்சிர வாகு
வீது தெரிந்தட லேந்தன்
மீதுற வாயிர வெங்கோ
லூதை யெனச்செல வுய்த்தான். 63

வந்த சரங்களை வல்லே
யுந்து கரங்கொ டொடித்தே
சிந்தின னின்றுழி தீயோ
னிந்த வியற்கை யியற்றும். 64

வெம்பதி னாயிர வெய்ய
வம்பு விடக்குக ளன்பார்
தம்பி யெழுக்கொடு தாக்கி
மொய்ம்பொடு சிந்த முறித்தான். 65

## வேறு

முறித்தபி னையிரு மெய்ச்சிர வச்சிர மொய்ம்புள்ளோன்
மறித்து மரும்பதி னாயிர வாளி மனத்தூடே
கறுத்து விடுத்து மிகுத்த வெழுத்துகள் கண்டேபின்
றெறித்தன னைந்தெனு மாயிர வாளிகள் செய்யோன் மேல்.

பட்டுழி யோரிறை நொந்து விரைந்து படர்ந்தன்னா
னெட்டி ரதத்தை யுதைத்திட வேறொரு நீடேர்மே
லொட்டல னுற்றுழி யவ்விர தத்தையு மொண்கையா
லெட்டி யெடுத்து விசும்பிடை போக வெறிந்தானால். 67

தேரொடு வானி லிலக்க மியோசனை சென்றேபின்
பாரில் விழுந்தொளிர் வாள துகொண்டு பகைத்தோர்தம்
ஆருயி ருண்டிடு வீரனைநேர வவன் முனுஞ்
சீரிய வாள்கொ டெறிந்து சிரங்கள் சிதைத்தானால். 68

அங்கவ னாருயிர் கொன்றவ னின்றுழி யாகாய
வெங்கதி ரோனு மறைந்தனன் மாலையு மேவிற்றாற்
சங்கரன் மாமக னப்பதி யெல்லை தணந்தேபின்
மங்குல் விசும்பு வழிக்கொ டிலங்கையில் வந்தானே. 69

அண்டர் வெருண்டிடு மாளி முகத்தவ னப்போதிற்
கண்டன னின்றவ ருன்மக னாவி கறுத்தேமுன்
உண்டவ னிங்கிவ னாமென வோத வுருத்தேகி
மண்டு திறற்பெறு சேனைக ளோடும் வளைந்தானால். 70

வீரரில் வீரன் வெகுண்டுறை வாளுரு விச்சென்றே
யாரவு ணப்படை முற்று முலாவி யடும்போதிற்
பாரமு னாயிர வாளி முகங்கள் படைத்துள்ளா
னோருற வேகி யடித்தன னாயிர நீள்கையால். 71

அடித்த கரங்களை யங்கொரு பாணிகொ டப்போதிற்
பிடித்தவ னுந்து கரங்கள் சிரங்கள் பெயர்ந்தோடித்
துடித்திட வாள்கொடு வீசி யடற்புனை தோள்வீரன்
வடித்தனி வேல னமர்ந்திடு செந்திலில் வந்தானே. 72

கந்த னிருந்திடு கோயில் புகுந்து களிப்போடு
மந்தமி லன்பொடு முன்பு வணங்கி யணித்தாய்நின்
றுந்திய சூரன தெண்ணமு மேனைய வுங்கூறி
யிந்திர னோடு சயந்த னிருப்பு மிசைத்துற்றான். 73

மற்றிது நின்றிட வச்சிர வாகு மடிந்தானென்
றொற்றர்கள் சொற்றுழி வெற்றிகொள் சூரென வுற்றுள்
சற்றல வீறிடர் கொண்டொரு மந்திரி தானோது [ளோன்
மற்றமில் புந்தியி னாலிடர் சிந்தி யமர்ந்தானால். 74

அங்கது போதினி லப்புற வண்ட மதிற்சேருஞ்
செங்கம லத்தய னைக்கொணர் வித்தடல் சேர்சூரன்
மங்கிய தன்பதி முன்பி னிலங்க வகுப்பித்தே
துங்க விரிஞ்ச னகன்றிட வன்பொடு சொற்றானால். 75

அன்னது காலையில் முன்னர் விடுத்த வடற்றூதர்
மன்னிய செந்திலில் வந்தரன் மைந்தன் மருங்குள்ள
கொன்னுறு சேனை வினாவி யகன்று கொடுஞ்சூரன்
றன்னை யடைந்து பதங்கள் பணிந்திதனைச்சொல்வார். 76

அற்றம தற்ற விராயிர வெள்ள மடற்றூதர்
மற்றவர் மன்னவர் நூறுட னெண்மர் வரைத்திண்டோட்
கொற்ற விலக்கரொ டொன்பது வீரர் குழாத்தோடும்
வெற்றி தருங்கதிர் வேலவன் ஞால மிசைச்சேர்ந்தான். 77

அங்குறு தாரக னெண்கிர வுஞ்ச வடற்குன்ற
மங்குற வெஃக மெறிந் துயர் செந்திலில் வந்தோரொற்
றிங்கு விடுப்ப விலங்கை யழித்திவ ணெய்துற்றே
பங்கமில் யாளி முகன்றலை கொண்டு படர்ந்தானல். 78

தெண்டிரை வாவிநம் மாநக ரூடு திறற்கந்தன்
மண்டனீ கத்தொடு வந்தமர் செய்ய மனந்தன்னிற்
கொண்டன னின்னது மெய்யென வெய்ய கொடுஞ்சூர
னெண்டிறல்சேர்தமரைக்கொணர்வித்துரைசெய்கின்றான்.

## வேறு

வானோர் தமைச்சிறையில் வைத்தசெயல் வானோ
ரானோர் தமக்கிறைவ னுதியுடனேதக்
கோனோர் விறற்பெறு குமாரனை யளித்தெம்
மேனேவு செய்திட விடுத்தருளி னானல். 80

இன்பா ரரன்சுத னிராயிரவெ ளஞ்சே
ரன்பான பூதரு மலக்கணி விலக்கத்
தொன்பா னெனப்படு முரங்கொளினை யோருந்
தன்பால் வரக்கடிது தாரணியில் வந்தான். 81

வீரன தாரகனை வெற்பொடு தடிந்தே
மாருத செந்தினகர் வந்ததி லிருந்தே
யாரூர் முடிப்பர னளித்தருக னம்பா
லூரூ னதற்றிடுமொ ரொற்றனை விடுத்தான். 82

அன்று னிலங்கையை யழித்திவ ணடைந்தென்
முன்று விருந்தெனை முனிந்தே யிகழ்ந்தே
கொன்றரு மென்பதி குலைத்தே யிளஞ்சேய்
தன்றுவி கொண்டுறு சயத்திறெடு சென்றுன். 83

நந்தம் பெரும்பதியி னுளையர னல்கு
மைந்தன் செருப்புரிய வந்திடுவ னென்றே
முந்துந்து தூதுவர் மொழிந்தனர்க ளென்று
வுந்துஞ் செருச்செய வுசாவின னிசாவில் 84

அப்போது பற்பல ரனேகவித மோதக்
கைப்போ தமைத்தரி கலந்ததவி சின்கண்
டுப்போ டிருந்ததொரு சூரன்முக நேரே
மெய்ப்போடு சிங்கமுக வீரனிது சொல்வான். 85

விரைத்தார் மிடைந்திடு வியன்புய வமைச்ச
ரிரைத்தாடல் செய்திடு மிலங்கனிக மன்னர்
வரைத்தாசின் மைந்தர்க டமக்கியலும் வன்மை
யுரைத்தாரொர் புந்தியு முறைத்தில ருனக்கே. 86

கொன்றார் புகழ்க்குலவு கொற்றவர் செவிக்கே
மின்று ரழற்கணை விடுப்பது கடுப்ப
வெந்நாளு நன்னிலைமை யென்னுமது தன்னைச்
சொன்று ரமைச்சர்க ளெனும்பெயர்கொ டுயோர். 87

வாலுற்ற தண்புனல் வயங்கிய பயம்பின்
பாலுற்று லாமயிலை பற்றுமிகு முண்டி
போலுற்ற நுண்பொருள் புரிந்துபடு மாபோன்
மேலுற் றிடுஞ்செயல் விளுவுகிலை யந்தோ. 88

நந்தா வளங்குலவு நாகவுல கோரை
முந்தான காலமதின் மொய்ம்புட னலைத்தோர்
சிந்தா குலத்தினெடு சிந்தினர்க ளல்லா
துய்ந்தா ரொருத்தரை யுரைப்பவிவ னுண்டோ. 89

மீனஞ் சுமந்துபுகழ் விண்ணவர்க ளெல்லா
மீனம் பொருந்திட வியற்றினை மகத்தின்
கோனந்தண் மாநகர் குலைந்திட முனிந்தா
யூனந் தருஞ்சிறையி லும்பர்களை வைத்தாய். 90

நந்தா வளங்குலவு நாகர்சிறை யின்னு
மந்தோ விடுத்திலை யதற்குவடி வேலோன்
வந்தா னமர்ச்செய வரங்கடரு நாளின்
முந்தா னுயர்த்தவன் மொழிந்தது மறந்தாய். 91

இக்கால நூறினொடு மெட்டுக மிருந்தெம்
மெய்க்காசில் சத்தியில் விளிந்திடுதி ரென்று
னக்கால முற்றதிவ ணப்படியி லன்றோ
மிக்கான தாரகனை வென்றதுயர் வேலே. 92

மின்னுரை வேதியரை மெய்க்குரவர் தம்மைப்
பொன்னு டரைப்பொறை பொருந்துமுனி வோரை
மன்னுசி ருர்தமை வருத்தியவ ரன்றோ
வெந்நாளும் வெந்நரகி லெய்தியுழல் வாரே. 93

ஈண்டாகை யான்முருக னேடம ரியற்ற
வேண்டாவிண் ணோர்கள்சிறை விட்டிடுவை யாயின்
மீண்டா சறுங்கயிலை வெற்பினிடை நாகம்
பூண்டான் மகன்கடிது போயிடுவ னன்றே. 94

இன்பான விப்படி யியற்றுகிலை யாகிற்
கொன்பாவு மம்பிகை குமாரனமை யெல்லாந்
துன்பாக வேல்கொடு தொலைத்திடுவ னென்றே
மின்பாவு சிங்கமுக வீரனுரை செய்தான். 95

என்றீது சிங்கமுக னின்புற விசைப்ப
நன்றீது நன்றென நகைத்துநனி சீறித்
தன்றீதி லாததொரு தம்பிமுக நேரே
யொன்றீது சூர்முத லுரைத்திடுத லுற்றான். 96

## வேறு

இந்திரன் றனக்கும் பூதர்க டமக்கு
    மிளஞ்சிறு பாலனே டிமையவர் தமக்கு
முந்துநீ நெஞ்சி லஞ்சினை போலு
    முமையொரு பாகனு மொப்பிலாக் கடவு
ளந்தனிச் சத்தி வெல்லுமென் றதுவு
    நாண்முடி விழைத்தது நான்முன்பு கேளேன்
புந்தியிற் புதிதொன் றுன்னியே யுரைத்தாய்
    பொய்மொழி சொல்லவும் வல்லையா யினையால். 97

அப்படி யுரைத்தா னேனுமக் கடவு
    ளளித்திடு வரமா ரழித்திட வல்லார்
மெய்ப்புறுசத்தி யழித்திடு மென்னில்
    வேறதோ சத்தியும் விமலனு மதனு
லிப்பெரு வரங்கள் கொடுத்தவ னழியா
    னெண்ணிறு ளமரரை யான்சிறை செயக்கண்
டொப்பின்மான் முதலோ ரஞ்சியே யிருந்தா
    ரொருசிறு பாலனே வொழித்திட வல்லான். 98

என்னவே குகனைப் பாலனென் றெண்ணி
    யிகழ்ந்துதன் னுயிரை யிழந்திடு கின்ற
முன்னவ னிசைப்பப் பின்னவன் பின்னு
    முனியலை யொன்றின மொழிவனென் றுரைப்பான்
பொன்னுல கமரர் தமைச்சிறை படுத்திப்
    புவியினி னீதி புரிந்திடா வதனைத்
தன்னிக ரான சங்கர னறிந்துன்
    றன்னைவந் தடுவான் றன்னுள நினைந்தான். 99

இன்னறிர் வரங்கள் கொடுத்தயா மழிப்பதியல்பல
    வாதலா லிருமையே படைத்து
மன்னியே யிருந்த சூரனைப் பிறர்க்கும்
    வதைப்பரி தெனவே மனத்திடை நினைந்து

பொன்னுறு தனதா முருவமா மொருசீர்ப்
புதல்வனாற் புகழுறப் பொருக்கென முடிக்கத்
தன்னுதல் விழியா லாறுமா முகத்தோர்
தனிப்பெருங் குமரனைத் தந்தனன் பரனே. 100

அற்றமி லுருவ மாகுவ னருவ
மாகுவ னருவுரு வகன்ற
பெற்றிய மாவன் மறைகளுந் தெரியாப்
பெரியவன் பெரியர்க்கும் பெரியான்
றுற்றிடும் பொருள்க ளனைத்துமா யலவாய்த்
தோன்றியத னிப்பெருந் தோன்றன்
மற்றவன் றனை நீ பாலனென் றறைந்தாய்
வல்லையிங் கவனுன் மாளுதி மாதோ. 101

ஆதலா னீயு நின்பெருங் கிளையு
மன்புறு வளத்தோ டமர்ந்திட வேண்டிற்
றீதிலா வமரர் சிறையினை விடுத்தல்
செய்யென வெய்யவன் சிந்தைமேற் சினமுற்
றூதையா லலைப்புண் டங்கியாற் சுடுண்
டுயர்ச்சர வணத்தலை யுண்டபா லனையோ
சோதியென் றுரைத்தாய் பேதையென் றிகழ்ந்து
சொல்லினன் வெவ்வுரைச் சூரனுமவுணன். 102

முற்றுணர் சிங்க முகத்திரு னன்மை
மொழிந்தற் கிழிந்தேன் முனிந்துரைத் திடலுஞ்
சற்றுநம் மொழியுட் கொண்டில னந்தோ
தலையினில் விதியையார் தவிர்த்திட வல்லார்
மற்றிவன் மடித றிண்ணமா மதன்முன்
மடிதலே கடனென மனத்திடை நினைத்துச்
சிற்றறி வுடையேன் சொற்றன பொறுத்தி
சேரலார் தமையடச் செல்குவ னென்றான். 103

என்றுவன் றிறல்கொண் மடங்கன்மா முகத்தோ
னின்புற விசைப்ப விருந்திறற் சூர
னன்றுநன் றெனவே மகிழ்ந்தவன் றன்னை
நயமொடு புல்லிப் புகழ்ந்துநின் னகர்போ
யொன்றுதி குகனீண் டடைந்திடில் விளிப்ப
னெல்லேமே வுதியென் றுவப்புடன் விடுப்பச்
சென்றுதன் புரம்புக் கமர்ந்தன னெவருஞ்
செலவுரைத் துறையுள்சேர்ந்துசூ ரிருந்தான். 104

இன்னவா றவுணர் தொழுங்கழற் கொடுஞ்சூ
ரெழிலிவந் தெழிலினே டினிதுகண் படுக்கும்
பொன்னுலாம் புரிசை மகேந்திர புரியிற்
புரிந்துவீற் றிருந்தது புகன்றன மன்னே
மன்னுமா லயன்முன் னிமையவர் வணங்க
மடங்கலந்த விசின்மேல் வனசமாளி கைமே
லன்னம்வாழ் கழனிச் செந்தின்மா நகர்வா
ழறுமுகத் திறைசெய லறிவுற வறைவாம். 105

மகேந்திரகாண்ட முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 453.

நான்காவது

# யுத்த காண்டம்

## முதலாவது பானுகோபன் யுத்தம்

மின்னிகர் சடிலத் தவிர்மதி முடித்த
வித்தகன் மத்தக விழிவிழித் தாங்குப்
பொன்னுறு மருணத் தடமலர் மிடைந்த
பொதும்பர்சூ ழுதயவான் பொருப்பின தும்பர்
துன்னுசெங் கிரணத் திரவிவந் தெழலுந்
தோகையோர் மருங்குடைத் தோன்றன்முன் றோன்று
கன்னல்விற் றடக்கைக் கடவுண்மாண் டதுபோற்
கதுமென வழிந்தது காரிருட் கங்குல். 1

இவ்வகை யுலகிற் றுணங்கற லகல
விரவியா மொருவன் வந்திருவிசும் பெழலு
மொய்வள ரவுணப் பேரிருண் மடிய
முருகனும் பரிதியு முரனொடு மெழுந்து
செவ்வொளிக் கனகத் தேரின்மேற் புகுந்து
சேனையோர் வானுளோரர் செறிந்துசூழ்ந் தேத்தப்
பௌவநீர் கடந்து சூரன் மூதூரிற்
பாங்குறு வடதிசைப் பாலடைந் தனனே. 2

அங்கணா வமையத் திமையவர் புனைவ
னுறுமா முகமுடை யண்ணா றன்னருளாற்
கொங்கல ரிருங்கா மருங்குசூ ழேம
கூடமாம் பெயருடைக் கோனகர்சூயிற்றச்
சங்கரன் மதலை கொடிநெடுந் தடந்தேர்
தணந்துசீர் மந்திரத் தனைந்தது தன்னிற்
பொங்கெழின் மடங்கற் சேகரத் திடையே
பொருந்திய வனைமேற் பொருந்திவீற் றிருந்தான். 3

## வேறு

வீறு கொண்ட தானை யோடு மேன்மை கொண்ட வேலவ
னீறில்பா சறைத்த லத்தி லிந்தவா றிருப்பவீ
றூறி லாத சூரன் முன்ன ருற்று நா ரதன்சொலச்
சீறி யின்ன தொற்ற ரோடு செற்ற மோடு சொற்றனன். 4

வாரிமன் னவற்பிடித்து வாருமென்ன வேகியே
கோர மோடு பற்றிமுற் கொணர்ந்திடச் சினந்துநீ
வீர மோடு மாறுகொண்டு வீறுகொண்ட தெவ்வரைச்
சேர விங்கு விட்ட தென்ன செப்பு கென்று செப்பினன். 5

அந்த வேலை வேலை மன்ன னமர ரோடு குமரவே
ளுந்து வானி னேகி னுய ர்ந்த பூத ரென்கணே
வந்தி டக்க லங்கி னேன்ம லங்கினேன்வ ருந்தினேன்
பந்தி கொண்ட பூதர் தம் பரட்டி னுக்க மைந்திலேன். 6

ஏழை யேன்ற டுப்ப தெங்ங னென்று கூறி நின்றிடத்
தாழ்வி லாத வொற்றர் வந்து சண்மு கக்கு மாரவேள்
வாழு நம்பெ ரும்ப திக்கு வடதி சைக்க ணெய்தினன்
சூழ்ப தாதி யோடு மென்று சொல்ல வீது சொல்லினன். 7

இரவி யைத்த ளைந்து ளானை யிங்க ழைத்தி ரென்னலும்
பரவி யேகி யொற்றர் சொற்ற பானு கோப னைத்தரச்
சிரமொ ரைந்தன் மைந்த னோடு சேனை யோரை வென்றுநீ
விரைவி லிங்கு வருதி யென்று விடைகொ டுப்ப வேகினன். 8

ஆங்கு தன்ம னைக்க ணுற்ற டற்ப டைக்க லங்கள் கொண்
டேங்கு றுத தானை வெள்ள மிருப தான வாயிரம்
பாங்கி னோடு பாங்கி னிற்ப ரந்தி ரைந்து சூழவே
தீங்கி லாத விசய னுதி யனிக மன்னர் சேரவே. 9

கந்து கங்கண் முப்ப தான வாயி ரங்க லந்ததோர்
சுந்த ரஞ்செ றிந்தி லங்கு துய்ய வைய மேறியே
வெந்தி றற்பெ ருஞ்ச மர்க்கு மேவு கின்ற வாறுகண்
டுந்து நார தன்கு கன்க ணெல்லை வந்து சொல்லினான். 10

எந்தை யான கந்த வேளி லங்கு வீர வாகுவாஞ்
சுந்த ரன்ற னைத்தெ ரிந்து சூர னிவ்வி டத்தியாம்
வந்த வாறு ணர்ந்து தன்ம கன்ற னைப்ப தாதியோ
டிந்த வேலை நம்மொ டேசெ ருத்தொ டங்க வேவினான். 11

சேனை யான துன்ற வின்று சென்று வென்றி யொன்றிநீ
யூன மின்றி வருதி யென்று வப்பி னோடு ரைத்தலு
மான னங்க ளாறு கொண்ட வண்ண லைத்தண ந்துபோய்த்
தூந லங்கொள் படைகள் கொண்டு துய்ய வைய மேறினான்.

சுந்த ரங்கொ ளெண்ம ருந்து லக்க மாமி லக்கரும்
வெந்தி றற்கொள் பத்து நூறு வெள்ள மான பூதருந்
தந்தி ரங்கொள் சுப்பி ராதி தானை மன்ன ருங்குழீஇ
வந்து சூழ வேகி னான்ம கிழ்ச்சி வீர வாகுவே. 13

தலைமை கொண்ட பாச றைத்த லத்தினைத்த ணந்துபோய்
நிலைமை கொண்ட சூர னூரி னீண்ம திற்பு றத்துறத்
தொலைவில் பூத ருஞ்சி னங்கொள் சூரன் மைந்த னனிகமும்
பலப டைக்க லஞ்சொ ரிந்தெ திர்ந்து போர்ப யின்றவே. 14

தெண்டி ரைக்கு நேரெ னத்தி ரண்டி ரண்டு சேனையு
மண்டி யோதை செய்து நின்ற டுஞ்செ ருப்பு ரிந்திடச்
சண்ட முற்ற வவுண ருஞ்ச லந்த ரித்த பூதரு
மண்டு சோரி வாரி நேர மட்டி லார்கள் பட்டனர். 15

மேன லங்கொள் பூதர் தாம்வெ குண்டு சென்று மேவலா
ரானை யோடு மானை தன்னை யாளி னோடு மாளினைச்
சேனை யான தேரி னோடு தேரை வாரி மோதலு
மூன முற்ற வவுணர் தாமு டைந்து வாடி யோடினார். 16

அற்ற வேலை யவுணர் தம்பி லனலி யென்று மன்னவன்
செற்ற மோடு வந்தெ திர்ந்து தீதி லாத பூதர்மேல்
வெற்றி கொண்ட கணைகள் சிந்த வெந்தி றற்கொள் பூதரு
டுற்ற சிங்கன் முனிவி னோடு மெல்லை சென்றெ திர்ந்தனன்.

மீண்டு கொண்ட வனலி தேரில் விரவி நின்ற புரவியைத்
தண்டு கொண்டு மோத லுந்த ளர்ந்திறப்ப வெய்யவன்
கண்டு கோல்செ ரிந்தி டக்க னன்ற வன்றன் வையமுற்
றண்ட லன்கை விற்ப றித்த டற்கொள் சிங்கன் வீசினன். 18

அற்ற மற்ற சிங்கன் மீதி லனலி தண்டின் மோதலும்
வெற்றி கொண்ட சிங்க னங்கண் வெய்யன் மார்ப டித்தவற்
பற்றி நின்று சுற்றி நற்ப டித்த லத்த டித்திடத்
தற்று கின்ற வவுண னோடு சண்ட னீது கண்டனன். 19

கண்ட சண்ட னடுவ னென்று கழறும் வேலை சிங்கனவ்
வண்ட லன்றன் வைய முற்ற வன்ற டம்பு யத்தின்மே
லொண்டி றற்கொள் கதையின் மோத வவனு முந்து சிங்கன்மேற்
றண்டின் மோத விருவருந் தளர்ச்சி யெய்தி வீழ்ந்தனர். 20

மற்றிவ் வேலை யவுணர் தம்பின் மாய னோடு பூதரிற்
செற்ற முற்ற நீல னென சீல னங்கெ திர்ந்துநீ
ளுற்ற தண்ட முந்த மாய னுந்து மார்பில் வந்துபட்
டிற்று ளானெ னக்க லங்கி யிந்த வாதி யற்றுவான். 21

நீலன் மீது சூல மொன்று நீசன் விட்டி டப்படச்
சால வேவ ருந்தி நின்று தக்க மாயன் முன்புபோய்க்
கோல மார்பின் மீது பாணி கொண்டு மோதி யண்டர்தங்
கால னைப்பி டித்த வன்க ளத்தி னிற்க றித்தனன். 22

கண்ட மீது விண்டி டக்க டித்தி ரத்த முண்டுயிர்
கொண்ட போது சண்ட னோடு கோதில் சிங்க னங்கெழுந்
தொண்டி றற்கொ டண்டு கொண்டு ருத்தெழுந்துசிங்கனவ்
வண்ட லன்க வுட்க ரத்த டித்த னன்மு டித்தனன். 23

அன்ன காலை யவுணர் தம்மி லசமு கத்த னணுகவே
மன்னு கின்ற பூதர் தம்மின் மதுவெ திர்க்க வஞ்சகன்
மின்னு னைச்ச ரங்கள் சிந்த வெய்யன் வைய மீதுபோ
யொன்ன லன்க லங்க வேலை யோதை போலொ லித்தனன்.

ஆர்த்த போதி லசமு கத்த னயர்வ தாக வன்னதைப்
பார்த்து வீர னல்லை யுய்ந்து போகெ னப்ப கர்ந்துநீள்
சீர்த்தி கொண்ட மண்ணி டைத்தி ரும்ப வல்லை நில்லெனு
வார்த்தை பேசி வந்தெ திர்ந்து மறிமு கத்த னிதுசெய்வான்

மையி லாத பூதன் மீது வன்ச ரம்பொ ழிந்திடக்
கையி னால்வி லக்கல் செய்து கையன் முன்பு சென்றவன்
கொய்யு ளைச்ச கட்டி னைக்கொ தித்தெ டுத்து வேலையிற்
றுய்யன் வீச வைய மீது துண்ணெ னக்கு தித்தனன். 26

குதித்து வந்து பூதன் முன்பு கூடிமற் றெழிற்செயப்
பதத்தி னாலு ரத்தொ டம்ப ரத்தின் மீதெ றிந்திடக்
கதித்த பூவின் மேவி யேக ஏங்க மற்ற மதுவின்மேற்
கொதித்து மாயை யான்ம றைந்து கொடிய நேமி
விட்டனன். 27

தந்தி ரங்கொண் மதுவின் மீது தகர்மு கத்தன் விட்டிடும்
வெந்தி றற்கொ டிகிரி தான்வி ரைந்து சென்று பூதனங்
குந்து கின்ற படையி லாம லுறுத லிற்றி ரும்பியே
வந்து தீயன் முடித டிந்து மாலி டத்த டைந்ததே. 28

ஆய காலை யவுணர் மன்ன ரனிக மோடு மணுகலா
லேய பூத ருடைய வேயி லக்கர் மேவு தண்டகன்
போயெ திர்ந்து பல்ல வம்பொ ழிந்த ழிப்ப வீதெலாந்
தீய சூரன் மாம கன்றெ ரிந்தெ திர்ந்து வந்தனன். 29

வந்தெ திர்ந்த குறளி னோர்ம டிந்து டைந்தி டச்சரஞ்
சிந்தி முந்தி வந்தி டச்சி னத்தி னோடு முக்கிர
னுந்து சூரன் மைந்தன் முன்ன ருற்ற வன்ற னதுதே
ரந்த ரத்தின் மீது போக வங்கெ டுத்தெ றிந்தனன். 30

தண்ணு தேரி னேடு பானு நாடு மட்டு மேகியே
மண்ணில் மேல்வி ழுந்து சென்று வன்றி றற்கொ ளுக்கிரன்
திண்ண முற்ற வங்க மீது செங்கை யால டித்துநீள்
விண்ணின் மீதெ டுத்தெ றிந்து வேறு தேரி லேறினன். 31

காசி லேழு லோக முங்க டந்து பின்ன ருக்கிரன்
வீசு சீர்கொள் படியின் மேல்வி ழுந்தனன் கிடந்தன
னேசி லாத தண்டி நீடி ரும்பி ளுகி யேனையோர்
பூச லான வெந்தொ ழிற்பு ரிந்தி ரிந்து போயினர். 32

ஈது கண்டி லக்கர் வந்தெ திர்ந்து கோல்சொ ரிந்தவன்
றீது கொண்ட தேரினச்சி தைப்ப வேறு தேரின்மே
லூதை போல வாவி நின்று றுஞ்ச ரங்கள் கோடிவிட்
டேத மற்ற வீரர்வில் லிலக்க முந்து ணித்தனன். 33

விற்று ணித்த ளப்பில் வாளி வீரர் மேல ழுத்தலு
மற்று நேரி லாவி லக்கர் வாடி யஞ்சி யோடினு
ருற்ற விச்செ யற்றெ ரிந்து ரங்கொள் வீர கோளரி
செற்ற மோடு மெற்ற ளைந்த தீயன் முன்பு வந்தனன். 34

வந்தளப்பில் கோல்சொ ரிந்து வஞ்சன் விட்ட கோலெலாஞ்
சிந்தி யாயி ரஞ்ச ரஞ்செ லுத்தி வெய்யன் மார்பையங்
குந்து சாள ரம்புடுத்த வுள்ள நொந்து மாயவன்
வெந்தி றற்ப டைக்க லத்தை வீரன் மீது வீசினன். 35

வீச லுற்ற படைவி ரைந்து மேனி யுட்பொ ருந்தலு
மாசி லாத வீரனும் மயங்கி யேவி ழுந்தன
னேசில் வீர பானு வந்தெ திர்ந்து வெய்யன் வையமுற்
றேசை நாணி விற்ப றித்தொ டித்தெ றிந்த வெல்லையின். 36

தூயவீர னுக மீது சோரி நீர்கு தித்திட
மாய வஞ்சன் வாளி னன்ம னஞ்சி னந்து குத்தலுந்
தீயன் மீத ணிந்த வச்சிரக் கவச மற்றிட
வோய்வில் வீர பானு வும்மு ரத்து வாள்செ லுத்தினன். 37

சூரன் மைந்த னுட்சி னந்து தூய னெற்றி குத்தலும்
வீர பானு வீழ வேவெ குண்டு வீர ராந்தகன்
கோர மோடு வந்தெ திர்ந்து கோல்க ளாயி ரங்கடுய்
வார மோடு மவுண னிட்ட மவுலி யங்க றுத்தனன். 38

வேதன் முன்கொ டுத்த வேலை வெய்யன் விட்டி டப்படப்
போத நொந்த யர்ந்த னன்பொ ருந்தி மற்றை யைவருந்
தீதி றுநெ டுந்த னுச்செ ருப்பு ரிந்து டைந்திடக்
காதல் வீர வாகு வீது கண்டு சென்றெ திர்ந்தனன். 39

தீதில் வீர வாகு வைத்தெ ரிந்தெ ரிந்து தீயவன்
வேத னல்லை மாலு மல்லை வேளி னுனு மல்லையோர்
தூத னீயெ னோடு போர்தொ டங்க வல்லை கொல்லென
மாதி றப்ப ரித்து யர்ந்த வாகு வீது கூறுவான். 40

வீரம் வீரர் சிறிது மேவி ளம்பு வார்கொ லோவெனச்
சூரன் மைந்தன் முனிவு கொண்டு சோனை மாரி மானவெங்
கோர வாளி தூவ லுங்கு வட்டை வென்ற மொய்ம்பனு
மேரு லாவு கணைசொ ரிந்தி ருஞ்செ ருப்பு ரிந்தனன். 41

மண்ணி லோடு மெட்ட தான மாதி ரத்தி லோடுநீள்
விண்ணி லோடு நீல வேலை மீதி லோடு நேமியின்
கண்ணி லோடு மண்ட முன்பு கடிதி லோடு மீளுமா
லெண்ணி லாத வன்மை கொண்ட விருவ ரேறு மிரதமே. 42

சூரன் மைந்தன் விடுச ரங்க டுய்ய வன்ற டுத்திடும்
வீர வாகு விடுச ரங்கள் வெய்ய வன்ற டுத்திடும்
மாரு மஞ்ச விந்தவா றருஞ்ச ரம்பொ ழிந்துநீ
டீர மேவு மிருவ ருஞ்செ ருப்பு ரிந்து லாவினர். 43

வெந்தி றற்கொள் வீரன் விட்ட விசிக மாரி சிந்திவன்
கந்த வாகை வாகு வின்க ரத்து வில்லை வல்லையங்
கந்த மற்ற சூரன் மைந்த னுயி ரஞ்ச ரங்களாற்
சிந்த வேது ணிப்ப வீர னிந்த வாறு செய்குவான். 44

பின்னு மோர்நெ டுந்த னுப்பி டித்தொ ராயி ரஞ்சரந்
துன்ன வேவி டுத்த வன்று லங்கு விற்று ணித்தபோ
தன்ன வெய்யன் வேறு விற்கொ டாயி ரஞ்ச ரங்கடான்
மன்னி ரும்பு கழ்ச்சி வீர வாகு மேல்வி டுத்தனன். 45

விட்ட போது வீர வாகு வெஞ்ச ரங்க ளேழினு
லொட்ட லன்றன் மௌலி தளளி யொல்லை பத்து நூறுகோ
றெட்டு வெய்ய னரண ழுந்து ணித்தி டத்து லங்கிய
மட்டில்சீர்கொள்பரிதிகண்டுமண்டுமோகைகொண்டனன்.

கோர மான வாயி ரங்கொ டும்பெ ருஞ்ச ரங்கடாம்
வீர வாகு நெற்றி மீது வெய்யன் மைந்த னெய்யவே
சோரி யுண்ட ழுந்தி டத்து லங்கு செங்க ரத்தினு
லீரு மம்பி னைப் பறித்தெ றிந்து வீர னிதுசெய்வான் 47

சித்தி ரங்கொள் பானு வைச்செ யிர்த்த வீறு சேவகன்
வத்தி ரத்தி லாயி ரம்வ யங்கொண் மார்பி லாயிர
மெத்து தோளி லாயி ரம்வி றற்க ரத்தி லாயிர
மத்தி ரங்க ளொல்லை சென்ற ழுந்து றத்து ரந்தனன். 48

கந்த னெந்தை யிளவல் விட்ட கடிய வாளி கொடியவன்
வெந்தி றற்கொ ளங்க மெங்கும் விரவி யங்க ழுந்தலால்
வந்து வந்து சோரி மூட வாடி நொந்து கந்துகப்
பந்தி கொண்ட தேரின் மீது பானு கோப னின்றனன். 49

அன்ன போதி லீது கண்ட வன்ற னூது சேனையோர்
மன்னு வீர வாகு முன்பு வந்தெ திர்ந்து போர்செயத்
துன்னு விற்கொள் வாளி கொண்டு துற்ற சேனை முற்றவுஞ்
சின்ன பின்ன மாக வேசெ றுத்து நின்ற றுத்தனன். 50

பின்பு முன்பு டைந்தி றந்த பெருகு பூதர் யாவருந்
துன்பி லாவி லக்க ருந்து லக்க மான வெண்மரு
மின்ப மாம கிழ்ச்சி யோடு மீடி னோடு கூடியே
மன்பெ ரும்பு கழ்ச்சி வீர வாகு வின்கணேகினர். 51

துற்ற சோப மற்ற பின்னர் சூரன் மைந்தன் வீரனோர்
செற்ற மோடெ திர்ந்து நூறு நூறு கோல்செ லுத்தியே
வெற்றி மொய்ம்ப னேறு கின்ற வீறு தேரை நூறலு
மற்று மோர்ச கட்டில் வீர வாகு வல்லை வாவினுன். 52

வாவி நூறு நூறு கோவில் வஞ்ச கன்கை வில்லுடன்
மேவு கின்ற தேர ழிப்ப வேறு தேரி லேறிவெம்
பாவி மற்று மோர்த னுப்ப ரித்தி ராயி ரஞ்சரந்
தூவி வீர னுகை மீது தோய வங்க ழுத்தினுன். 53

ஆக மீது பகழி வந்த ழுந்த வீரவாகுவுஞ்
சோக மங்கு ணர்ந்தி ரேழு துங்க வாளி தூவியே
மாகர் தெவ்வன் வில்லொ டித்து வாளி யாயி ரங்கடா
மேக விட்டு வெய்ய னேறு மிரத முங்கெ டுத்தனன். 54

மற்று நூறு வாளி கொண்டு மார்பை வாயில் செய்யவோர்
வெற்றி வையம் வெய்ய னேற வீர வீரன் விசிகமங்
குற்ற வாயி ரந்து ரந்து ரந்தி றந்த நெறியினுற்
றுற்றி டுஞ்சி லிமு கங்கொ டுணி யங்க றுத்தனன். 55

இந்த வாறு கண்டு வில்லி னிவனை வெல்வ தரிதெனு
முந்து பானு வைத்த ளைந்த மொய்ம்பன் வீர மொய்ம்புசே
ரந்த வீர னுதி யான வாரு மோக மாகவே
வெந்தி றற்கொண் மோக மான வேல்வி டுத்து நின்றனன்.

வந்த வந்த வேலி னுன்ம யங்கி வீறு பூதரு
முந்து சீரி லக்க ரும்மு ரண்பொ ருந்து மெண்மருங்
கந்த னேவு தூத னுந்த ளர்ந்து கந்தி னிற்றலு
மந்த மற்ற கணைகள் சிந்தி யவரு ருத்து ளைத்தனன். 57

ஆய காலை முருக னீத றிந்த மோக வேல்விடுத்
தேயு மோக வேல ழிப்ப வேரு லாவு வீரரோ
டோய்வில் வென்றி மொய்ம்பனங்குளந்தெளிந்துதானவன்
சேயின் மீதி லாதி வேல்செ லுத்துமா றெடுத்தனன். 58

கண்ணு தற்ப ரன்ப டைக்க லந்தொ டுக்கின் மாய்வுறப்
பண்ணு மந்த வுந்து வேல்ப ரித்து வந்தி லேனொரு
வெண்ணரி மாய மாயொ ளித்தி ருக்கை வெய்ய னேகலும்
விண்ணரி னின்ற கன்ற ருக்கன் மேல்க டற்ப டிந்தனன். 59

நண்ணா லன்க ரந்துபோன செய்கை தன்னை நாடியே
திண்ணா முற்ற தண்ட மோடு திண்டி றற்பு யத்தினோன்
றுண்ணெ னத்தி ரும்பி யேது லங்கு வெற்பெ றிந்தவேற்
பண்ணா வன்றன் முன்ப ணிந்து பாச றைக்கண் மேவினான்.

வேறு

இந்த வாறிவ ணின்றிட விரவியம் பகைஞன்
புந்தி தன்னிடை யளவிலாப் பெருந்துயர் பொருந்த
நொந்தி ருந்தன னிவையெலா மொற்றர் போய் நுவல
வந்த வேலையி லறித்தனன் சூரனு மவுணன். 61

அறிந்த தானவ னுனையான் படையொடு மணுகிச்
செறிந்த சேனையும் பெருங்கிர வுஞ்சமாஞ் சிலம்பை
யெறிந்த வேற்படைக் குமரனுஞ் சமரில்வந் தெதிர்ந்து
மறிந்தி டும்படி பொருவனென் றுன்னியே வதிந்தான். 62

வண்டு லாவரும் வண்டுழாய் மிலேச்சிய மௌலித்
திண்டி றற்பெறு மரியுரத் திலங்கிய திருப்போ
லெண்ட விர்ந்தவெண் சீகரச் சாகரத் திடையே
சண்ட வெங்கதிர் பரப்பிவந் தெழுந்தனன் றபனன். 63

கந்த மாமலர்ப் பொதும்பர்சூழ் கமலைமா நகர்வா
ழெந்தை ஞானசம் பந்ததே சிகன்றனை யெதிர்ந்தார்
பந்த வாணவப் படலம்விண் டிரிந்திடும் படிபோ
லந்த ரம்புவி மறைத்தபே ரிருளகன் றதுவே. 64

## இரண்டாநாட் சூரபன்மன் யுத்தம்.

அன்ன காலையி லிலக்க வெள் ளம்படை யணுக்த்
துன்னு சீரசு ரேந்திர னுடனதி சூர
னென்ன நின்றிடு தம்பியர் மைந்தரா மிருவர்
மன்னி டும்படைத் தலைவரா யிரதமேல் வரவே. 65

சீர்பு ரிந்திடு மொருபெருந் தேரின்மேற் றிறற்சூ
ரூர்பி ரிந்துபோர் புரிந்திட வருதல்கண் டோடிக்
கூர்பு ரிந்திடு குலிசவேற் கரத்தினன் கூற
வேர்பு ரிந்திடு குமரவே ளறிந்தன னிதனை. 66

அறிந்து மாருதச் சாரதி யியற்றுதே ரணுகிச்
சிறந்த சீருள விளையவ ரிரதமேற் செல்லப்
புறந்த ராதவீ ராயிர வெள்ளமாம் பூதர்
செறிந்து சூழ்ந்திடத் தானவன் படைக்கெதிர் சேர்ந்தான்.

சேர்ந்த காலையிற் பூதரு மவுணருஞ் சினங்கொண்
டார்ந்த பற்பல படைக்கலஞ் சொரிந்துநின் றூர்த்து
நேர்ந்து கிட்டியங் கிருஞ்செருப் புரிந்தனர் நெடுஞ்சீர்
சார்ந்த சாரத ரின்னன பின்னர்செய் தனரே. 68

ஆயி ரம்பெருந் தேரினைக் கரங்களா லள்ளி
யாயி ரங்கரி கெட்டிட மோதுவ ரதற்பி
னாயி ரங்கரி பாணிகொண் டெற்றியே யடற்பத்
தாயி ரம்பரி யழிவுறப் புரிகுவ ரடலால். 69

கோடி வெம்பரி பாணிகொண் டாயிரங் குலவுங்
கோடி யாகிய வவுணரை யடித்துயிர் குடித்தார்
வாடு றுவிறற் றகுவரும் பூதரை வளைவுற்
றீடு சேர்ந்திடு பற்பல படையினு லிறுத்தார். 70

வீறி வந்திடு தானவ ரானவர் வெகுண்டு
சீறு சாரத ருடல்பதை பதைத்திடச் சிதைத்த
வீறி லாவிறற் பூதமன் னவர்தெரிந் தெதிர்போய்
மாறு றும்படி தானவர் தானையை வதைத்தார். 71

பிணங்கள் சோரிவெற் பாறுபோன் மேவுறப் பெருஞ்சீர்க்
கணங்க டானவர் கணங்களை யடுதிறங் காணூஉ
விணங்கு சீரதி சூரன்வந் தறுமுக னிருதாள்
வணங்கு பூதர்மேற் பொழிந்தனன் பகழியா மாரி. 72

அந்த வேலையிற் பூதரி லுக்கிர னணுகித்
தந்தி மாமுகன் முன்னவன் சுதன்மிசைத் தண்டொன்
றுந்த வுந்துமக் கதையதி சூரனதுரத்து
வந்து சாலிகை சிந்திய தவுணர்கண் மயங்க. 73

மூடு சாலிகை சிந்தலுஞ் சிந்தையுண் முனிந்து
பாடி லுக்கிரன் மீதுநூ றுயிரம் பகழி
கூட விட்டுழிக் குருதிநீ ரெழுந்தது கொதித்தோ
ரீடு வெற்புவிட் டவுணர்கோன் றேரினை யிறுத்தான். 74

மற்றொர் வையமேற் பாய்தலு முக்கிர வலியோன்
செற்ற மோடுதேர்ப் பரிகளை யுதைத்திடத் தீயோன்
றற்று நூறுகோல் விடுத்தலு நெடியகைத் தடியா
லிற்றி டும்படி விலக்கவே றிரதமே றினனே. 75

வேறு

ஏறி நின்றவதி சூர னுக்கிரனை
யீறு செய்வனென வெண்ணலியே
சீற னற்படை யரும்பு னற்படை
திறற்ச மன்றனது திண்படை

வீறு கின்றதொரு காலி னுந்துபடை
மின்ப டைத்தவிதி தன்படை
மாற னெண்படை விடப் பிடித்துடல்
வருந்து ருதலை யருந்தினன். 76

விட்ட விட்டபடை முற்று முற்றுதிறன்
மிக்க வுக்கிரன் விழுங்கலுந்
துட்ட னைவதி சூர னுதிபடை
தொட்டி டப்பரனை யுக்கிர
னிட்ட மோடுதொழு தஞ்செ ழுத்தினை
யியம்பி நின்றிடலு மெந்தைதன்
னொட்டி ரும்படை திரும்பி முக்கணுடை
நின்ம லன்புடை யடைந்ததால். 77

ஈது கண்டரி முகத்தன் மாமக
னிலங்கு தேரினு மிறங்கியே
கோது செய்யுமொரு தண்டு கொண்டுமிகு
கூளி மன்னனெதிர் கூடிவண்
போது கொண்டதொடை கொண்ட தோண்மிசை
புடைப்ப வக்கதை பறித்தவன்
றீது கொண்டவுர மீத டித்துழி
சிறந்த தொல்லுயிர் துறந்தனன். 78

இன்ன வாறது தெரிந்து நெஞ்சக
மெரிந்து தானவர்க ளிந்திரன்
மன்னு பூதர்கள் பதைத்து மாளும்வகை
வாளி சிந்தியெதிர் வந்தபோ
தின்ன லற்றகுறண் மன்ன ரிற்கனக
னென்னு மன்னவ னெதிர்ந்துநின்
றன்ன வஞ்சனொடு போர்பு ரிந்திடலு
மாயி ரங்கணை விடுத்தனன். 79

மெத்து மத்திர முருத்த னிற்பட
மெலிந்த னன்கடிது வீறுமுன்
மத்த னென்பவ னெதிர்ந்து போர்புரிய
வஞ்ச னெண்ணில் பலவாளி தூஉ
யெய்த்தி டும்படி யிழைப்ப மந்தனெதி
ரெய்தி வெய்யசமர் செய்திடப்
பத்து நூறுகணை சிந்தி மந்தனு
மயர்ந்தி டக்கடிது பண்ணினான். 80

வீறு சிங்கனது பின்பு முன்பணுகி
வெஞ்செ ருப்புரிய வஞ்சக
நூறு வெங்கணை விடுப்பவன் னவனு
நொந்து நின்றிடலு முந்துசீ
ரேறு சாரதர்கண் மன்னர் பின்னுள
ரியாவ ரும்பொரு திளைத்திடச்
சீறி வந்தன ரிலக்கர் தம்மிலுயர்
திண்டி றற்குலவு தண்டகன். 81

தார கன்றன்மகன் வத்தி ரத்திலுயர்
தண்ட கன்கணைக ளாயிரம்
வீர மோடுவிட நொந்து தந்திதரு
வெய்ய னெண்கணைக ளெய்யவே
சீரு லாநுதல் படப்பெ ருந்துயர்
செறிந்தி டக்கடிது சோமுகன்
கோர மோடணுகி யாயி ரங்கணைகள்
கொண்டு தேரழிவு கண்டனன். 82

தேர ழிந்திடலு மானை மாமதலை
சீறி வேறிரத மேறியே
வீர மோடுவரு சோமு கன்றன்மிசை
வென்றி யோர்படை விடுப்பவும்

கேரு லாவுமவ னுந்த ளர்ந்தன
னிலங்கு சீர்விசயன் வந்துநீ
டார கன்றன்மகன் வில்லை வல்லைகணை
யாயி ரங்கொடு தடிந்தனன். 83

கொண்ட வில்லழிய வந்தெ திர்ந்துபொரு
கொற்ற வீரன் விறல் பற்றலன்
கண்டு தண்டது விடப்ப டத்தளர்
கலக்க முற்றன னிலக்கரி
லண்டு மேனைய ரடைந்து விற்சமர்
புரிந்து டைந்திடலு மாசிலா
மண்டு வீரமுள கந்த னுக்கிளவல்
வந்து வெய்யனொடெ திர்ந்தனன் 84

கைத்த னுத்தனை வளைத்து மெத்திய
கடுஞ்ச ரஞ்சிதறி வெய்யவன்
மைத்த னுத்தனை மறைப்ப வன்னவனு
மன்னு மாயிர நல் வாளிதான்
சுத்தன் மீதுபட விட்டொ ரேழுகணை
தொட்டுவிற் றடிய விற்கொளாப்
பத்து நூறுகணை சிந்தி வெய்யனுறு
தேரை வில்லொடு படுத்தனன். 85

வேறு தேரவுண னேறி விற்கொடுயர்
வீர வாகுவுறு தேரினை
நூறு கோலதனி னூறு காலதனி
னூபு ரத்துவரு சேவகன்
மாறி லாவிறல்கொள் பாவி தேரினிடை
வாவி மேவுதிறல் வாளினற்
பேற தாமொரு கரந்து ணித்துழி
பிடித்த தண்டுகொ டடித்தனன். 86

ஊறில் வீரனவு ணன்சி ரத்திடை
யுதைத்து மீளுதலு மொன்னலன்
சீறி வாள்கொடு தொடர்ந்து வந்துழி
திரும்பி யங்கவனை வாளிஞ
னூறி ஞனவுண ரஞ்சி யோடினர்
நுவன்றி டற்கரிய சீரிஞல்
வீறு சூரனிது கண்டு பூதர்குழு
மீது வெம்மையொடு மேவினன். 87

முந்தி வந்துயர் தனுக்கு னித்தனன்
முழங்கு நாணொலி வழங்கலுஞ்
சிந்தி ஞர்சில ரிரிந்து ளார்சிலர்
திகைத்து ளார்சிலர் செகத்தின்மே
விந்த வாறுமிகு பூதர் நொந்தனர்கள்
யாண்டு பத்துட னிரண்டுதா
னந்த நாணொலி யொழிந்த தில்லையெனி
லார வன்றன்விறல் கூறுவார். 88

இன்ன செய்கைதனை மன்னு சாரத
விராசர் கண்டவ ணெதிர்ந்தபோ
தன்ன வஞ்சனொரு பத்து நூறுதொட
ராயி ரந்தழுவு கோடியா
மின்னல் வெங்கணை பொழிந்த போதவ
ரழிந்த போதுந விலக்கராம்
வெந்நிடா தவிறல் வீரர் வந்தணுகி
வெந்தி றற்கணைகள் சிந்திஞர். 89

ஆடல் கொண்டவ ருரக்க ரத்தனு
வனைத்தை யுங்கணை களாயிரங்
கோடி சிந்தியவை சிந்தி யத்தொகைகொள்
கோல்வி டுத்தவர்க டேரெலாம்

பாடு றும்படி புரிந்தி லக்கமொடு
பத்து நூறுசெறி பல்லவ
மீடி ஞேடுதவி வீரர் மேனிகளி
லூத்தி டும்படி துளைத்தனன். 90

ஈது கண்டுதிற லெண்மர் தங்களி
லிருந்தி றற்பெறு திவாகரன்
நீதி லாதகணை சிந்தி வந்திடலு
நூறு நூறுகணை சிந்தியே
யோது வீரனது விற்று ணித்தவ
னுரம்பி ளந்துழி விழுந்தனன்
கோதி லாவிற லரக்கன் வந்தவுணர்
கோவின் முன்புகணை தூவினுன். 91

தூவி யங்கதனில் வென்றி யின்றிமிட
றுன்று வாளிநெடு சூரர்கோன்
மேவு தேரணுகி வில்லை வெட்டவவன்
வில்லொ டிந்ததிலை வல்லையே
யோவி லாதகதிர் வாளொ டிந்ததட
லுந்த ரக்கனையொர் தாளினுற்
பாவி யண்டமிசை செல்ல வுந்தலு
விழுந்த னன்கடிது பாரின்மேல். 92

வீழு மன்னதை வெகுண்டு கண்டுமிகு
வெற்றி பெற்றிடு மகேந்திரன்
ருழ்வி லாவிறல்கொள் சூரன் முன்புபல
சாய கஞ்சிதற வெய்யவன்
சூழு நூறுகணை தூய னங்கமிசை
தோய விட்டொழி விழுந்தனன்
வாழ்வு கொண்டபுகழ் வீர தீரனெதிர்
வந்து பல்கணைகள் சிந்தினுன். 93

நடு சேரவரு வீர தீரன்மிசை
யேழி ஞேடவுண ஞேழுகோல்
கூட விட்டுழி விழுந்த னன்கடிது
கொற்ற முற்றிடு மகேசனு
நீடு சூரனெதிர் வந்தெதிர்ந்தொரு
நெடும்ப டைக்கலம் விடுப்பவே
பீடு கொண்டவுர மீது பட்டுமிகு
தூளி பட்டது பிறங்குவேல். 94

வந்து பட்டகதிர் வேல ழிந்திடலு
மன்னு தானவர்கண் மன்னவ
னுந்து கின்றகணை யேழு விட்டிட
வுரம்பொ ருந்திய மகேசனீள்
கந்து றழ்ந்திடு புயங்க லந்துடல்
களைப்ப மொய்ம்பது துளைப்பவே
சிந்தை நொந்தன னிகழ்ந்த விச்செயலை
வீர கோளரி தெரிந்தனன். 95

கண்டி தண்டர்புகழ் வீர கேசரி
கடுஞ்ச ரஞ்சிதறி வந்துபின்
பண்ட லன்றனது வைய முற்றுர
மடிக்க வேகரம் வெடிக்கவே
மண்டு சூரனொரு கையி னுவிவனை
மாலு றுங்கடலில் வெஞ்சினங்
கொண்டெ றிந்திட விழுந்து பின்னரு
மெழுந்து சேனையொடு கூடினன். 96

மால்ப டைத்தவிற லிந்தி ரன்குறுகி
வன்ச மன்படை விடுத்தலும்
பால் படைத்தமொழி மாயை மைந்தன்மிசை
பட்டு மட்டிறுக ளாகவெங்

கோல்ப டைத்தவனூ ருயி ரங்குலவு
கோடி வெங்கணை க டுவலுங்
கால்ப டைத்தவிசை போல மேவியக
லந்துளை த்திட விளைத்தனன். 97

மன்னு வெற்றிபுனை யந்தகன்கடிது
வந்து பல்கணைகள் சிந்தலு
மன்ன வன்கணை விலக்கி வெந்தகுவ
ளுயிரங்கணை களாலவன்
மின்னு தேரினொடு விற்று ணித்துமரு
மம்பி ளந்திட விழுந்தனன்
வெந்நி டாதவிறல் கொண்ட வண்டர்புகழ்
வீர வாகுவிது கண்டனன். 98

களத்த தேரினொடு வந்தெ திர்ப்பவது
கண்டு மாயைதரு கண்டகன்
மனத்தி லொற்றனென வுன்னி யின்னமுமென்
முன்ன ரொற்றனென வந்தியே
லனத்த மெய்திலை தனுப்பி டிக்கிலுன
தாவி கொண்டிடுவ னென்னவே
சினத்த பாவிமக னுவி கொண்டதிற
லாள னின்னமொழி செப்புவான். 99

உற்ற தூதனு மமைச்சு மாகுவ
னுரங்கொ டெவ்வர்மிசை செல்குவன்
வெற்றி வேலுடைய கந்த னெந்தையருள்
வேறு முள்ளபணி செய்குவன்
முற்றும் வல்லவ னியான மர்ப்புரிதி
யென்ன வொன்னலன் முனிந்துநீள்
கொற்ற வாளிகளொ ராயிரங் குலவு
கோடி வீரனெதிர் தூவினன். 100

வீர வாகுவு மளப்பில் வெங்கணை
விடுத்து வெய்யன்விடு வெய்யகோல்
சேர நூறியொரு நூறு கோனுதல்
செறித்தி டக்கணை சிதைந்திட
மூரி சேரவுண னெட்டு வெங்கணைகண்
மொய்ம்பன் மொய்ம்பிடை யழுந்தலுஞ்
சோரி யுண்டுபிடர் தன்னை யன்னவை
துளைத்த வும்பர்க ளுளங்கவே. 101

வென்றி கொண்டபுய வண்ணல் பின்னர்பல
வெய்ய கோலவுணன் வையமேற்
றுன்றி யொன்றுபல பாக ரங்கமிசை
சோரி கண்டிட வழுத்தல்கண்
டன்று காசிப னளித்த தானவனொ
ரைம்ப தொண்கணையின் மொய்ம்பினு
னின்ற தேரதனை நூற வேறுமொரு
நீடு தேரின்மிசை கூடினன். 102

கூடி வாயுவொடு தேயு வின்படை
கொடுஞ்ச மன்கதிர் நெடும்படை
யீடு சேர்வருணன் வாடு ருநிருதி
யிந்தி ரன்படை யிலங்குசீர்
சூடு வேதனொடு மாத வன்படை
தொடுத்து மொய்ம்பினன் விடுத்திடப்
பாடில் சூரன்மிசை வந்து வந்தவைகள்
பட்டு மட்டிறுகள் பட்டவே. 103

மட்டு லாவுதொடை யண்ண லங்கதுபின்
மங்கை பங்குடைய வள்ளறன்
னெட்டி ரும்படை விடுப்ப வன்னபடை
நேசி லாவிறல்கொள் சூரனும்

விட்டு மொய்ம்பொடு விலக்கி யாறிஞெடு
வீறு மொன்பது விறற்சரந்
தொட்டு வீரனது கைத்த லச்சிலே
துணித்த னன்றகுவர் துள்ளவே. 104

மூண்ட கோபமொடு மொய்ம்ப னங்கொரு
முரண்கொள் வேலினை விடுத்தலு
மாண்டு சூரன்மிசை பட்டு வல்லையி
லழிந்து போகுதலு மன்னவன்
பூண்ட வன்மையொரு தண்ட முந்தவது
வந்து மார்பிடை புகுந்திட
வீண்ட சோரியொடு நீண்டதேரின் மிசை
வீர வீரனும் விழுந்தனன். 105

செய்கை யின்னது தெரிந்து தேரிஞெடு
சீரு றுஞ்சர வணப் பெயர்ப்
பொய்கை தன்னிடை வளர்ந்த நங்கடவுள்
போயெ திர்ந்திட வழுத்தினர்க்
குய்கை தந்தருள் குமார வேள்வடிவ
முற்று நோக்கிமிகு செற்றமாய்
நைகை கொண்டதொழில் தொண்ட வஞ்சனிது
நம்பி ராஞெடு விளம்புவான். 106

உன்ற ஞேடுவரு சேனை யானவ
ரொழிந்து போயின ருவர்க்கெலாம்
வென்றி கொண்டவிறை யாகி வந்தவனும்
வெந்து யர்க்கொடு விழுந்தன
னின்றி எங்குமர ஞன நீகொலம
ரென்ஞெ டேபுரிய வல்லைநின்
வன்றி றற்றனை யழிப்ப னிங்கொரு
கணத்தி னென்றனன் மறத்திஞன். 107

வஞ்ச னீதுசொல வேனு ரைப்பனிள
மைந்த னென்றெமை மதித்தனை
நஞ்சு லாவிய களத்த னெற்றிவிழி
நண்ணு கின்றபொறி யொன்றுகாண்
விஞ்சு கின்றவுல கங்கெ டுப்பது
விவேக மற்றவொரு பேதைநீ
யஞ்சு ருததிறல் வீரர் பாலர்பெரி
யோர்க ளென்றுமதி யார்கள்காண். 108

யாவ ரேனுமமர் செய்ய வந்திடி
லெதிர்ந்து போர்புரிவ ரிங்கினிச்
சேவ கத்தொடு பெருத்த நின்வலி
சிறுத்த நம்பெரிய திண்மையா
லோவ ரும்படி கெடுப்ப மென்றிட
வுருத் தளப்பில்கணை யொன்னலன்
றூவ வேலவனு மெண்ணரில் வெங்கணை
தொடுத்து விட்டவை தடுத்தனன். 109

தடுத்து வேன்முருக னேழி ரண்டுகணை
தான வன்றனது தோளின்மேல்
விடுத்த போதுகணை பட்டொ டிந்துவிழ
வேறு மாயிரம் விறற்சரந்
தொடுத்த வன்சிலை துணிப்ப வஞ்சனொரு
துங்க வேல்விடவு மேழொடேழ்
வடித்த வெங்கணையி லந்தவே லையுற
வந்த வேலையெதிர் சிந்தினன். 110

விறு கின்றதொரு வில்லெ டுத்தவுணன்
வேலன் விட்டபல கோலெலா
நூறி யேழ்கணை புயத்தி லெய்யவவை
நுண்டு கட்படனும் வேலவன்

சீறி யையிரு சரத்த வன்சிலை
சிதைத்தொ ராயிர நல் வாளியா
லேறு தேரழிய நூறி வேறுமவ
னேறு தேர்களற வெய்தனன். 111

வண்மை கொண்டசிலை வைய மற்றிடலும்
வைய முற்றவுணர் மன்னவன்
திண்மை கொண்டதொரு முத்த லைப்படை
செலுத்த வீரிரு சரங்கள்விட்
டுண்மை கொண்டகுக னன்ன தைக்கடி
துருத்த றுத்துடுகு கோல்கடுய்த்
தண்மை கொண்டதொழில் கொண்ட வன்புலை
மதாணி யானவை தடிந்தனன். 112

ஈது கண்டவுண ராரு மங்கணுகி
யெந்தை கந்தனை வளைந்துநின்
றேது போர்புரிய வாழி வேலன்விட
வுற்ற சேனையவை முற்றவுங்
கோது றும்படி கெடுத்து மற்றது
குமார வேள்கையுற வெய்யசூர்
வேதன் மால்படை விடுப்ப வேலவை
விழுங்க வாதிபடை விட்டனன். 113

விட்ட வெம்படை குமார வேளொரு
விறற்க ரங்கொடு பிடித்தவன்
கெட்டி டாதவகை புந்தி சிற்சில
கிளத்த வங்கதை மதித்திலன்
மட்டில் சேனையொடு பின்பு சேர்துமென
மாய மாகிமனை யேகலும்
பட்ட சோகமொ டயர்ந்த யாவரு
மெழுந்து வேலனயல் பரவினர். 114

மற்றிவ் வேலைமிகு பூதர் சூர்நகர்
வடாது வாசறனி லேகியங்
குற்றி ருந்தவதி சூர னைப்படை
யொடுங்கெ டுத்தெயி லுடைத்துவிண்
டுற்றி ருந்ததொரு கோபு ரங்கடிது
தொட்டு வேலையிடை யிட்டனூர்
சற்ற ழித்தனர் திரும்பி னார்கடிது
சண்மு கத்தனயல் கூடினார். 115

வெந்தி றற்கொண்மிகு சார தக்குழுவும்
வீர ரும்புடையின் மேவவே
யெந்தை கந்தனுயர் பாச றைப்பதியி
லேகி மந்திரம தெய்தியே
சிந்து ரப்பகை சுமந்து நீடொளி
திருந்தி டுந்தவி சிருந்தன
னந்த ரம்படி யிருண்டி டும்படி
யருக்கன் மேல்கட லடைந்தனன். 116

நலந்தி ருந்துமரு ணக்க திர்க்கமல
நாய கன்கடிது வந்தெனைக்
கலந்தி ருந்தவ னகன்று போனசெயல்
கண்டு நீதிமுறை கொண்டிடா
துலம்பு ரைந்தபுய விந்து வென்னையுற
வுன்னி வந்தன னெனா நினைந்
திலங்கு மம்பர மடந்தை நக்கென
வெழுந்த தாரகை யினங்களே. 117

ஓடி யுற்றசெய லொற்றர் சொற்றிட
வுணர்ந்து பானுவை முனிந்துளா
னீடு தந்தையிடை வந்து முற்பக
னிகழ்ந்த வச்செய னிகழ்த்தியின்

நீடு கொண்டவரை நாளை வென்றிடுவ
 னென்ன வன்னவன் விடுப்பநீண்
மாட மாளிகைகொள் வீட டைந்ததனில்
 வைகி வைகறை யெழுந்தனன். 118

## மூன்றுநாள் பானுகோபன் யுத்தம்

எழுந்து மாயைதனை முன்ன முன்னணுகி
 யேது வேண்டுமென வோதலு
மிழிந்த வன்புதல்வன் முன்ன மென்றொடம
 ரெய்தி வென்றவனை யின்றுநா
ளழிந்தி டும்பரிசு வெல்ல வோர்படை
 யளித்தி யென்றிடலு மார்வமே
பொழிந்த மாயையொரு மாய வெம்படை
 கொடுத்து விண்ணினிடை போயினள். 119

அன்ன வஞ்சனது பின்னர் பின்னுள
 வடற் படைக்குல மெடுத்துநீண்
மின்னு தேரணுகி யைம்ப தாயிரமென்
 வெள்ள மானபடை சூழவே
மன்னு மப்பதி மதிற்பு றத்தணுகி
 மாவின் மாமுகமொ ராயிரந்
துன்னு தூதன்வத னந்தெ ரிந்தினைய
 வாச கங்கடிது சொல்லுவான். 120

வீர வாகுவெதிர் சென்றி யானிவண்
 விரைந்த டைந்தது விளம்பியே
போரி யற்றவவன் வந்தி டும்படி
 புகன்று மீள்கென வகன்றுபோய்ச்
சீரு லாவிவளர் பாச றைப்பதி
 செறிந்து வீரனை யறிந்துகண்
டீர மற்றிடு மனத்து வெய்யவ
 னிசைத்த வாசக மிசைத்தனன். 121

இயம்பு போதுகதி ரைத்த லைந்தவனை
யின்று கொல்லவரு வேனெனுப்
பயம்பொ ருந்துவகை தூத னேடிவை
பகர்ந்து விட்டிளைய ரோடுநீள்
வயம்பொ ருந்துகும ரேசன் முன்பணுகி
வந்த னைத்தொழில் புரிந்துபின்
னயம்பொ ருந்துவிடை கொண்டு சென்றுகவி
னண்ணு தேரின்மிசை நண்ணினன், 122

கொன்னு றுந்தனது சேனை யோடணிகொள்
கோதில் பாசறை யகன்றுபோய்ப்
பன்ன ரும்புகழ்கொ டெவ்வ னின்றிடு
பறந்த லைக்கள மடைந்திட
வின்ன லற்றமிகு பூதர் தானவ
ரெதிர்ந்து வெஞ்சம ரியற்றினர்
மன்னு பூதரொடு வெய்ய தானவர்கள்
வல்லை சிற்சிலர் மடிந்தனர், 123

தான வத்தலைவ ராரும் வீரமுறு
சார தத்தலைவர் யாவரு
மீன மற்றிடு மிலக்க ரெண்மரு
மெதிர்ந்து வெஞ்சம ரியற்றவே
யூன முற்றவ ரிறக்கவெற் பகைவ
னுந்து தேரினொடு வந்திட
மான முற்றதிறன் மொய்ம்ப னுங்கடிது
வந்து தேரினொ டெதிர்ந்தனன். 12

அற்ற வேலைதனி லுற்ற வில்லினை
வளைத்தி லங்குபிறை யாசுகம்
வெற்றி மேகமென நாகர் தெவ்வன்விட
வீறு கொண்டதொரு வில்லினை

மற்று நேரில்கும ரன்ப தத்தினை
வணங்கு வீரனும் வணக்கியே
துற்றி டும்பிறை நெடுஞ்ச ரம்பல
தொடுத்து நேருற விடுத்தனன். 125

காரி லேகுவன விண்ணரி லேகுவன
கஞ்ச ஞேடரி கலந்துவா
மூரி லேகுவன பாரி லேகுவன
வுந்து சீகர முலாவுமுந்
நீரி லேகுவன வெற்பி லேகுவன
நீள்வு கொண்டபுக ழுண்டமுன்
சீரி லேகுவன தூய வன்றனொடு
தீய வன்றனது செய்யதேர். 126

சைய மொத்தவவர் வைய மிந்தவகை
சாரி வட்டம துலாவலும்
வெய்ய ஞயிர நெடுஞ்ச ரஞ்சிதறி
வீரன் மார்பிடை யழுத்திடத்
துய்ய ஞயிர மெனும்பெ ருங்கணைக
டுவி வென்றியுறு சூர்மகன்
செய்ய தேரதனை நூற வேறுமொரு
தேரின் மீமிசை செறிந்தனன். 127

செறிந்து வில்லினை வளைக்கு முன்னருமை
செம்ம லுக்கிளைய சேவகன்
முறிந்தி டாதகணை யாயி ரங்கொடவன்
மொய்ம்பு ரந்துளை படுத்தலும்
பிறிந்தி டாதவிற லும்பர் வேல்கொடு
பெருந்தி றற்புனை திருந்தலன்
மறிந்தி டும்பரிசு வெல்வ னென்றவுணன்
வாரு ணப்படை விடுத்தனன். 128

மேயு மப்படையை வீர னங்கிபடை
விட்ட ழித்திடலு மொட்டலன்
வாயு வின்படை விடுப்ப மொய்ம்பனொரு
மாசு ணப்படை விடுப்பவே
போயு ரத்துவரு வாயு வின்படையை
யுண்டு வஞ்சனெதிர் போதலு
மாய னார்திபடை தீய னுந்தவெதிர்
வந்த வெம்படை முறிந்ததே. 129

உந்து நந்திபடை பின்பு மொய்ம்பன்விட
வூதை போலது விரைந்துபோய்
வந்த காருட நெடும்ப டைத்திறலை
வல்லை சிந்துதலும் வஞ்சக
னந்த கன்படை விடுப்ப வங்கதையு
மட்ட தொட்டல னயன்படை
வெந்தி றற்கொள விடுப்ப நந்திபடை
முன்பு வந்தது விளிந்ததே. 130

மிக்க வெற்பகைவன் மாய வன்படை
விடுப்ப நந்திபடை முன்புவந்
தக்க ணம்பொரலு மாடன் மொய்ம்புடைய
வண்ண லங்கது தெரிந்துபின்
றக்கன் வேள்வியை யழித்த வன்படை
விடுப்ப மால்படை தகர்ந்திட
நக்க னார்படை யெடுத்து வெந்தகுவ
னண்ண லார்வெருவ விட்டனன். 131

முரண்ட ரும்புயனு நம்பன் வெம்படையை
மொய்ம்பி னேடுவிட வங்கெதிர்ந்
திரண்டு வெம்படையு நீள்பெ ருஞ்சம
ரியற்றி விட்டவரை யெய்தவே

திரண்ட கந்திணை புரைந்த தோளுடைய
    தீய சூரனரு டீயவ
னரண்ட ருந்தனது மாயை யாவிலகு
    மம்பர த்திடை யொளித்தனன். 132

ஆய போதுகதி ரோன்ம றைந்தன
    னருந்தி றற்குலவு தானவன்
மாயை தன்படை விடுப்ப வள்ளன்முத
    லான சேனையை வளைந்துமா
லேய வேகடிது கட்டி யேகியினி
    தாய நீர்க்கடலி லிட்டிடத்
தீய ரிற்பெரிய தீய னங்கது
    தெரிந்து நெஞ்சக மகிழ்ந்தனன். 133

மகிழ்ந்து தாதையுறு கோயி னண்ணியவன்
    வண்ண வொண்கழல் வணங்கியே
நிகழ்ந்த வாறுதனை யோத வன்னவ
    னிறைந்த வார்வம துறைந்திடப்
புகழ்ந்து மைந்தனை யவன்ற னுதுமனை
    புக்கிருந்திட விடுத்தன
னிகழ்ந்தி டாநெறிகொ ணுர தன்குமர
    வேண்மு னுற்றிவை யிசைத்தனன். 134

அற்ற வேலைதனி லாறு மாமுக
    னடற்கொள் வேல்விட வளக்கர்வாய்
வெற்றி வேல்கடிதி லுற்ற மாயையை
    விலக்கி யேகவடல் வீரனுந்
துற்ற யாவரு மெழுந்து வந்தணிகொள்
    சூர னுரையெதிர் கண்டபின்
கொற்ற மேவுகும ரேச னுக்கிளைய
    காளை யின்னமொழி கூறுவான். 135

கரந்து மாயைகொடு வென்று சென்றதொரு
கள்வ னைத்தலை யறுத்தலா
லுரந்த ருங்குமர வேண்மு னேகில
னுரைத்த வீதுமுடி யாதெனி
லிருந்தி டேனெனது வில்லு நானுமெரி
யெய்து வேனென வியம்பியே
விரிந்த சேனையொடு சூர னூரரண
மேலை வாசலிடை மேவினுன். 136

அங்கி ருந்தபுலி மாமு கன்பொரு
தழிந்தி டக்கனலின் வாயுவின்
றுங்க வெம்படை செலுத்தி வாணகர்
தொலைப்ப வும்பரை யலைப்பவன்
மங்கு லேழையும் விடுப்ப வங்கவைகள்
வந்து மாமழை சொரிந்துநீள்
வெங்க னற்றனை யழிப்ப வன்னசெயல்
வீர வாகுவெதிர் கண்டனன். 137

## இரணியன் யுத்தம்.

கண்டான் வெகுண்டான் வடவைப்படை விட்ட காலை
விண்டா னிறைந்த புயனீர்தனை யுண்ண வீழ்ந்து
தண்டா முகில்கள் கடலோடிய வீது தன்னை
யண்டார் புகழுந் திறற்றூதர்கு ரோட றைந்தார். 138

அப்போது சீறி யமர்க்கேகுவ னென்ன வங்கண்
டுப்போ டிலங்கு மறையாயிர மோர்ந்த தூயன்
மெய்ப்பான சூரன் மகனுடக னென்னு மேலோ
னிப்போது கேளென் றவன்றுள்பணிந் தீதி சைப்பான்.

வில்லார் கனகத் திருநாடதி னுற்ற விண்ணோர்
பல்லோர்தமை யாஞ்சிறை செய்தது வீறு பாவ
மல்லாது நன்றி படுமோவவர் தம்மை வென்ற
தெல்லார் நயனப் பெருமான்வர மன்றியாதே. 140

ஏறுற்ற தேவ ரொடுமாறுகொண் டார்க ளெல்லா
மூறுற் றிறந்தா ரிருந்தார்தமை யோத வுண்டோ
மாறற்ற செல்வ மளித்தோன்மகன் மேவின் மாரு
மாறற் றவனைப் பணியாதமர் செய்யலாமோ. 141

மன்னு குகனம் பிழையாலமர் செய்ய வந்தான்
பொன்னாட் டமரர் சிறைவிட்டவன் முன்பு போந்தங்
கென்னு யகனே கொடியோம்பிழை யெண்ண லென்றே
சொன்னு லறுமா முகன்மீண்டிடு மென்று சொற்ருன். 142

ஈங்கிது பால னுரைசெய்திடும் போதி டும்போன்
றீங்கான கோப முடனே சில வார்த்தை செப்ப
வாங்காதன் மைந்த னறியேன்பிழை யெண்ண லண்டார்
நீங்கா விறப்ப வமர்செய்குவ னென்று நின்ருன். 143

இன்பாகி வெய்யோ னனையான்றனை யேவ வேகிக்
கொன்பாவு தன்னி லணுகிப்படை யான கொண்டு
மின்பாவு நாலா யிரவெள்ளவெஞ் சேனை மேவப்
பொன்பாவு பூத ருறு செம்புல முன்பு போனன். 144

வேறு

முச்சிர முள்ளவன் வச்சிர முள்ளவன்
மொய்ம்பினன் முன்பினன் முரணுறு மிரணிய
னச்சமில் சேனைவெள் ளத்தைநாற் றிக்கினு
மாயிர மாயிர மாகவே யேகவிட்
டெச்சமில் குடதிசைச் சேனையோ டேகினு
னீடுசேர் வீரனு நால்வகை திக்கினு
மெச்சுதன் ருனையப் பொரவிடுத் தவுணர்கோன்
மேவுறுந் திக்கிலே மேவினன் ருனுமே. 145

சாரதத் தானையுந் தானவத் தானையுந்
தங்களிற் போர்செயச் சண்முகற் கிளையவன்
றீரமுற் றிரணியன் றன்னொடும் வந்தவெஞ்
சேனையிற் பல்லவச் சோனையைச் சிந்தியே

கோரமுற் றடுதலுந் தகுவர்கோ னுயிரங்
கோல்விடுத் தாயிரங் கோடியாய் நீடிய
பாரிடச் சேனையைப் பாரிடத் தேயடப்
பாங்குறும் பூதர்தா மேங்கியே யோடினர். 146

சாரதற் கிறையவ னீலனும் பேரினன்
னுனவன் முன்புபோய்த் தானவன் மேவிய
தேரெடுத் தம்பரத் தெறியவே தேரொடுஞ்
சென்றுமீண் டிடுதலுஞ் சீலனு நீலனு
நேருறச் சினமொடே மாகமேல் வேகமாய்
நில்லுநில் லென்றுபோய் நீசன்மர் மைந்தனைப்
பாரமெய்த் தாளினு லுருளவே யுதையவே
பாரின்மேல் வீழ்தலும் பாய்ந்தனன் மேனிமேல்.

தன்பதத் தாலவன் றனைமிதித் திடுதலுந்
தாழ்ந்திடும் விறலினன் வீழ்ந்திடுஞ் சோரியன்
றுன்புடைத் தாகியோர் மேனிதன் போலவே
துஞ்சுரு விஞ்சையாற் றேன்றுவித் திடுதலு
நன்புகழ்ப் பூதனுங் கண்டதைச் சாடவே
நளிதொடர்ந் திருபத நலியவே மெலியவே
மன்புகழ்த் தேர்மிசைத் துயரகன் றேறினன்
வாளிபூ தன்மிசை வஞ்சனுஞ் சிந்தினன். 148

மண்டுதீ வாளிதான் வந்துபட் டிடுதலும்
வாடிவைம் பூதனு மண்ணின்மே னின்றிடக்
கண்டனன் வீரனற் றேரொடுங் குறுகியே
கையன்மா யத்தினைக் கையினிற் கவினுறக்
கொண்டதோர் ஞானவே லாலழித் திடுதலுங்
கொடியனே ராயிரங் கோல்விடுத் திடவிரைந்
தொண்டிறற் புயமுடைக் காளைதன் மார்பகத்
துந்துகோல் வந்துபட் டொல்லைதா னுற்றதே.

மாறுறுந் திறலுடைக் காளைபின் பாயிர
வன்சரஞ் சிந்தியே மன்னவன் பின்னுறுந்
தூணியுந் தூணிசேர் வாளியும் வாளிசேர்
தூவிலுந் தூவிலார் துங்கவன் றேரையு
நாணுறும் படிகெடுத் தவனுரம் பஃறுளை
நண்ணவே செய்துபின் னண்ணல னண்ணிய
சேணிருந் தேரெலா நூறுநா றம்பினாற்
றேவர்கொண் டாடவே சிந்திநின் றுனரோ. 150

இச்செயற் கண்டுபின் னெண்ணலா னெண்ணுவா
னீங்கியான் முடிகுவ னெந்தையு முடிகுவ
னிச்சயம் பிறர்களு முடிகுவர் முடிவரே
னீள்கடன் செய்யவோர் நிருதரிங் கில்லையா
லச்செயற் புரியநா னுறுவனென் றுன்னியே
யருவமாய் மீனமா யாழியுட் போயினான்
பச்சிமத் திசைதனக் கெதிர்படுந் திசைதனிற்
பானுவந் தானிருட் பந்தியைச் சிந்தியே. 151

ஆனவிச் செயலினை யொற்றர்கண் டேகியே
யடலுடைச் சூரன்முன் பணுகியங் கறையவே
யீனமுற் றிடுகொடுஞ் சூரன்மா மைந்தனங்
கெரிமுகன் கடிதுவந் தெனைவிடுத் திடுதியா
லூனமுற் றழிவுறத் தெவ்வரைச் சீறியிங்
கொல்லைவந் திடுவனென் றுரைசெயா நின்றிட
மானமுற் றிடுவிறற் புதல்வபோய் வென்றுபின்
வருதியென் றோதினான் மன்னர்தம் மன்னவன்.

## அக்கினிமுகாசுரன் வதை

என்றுசொற் றிடுதலும் புறமதிற் கடிதுவந்
தேருலா வும்பெருந் தேரின்மீ தேறியே
துன்றிமொய்த் திடுமடற் சேனையோ ரெண்ணிலார்
சூழவந் தேகியே தூயவெம் பூதர்சேர்

வென்றியுற் றிடுநெடுஞ் செம்புலத் தனுகளும்
வீறுசா ரதர்களும் விறலுலா நிருதரு
நின்றுபற் பலபடைக் கலமெறிந் தெதிருரு
நீடுவெஞ் சமரமா நிலைமைசெய் தாரரோ. 153

அந்தவே லையில்விறல் வியர்வில்வந் துதயமா
மரியசீர் வீரர்போ யவுணர்தஞ் சேனையிற்
பந்திகொண் டிடுநெடுஞ் சாயகஞ் சிந்தியே
பாடுகண் டிடுதலும் பதகரங் கோடினர்.
நிந்தைதீர் மேகனே சோமனே யாதியா
நிருதமன் னவர்செருப் பொருதவவ் வாறுகண்
டுந்துசீ றெண்மரிற் றிறலுடைச் சதமக
னெல்லைசென் றெய்தினு னென்னலார் தங்கணேர்.

போர்புரிந் தெதிர்பொருந் திந்துகண் டகனையும்
புயலினன் றன்னையும் பொன்றுறப் புரிதலு
மேர்புரிந் திடுமுரத் தேனையோ ரோடினு
ரெரிமுக னிதுதெரிந் தெரிமுக னுகியே
கூர்புரிந் திடுநெடுங் கணைசொரிந் தடலொடுங்
கொள்ளைவெம் பூதரைக் கொன்றுநேர் நின்றிடச்
சீர்புரிந் திடுதிறற் சதமகன் கண்டனன்
சீற்றமேல் கொண்டனன் சிலைகுனித் தானரோ.

வெய்யனுக் கெதிரணை ந்தடுசரம் பொழிதலும்
விறலுடைத் தகுவனு மிகுசரஞ் சிதறியே
சையமொத் திடுபுயத் திறலுடைச் சதமகன்
றனுவையுந் தேரையுஞ் சாபவண் டுணியும்
வையகம் புகழவே நூறியோர் நூறுகோன்
மார்பிடைச் சிந்தலும் வன்மைபோய் நிற்பவீ
தொய்யெனக் கண்டவன் றுணைவரா மெழுவரு
மொல்லைசென் றெய்தினு ரொன்னலான் முன்னரே.

சிலைவளைத் தளவிலாக் கணைதனைச் சொரிதலுந்
திறலுடைத் தகுவனுஞ் சிலசரத் தினையவர்
மலையினைப் பொருபுயத் தெய்யவே யவரவன்
மாமுகத் தாயிர மார்பிலத் தொகைபுயந்
தலையிடத் தாயிரங் கையிடத் தாயிரஞ்
சாயகந் தொட்டவன் றேரையுந் தடிதலுங்
கொலையுடைக் கொடியனோர் தேரின்மீ தேறினன்
கோல்விடுத் ததனையுங் கூறுசெய் தாரரோ. 157

தேரழித் தவனுடற் றுளைபடுத் திடலுமோர்
தேரின்மீ தேறியே சிவனருட் படையினைச்
சீருடைத் தகுவர்கோ னெழுவர்மேல் விடுதலுந்
தீநெடும் படையெனச் சிந்தைமீ தெண்ணியே
வீரமுற் றிடுபுனற் படைவிடச் சோதிவேல்
விரைவினுண் டணுகியேழ் வீரரைக் கொன்றதால்
வாரியிற் பொலிதரும் பூதரா னவரெலாம்
வாய்புடைத் தலறினர் வாடினு ரோடினர். 158

அதெலாங் கண்டனன் பூதரைக் கையமைத்
தீங்குநீ ரஞ்சன்மி னென்னவங் கோதியே
யாதிகண் டனில்வருங் குமரனுக் கிளையவ
னன்முகக் கொடியன்முன் பணுகவே யிருவருஞ்
சோதிவெங் கணைகடு யமர்புரிந் தார்கள்பின்
சூர்மகன் பரன்மகன் றாயமுண் டத்திடைத்
தீதுறுங் கணைகளோ ராயிரந் தொடுதலுஞ்
செய்யவன் சீறிச்செய்கையின் செய்குவான். 159

ஆயிரங் கணைகடு யவுணர்கோ னிரதமு
மங்கையிற் சாபமு மழிவுசெய் திடுதலும்
வேயுறுந் தோளுடைப் பதுமைதன் பாலகன்
வேறுதே ரேறியோர் வீறுதண் டுந்தவச்

சேவிருந் திறலுடைக் கதையையோர் கணையினாற்
சிதைவுசெய் திடுதலுஞ் சிலைபிடித் தவுணர்கோன்
வாயுவின் படைசமன் படைகதிர்ப் படைவிட
மற்றவப் படைவிடீஇ மாற்றினன் வீரனே. 160

ஆனைதன் பின்னவன் பின்னவன் பின்னரு
மனன்முகத் தவனுரத் தம்புநூ றுய்ப்பவே
வினமற் றிடுமணித் தேரின்மீ தேவிழுந்
தெருவைநீர் பெருகவங் கெரிமுகன் றுயருறீஇத்
தான்முனம் வழிபடுந் தன்னகர்க் காளியைத்
தன்னகத் துன்னலுந் தானையோ டெய்தினாள்
மானமுற் றிடுதிறற் றெவ்வரைக் கொல்லுவன்
மைந்தவஞ் சேலெனா வந்தனள் பூதர்மேல். 161

துங்கவெம் பூதர்மேற் சூலமொன் றுந்தவச்
சூலமங் காலமே போலவந் திடுதலுஞ்
சங்கரன் மாமகன் பின்னவன் சீறியேழ்
சாயகங் கொண்டதைத் தடிதலுஞ் சண்டிகை
வெங்கொடுஞ் சினமொடே பின்புமோர் சூலவேல்
விடுதலு மாயிரம் வெஞ்சரந் தூண்டியே
யங்கது தன்னையு மங்குவித் திடுதலு
மண்ணல்சேர் தேரின்மீ தார்த்துவந் தெய்தினாள்.

பாங்குறுங் காளியெண் கையுமோர் கையினாற்
பற்றியே மார்பகத் தெற்றியே நிற்றலு
மேங்கியே சோகமா யெருவைநீர் விழவிழுந்
திடரகன் றிடவெழுந் தேத்தினாள் வாழ்த்தினா
ளாங்குநின் றிலள்விரைந் தேகினா ளீதுகண்
டங்கிமா முகனெழுந் தடல்பெறுஞ் சிலைபிடித்
தோங்குநூ றம்பினான் மொய்ம்பினன் றேரறுத்
தூதிய மாயதென் றூதினன் சங்கமே. 163

தீதிலா வீரனீ ரேழுகோல் கொண்டுபின்
தீமுகத் தீயவன் சிலையறுத் திடவவன்
வேதனூர் படைதனைக் கடவலுந் திறலினுன்
வீரபத் திரன்படை விடுதலுங் கடிதுபோய்ப்
போதனூர் படைதனைச் சிந்திவெந் தழன்முகன்
பொன்றவே முடிகளைந் தண்ணல்கைப் புக்கதா
லாதரச் சுரரெலா மொய்ம்பன்மேல் மலர்சொரிந்
தாடினு ருவகையா லவசமே யாயினுர். 164

வன்னிசேர் மாமுகன் பட்டதைக் கண்டவன்
மட்டிலாச் சேனையோர் மானமும் வீரமுந்
துன்னவந் தெய்தியே பலபடைக் கலமெலாந்
தூவிவெம் போர்செயத் தூயவன் சீறியே
மன்னிடும் புயலெனக் கணைசொரிந் திடுதலும்
வாடினு ரோடினுர் மாண்டுளா ராயினு
ரன்னதன் பின்னரெண் பூதரு மெழுவரல்
லாததம் பியருமங் கருகுவந் தெய்தினுர். 165

அன்னபோ மெழுவரா நதுணைவரைக் கண்டிலான்
யாவதா னுர்கொலோ வாவிபோ னுர்கொலோ
வென்னவே யுக்கிரன் கனன்முகன் படையினு
லெழுவரும் பொன்றினு ரென்றுகூறிடுதலு
மின்னுயிர்த் துணைவரா மவர்கிடந் துழியடைந்
திருகணீர் சொரியவங் கெதிர்விழுந் தலறினு
னன்னயத் தம்பிமீர் தம்பிமீ ரென்றன
னனிபுலம் புற்றென னுடருந் திறலினுன். 166

வேறு

இன்ன பான்மையிற் றுயருழந் தறுமுக னிளையோன்பின்
மன்னி ருந்திறற் றுணைவரை யெழுப்புவான்மனங்கொண்டு
பின்னு றுங்கணைத் தூணியி னெருகணை பிடுங்காவங்
கன்ன தில்றலை யுகிரினு லெழுதுவா னடலோடும். 167

வெற்றி வேலுடைக் குமரனுக் கிளையவன் விடுத்திட்டே
னுற்ற வந்தகன் காண்கவென் றம்பிய ருயிர்கொண்டாய்
நற்றி றங்கொலோ விடுமதி கடிதென நனிதீட்டிச்
செற்ற மோடுதன் சிலையிடைப் பூட்டியே செலவுய்த்தான்.

மாற்ற ருங்கட லேழையுங் கடந்துபோய் வயமேவுங்
கூற்றன் முன்னரே வீழ்தலுந் தெரிந்தனன் குறித்துள்ளத்
தாற்ற வஞ்சினன் றேடினன் கயிலையி னடைந்திட்டான்
வீற்றி ருந்தன ரவ்விடை யெழுவராம் விறலோரும். 169

பூண்டபோரிடை யிறந்தவெங் கணமெலாம் புடைசூழ
வாண்டி ருந்தன ரந்தகன் றெழுதன னடன்மேவி
நீண்ட தோளினன் றேடினன் வம்மென நிகழ்வோத
வீண்டு தானையோ டெழுவரு மமர்க்களத் திடைவந்தார்.

இலங்கு தத்தம துருவினிற் புகுந்தன ரெழுந்தேபின்
னலங்கொள் வீரனை வணங்கலு மனையவ னயமோடு
மலங்கண் மார்புறத் தழுவினன் மகிழ்ந்தன னதுபோதின்
விலங்கு ருவிற லந்தகன் வந்தனன் விறலோன்முன். 171

தொழுது வீரநீ யென்றனை முனிந்தனை துணையோரைப்
பழுது செய்வனே யவர்பெருங் கயிலையிற் படர்ந்தாரென்
றெழுது வாசகங் கண்டபி னியற்றிய தெழிலோன்முன்
முழுது மோதினன் முனியலென் றேகினன் முரட்காலன்.

ஈதெ லாந்திற லொற்றர்கண் டேகியே யிருஞ்சூரன்
பாதம் வந்தனை புரிந்தன ரெரிமுகன் பட்டானென்
றோதி னரவ னரற்றினன் புலம்பின னுறுபோதிற்
காதன் மைந்தர்மூ வாயிரர் வந்தனர் கடியோன்முன். 173

## மூவாயிரம் பிள்ளைகள் வதை

வந்து தந்தைவெந் துயரறச் சிலமொழி வகுத்தோதி
வெந்தி றற்சமர்க் கேகுதும் யாமென விடைகொண்டு
பந்தி கொண்டதே ரேறியங் களவிலாப் படைசூழ
வுந்து வீரனும் படைஞரு முறுகளத் துற்றாரால். 174

மாய மேசெயு மவுணரும் பூதரு மலைவாகி
யோய்வில் பற்பல படைக்கலஞ் சொரிந்தம ருறுபோதிற்
றீயர் சேனையும் பூதர்தஞ் சேனையுஞ் சிலமாளப்
போயெ திர்ந்தனர் கடிது மூவாயிரம் புகழ்வீரர். 175

கதிர்கொள் வாளிதூய்ப் பூதரை யடுதலுங் கணமன்ன
ரெதிர்பு குந்தம ரிழைத்திட வவரிவ ரெழின்மெய்யிற்
பதிவு றும்படி கணைவிட விடரொடும் படிநின்று
ரதிர்த ருங்கழ லிலக்கரி லாயிர ரதுகண்டார். 176

கண்டு வீரனைத் தொழுதனர் விடைகொடு கடிதேகி
யெண்ட ரும்புகழ் விசயனே யாதியா யிரவீரர்
மண்டு கோன்மழை சொரிதலு மவருமம் மழைதூவ
வண்டி ருந்திற லிருவகைக் கணையுநேர்ந் தமர்செய்த. 177

ஆய காலமூ வாயிர ராயிரத் தவர்தேரைச்
சாய கங்கொடு சிதைத்தலுந் தூயவர் சரந்தூண்டித்
தீயர் தேரையுந் தனுவையுந் துணித்தனர் தேர்புக்கார்
மாய வந்தவர் சீறியே யீறிலா வரையுய்த்தார். 178

வீறு வெற்பெலாங் கணையினுற் சிதறியே விறற்கோறாய்ச்
சீறி வெய்யர்மெய் துளைத்திட வவுணரிற் சிலரின்னோ
ரேறு தேரெடுத் துவரிமே லெறிந்திட வெழில்வீரர்
மாறில் பூமிசைப் பாய்ந்தனர் பின்னரும் வந்துற்றார். 179

செற்ற வெங்கணை சொரிதலு மவுணரிற் சிலரின்னோ
ருற்ற கைச்சிலை பறித்தொடித் திடவவ ருரமீதே
யெற்றி னரவர் தாமுமங் கெற்றினு ரிகல்கூடி
மற்றொ ழிற்றனைப் புரித்தன ரிருவகை வலியோரும். 180

ஈது செய்தலும் விசயனே யன்றிமற் றெல்லோரும்
போத நொந்தன ரவுணருக் குடைந்தனர் புறந்தந்தார்
தாது லாந்தொடை விசயனுட் சீறியே சரஞ்சிந்தித்
தீது லாவுசூர் மைந்தரைத் துணித்தனன் சிதைத்திட்டான்.

இறந்த பேர்களுந் துணிந்துள பேர்களு மெழுந்தேபின்
மறந்த ருஞ்செருப் புரிந்திட வியந்தனன் மனநொந்தே
சிறந்த வேலினை நினைத்தலுங் ககனமேற் செவ்வேள்வந்
துறைந்து நின்றுதன் ருடொழு விசயனுக் குரைசெய்வான்.

மாய்ந்த வஞ்சக ரறுவது மெழுவது மலரோன்மு
னீந்த நல்வர மவரினிக் கெடவிதை யெறிகென்றே
காய்ந்த வெஞ்சினக் காரிவே லருளினன் கரந்திட்டா
ளுய்ந்து ணார்ந்தன னிதனையுன் மத்தனு மசுரேசன். 183

மிக்க மாயவள் படையினை விடுத்தலும் விசயன்ரு
னக்க ணந்தனிற் காரிதன் படைவிட வதுபோந்து
புக்க மாயவள் படையழித் தவுணர்கோன் புகழ்மைந்தர்
தக்க மும்மையா யிரரையுங்கொன்றது சயமாக. 184

மும்மை யாயிரம் புதல்வர்கண் முடிந்ததை முரணுற்றா
மம்ம ரோடுகண் டோடினர் சூரன்முன் மருவுற்றி
தம்ம வோதலு மரற்றினன் புலம்பின னதுபோதின்
வெம்மை கொண்டசெங் கதிரவ னடைந்தனன் மேல்வேலை.

எண்ட ரும்புகழ் மதுரையே கதிர்விசும் பிருண்மேவுங்
கொண்டல் மண்டமண் குண்டரே தாரகைக் குலமெல்லா
மண்டர் நாயக ரடியரே செக்கரே யழறிங்கட்
டுண்டம் வாதில்வே காதெழு மேடெனத் துலங்கிற்றே. 186

## தருமகோபன் வதை

இன்ன பான்மையிற் கங்குல்வந் திடுதலு மிருஞ்சூரன்
றன்னை வந்தடைந் தறப்பகை புந்திசிற் சிலசாற்றி
யொன்ன லார்தம துயிர்குடித் தொல்லையீண் டுறுவேனென்
றன்ன வன்றனை விடைகொடு புறந்தனி லடைந்திட்டான்.

புண்ட ரீகமா மாதிரப் போதகப் பிடர்புக்கே
யண்ட ரஞ்சுற வெண்ணிலாப் பெரும்படை யயல்சூழ
மண்டி ருந்திறற் பூதர்சூழ் பறந்தலை வந்திட்டான்
சண்ட முற்றிடு மவுணரும் பூதருஞ் சமர்செய்தார். 188

இருதி றத்தரு மெண்ணிலாப் படையெறிந் திகல்கொண்டு
பொருதி றஞ்செய வவுண ரிலமைச்சரும் புகழ்வேர்வில்
வருதி றத்தரு மெதிர்ந்தனர் சமர்த்தொழின் மருவுற்றார்
திரும் குத்திடு மவுணரும் பூதருஞ் சிலர்மாண்டார். 189

இலக்க வீரரும் வன்மைபோய் நொந்தன ரிதுகண்டு
விலக்க ரும்புகழ் வீரமார்த் தாண்டனும் விறலோன்சென்
றலக்க ணுற்றிடக் கணைசொரிந் தமைச்சரை யடனேக்கித்
தலக்க ணின்றிடுந் தானவ ரெதிர்ந்தனர் சமர்செய்தார்.190

ஓங்கு பூதர்கள் பலமலை விடுதலு முடைந்தார்க
ளங்கு லாவிய வறப்பகை கண்டிது சினமேவித்
தாங்கி ரும்புகழ்ப் பூதர்மீ தளவிலாச் சரஞ்சிந்த
வாங்கு மேனிமேற் படுதலு மெலிந்தன ரடனீங்கி. 191

காலிற் கொன்றிடு மருப்பினுற் கொன்றிடுங் கவின்மேவும்
வாலிற் கொன்றிடுங் கரத்தினுற் கொன்றிடும் வயப்பூதக்
கோலச் சேனையை யிவ்வகை கொடியவன் கொடுவேழஞ்
சாலக் கோறலுஞ் சாரத ரோடினர் தரைமீதே. 192

கண்டு வென்றிசேர் கதிரவன் கடிதுபல் கணைசிந்திப்
புண்ட ரீகமீ தழுத்தலு மயர்ந்தது பொலிசீற்றத்
தண்டர் மாற்றலன் சீறியே நூறுகோ லவையேவிக்
கொண்ட சோரிநீ ரெழுந்திட வழுத்தினன் குளமீது. 193

உதிர மோடுதன் றேருறத் தியவ னொருவேலை
யெதிர் விடுத்தலும் வீரமா புரந்தர னென்போனற்
கதிர்நெ டுங்கணை விடுத்தது தடுத்துவெங் கணைமாரி
துதிபொ ருந்திய வவுணன்மேற் பொழிந்தனன்
சுரர்போற்ற. 194

தரும கோபனே வாலவை விலக்கியோர் தண்டுந்த
மரும மீதது வந்துபட் டிடுதலு மயக்குற்றான்
கரும மீதுகண் டடல்பெறுந் தோளினன் கடிதேக
வரும வன்றன்மேற் பொழிந்தன னிழிந்தவன் மழைவாளி.

விட்ட வாளிபட் டொடிந்திட வீரனோர் விறல்வேலை
யொட்ட லன்றன்மேல் விடுத்திடச் சென் றவனுரத்தூடே
பட்டு வெந்நிடைப் பறிதலு முளம்பதை பதைப்புற்று
மட்டில் சோரியோ டிருந்தனன் கரிமிசை மயலாகி. 196

அந்த வேலையி லவன்கரி மனஞ்சினந் தடன்மேவுந்
தந்தி மாமுகற் கிளையவற் கிளையவன் றடந்தேரை
யுந்து நாற்பெருங் கோட்டினாற் றாக்கியே யுயர்பாகன்
சிந்து றும்படி புடைத்தது கரத்தினாற் றிறலோடும். 197

ஆன காலையில் வேறுதே ரேறியே யடல்வீரன்
கான மாமலைக் கரிகரம் பிடித்தனன் கவுண்மோதி
யீன முற்றிட வப்புறத் துலகிடை யெறியப்போய்த்
தான வர்க்குளந் துணுக்குற விழுந்தது தரைமீது. 198

விழுந்து மண்மிசைத்துன்பொடு கிடத்தலும்விறல்வெய்யோ
னெழுந்து தண்டமொன் றுந்திறு னன்னதை யெழில்வீரன்
செழுந்த ழிச்சுடர் வாளினாற் சிதைப்பவச் சிரமுய்த்தா
னழுந்து சீருள வச்சிரங் குறுகிய தடலோன்முன். 199

வந்த வச்சிரம் பாணியிற் பிடித்துவஞ் சகன்மீதே
யுந்தவங்கது படுதலும் பதைபதைத் துடன்வீழச்
சுந்த ரங்கெழு தாளினா லுதைத்திடத் துகடரு
மந்த ரத்தரை யலைத்தவ னிறந்தன னவர்துள்ள. 200

ஈது கண்டவன் றண்டமங் கோடிய திடர்மூழ்கிப்
பூத லத்துறு வெங்கரி யெழுந்துபின் புகழ்ந்தேத்தி
மேத குந்திறல் வீரனை விடைகொடு விறல்சேர்தன்
மாதி ரத்தனிற் படர்ந்தது பூதர்கண் மகிழ்ந்தார்த்தார். 201

செற்ற மேவிய வறப்பகை மடிந்தவச் செயறன்னை
யொற்றர் நோக்கினர் வாடின ரோடின ருரைசெய்ய
வற்ற மாந்துயர்ப் பரவையு ளழுந்தின னறிவின்றி
யுற்ற பாவைபோ லிருந்தன னவுணரி லுரமிக்கான். 202

## ஐந்தாம் நாள் பானுகோபன் வதை

இருந்த காலையி லிறையவன் கழையடி யிருந்தோலாற்
பரிந்து மத்தகங் காறுமெய்ம் மறைந்திடும் படிபோர்த்துத்
திருந்து செஞ்சடை காட்டிநின் றிடுவதோர் திறம்போலக்
கருந்தண் வேலையிற் செங்கதி ருதித்தனன் கதிர்வீதி. 203

அற்ற வேலையிற் காசிப னுதவிய வசுரேச
னிற்று ளானெனத் துயருழந் தயர்வுறு மியனோக்கி.
வெற்றி யூதையுஞ் சிந்தையும் பிற்பட விரைந்தோடி
யெற்ற ளைந்தவற் பணிந்தன ரொற்றர்தா மெழுந்தாரின்.

சிறந்த வீரரை மாயையாற் கட்டிமுன் றிரைவேலை
யுறைந்தி டும்படி யெறிந்துபி னிகழ்ந்தன வுரைசெய்ய
வறந்த விர்ந்தவன் றவிர்ந்திடாப் பெருந்துய ரதின்மூழ்கி
யிறந்த தேயினி நம்பெரு வாழ்க்கையென் றெழுந்திட்டான்.

எழுந்து தந்தைதன் கோயிலுட் புகுந்தவ னிருதாண்முன்
விழுந்து நின்றுவேற் குமரனைத் தூதனை மிகவேநா
மழிந்து போவதே யன்றிவென் றிடுவதிங் கரிதண்ட
ரொழிந்தி டச்சிறை விடுப்பதே நன்றென வுரைசெய்ய,

மஞ்ச நெஞ்சகத் தஞ்சினை போலுநின் மனையேகித்
துஞ்சி வைகுதி யென்னயா னுரைத்ததைத் துகடீர
நெஞ்சு கொண்டிலன் வெகுளிகொண் டானென நினைவாகி
வஞ்ச னேன்பிழை பொறுத்தியென் றுரைத்தனன்
மகிழ்வாக. 207

அறைந்து போக்கவன் றனைவிடை கொண்டவ னகன்றே
குறைந்தி டாப்பெருந் தேர்மிசை யேறினன் குழுவாகி [பின்
நிறைந்த வெண்ணிலாச் சேனைகள் சூழ்தர நெடுங்கூளிப்
பறந்த லைக்களஞ் சென்றன னிரவிதன் பகையாளுன். 208

வேறு

அந்த வேலையிற் பூத வீரரு
மவுண வீரரு மடலி னேடெதிர்த்
துந்து போர்செயத் தூசி யாகிமுன்
புற்ற பூதரங் குடைவ தாயினோர்
வந்து பின்புறும் பூதர் தானவர்
மாறு மாறுமா றனபோர்செயச்
சுந்த ரந்தருஞ் சூரன் மாமகன்
றூவி னன்கணை தூய பூதர்மேல். 209

வாளி பட்டிடப் பூத ராயினோர்
வாடி யோடினார் மங்கைபா லகன்
றுளி னன்புறுந் திறல்கொண் மொய்ம்பினுன்
றுன வப்பெருந் தானை யானதைத்
தூளி யாகவெங் கணைபொ ழிந்திடச்
சூரன் மாமகன் றூயன் முன்புபோய்க்
கோளி ருங்கரச் சிலைவ ளைத்தனன்
கோர வாயிரங் கோல்வி டுத்தனன். 210

ஆயி ரஞ்சர மகல மூழ்கிவெந்
நகல வேயக லாதமொய்ம்பி னுன்
றீய துன்பமோ டாயி ரஞ்சரந்
தீயன் மொய்ம்பிடைச் செலவிடுத்தலு
நோயு ழந்துபின் பண்ணல் வில்லையோர்
நூறு கோலினு லூறி நிற்கவோர்
மாய்வில் வேலினைத் தீய னெற்றியுண்
மன்ன வுய்த்தனன் வாகை வாகினுன். 211

பெருகு சோரிநீர் மிகவெ ழுந்திடப்
பெருகு துன்பமாய்ப் பின்றெ ளிந்தனள்
முருகு கொண்டிடுந் தொடையல் வீரனோர்
மூரி வெஞ்சிலை முரனொ டும்பிடித்
தருகு நின்றிடுந் தகுவ ரஞ்சவே
யனில மன்படை யங்கி யின்படை
கருகு மெய்யுடைக் கொடிய னோர்விடக்
கடிய னும்மவை கடவி மாற்றினன். 212

மாற்றி வஞ்சகன் கதிர வன்படை
மலரி னன்படை மால்பெ ரும்படை
சீற்ற மாகியே விடலு மன்னவை
செலுத்தி வீரனுந் தடுத்து நின்றிட
வாற்றல் கொண்டிடுந் தனது மாயையா
லரிய தேரினோ டம்ப ரத்தினிற்
றோற்றி டாதொளித் திறுதி மாரிபோற்
றூவி னன்சரந் தூய வீரன்மேல். 213

கள்ள வஞ்சகன் முன்பு பின்புமாய்க்
கணைசொ ரிந்திடக் காமர் மெய்யெலாம்
வெள்ள மானசெங் குருதி யோடவே
வீர வாகுவும் வெகுளி கொண்டுபின்
றுள்ள ரும்புகழ்ப் போத கப்படை
தனைவி டுத்தலுந் தகுவன் மாயமங்
கெள்ளி யாவரு நகைசெ யும்படி
யிரிய விண்ணிடைத் தெரிய நின்றனன். 214

மற்ற வன்றனைக் கண்டு சீறியே
வஞ்ச காவினி யெங்க ணேகுதி
நிற்றி நிற்றியென் றம்ப ரத்தின்மே
னெடிய தேரொடுங் கடிதிலெய்தியே

கற்று ணைப்புயன் கொண்ட லாமெனக்
கணைசொ ரிந்திடக் கண்டு மண்டுகோ
லெற் றனை ந்தசூர் மைந்த னுந்தவங்
கிந்த வாறுபோ ரியற்றி னரரோ. 215

கிட்ட வந்திடுஞ் சேணி லேகுறுங்
கிளரு மொன்றையங் கொன்று சென்றுநேர்
முட்டு மெட்டதா மாதி ரத்தினு
மூரி வானினு முடுகி யேகுறு
மிட்ட மானதே ரிருமை வீரரு
மிகழு வார்செருப் புகழு வார்சுரந்
தொட்டு வால்விறற் சங்க மூதுவார்
சூளி யம்புவார்சூழு வாரரோ. 216

வரையி லோடுமா முகிலி லோடுமேல்
வான மோடுநீர் வளமு லாவுதெண்
டிரையி லோடுமூ தண்ட மோடுமெண்
டிசையி லோடுமத் திசைகள் சூழுமித்
தரையி லோடுநீள் பிலத்தி லோடுமெய்த்
தான வர்க்கெலா மரச னாகிய
விரையு லாந்தொடைப் பானுகோபனும்
வீர வாகுவும் விடுச ரங்களே. 217

பாங்கு கொண்டுநா ரூயி ரந்தொகைப்
பல்ல வங்களாற் பல்ல வம்புரிந்
தோங்கு சூர்மகன் வீர னேறுதே
ரொழிவு செய்யவோரா யி ரஞ்சரத்
தாங்கு வெய்யவன் றேரை வீரனு
மழிவு செய்யவில்லமர்பு ரிந்துபின்
றிங்கில் வாள்பிடித் திருமை வீரருஞ்
சென்றெ திர்ந்துநேர் நின்று போர்செய்தார். 218

மன்னி டும்புகழ்ச் சூரன் மாமகன்
வள்ளன் மாமகன் வாள்வி லக்கியே
கொன்னு றுந்திருத் தோளில் வெட்டிடக்
குருதி வீழ்தரக் குமர வேள்பத
முன்னி வீரரிற் றலைமை பெற்றுளா
னென்ன லன்வலத் தோளை யொல்லையின்
மின்னு வன்னதாய் மின்னு வாளினால்
வீழ்வு றும்படி வெட்டி னானரோ. 219

சீரு லாவுதன் வலது கைத்தலஞ்
சிதைவ தாகவே தீயன் மாமக
னேரு லாவுறு மிடது கைத்தலத்
திலகு வாள்பிடித் தெதிர வீரனுங்
கோர வாளினால் வாம பாணியைக்
குறைவு செய்தவன் கொடுமை யுன்னவே
சூரன் மாமகன் றலையை விண்ணுளார்
துள்ளி யாடவே தள்ளி னாரரோ. 220

வேறு

மாண்மகன் மகன்மகன் மகன்ம டிந்திட
லான்மக பதிமுத லமரர் துள்ளினார்
வேன் மகி பனைநினை வீர வாகுவுந்
தான்மன மகிழ்ந்தனன் சபத முற்றியே. 221

உற்றசீர் முடியற வொளிகொள் பானுவின்
பற்றலன் மடிதலும் பாரின் மேவியே
சுற்றிய படையெலாஞ் சூழ வேலன்முன்
வெற்றியோ டணைந்தனன் வீர வாகுவே. 222

இன்புறு முருகனை யிறைஞ்சி நிற்றலுந்
துன்பொடு வருந்திநீ சூரன் மைந்தனைக்
கொன்புனை புயத்தினாய் கொன்று வந்தனை
யன்பொடு வேண்டிய தறைதி யென்றனன். 223

என்றிவை குமரவே ளிசைப்பக் கேட்டனு
முன்றனை யலதியா ஞேர் செயற்கையு
மின்றுசெய் ததுசிறி தில்லை யாயினு
மொன்றெரு வரந்தனை யுதவ வேண்டுமால். 224

அண்டர்பொய் வாழ்வையு மயன்பொய் வாழ்வையும்
விண்டுவின் வாழ்வையும் வெஃகிலே னியான்
றண்டைக ளணிந்தநின் சரணத்தன்மையே
கொண்டிடவேண்டுவ னென்று கூறினன். 225

என்றுமூழி யளித்தன மென்று வேலவன்
றுன்றிய புகழுடைத் துணைவர் தம்மொடும்
வென்றிகொ ளிருக்கையில் வீர வாகுவைச்
சென்றிட விடுப்பவவ் விருக்கை சேர்ந்தனன். 226

பானுவின் மாற்றலன் பதைத்து வீழ்ந்துயிர்
போனதை நாடியே போந்தங் கொற்றர்தாந்
தானவன் றனக்கிது சாற்றக் கேசரி
மேனிமிர் தவிசினும் வீழ்ந்த ரற்றினன். 227

அன்னதோர் காலையி லமர்க்க ளத்திடைச்
சின்னம தாகிய சேயைத் தானவர்
முன்னமே கொடுவர முகில்பு ரைந்திடு
வன்னமே யானவன் வருந்தன் மேயினன். 228

சிரத்தினைக் கரத்தினைத் திருந்து மார்பினைப்
பொருத்திடும் பார்த்திடும் புரளுஞ் சோர்வுறு
மருத்திகொள் வாய்புடைத் தலறு மன்றவன்
பரித்திடுந் துயரையார் பகர வல்லரே. 229

மற்றிதைப் பதுமகோ மளையென் பாளறிந்
திற்றிடு மைந்தன்முன் பெய்தி மேல்விழுந்
தற்றமி றுன்பொடு மரற்றி னளகர்
முற்றினு மழுகுரன் முதிர்ந்த தந்தநாள். 230

## சிங்கமுகாசுரன் வதை

தீயவ னன்னபின் சிலரை நோக்கியே
மாயநம் பகைஞரை மடிவு செய்துபின்
சேயினை யொருமகஞ் செய்தெ மூப்புவன்
காயமிங் கொருபுடை காத்தி ரென்றனன். 231

ஓங்கிய விதுபுகன் றுற்ற வொற்றரைத்
தீங்கின ஞேக்கியே சென்னி யாயிரந்
தாங்கிய வெம்பியைத் தருதி ரென்னலு
மாங்கவர் வடதிசை யளக்கர் மேவினர். 232

ஓவிலா வதனிடை யுயர்ந்த விண்ணுளார்
பூவினர் புகழ்தரு புரத்துட் கோயில்போய்
மேவினர் நிகழ்ந்தன விளம்பி னருனைக்
கூவினன் சூரெனக் கூறி னரரோ. 233

என்றலு மரிமுக னெழுந்து சேனையோ
டொன்றுசீர் மகேந்திர மணுகி யும்பரை
வென்றவ னடிமிசை வீழ்ந்தெழுந்துநீ
யென்றனைக் கூவிய தென்னை யென்னவே. 234

முந்துற நிகழ்ந்தன முறையிற் கூறியே
கந்தனு முருகவேள் கருதிப் போர்செய
வந்தன னவனை நீ வல்லை யேகிவென்
றுந்துசீர் படைத்திவ ணுறுதி யென்றனன். 235

தானவன் விடுத்தலுந் தனதின் மேவியூன்
போனக முண்டுதேர் புகுந்தி லக்கமாஞ்
சேனைவெள் ளப்படை சேர வேகினன்
வானவ ரிதுதெரீஇ வாடி யோடினர். 236

எங்கணு யகனெதி ரிறைஞ்சி நின்றரோ
துங்கமா ரரிமுகன் சூரன் பின்னவ
னங்கவன் றனிலும்வீ ருற்றல் பெற்றவ
னிங்கமர் புரிந்திட வெய்தி னுனென. 237

இன்னதை யறிந்துபோர்க் கெழ நினைத்தலு
மன்னதை யறிந்துசென் றுடன் மொய்ம்பினுன்
பன்னிரு புயத்தனைப் பணிந் தெழுந்துநா
னுன்னலன் றனையழித் துறுகின் றேனென. 238

அன்பொடு விடுத்தலு மகன்ற கன்றிடாக்
கொன்புனை படைக்கலங் கொண்டு தேரின்மீ
தின்புட னேறியே யெழில்கொண் மொய்ம்பினுன்
றன்பெரும் படையொடுந் தகுவர்ச் சேர்ந்தனன். 239

ஆயிர மியோசனை யான மெய்யுடைச்
சீயமா முகத்தவன் சேனை யானதும்
போயெதிர் மலைந்திடும் பூதர் சேனையு
மாயிடை யெதிர்ந்துநின் றமர் புரிந்தவால். 240

திண்டிறற் படைக்கலஞ் சிதறிப் போர்செய
வண்டிய வீரரு மவுண வீரரு
மண்டனிற் சிலர்சிலர் மாயத் தானவர்
தண்டமன் னவரெதிர் சார்ந்து போர்செய்தார். 241

வேறு

அன்ன காலையிற் பூதர்க ளுடைய
வடல்கொள் பூதரிற் சிங்கனென் றெருவன்
றன்னெ டுங்கையிற் றண்டினு லவுணர்
தலைகள் சிந்திடச் சாடியே குதலு

முன்னர் நின்றிடு மவுணர்க டம்மின்
முரண்கொ ளுந்தச முகனெனுங் கொடியோன்
பொன்னெ டுஞ்சிலை பிடித்துவந் தெதிர்ந்து
புங்க வம்பல சிங்கன்மேற் பொழிந்தான். 242

வீறி வந்திடுங் கணையெலாங் கதையால்
விறற்க ணத்திறை விலக்கலுங் கொடியோன்
சீறி யோர்பெருங் கதையினை விடுப்பச்
சிங்கன் மார்பகஞ் செறிந்தொடிந் திடலு
மாறி லாவொரு மழுப்படை விடுப்ப
வரங்கொள் சாரதன் மற்றதைக் கதையா
லூறு செய்திடக் குந்தமொன் றெறிந்தா
னுந்து மாழியோன் றுந்திமு னிவனும். 243

குந்த வேலினை யாழிபோ யழிப்பக்
கொடிய ஞேர்கதை குறிப்பொடு விடுத்தா
னுந்து சிங்கனு துரத்தின்வந் தழுந்த
வுதிர மேல்விழுந் தோடவங் கோடி
வெந்தி றற்றச முகனுரத் தடிப்ப
விழுந்து வெய்யவன் வீந்திட வதுகண்
டந்த மற்றிடுந் தகுவர்க ளொவரு
மமர்பு ரிந்திட வடலொடு மடைந்தார். 244

அன்ன காலையி லிலக்கர்தங் குழுவி
லாற்றல் பெற்றுள வனகனு மொருவன்
மன்னு தானவர் தானைமுன் பணுகி
வாளி கொண்டவர் மாளவே யழிப்பத்
துன்னு தானவ ரோடின ரவரிற்
றுன்மு கத்தினன் றுண்ணென வெதிர்ந்து
கொன்னு றும்படி பலபல வடிவங்
கொண்டு பூதர்முன் கொடுஞ்செருப் புரிந்தான்.

ஆய காலையில் வாகையங் கதிரோ
னதுதெ ரிந்தன னறிவெனும் படையான்
மாய மானதை யழித்தலுந் தனித்து
வஞ்ச னுயிர வாளிகள் விடுப்ப
வாயி ரங்களை விடுத்தவை தடுத்தங்
கவனு டம்பினி லழுந்திட வளவில்
சாய கந்தொட விழுந்தயர்ந் தருவாய்த்
தகுவ னோடினன் சாரதர் மகிழ. 246

அந்த வேலையி லிந்தவா றறிந்தா
னரிமு கத்தின னெரிமுக மானன்
வந்தெ திர்ந்தன னெதிர்தலும் பூதர்
மரக்கு லங்களும் வரைகளும் விடுப்ப
முந்து மன்னவ னுசியி லுயிர்ப்பான்
முரிந்து போயின முனிந்துவெம் பூதர்
மந்த ரங்களு மரங்களும் பிறவு
மாகர் தெவ்வன்மேல் வலியொடு விடுத்தார். 247

விட்ட வின்னவை மாகமே னிறைந்து
வேக மோடுபோய் விறலரி முகனு
மொட்ட லன்றன்மேற் பட்டன படலு
மூறு செய்தில வுடைந்தில விழுந்த
வட்டி டும்படி கரியினந் தனிலோ
ரரிபு குந்தென வடற்கணக் குழுவின்
வட்ட மானதன் றேரினு மிறங்கி
வந்து புக்கனன் மாயைதன் புதல்வன். 248

பற்றி னன்சில பூதர்க டம்மைப்
பதைந்தி டும்படி பாரவண் டத்தி
லெற்றி னன்சில பூதர்க டம்மை
யெயிறு துன்றிய விடிக்குரல் வாயிற்

குற்றி னன்சில பூதர்க டம்மைக்
குறைத்த னன்சில பூதர்க டம்மைச்
சுற்றி னன்சில பூதர்க டம்மைத்
துவைத்த னன்சில பூதர்க டம்மை. 249

வேத னூரினிற் சிலவரை வீசும்
விரிக டற்களிற் சிலவரை வீசு
மாதி ரங்களிற் சிலவரை வீசு
மறலி யூரினிற் சிலவரை வீசு
மீது போலவே யமர்பல வியற்ற
வெருவை நீர்விரிந் திருங்கடற் புகுதப்
பூத லந்தனிற் பூதர்கள் பல்லோர்
பொன்றி னூரவன் புகுந்தனன் றேர்மேல். 250

ஈது கண்டனன் பூதர்மன் னவரி
லெரிகொள் கண்ணினு னெதிரணை ந் தவுணன்
மீது தண்டமொன் றெறிந்திட வதுபோய்
வெய்யன் வையமேன் மேவுசீர் வலவன்
றீது கொண்டிடு சிரந்தனைக் களையச்
சிங்க மாமுகன் சீறியே யொருதண்
டாதி மாமகன் பூதமன் னவன்மே
லழுந்த விட்டுழி யயர்ந்துநின் றனனே. 251

தேரின் மீதொரு பாகனை நிறுவிச்
சிங்க மாமுகன் சீறிவந் தணுகப்
பாரி னோர்புகழ் சுமாலியென் பவனோர்
பருப்ப தந்தனைப் பறித்து நேர்விடுப்பச்
சீரு லாவுதன் கரத்தினுற் பிடித்துத்
தீதில் பூதன்மேற் றிரும்பவிட் டிடலும்
வீர முற்றிடு சுமாலிதன் னுரத்தில்
விரைந்து பட்டிட மெலிந்தனன் விழுந்தான். 252

அனைய காலையிற் றண்டியென் றெருவ
னவுணன் வையமுற் றவன்றன துரத்திற்
கனமு றுங்கரக் கதையினு லடிப்பக்
கதையொ டிந்தது கரங்கொடு புடைத்தான்
றனது தாளினு லவுணனங் கிவனைத்
தள்ள வீழ்ந்துபின் றண்டிவிண் ணெழுந்து
சினம தாயவன் றேரின்மேற் பாய்ந்து
செய்ய தாளினுற் றிறலொடுந் துவைத்தான். 253

செறிந்த தோள்களிற் கரத்தினிற் சிரத்திற்
சென்று சென்றுவன் றிறலொடுந் துவைப்ப
வறிந்தி லானதை யரிமுகத் தவுண
னுக மீதிலோ ரிகொலென் றெண்ணிச்
சொறிந்து கையினுற் றுடைப்பநொந் திரிந்தான்
றுலக்க வெண்மரு மிலக்கரு மெதிர்ந்தெண்
ணிறந்த வாளிகள் சொரிந்திடப் படிமே
லிழிந்து வந்தன னிழிதொழில் பயின்றேன். 254

எடுத்தெ றிந்தனன் சிலவர்தந் தேரை
யிலங்கு மொன்றினே டொன்றுதாக் குறவே
யடித்தல் செய்தனன் சிலவர்தந் தேரை
யங்கை யாற்சில தேர்தனை யள்ளி
யொடித்த னன்சில தேர்களை யுதைத்தா
னுரைத்த விப்படி யனேகமங் கியற்றப்
படித்த லம்புகழ் வீரர்க ளிரிந்தார்
பரிந்து தேரிலப் பதகனே றினனே. 255

வேறு

காரிலகு பூதரொடு தம்பிய ருடைந்தசெயல் கண்டான்
வீரமுரு கற்கிளைய நாதனுள மீதினில் வெகுண்டான்
கோரமொ டிருந்ததொரு கைச்சிலை தனைக்குனிவு கொண்டா
னேரிறையின் முன்கணை சொரிந்தவுணர் தானையுயி
ருண்டான். 256

கரங்களை யறுப்பன பதங்களை யறுப்பன கவின்றோ
யுரங்களை யறுப்பன புயங்களை யறுப்பன வுரக்கந்
தரங்களை யறுப்பன கலன்களை யறுப்பன சயஞ்சேர்
வரங்களை மிகப்புனையும் வாளின்மொய்ம் பாளிவிடு வாளி.

மாறவுணர் சேனைபல தூளிபட வாளிகொடு வள்ளல்
சீறியமர் செய்தலு மரிப்பெரு முகன்றனது சேயோர்
நூறெனு மிலக்கமுடை யாரவ ரெதிர்ந்தனர் நுதிக்கோல்
வீறுமுகி லாமெனவிடக்கணைகள் வீரனும் விடுத்தான். 258

விடுத்தவை தடுத்தவ ரெடுத்தசிலை தேரைமிகு வெங்கோ
ளெடுத்தவ னழித்திட மனத்திடை சினத்தவர்க டுவாள்
பிடித்தம ரியற்றுற விளிக்கந விரப்படை பிடித்தே
படித்தல மதிப்பொடு குதித்தவர் தமக்கெதிர் படர்ந்தான்.

வாளது பிடித்துவரு மண்ணலெதிர் வந்தனர் வளைந்தார்
தோளிடை யுரத்திடை கரத்திடை யெறிந்தனர்க டுயோன்
கோளுருவி லூறிலது கண்டனர் பிடித்தனர் கொதித்தே
யாளரி முகன்குமரர் சிந்திவிழ வாள்விசிறி யட்டான். 260

அங்குலவு மைம்பதுட னைம்பதெனு மைந்தர்தமை யட்டே
துங்கமுறு வீரர்கட ளிற்றலைமை பெற்றதொரு தூயோன்
பொங்குமிமை யோர்புகழ வையமுறு வையமிசை புக்கான்
சிங்கனிது கண்டுளம் வெகுண்டணுகி மொய்ம்பனொடு
செப்பும். 261

ஈனமில்கு மாரனலை யெண்மர்களி லோவல திலக்க
மானவரி லோவலதெம் மூரினிடை தூதுவரு வானோ
வானவிவர் தங்களிலி யாரெனலும் வீரமுறு மண்ணல்
வானவர் குலத்தினை யலைத்தகொடி யோனொடு வகுப்பான்.

ஆதியரு ளுங்குமர னாயக னடிக்கடிமை யானேன்
றூதனென வந்துமது நற்பதியை முற்பகறுலைத்தே
னீதமறு மும்மையட நின்றனனி யானென நிகழ்த்திக்
கோதறு தனாதுபெய ரோதினன் மிகுத்தவிறல்
கொண்டான். 263

என்றிடலு முன்றனை யுனக்கிறை தனைக்கடி திறைக்குள்
வென்றிடுவ னென்றிட வெகுண்டுபதி னெண்கணை
விடுத்தான்
சென்றவ னாரத்திடை செறிந்தது முறிந்ததொரு தண்டந்
துன்றரி முகத்தன்விட நாலுகணை கொண்டது துணித்தான்

வேறு

தீதில் வீர னாயிரஞ் சரத்தினைப் பகைத்தவன்
சிரத்தினிற் செலுத்தவே செறிந்தொ டிந்து போயதா
லேத மான சிங்க னங்கொர் சூலவேல் விடுப்பவே
யிராயிரஞ் சிலீமுகங்க ளினைய வீர செய்யவச்
சோதி கொண்ட சூலமச் சரத்தைநூறி வாதிடத்
தூய வீரன் வாள்கொடே துணித்தனன் றுணித்தபின்
பாதி தன்ப டைக்கலத்தை யவுணன் மீதி லேவினா
னவனு மன்ன தேவினா னமர்புரிந்த திருமையும். 265

வீறு கின்ற படைகள் பின்பு விட்டு ளாரை மேவவே
வீரவாகு நெஞ்சமேல் வியந்து பத்தின் மீதினா
லேறு கின்ற கணைக டூவி யரிமு கத்த னிரதமே
லிலகு பாகன் முடிய றுப்ப விருமை கொண்ட
தண்டமொன்
றூறி லாத சிங்க னுந்த வுந்து மார்பில் வந்துபட்
டொல்லை தூள்பொ ருந்த வேயொ ராயிரஞ்சரங்களைச்
சூறை யென்ன விட்டு வெய்ய னேறு தேரை நூறவே
தூய பூதர் கண்டு சென்று சுற்றி னார்க ளவுணனை. 266

அந்த வேலை சீறி வெய்யன் வேறு தேரி லேறியே
யாயி ரந்த னுப்பி டித்த ருஞ்ச ரம்பொ ழிந்துநேர்
வந்தெ திர்ந்த பூத ரைப்பி ணம்ப டுத்தி யெங்கணும்
வாளி யான்ம றைப்ப வீரன் வாளி யால றுத்தவன்
சிந்து கோல்வி லக்கிநிற்ப வாயி ரத்தி ரட்டிகோ
டியன் விட்டு வள்ள றன்றி ருத்த னுத்த னைத்துணித்
துந்து வீரன் விற்பி டிக்கு முன்னர் நூறு கோடிகோ
லூரத் தழுத்த வீறு சோரி யுததி போலெ ழுந்ததே. 267

வெய்ய சூர்த னுது தம்பி வெம்பி விட்ட கோலெலாம்
வேல வன்ற னுதுதம்பி விற்ச ரத்த றுத்தவன்
செய்ய தேரையாயி ரஞ்ச ரத்தி னுல ழிக்கவே
சிங்க மாமு கத்தன் வேறு தேரின் மீதி லேறினுன்
கைய னுந்து கையி லூற்ற பத்து நூறு வில்லையுங்
கந்த னன்ப னெண்ணி லாத கணைசொ ரிந்த ழித்திட
வைய முற்ற வான முற்ற சார தக்கு ழாங்களும்
வான வக்கு ழாங்களு மகிழ்ந்தொ லித்து நின்றவே.

மற்றிவ் வேலை வெகுளி கொண்டு சிங்க மாமு கத்தினேன்
மாய மான பாசம் வீச மாசி லாத பூதரைக்
கொற்ற முற்ற வெண்ம ரைத்து லக்க மாமி லக்கரைக்
கோளு றும்பு யத்த னைக்கொ தித்து வந்து கட்டியே
வெற்றி கொண்டு விண்ணெ ழுந்து துண்ணெ னப்ப
டர்ந்துபால்
வேலை தன்னி லுதய மான வெற்பி லிட்டி ருந்ததா
லுற்ற தேவ ரீது கண்டு வாடி னுர்க ளோடினு
ருலவை சென்று முருக னேடு ரைப்ப வங்கெழுந்தனன்.

மிக்க தேரின் மீதி லேறி வீறு பூத ராயிர
வெள்ள மும்ப ரந்து சூழ விண்ணு ளார்பு கழ்ந்திடத்
தக்க பல்வி யந்த ழுங்க மன்னு சின்ன மூதிடத்
தான வன்ற னுது முன்பு சண்மு கத்த னணுகவே

மைக்க ருங்க டற்புரைந்த வவுணர் சேனை வெள்ளமும்
வள்ளலோடு வந்த பூத மன்னர் சேனை வெள்ளமு
மக்க ணம்ப டைக்க லஞ்சொ ரிந்து போர்பு ரிந்தபோ
தவுணர் மாய வீறு பூத ரவரு மாய்வ தாயினர். 270

## வேறு

இப்பான்மை கண்ட வரிமா முகத்த
னிகல்கொண்ட பூதர் குழுவைக்
கைப்போது கொண்டு மிகவாரி யின்று
கடிதுண்ப னென்று கருதி
மெய்ப்பான வண்ட முடிவைச் சிரங்கள்
விறலோடு சென்று தொடவே
துப்போடு மங்க ணொருமேனி கொண்டு
சுரரஞ்ச வீது புரிவான். 271

கல்லா மனத்த னிருபத்து நூறு
கரமுஞ் செலுத்தி விறல்சேர்
சல்லாப மோடு குகனோடு வந்த
தசநூறு வெள்ள வனிக
மெல்லா மகட்டி னிடைசேர வாரி
யினிதாய் விழுங்க வெழில்சே
ரல்லார் களத்த னுமையாள நல்கு
மமலன் றனித்த ருளினன். 272

இவ்வேலை தன்னின் மிகுமொற்ற ரேகி
யிறையான சூர னுடனே
செவ்வே நிகழ்ந்த சொலவே மகிழ்ந்து
சிகரத்தி னுச்சி மிசைபோ
யவ்வேலை தம்பி சமர்கண் டிருப்ப
வவனேவல் கொண்டு திறல்சேர்
மைவேலை யென்ன மிகுசேனை பின்னு
மருவிற்று யுத் தகளமே. 273

ஈடான சிங்க ளெதிராக வீறு
    மெழிலாக வேல னணுகக்
கூடா திறைந்த வவுணப் பதாதி
    குகன்முன் பணிந்து படைதூய்
வாடா விறற்கொண் முருகேசன் வில்லின்
    வலியான நாணரி ஞெலியால்
வீடா வழிந்த ததுகண்டு தீயன்
    விறலோடு வந்து மொழிவான். 274

பொன்னுட ரெங்கள் பகையாதல் கண்டு
    புலவோரை யின்னல் புரிவோ
மன்னுரி லல்லை பகையல்லை யென்கொ
    லமர்செய்ய வந்த வகையென்
ளுென்று னிசைப்ப வெளியாரை மொய்ம்ப
    ருறுகண் குயிற்றி லவரைப்
பன்னுளு நூறி யரசாள்வ மன்ன
    பரிசா லடைந்த னமரோ. 275

என்றீ துரைப்ப வலியாள னீயு
    மெனியார்க ளெங்க ளினமு
நன்றீது வல்லை யமர்செய்தி யென்ன
    நலமார் குமார ளுெருகோன்
முன்றீய வன்றன் மருவத் தழுத்த
    முதுகிற் பறிந்த ததனுல்
வன்றீ நிகர்த்த கொடியோ னுடம்பின்
    மலிசோரி வந்த தவனே. 276

உள்ளுற்ற பூத ரதுபோதில் வேல
    ளுெருகோ றுலைத்த வழியான்
மெள்ளத் தலத்தி னிழியச் சினந்து
    வெளியைக் கரங்கொ டடையாக்

கள்ளூற்ற தொங்கன் முருகேசன் மீது
கதையொன் றுகைப்ப வமலன்
வள்ளூற்ற நாலு கணைசிந்த வேகி
வருதண்டை நூறி யவைபோய். 277

மங்காத சிங்க னுதல்சென் றௌிப்ப
மயலோடு வெய்ய னுறவே
சிங்கார மேவு மவன்முன் படைத்த
திறல்கொண்ட பாணி நெகிழ
வெங்காய மிஞ்சி யுறுகின்ற பூதர்
விறல்வாளி பட்ட வெளியா
லங்காய வேலை கடிதே யிறங்கி
யமலன்றன் முன்ப ணுகினர். 278

அப்போது தன்னி லுதயச் சிலம்பி
லருள்கொண்ட வேல னொருகோ
றுப்போ டுகைப்ப வதுசென்று வீரர்
தொகையைத் தனுது மிசையே
மெய்ப்போடு கொண்டு கடிதே திரும்பி
விறல் வேலன் முன்பு விடவே
மைப்பாவு கண்டன் மகனங் கவர்க்கு
மகிழ்வாக வோதி னனரோ. 279

அக்காலை தன்னி லிதுகண்டு சீறி
யரிமா முகத்த னனிக
மிக்கா ரிலாத குமரேசன் முன்பு
விரைவோடு வந்து வளைய
நக்கா னளப்பில் கணைமாரி தூவி
நலியத் தொலைப்ப விடரிற்
புக்காண்மை யின்றி யுறுகின்ற வெய்ய
னிதுகண் டழுன்று புரிவான் 280

தூருன பத்து நெடுவிற் பிடித்து
நுதி வாளி சிந்தி முருகன்
சீரு விடுத்த கணையைத் தடிந்து
திறல்கொண்ட சிங்க முகவன்
மாருக வேல னிரதத்தி லுற்ற
வலவன்றன் மார்பி னிடையே
வீருயி ரங்கொள் கணைசிந்த நொந்து
மெலிவா யிருந்த பொழுதின். 281

ஐயன் சினந்து கணைநூறு,சிந்தி
யரிமா முகங்கொ ளவுணன்
வையங் கெடுப்ப நிலநின் றளப்பில்
வடிவாளி வெய்யன் விடவே
கையன் றனுக்க டமையாயி ரங்கொள்
கணையா லொடிப்ப வவுணன்
மெய்யன்றன் மீதி லொருசூல முந்த
விறல்வேல னீது புரிவான். 282

ஈரேழ தான கணைசிந்தி முந்தி
யெதிர்சூல நூறி யடுகோ
லோராயி ரத்தை யவனோர் விடுப்ப
வுரமேவு சிங்க முகவன்
சீரான கையி லொருதண்டு கொண்டு
சிதறப் புடைத்து வரவப்
போரார் கரத்தை யெழுவாளி கொண்டு
புனிதன் றடிந்த ருளினுன். 283

மெய்ப்பாணி பின்பு மெழவெய்யன் வையம்
விழுதண் டெடுத்து விடலுந்
துப்பாயி ரங்கொள் கணைகொண்டு தண்டு
துணிசெய்து வேல னுறவே .

கைப்பாச முந்த விறைபத்து நூறு
கணைகொண் டழிக்க வதனுன்
மைப்பாவி யாறு முகனைப் பிடிக்க
வலியோடு வந்த னனரோ. 284

ஆறு முகத்த னதுகண்டு வந்த
வவுணான் கரஞ்சி ரமெலா
மூறுகி வீழ விருபத்து நூறு
டொருபத்து நூறு கணையைச்
சீறு விடுப்ப வவைபின் பெழுந்து
செறிவாக வெய்யன் வெகுளா
மாறுக வெண்ணில் வரையைப் பிடுங்கி
வலியோடு வீசு தலுமே. 285

வரையற்று வந்த வரையற்று வீழ
வலியற் றிடாத முருகன்
புரையற்ற வாளி மிகவே பொழிந்து
புகழ்மேவு கின்ற வவுண
னிரையுற்ற சென்னி யுரமுற்ற கைக
ணிலமுற் றிடத்த டியவே
விரைவுற்று மண்ணில் விழுமுன்பு பின்பு
விறலோ டெழுந்த வவையே. 286

சிங்கார மேவு கரமுஞ் சிரங்கள்
சிதறித் திரும்ப முளையா
துங்கார மோத விருபாணி யோடு
மொருசென்னி யோடு மெதிர்வந்
திங்கா ரெனக்கு நிகரென்றோர் குன்ற
மிகலிப் பறித்து விடவே
கங்காளன் மைந்த னொருவாளி கொண்டு
கடிதே துணித் தருளினன். 287

மால்விட்ட வும்பர் சிறைவிட் டிடாது
மறமுற்ற சூர னிளையோன்
வேல்விட்டு வென்றி கொளுமாறு மன்றி
விடுகின்ற தொன்றை விறல்சேர்
கோல்விட் டழிக்கு மிதுவே யலாது
குமரா பயின்றி லைகொலென்
றூலத்தை யொத்த வொருதண்டு தன்னை
யடலோடு விட்ட பொழுதின். 288

வீருன தண்டு வருசெய்கை கண்டு
விறல்கொண்ட கந்தன் வெகுளா
மாருன வஞ்ச னுயிருண்டு வல்லை
வருகென்று கையின் மருவு
மூருன தற்ற குலிசந் தொடுப்ப
வுரனோடு சென்று கதையை
நீருக நூறி யரியா முகத்த
னெடுமார்பி னுற்ற ததுவே. 289

மார்பிற் பொருந்தி முதுகிற் பறிந்து
வலியோடு செல்ல வவுணன்
சோரிப் பெருக்கி னுடனே விழுந்து
துயரத்தி னோடு மடியக்
கூர்பெற் றிலங்கு குலிசம் படர்ந்து
குளிர்வா னதிக்கு ணமுழுகிக்
கார்பெற்ற கண்ட னருண்மைந்த னுந்து
கரமீது வந்த திறையின். 290

நாகத்தி லும்பர் மலர்மாரி தூவி
நனிபாடி யாடி மகிழ
வாகைக் குமார னிளையோர்க டாமு
மலிகின்ற பூதர் குழுவு

மோகைக்குண் மூழ்கி யயலே பொருந்த
வுயர்பா சறைக்க ணுகிறு
ஞகுற்ற வேலே யிதுகண்ட வொற்ற
ரசுரேச னேடி தறைவார். 291

உன்றம்பி யான வரிமா முகத்த
னுயிர்போய் மடிந்த னனெனுக்
குன்றம் புரைந்த சிகரத் திருந்த
கொடியோ னிலத்தின் மிசையே
துன்றும் புனற்கொண் முகில்போல் விழுந்து
துயரக் கடற்குண் முழுகி
மின்றங் கெயிற்று விறல்வாய் திறந்து
மிகவே புலம்பி யழுதான். 292

சூரபன்மன் வதை

ஓங்குதுயர் நீங்கியொரு கோடியெனு மாயிரமு
ளுற்றார்களை யொல்லை விளியாத்
தீங்ககலு மாயிரவொ ரெட்டளவை யண்டமுறு
சேனைக ளனைத்தும் வரவே
யாங்குற வணைந்துபுகல் வீரென விரைந்தவர்க
ளண்டமுள வண்டி யறைய
வாங்கரு மிருந்திறல்கொ டானவர்க டானைபல
வந்தவுய ரண்ட வழியால். 293

வேதநெடு மாதவ னுறும்பதி நிறைந்தன
விசும்பிடை நிறைந்த னவெழிற்
பூதல நிறைந்தன பெருந்திசை நிறைந்தன
புகழ்க்கட னிறைந்த னநெடும்
பாதல நிறைந்தன வியாவையு நிறைந்தன
பரந்துவரு தூசி யனிக
மாதரவி னூறுபெறு கோடியுறு யோசனையிவ்
வண்டமு நிறைந்த விறையின். 294

இன்னபடி தானவர்க டாஜையுற வொற்றர்க
ளிருந்திறல் பொருந்து மவுணன்
பொன்னடி பணிந்திவை யுரைத்திட விருப்பொடு
பொருக்கென விருக்கை யிடைபோய்
மன்னுபுன லாடியினி தாமடிசி லுண்டுதிரு
நீறுநுதல் வல்லே யிலணிந்
தின்னலக லுங்களப மின்னுகல னனைவை
யிதம்பெற வணிந்த னனரோ. 295

ஆளிக ளிலக்கெழுப தாயிர மரும்பரிக
ளன்னதொகை யன்ன தொகையே
கூளிக ளிழுத்திடு மிழுக்கிலிர தத்தின்மிசை
கொற்றமொ டணைந்த வுணர்கோன்
வாளில கெயிற்றவுணர் சேனைபுடை சூழ்தர
மறந்தரு பறந்தலை தனிற்
காளியொடு வாதுநட மாடிமக ளேடமர்
கலந்திட வணைந்த பொழுதின். 296

செங்கமல வேதனுட னுந்துமரி கந்தனது
செம்பத மிறைஞ்சி யவுண
னிங்கமர் புரிந்திட வணைந்தன னெனக்குக
னெழுந்தனில சார திவிடும்
பொங்கணிகொ டேரணுகி வீரரொடு சாரதர்
புகழ்ந்தயல் பொருந்தி வரவே
தங்கவுணர் சேனையெதிர் செல்லமிகு பூதரொடு
தானவர் மலைந்து பொருதார். 297

விறிவரு தானவர்க ளாகிலகு பூதர்கள்
வீளிந்திட விலக்க முடனெட்
டேறுதனி வீரர்க ளடைந்துடைய மொய்ம்புறு
மிரும்புய னெதிர்ந்து கணைதூய்ச்

சீறியவ ரிற்சிலரை நூறியழி யாவது
தெரிந்துமுரு கன்பு டைவரக்
கூறியிடு மிந்தவகை கண்டருளி வெஞ்சிலை
குனித்தன னனித்த மணையான். 298

மன்னுதனு விற்கணை யளப்பில தொடுத்தருளி
வானமொடு வைய கமுமாய்த்
துன்னுமவு ணப்படை பிணக்குவை படும்படி
துலங்குமுரு கன்பு ரியவே
யன்னசெயல் கண்டுமிக வண்டகட கத்தின்மிசை
யப்புற மிருந்த வனிக
முன்னென வணைந்துகும ரேசனை வளைந்திட
முரட்குமர னீது மொழிவான். 299

மையவுணர் சேனையிடை தேரினை விடுத்தியென
மாருதியி னோடு றையவே
யையவிது நன்றென நிலத்தினில் விசும்பினி
லளக்கரில் விடுப்ப முருகன்
பெய்யுமுகி லென்னமிகு வாளிகள் சொரிந்தருள்
பிரிந்தவவு ணப்ப டையெலா
மொய்யென விறந்துதிர மோடுபிண மாயிட
வுலாவியமர் செய்த ருளினான். 300

சீகர முலாவுமெழு சாகரமு மாகமொடு
தேவர்க ணிறைந்த வுலகுஞ்
சூகர நிறத்தவுணர் சேனைபிண மாகநனி
துன்றவெழு கின்ற குருதி
வேகமுட னேழ்பிலமு மண்டலமு மெண்டிசையும்
விண்ணகமு நண்ணி நிறைய
வாகைமுரு கன்றகுவர் சேனைவரு மண்டவழி
வாளிகொ டடைத்த ருளினான். 301

பாலன மொழிக்கௌரி பாலனது பின்புதழல்
பன்னிருக ணும்பொ லியவே
மாலனுகு தானவர் பிணத்தினிடை கண்ணுறலும்
வாரிநிகர் சோரி யதெலாஞ்
சாலவும் வறந்தது நிறைந்திடு பிணக்குவை
தணந்துபொடி யாகி யதுசீர்
மாலயனு மிந்திரனு மும்பர்களும் வேலனை
வழுத்தினர் மகிழ்ச்சி யுறவே. 302

எம்பரம னின்னன புரிந்தது தெரிந்துள
மெரிந்திட விரைந்த வுணர்கோ
னம்பக மிராறுடைய நம்பனெதிர் தேரினெடு
மாலமென வந்த னுகலுங்
கும்பமத யானையுரி கொண்டவ னளித்தருள்
குமாரனு மெதிர்ந்த ருளினு
னும்பர்கள் பெருஞ்சிறை விடாதுயர் விடுப்பவ
னுருத்திவை யுரைத்தி டுவனல். 303

இன்புறு பரன்றரு வரத்தியல்பி லெப்பொழுது
மிப்படி யிருப்ப னழியே
னென்பணி புரிந்துழலு மும்பர்மொழி மெய்ம்மையென
வெண்ணரியம ருக்க னுகினும்
வெந்படினு முன்றனை விடுப்பதிலை மைந்தனென
விட்டிடுவ தில்லை யெனவே
வன்புமன வெய்யனிது கூறவெமை யாளுடைய
வள்ளலுரை செய்த ருளுவான். 304

உம்பரை யலைத்ததொரு வெங்கயவ வம்புரை
யுரைத்தனை யுறுது ருவினிற்
செம்புனல் குதித்திட வியாம்விடு பெருங்கணைகள்
செப்பிடு முனக்கு மொழியென்

றெம்பரம ஞேதலு நெடுஞ்சிலே வளைத்தன
ளிருந்திறல்கொள் பூதரெவரும்
வெம்பியவு ணன்றனே வளைந்தவன் விடுங்கணைகண்
மெய்ப்பட வுடைந்தனரரோ. 305

இன்னசெயல் கண்டுதிறன் மொய்ம்பனுடனென்மரு
மிலக்கருமெதிர்ந்த வுணன்மேல்
மின்னுகணை மாரியின் விடுப்பமிசை பட்டவை
விரைந்தவனொடிந்து விழலு
மன்னவுண ஞறுபெறு கோடிகணை சிந்தியவர்
வையமொடு வில்லினையறுத்
தந்நிலையி னன்குபெறு மாயிர நெடுங்கணையை
யங்கமிசை விட்டனனரோ. 306

எண்மரி லிலக்கர்கள் கலக்கமொடிரிந்தன
ரிருந்திறல்கொள் வாகு வவுணன்
திண்மையுள தேரனுகி வாள்கொடவனீள்சிலே
சிதைக்கவனே யோனே யவுணன்
வண்மையுறு மார்பிடை யடித்துழி விழுந்தயர
வான்மிசை யெறிந்தனனறிந்
துண்மையுறு கந்தனயன் மேவவவு ணன்சிலேகொ
டொல்லேருகன் முன்குறுகினுன். 307

வெந்திறல்கொள் வேலனெடு விற்சமர் புரிந்தவன்
விடுங்கணை விலக்கி விறல்சேர்
கந்தனிரதத்துறு விறற்கொடி யறுத்துழி
கறுத்தவன் விடுங்கணையெலாஞ்
சிந்தும்வகை செய்துகணை யேழுகொடு சூரனுறு
தேரினி லுறுங்கொடியறுத்
துந்துதிரை வேலேதனி லிட்டருண வானமுறு
மும்பர்களொலித்தனரரோ. 308

அன்னவ ரொலித்தலு மழன்றிரத மோடவுண
ரண்ணலுயர் விண்ணி டையடைந்
தின்னலுற வும்பர்மிசை வெம்பகழி தூவலு
மிளங்குமர னின்று புவிமேற்
றுன்னுகணை விட்டவை யறுத்திலகு வையமொடு
துய்யகக னத்தின் மிசைபோ
யொன்னல னெடுங்கணை பொழிந்தழர் புரிந்தன
னுமைக்கினிமை யான புதல்வன். 309

பிலத்தினிடை போவன நிலத்தினிடை மேவுவன
பேசரிய வாசை களினுந்
தலத்தினிடை யோடுவன நீடுகடல் கூடுவன
சையமிசை யெய்து வனசீர்
மலர்த்தவி சயன்புவியி னண்டுவன மண்டுகடல்
வாளகிரி தாவி யழியா
நலத்தொடுறு மண்டமுன மேகுவன மீளுவன
நண்ணுமவர் வண்ண விரதம். 310

இன்னபரி சன்னவர்க ளேறுமிரு வீறிரத
மெங்கணு முலாவு பொழுதின்
மன்னவுணர் மன்னளவில் வெம்படை விடுப்பவவை
வாளிகொடு தூளி புரியா
வின்னமுத மானமுரு கக்கடவு ளேழினுட
னேழுகணை விட்ட வுணர்கோன்
பொன்னிரத நீறுபட நூறுதலும் வில்லினொடு
பூமிசை யடைந்த னனரோ. 311

வையமிசை வந்ததொரு சூரன்மிசு வாளிவிட
வாளிகொ டறுத்த ருளியே
வையனெதிர் சூரனது வீரமுது தோளின்மிசை
யாயிர நெடுங்க ணைகடா

னெய்யவவை பட்டவ ணொடிந்துவிழ வெய்யவ
னிராயிர நெடுங்க ணைவிடத்
துய்யகுகன் மொய்ம்பினிடை வாளிகள் பொருந்திமிகு
தூளிகள் பொருந்தி னவரோ. 312

பின்னுமவு ணன்சொரி சரங்களை விலக்குபு
பெருங்கணைக ளாயி ரம்விடுத்
தன்னவ னடற்றனு வொடித்திடலு மற்றுமொ
ரருஞ்சிலை பிடித்த வுணர்கோன்
மின்னுறு விசும்பினி லெழக்கடி து வேலவனும்
விண்ணிடை யெழுந்து பொரவே
மன்னவுணன் மண்ணின்மிசை பின்னும்வர நம்பரனும்
வந்தமர் புரிந்த ருளினன். 313

காசினியி னின்றவ னளக்கரிடை திக்கிடை
கவின்றரு பிலத்தி னிடைசீர்
வீசுபுகழ் மேருவிடை மாயனுல கத்தினிடை
மேவவவை தோறு மணுகிப்
பூசன்முரு கன்புரிய வண்டமுறு வாயிலிடை
போகவவ னுங்கு றுகியே
நீசனொ டெதிர்ந்துவிறல் பட்டகணை விட்டவுண
னெட்டிரத மட்ட ருளினன். 314

தேரழிய முன்புரி மகத்தினிடை யாதியருள்
செய்தமன வேக மதுவாம்
வீரமுறு தேரைநினை யக்கடிது வந்திட
விளங்கதனி லேறி யருளே
யாருமுரு கன்கணைகொ டண்டமுறு வாயிலை
யடைத்தகத வைக்க ணைகடுய்
வீரமொ டறுத்திடலு மப்புற மிருந்தபடை
மேவியது வேல னயலே. 315

வந்தபடை கந்தன்விழி பட்டிடலும் வல்லையின்
மடிந்ததய லண்ட மருவு
முந்துபடை வந்திட வுரப்பின னுரப்பலு
மூடைந்தகய லண்ட மருவும்
வெந்திற லுறும்படை வரக்கரமு றைம்படையை
வேலவன் விடுப்ப வவைபோய்
நந்தில்பல வண்டமுறு சூர்படை யனைத்தையு
நடுக்குற வடர்த்த வுலவி. 316

தந்திர முறும்படை கெடப்பர னளித்ததொரு
சக்கர மெடுத்த வுணர்கோன்
கந்தன்மிசை விட்டிட வதைக்குமர வேளொரு
கரங்கொடு பிடிப்ப வதுகண்
டந்தமி லுருக்கொடம ராடமுரு கேசனறி
வானபடை விட்ட டையலான்
வெந்திறல்கொண் மாயம தறுத்துழி யொருத்தனென
மேவினன் மிகுந்த கொடியோன். 317

வேறு

அப்போதினின் மிகுதானவ ரரசாயிர கோடி
யண்டத்தினு மண்டக்கடி தண்டிக்குமரேசன்
மெய்ப்பாரம ராடப்பினு மிப்பாரிடை வந்தே
மிகநொந்து மனத்தாயை நினைத்தானது போதி
னெப்பாரறு மவள்வந்திட நிகழ்வானவை யவளோ
டோதிப்படை யிற்பட்டவ ருய்ந்தேயெழு மாறு
செப்பாயெனப் புறவேலையி னொருசாருறு மமுதத்
திருவெற்பது வரிலாமெனச் செப்பிக்கரந் திட்டாள்.

இன்பாகிய வவுணன்றன திரதத்தினை யொருவி
யிறைவன்றரு சிங்கத்தி னெருத்தத்தி னணைந்தே
கொன்பாகிய வமுதந்திகழ் குன்றந்தனைச் சென்றே
கொடுவாவெனத்தேர்போயதுகொடுவந்ததுபடையின்

முன்பாடுறு மரிமாமுக னிரவிப்பகை முதலா
முடிவற்றிடு படைமுற்றவு முன்போலெழுந் தீண்டப்
பொன்பாவிய வுலகத்தவர் வெம்பூதர்கள் கண்டே
புலிகண்டிடு புல்வாயது போலத்தளர் வுற்றார். 319

கண்டானிது மண்டாதிரு கண்டானுடை வள்ளல்
கடுவுண்டவ னொடுவெம்படை கைக்கொண்டு விடுப்பத்
தண்டாவிற லவுணப்படை முற்றுங்கடி தட்டத்
தானுப்படை வேலன்புடை சாரக்கொடுஞ் சூர
னண்டாசிடர் கொண்டானிடர் விண்டாரிமை யோர்க
ளல்லற்புரி சூர்பின்ன ரருந்தேரை விடுப்பக்
கொண்டாடு நெடுந்தேரது கண்டார்க ணடுக்கங்
கொள்ளும்படி பொன்னென்று கொதித்தேகிய தம்மா.

ஏகித்திறல் வாகுத்தனை வாகுற்ற விலக்கத்
தெட்டான திறத்தோரை யிரும்பூதரை யெல்லா
மோகத்தொடு சோகப்பட வாரிக்கடி தண்ட
முகடுற்றது முருகேசன் முனிந்தோர்கணை விட்டான்
வாகைக்கணை சென்றிந்திர ஞாலச்சக டத்தை
வையத்திடை கொடுவந்திட வாகுத்தனை முதலோர்
சோகத்தினை யற்றார்குக னிரதத்தினை நிற்பச்
சொற்றானஃ தவணின்றது சூர்கண்டு வெகுண்டு. 321

மூதண்டமளாவுற்றிடு கோதண்டம் வளைத்தேழ்
முரணம்பு சொரிந்தானறு முகனுங்கணை தூவித்
தீதண்டிய சூர்வாளி விலக்கித்தச நூறு
திண்மைக்கணை சிந்திச்சமர் சிந்தித்திடு சூர்கைப்
போதண்டிய வில்லைத்துணி கண்டானது போதிற்
பொருமூவிலை வேல்கொண்டு புகழ்ச்சிக்கும ரேசன்
மீதண்ட விடுத்தானது கண்டாயிர கோடி
வெவ்வாளி சொரிந்தானருள் விகம்முரு கேசன். 322

வேலன்சொரி கோன்முற்ற விறற்சூல மறுத்தே
விரைவோடெதிர் வரவச்சிரம் விட்டானது சென்றே
சூலத்தலை கவ்விக்கும ரன்பாணி பொருந்தச்
சுடர்வேலவ னீராயிரந் தூவாளிக டூவி
யாலக்கொடி யோனுற்றிடு சிங்கத்தை வதைப்ப
வங்கத்துணை வெஞ்சத்தொடு வடலேமிகு கடலே
போலப்பொலி வெம்பூதர் வருந்தும்படி நேமிப்
புள்ளாயுரு வங்கொண்டெதிர்பொருதானெறி கருதான்.

துண்டங்கொடு கொத்திச்சிறை தன்னான்மிக மோதித்
துங்கம்பெறு வெம்பூதரைத் துயர்செய்தது திரிய
மண்டும்புக ழறுமாமுகன் மகவான்மயில் வடிவாய்
வரவுன்னலு மவனப்படி வந்தானவன் மிசையே
சண்டன்றனை யுதைசெய்தவ னருண்மாமக னேறிச்
சயமோடு துரந்தேகொடி தாயுற்றிடு புள்ளைக்
கண்டம்பட வாள்கொண்டு துணித்தானது போதிற்
கடலுற்றிடு விடமொத்திடு கடியோனிது புரிவான். 324

மண்ணாகியும் புனலாகியு மனலாகியும் வங்கூழ்
வடிவாகியு மண்டந்தொட வளர்ந்தேயவ னுறலும்
விண்ணாடர் வணங்காதிரு கண்ணார்முரு கேசன்
வீறுயவை மாறுகிய வெங்கோல்கள் விடுத்தே
யெண்ணானது மாயத்துரு மாயும்படி செய்தா
னிப்பான்மையி லிருநாளுட னிருநாள்வரை யவுணன்
பெண்ணாரு மருங்கண்ணனல் பெருங்கண்ணினிடை வந்த
பெருமானொடு பொருதேயிவை பின்னுஞ்செய லுற்றான்.

கூற்றாமென வொருபால்வரு மொருபால்வரு மிருள்போற்
குவடாமென வொருபால்வரு மொருபால்வருங் குறள்போற்
காற்றாமென வொருபால்வரு மொருபால்வரு மனல்போற்
கடலாமென வொருபால்வரு மொருபால்வருங் கடிபோன்

மாற்றுவிற லிளையோரென வொருபால்வரு மொருபால்
வயமைந்தர்க ளெனவேவரு மைவேலையின் முன்னந்
தோற்றுவரு விடமாமென வொருபால்வரு மொருபாற்
றுன்னும்படை யென்னும்படி சூழ்வுற்றிடுஞ் சூரன். 326

இப்பான்மையி லவுணர்க்கிறை யெங்கெங்கு நிறைந்தே
யிரும்பேரர்செய வரும்போதினி யிருள்கொண்டிடு
துப்பார்கனல் விழியோனருள் சுதனுயிர கோடி [கண்டத்
தூவாளிக ணேவாவவை தொலையும்படி புரியா
மெய்ப்பார்கட லெழுபுவி யேழும்பிற யாவும்
வீறொன்றிய தானல்லது வேறொன்றிலை யென்ன
வொப்பாகிய தில்லாவொரு வடிவங்கொடு நின்று
ளென்னிரு நயனங்களு முளமெங்களு முருக. 327

எங்குந்தன துருவாகி யிருக்கின்ற சொரூப
மெய்திக்குக ணிற்கும்பொழு தின்னற்புரி சூரன்
பொங்கும்புக ழன்போடு மதித்தேயது மாறப்
பொள்ளென்று சினந்தண்டர் புலம்பும்படி மாயந்
தங்கும்பல வடிவங்கொடு சமராடலு முருகன்
றனிவேலை விடுத்தானது தகுவற்கிறை கண்டே
சங்குந்திய வேலைப்புடை தடமாமர மாகிச்
சாரக்கதிர் வேல்சென்று தடிந்திட்டது மாதோ. 228

சங்கத்தியின் மேனின்றிடு மாவைக்கதிர் வேல்போய்ச்
சாயும்படி செய்திட்டுழி தகுவற்கிறை கண்டே
துங்கத்தன துருவங்கொடு பொரவேவரை மார்பைத்
துண்ணென்று பிளந்தண்டர்க ளுள்ளும்படி தன்னி
மங்குற்பொலி வானத்துறு கங்கைப்புன லாடி
வந்தேகும ரன்பாணி புகுந்தேகதிர் வைவே
லங்குற்றது வெஞ்சூர னிரண்டான பிளப்பு
மடன்மாமயி லொடுகுக்குட மாகிப்பொர வந்தான். 329

ஆறுந்திய முடிகொண்டவ னதுகண்டசு ரேச
னமராடி யிளைக்குஞ்செய லாலங்கவன் மீதே
யேறுஞ்செயல் போலப்பொலி நீலச்சிகி மேலே
யேறிக்கொடி தானுக விருஞ்சேவ லுயர்த்தான்
வீறண்டர்கள் கண்டேயறு முகனைப்பர வுற்றார்
வெஞ்சூர்முதல் பட்டானென விட்டாளுயிர் தேவி
யீறின்றிய வேலைப்புடை மீனுமிர ணியனங்
கிதுகண்டு புலம்பிப்புக ரென்பானை யடைந்தான். 330

அனைவர்க்கு மவற்கொண்டு சடங்கானது செய்தா
னறுமாமுக னடல்வாகுவை யருளோடு தெரிந்தே
மனமுற்றிடு துயரத்தொடு சிறையின்புடை வாழும்
மகவான்மகன் முதலாகிய வானோர்களை நந்தம்
முனமுய்க்குதி யெனமுன்புற வுய்த்தானவர் தொழுதே
மொய்த்தார்மிகு சூருரினை முந்நீர்கொள நல்கிச்
சினமெத்திய பூதப்படை விண்ணோர்புடை சூழச்
செந்திற்பதி வந்தானருள் சிந்தித்திடு கந்தன். 331

யுத்தகாண்ட முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 784.

## ஐந்தாவது

# தேவ காண்டம்

வண்மை தங்கு மயூர மிழிந்தே
மந்தி ரத்திடை வந்து புகுந்தே
திண்மை தங்கு மடங்க லணைக்கண்
டேவ ரஞ்சலி செய்ய விருந்தான்
விண்மை தங்கு துணைங்கறல் கொள்ள
வெள்ளை வண்டிரை வேலையி னூடே
யொண்மை தங்கு கனற்கதிர் வெய்யோ
னெய்யெ னப்படி வுற்று மறைந்தான். 1

ஆசை கொண்டுய ரண்டர்க ளெல்லா
மாறு மாமுக வண்ணன் மலர்த்தாள்
பூசை செய்து பராவினர் நிற்பப்
பொற்பு லாவு புகழ்த்தனி வேலோ
னேச முற்றம ரர்க்கருள் செய்தா
னீடு கங்கு னெடுந்திறல் வெஞ்சூர்
மாச றும்படி மாய்வுற வேல்போல்
வந்தெ ழுந்தனன் வண்மை யருக்கன். 2

மற்றவ் வேலையில் வேலையில் வேலை
வல்லை யேவிய வண்குும ரேசன்
புற்ற ராவின நண்ணிய சென்னிப்
புண்ணி யன்கழல் பூசை புரிந்தே
வெற்றி மஞ்ஞையின் மீது புகுந்தே
வீறு பூதர் மிடைந்தயல் சூழ
வற்ற மற்ற வெழிற்கொள் பரங்குன்
றத்தின் மேவின னண்டர் வழுத்த. 3

அண்டர் கம்பிய னன்ன வரைப்பா
லால யத்துட னுடக மாடங்
கொண்ட வீதி யிமைப்பி லமைப்பக்
கோல மஞ்ஞையி னின்று மகன்றே
மண்டு சுந்தர மந்திர முற்றே
வண்மை கொண்ட மடங்க லணைக்க
ணொண்ட விர்ந்த வுயிர்க்குயி ராகி
யிருக்கு நாத னிருந்தனன் மன்னோ. 4

துன்னு வானவர் தம்மை விடுத்தே
துங்க வீரர் சுலாவ விருப்ப
வன்ன போது பராசர னல்கு
மாறு மைந்தரு மாறு முகேசன்.
பொன்னு லாவிய புண்டரி கத்தாள்
பூசை செய்து புகழ்ந்திட லோடு
நன்ன லம்பெற வன்னவர் தம்பான்
ஞான போதக நல்கி யிருந்தான். 5

ஈது நின்றிட விண்ணவ ரண்ண
லின்ப முற்ற வெழிற்றெய்வ யானை
மாதெ னுந்தன தொண்மக டன்னை
மன்னி ருந்திறல் வண்கும ரேசற்
காத ரத்தொடு நல்குவ னென்றே
யாழி மாலொடு மம்புய னோடு
மோதி னனவர் நன்றிது நன்றிங்
கொல்லை செய்குதி யென்ன வுரைத்தார். 6

உம்பர் மன்னவ னுள்ள முகந்தோ
ரொற்றன் மாமுக மொல்லை தெரிந்தே
செம்பொன் மால்வரை மீது பொருந்தென்
றேவி தன்னொடு சீர்மக டன்னை

யிம்பர் நீகொடு வாவென வோத
வேகியின்ன திசைத்திட வன்னூர்
கும்ப மாமத வாரண மேறிக்
குன்று ருப்பரங் குன்ற மடைந்தார். 7

இந்தி ரன்ற னிருக்கையின் மாதோ
டிந்தி ராணி யிருந்தன ளங்க
ணுந்து சீருள சூரன தூரி
லுற்றி டுஞ்சிறை யற்றிடு மாதர்
வந்தி றைஞ்ச வுவந்தருள் செய்தே
மைந்த ஊைத்தழு வுற்று மகிழ்ந்தா
ளந்த வேலை வரைச்சிறை கொய்தோ
னறு மாமுக னலைய முற்றான். 8

சென்னி யாளுற தேவ னளித்த
சென்னி யாறுள தேவை வணங்கி
யென்னை யாளுடை நாயக னீயிங்
கின்ன குன்றிடை யென்றிரு மாதை
மன்ன மன்றல் புரிந்தரு ளென்ன
வாகை வேலுள மன்னவ னனை
யன்ன பான்மை யியற்றுது மென்ன
வண்ட ரண்ண லகத்துண் மகிழ்ந்தான். 9

அற்ற மற்ற மகிழ்ச்சி யடைந்தே
யால யத்தி னகன்கடை வந்தே
கொற்ற வொற்றர் முகங்க டெரிந்தே
கோதி லாமுசு குந்தனு மல்லா
வெற்றி மன்னரு மும்பரு மிங்ஙன்
மேவு மாறு விளங்கிய வைவே
னற்றி றற்றிரு நாயகன் மன்ற
னனை யென்று நவின்றிடு மென்றான். 10

எண்ணரி லொற்றர் விரைந்து படர்ந்தா
ரீது நிற்க வெழிற்குலி சக்கைக்
கண்டொ ராயிர விண்ணிறை தெய்வக்
கம்மியற்கொடு கந்த முலாவும்
வண்ண நீப நெடுந்தொடை மார்பன்
மன்றல் செய்திட மண்டப மன்றம்
விண்ணு லாவிய சோலைக ளெல்லாம்
வீறொ டும்புரி வித்தன னன்றே. 11

மிக்க வின்னது நின்றிட முன்னம்
வெள்ளி விண்டுவில் விண்டொடு காவி
விக்கு வேளை யெரித்த நுதற்க
ணெம்பி ரானுமை யோடு மிருப்ப
வக்க ணத்தின் முசுக்கலை யொன்றங்
காதி மீதினு மாரியை மீதுந்
தக்க வில்லுவ நல்லிலை சிந்தத்
தையல் சீறலு மையன் விலக்கி. 12

கூவி ளைத்தழை கொண்டெமை யிங்ஙன்
கோதில் பூசை குயிற்றிய பண்பா
னீவ ளைந்திட வேலை சுலாவு
நீள்பு விக்கர சாகுதி யென்றே
மாவ ளைக்கை யிடத்த னிசைப்ப
வைய கத்திடை வந்து பிறந்தே
காவ ளைத்த வயற்கரு வூர்வாழ்
காமர் சேர்முசு குந்த னிடத்தின். 13

மேக வாகன னெற்றர் படர்ந்தே
வென்றி வேலவன் மன்றல் விளம்ப
வோகை யெய்தி யெழுந்தனி கத்தோ
டும்பர் நாத னுறுங்கிரி யுற்றான்

சீக ரஞ்செறி சாகர மண்ணிற்
சேரு மன்னவர் யாரு மடைந்தார்
மாக நேரிடை மாதர்கண் மைந்தர்
வாவி காவி லுலாவி மகிழ்ந்தார். 14

ஆள காலையி லார்கலி யூடே
யாழி யொன்றுள வாடக வையப்
பானு மூழ்கினன் வந்தது கங்குல்
பங்க மற்ற பரங்கிரி மீதே
வேனில் வேண்முகசு குந்தனு மல்லா
வீறு மன்னரு மேறுபு வேள்விக்
கோலே வந்தனை செய்திட வன்னுன்
கோதி லாமுக மன்கள் புகன்றான். 15

அன்ன போதினி லாதவ னாதி
யண்டர் மாதவ ராரு மடைந்தார்
மன்னு வேல்விழி மங்கைய ரெல்லாம்
வார ணத்திரு மாதை யடைந்தே
பொன்னு லாமணி செய்தன ரன்ன
போது கோபதி போதினன் மாயோன்
மின்னு வேலவ னுலைய முற்றே
மிக்க வன்பொடு முன்பு வணங்கி. 16

வார ணத்திரு மாமக டன்னை
மன்றல் செய்திட வந்தரு ளென்ன
வார ணப்பொரு ளாகிய புத்தே
ளங்கெ ழுந்து மயூர மடைந்தே
தோர ணத்திரு வீதி புகுந்தே
துன்று வானவர் தூமலர் தூவப்
பூர ணக்கவின் மாதர் நடிப்பப்
பொங்கு பல்லிய மெங்கு முழங்க. 17

இன்ன போல வளங்கள் விளங்க
வெம்பி ரானினி தேகி மணஞ்செய்
கொன்னு லாவிய சாலேமு னீலக்
குன்றமஞ் ஞைுயி னின்று மகன்று
ணன்ன போது புலோமசை பால்கொண்
டண்ண ருளை விளக்கிய கன்றுண்
மன்னு வேலவன் மன்ற னிலம்போய்
வாள ரித்தவி சுற்றனன் மன்னே. 18

வேல னேவலின் மால்முதல் விண்ணோர்
வீறு தங்க விருப்ப விருப்பக்
கோல மாமுசு குந்தனு மற்றைக்
கொற்ற வானவ ருங்கும ரேசன்
பால டைந்து பணிந்தன ரங்கள்
பாரி டங்கள் பரிந்தயல் சூழ
வால முண்ட மிடற்றினன் மாதோ
டந்த ரத்திடை வந்தன னம்மா. 19

மங்கை தன்னொடு மான மிழிந்தே
மன்ற லெல்லையில் வந்திட வென்றி
தங்கு வேலன் மகிழ்ந்தெதிர் சென்றே
தந்தை தன்னொடு தாயை வணங்க
வுங்கெ டுத்தனர் புல்லின ரன்போ
டுச்சி மோந்தனர் மான்முத லும்பர்
மங்குல் கண்ட மயூரம தென்ன
வந்து வந்து வணங்கி மகிழ்ந்தார். 20

பூம ணம்புரி சாலையுள் வேலன்
பூவை யோடிறை வற்கொடு போக
மாம விந்தவ ரித்தவி சொன்று
வள்ள லாணையின் வந்தவன் மேவக்

காமர் கொண்ட வதன் கணிருந்தே
கந்த னைத்தம கைகொ டெடுத்தே
தூம ருங்கி லிருத்தினர் வேதன்
சூர்ம டிந்தது முற்று முரைத்தான். 21

எந்தை யன்னை விருவி மகிழ்ந்தே
யிங்கு மன்ற லியற்றுக வென்ன
வந்த ரத்திறை யேகி மகட்கொண்
டங்கண் வந்திட வந்தம டந்தை
நந்தி யோடுமை யானை வணங்கி
நாரி முற்படு நற்றவி சின்கண்
கந்த னுடைவ டன்னை யிருத்தக்
கண்டு கண்கள் களித்தனர் யாரும். 22

கற்பெ ருஞ்சிறை கொய்த வனங்கண்
கன்ன லொண்புனல் பன்னி விடுப்பப்
பொற்பு வேலிறை தாள்கள் விளக்கிப்
பூசை செய்து புராரி குமார
னற்க ரத்து மடந்தையை நல்கி
நல்கி னேனென நார முகுப்ப
வற்கன் மான விளங்கிய செவ்வே
ளங்கை தன்னிடை யங்கது கொண்டான். 23

அண்டர் போற்றய னங்கு விதித்த
வாசின் மங்கல நாணிணை யன்னுள்
கண்ட மீது தரித்தள கத்தோர்
கந்த நீடு கவின்றொடை சூடா
வொண்டி றற்பெறு வன்னி வலங்கொண்
டும்பன் மாதின தோதிம முட்க
மண்டு சீர்நடை தந்திடு தாளை
வல்லை யிற்சிலை மீமிசை வைத்தான். 24

இன்ன தன்மையின் மன்ற லியற்றி
    யீச னோடுமை யாளை வணங்க
நன்ன லம்பெறு பேரருள்செய்தே
    நாரி தன்னொடு நாத னகன்றான்
மன்னு வேலவ னங்கொரு வித்தன்
    மந்தி ரத்திடை மாதொடு வந்தே
பொன்னி னாடுள வாதியை யாதிப்
    போக வானவர் போக வுரைத்தான் 25

விண்ணு லாமிமை யோரை விடுத்தே
    வீரர் வாயிலின் மேவ விருத்தி
யெண்ணி லாவெழில் கொண்ட விருக்கை
    யெம்பி ராட்டியொ டெய்தி யதன்கண்
டண்ணி லாவிய மஞ்ச மணைந்தே
    தைய றன்னொடு தன்னிகர் பெம்மா
னுண்ணி லாவு விருப்பொடு வைய
    முய்ய நற்கல வித்தொழி லுற்றான் 26

வேறு

தாவி லும்பர் கடத்த மிருக்கையின்
மேவி னாரடல் வேன்முரு குந்தனு
மோவின் மன்னரு முந்த ளிகத்தொடு
பூவி லுள்ள புரங்களிற் போயினார். 27

மன்னு வெற்பில் வரையகல் வைகலெம்
மன்னை யோடு மமல னமர்ந்தரோ
பின்ன ரோர்பகற் பீடுவிண் ணோர்தொழக்
கொன்னு லாமக் குவட்டினை நீங்கினான். 28

தவள நித்திலச் சங்க முலாவிய
வுவள கப்பரங் குன்றை யொருவியே
பவள வார்சடைப் பண்ணவன் மைந்தனுந்
துவள மேவு துறக்க மடைந்தனன். 29

அன்ன காலை யமரர்கள் கம்மியன்
றன்னை யின்ன தலத்திடை முன்புபோ
லன்ன லங்கொ ணகர்புரி வாயெனத்
தொன்மை போலத் துறக்க மியற்றினன். 30

அந்த நாகத் தரசு புரிந்திட
விந்திரற்கங் கெழின்முடி சூடுவித்
தந்தி வான்மதி யானன மாதொடு
மெந்தை யங்ங னிருந்தன னெண்ணினன். 31

தேனு லாந்தொடைத் தேர்மிசை யேறியே
வான மேன்மக வானை யிருத்தியே
சேனை வீரருந் தேவியுந் தானுமாய்க்
கான மேவு கயிலையின் மேவினன். 32

மங்கை யீசன் மகிழப் பணிந்தெழுந்
தங்க ணின்று மருள்விடை கொண்டுசீர்
பொங்கு கந்தப் பொருப்பினின் மேவினன்
றுங்க வீரருந் தொன்மையில் வைகினர். 33

இன்ன பான்மை யிருந்திட வும்பர்கோன்
பொன்னி னொடு புரந்தர சாற்றுழி
மன்னில் மின்னிகர் வாழ்க்கை துறந்திடாத்
தன்னை நேர்கதி சார்ந்திட வெண்ணினன். 34

துறக்க வேந்த றுறக்க நினைந்ததைச்
சிறக்கு மும்பர்க டேசிக ேனார்ந்துவந்
தறக்க ருத்துல காயத மாமதத்
துறத்தி ருப்பின னூழ்வினை போலவே. 35

## வேறு

அன்னவ னுரைத்த பொய்யைமெய் யெனக்கொண்
டறிவிலா மகபதி சயந்தன்
றன்வச மாக வரசினை நிறுவிச்
சசியொடு கலந்துவீற் றிருப்ப
மன்னர சியற்றுஞ் சயந்தனங் கொருநாள்
வானவர் குருவினை நோக்கி
யின்னநா ளளவுஞ் சூரனுன் மெலிந்த
தென்கொல்யா மெனவவ னிசைப்பான். 36

தேவகாண்ட முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 820

## ஆறாவது

# தக்ஷ காண்டம்

முன்பொரு பகலி லிமையவர் பரவ
முளரியந் தவிசிடை முதல்வ
னின்புற விளங்குஞ் சத்திய வுலகத்
திருந்தன னிருந்திடு மெல்லைக்
கொன்பொலி யனையான் றனையரோர் பதின்மர்
குழுவிலிற் றக்கனுங் குரிசின்
மின்பொலி நுசுப்பு வாணிசேர் புயத்தோன்
வியன்முக நோக்கியே வினவும். 1

மொய்வள ரமரர்க் கிறையவ னாகி
மூவரி லுயர்ந்தவ னாகி
யெவ்வகை யுயிர்க்கு முயிரென விருக்கு
மியல்பினேன் யாவனென் றிசைப்ப
மைவள ருருவக் குரிசிலும் யானு
மாறுகொண் டூழியழல் வடிவாய்ச்
செவ்வொளி பரப்பி யெழுந்துவா னிமிர்ந்த
தேவனே யதிகமாந் தேவன். 2

என்றய னிசைப்ப வொருதொழிற் புரிவா
னிருதொழிற் செயுநுமக் கிறையாய்
வன்றிறல் படைத்த தென்கொலோ வெனலு
மைந்தகே ளெங்களைச் சுரரைத்
துன்றுபல் லுயிரை யீற்றின்மாய்த் திடலாற்
றோற்றுவித் தவனவ னன்றே
வன்றியு மவனே யெங்கள்பா லிருந்தீண்
டளித்தலும் புரத்தலு மருள்வான்.

எம்மொடு மொருவ னாகியோர் கிரியை
யியற்றுவான் போலவு மியற்றும்
பொம்மல தடைந்த வுயிர்தொறு மலரிற்
பொருந்திய விரையெனப் பொருந்துஞ்
செம்மைகொ ளவனே மறைமுதற் கலைக
டெரிந்தெமக் குணர்த்தலாற் றெளிந்தே
மம்மர்கொண் மனத்துப் பேதையா யினையோ
வவனையெம் போலநீ மதித்தாய். 4

எனவிதி புகல வவன்மக னவில்வா
னிறையவ னருளிய மறைக
ளனைவரு மனைத்தும் பிரமமென் றியம்பிற்
றைறயவீ தென்கொலென் றறையத்
தினகரச் செழுங்கட் பகவனைப் புகழ்த
றிண்ணமற் றவையெலா முகமன்
கனைகடற் புவியந் தணரையா னென்வே
கழறுதல் போலநீ காண்டி. 5

ஆதலா லவனே பதியெனுங் கடவு
ளருந்தலை பொருந்திய வனுநாங்
காதலா லவன தருள்பெறு மடியர்
கருதில்வா ராததொன் றில்லை
சூதலா லனைய முலைகுழ லகட்டுத்
தோகையோர் மருங்கினிற் றுலங்குங்
கோதிலா வரனை யடைதிநீ யென்றான்
குளிர்மலர்ப் பொகுட்டில்வாழ் குரிசில். 6

அல்லிமா மலர்மே லிருந்தவன் மொழிந்த
வமுதவா சகஞ்செவி புகுதச்
செல்லுறழ் மிடற்றோ னிறையென வெவர்க்குந்
தெளிந்துமா னதத்தடத் தடைந்து

மல்லல்பெற் றிடுவான் பரமனைக் கருதி
வருடமா யிரந்தவம் புரிய
வில்லன புருவத் துமையொடும் விடைமேன்
மேவினு னிணையிலா விமலன். 7

அன்னது தெரிந்து தக்கனெம் மடிக
ளடிகளை வணங்கிநின் றேத்த
வுன்னது கருத்தி லருத்தியே தனைய
துரைத்தியென் றுரைத்திட வுரைப்பான்
மன்னுமார் கலிசூ ழுலகும்வா னுலகு
மலரய னுலகுமா லுலகு
மென்னதா னையினின் றிடவுநிற் புகழ்வோ
ரெவரும்வந் தெனைப்புகழ்ந் திடவும். 8

எந்தைநின் னிடத்தி லிருந்திடு முமையா
ளெனதுமா மகளென வரவு
மந்தணன் வடிவா யணைந்துநீ மணஞ்செய்
தருளவும் வேண்டுமென் றறையக்
கந்தரங் கடுத்த கந்தரக் கடவுள்
கருணையா லிவையளித் தொளித்தா
னுந்துசீர் படைத்த சிறுவிதி மனத்தி
லோதிம வூர்தியை நினைத்தான். 9

அன்னவா கனத்தோ னன்னவா றறிந்தாங்
கடைந்துநின் றுசிக ளறையப்
பொன்னுலாம் புரிசைப் புரியெனக் கிவணீ
புரியெனத் தக்கமா புரியென்
றின்னதீர் பதியோன் றியற்றவங் கதிற்போ
யெழிலரித் தவிசின்மே லிருந்து
தன்னவா னவர்கோன் முதலினோர் பரவத்
தனியர சாற்றினுன் றக்கன். 10

மற்றவன் மனைவி யாயினள் வேத
வல்லியாம் பெயருடை மடந்தை
கற்றைவா ரளகத் தவடனை மலரோன்
காதலன் காதலாற் கலந்து
முற்றவந் தனிலா யிரஞ்சிறார்ப் பயந்து
முப்புரி நூல்விதி முடித்துக்
குற்றமின் மறையு மனையவர்க் குதவி
யினையன வாசகங் கூறும். 11

நீவிர்க ளெவரு முயிர்த்தொகை படைப்பா
னிமலனை நினைந்துமா னதத்தின்
மேவிநோற் றுளத்தின் விழைந்தது பொருந்தி
மீள்திரா லிவணென விடுப்பப்
பூவில்வண் டினங்க ளிரைக்குமத் தடத்துப்
பொருந்தியாண் டருந்தவம் புரிந்தா
ரோவில்சீர் படைத்த நாரத னவண்சேர்ந்
துயர்தவ நோக்கியீ துரைப்பான். 12

மெய்த்தவம் புரிவீ ரேதுகா ரணநீர்
வெஃகிய வியல்பென வினவ
வுத்தம முனிகேள் படைப்பது பொருட்டா
லுழந்தன மீதென வுரைப்ப
முத்தியைக் கருதா தவத்தொழில் புரிவான்
முன்னினீர் பவமிதென் றவர்தம்
புத்தியைத் திருப்பி யுண்மைவீ டளித்தான்
பொருவிலா ரதனெனும் புகழோன். 13

சேயினர் கதியிற் புகுந்தவா றுளத்தாற்
சிறுவிதி யறிந்துநோய் செறிந்தாங்
காயிரங் குமரர்ப் பயந்தவர் தமக்கு
மவர்க்குமுன் னவர்குரைத் ததுபோ

னேயமோ டியம்ப வவருமா னதம்போய்
நிகரிலா வருந்தவம் புரிந்து
தூயநா ரதனான் முன்புவீ டடைந்த
துணைவர்போ லின்பவீ டடைந்தார். 14

ஈதையு மறிந்து வெகுண்டுநா ரதனை
யெங்கனுஞ் சுழல்கவென் றிசைத்து
மேதரு புகழ்சேர் தக்கனோ மிருபான்
மேலுமூன் றாகிய வேற்கண்
மாதரை யுதவித் தருமனே முதலா
மாதவர்க் களித்திரு பானேழ்
கோதையர் தமையின் றவரைமா மதிக்குக்
கொடுத்திது சசியொடுங் கூறும். 15

னல்லவ ரிடத்து மருத்தியோர் படித்தா
யிருத்தியென் றிசைத்தனன் விடுப்ப
வல்லைவாண் மதியக் கடவுள்வா னணுகி
வளரொளி யிரலையே முதலாய்ச்
சொல்லிய விருபா னெழுவரா மடவார்
துணைமுலைக் கிரிகண்மேற் றோய்ந்து
மல்லலங் கலவி யாரமு தருந்தி
னழுநா ளூழ்வினை வலியால் 16

ஆரன்மா தினையு மவடனக் கிளைய
வணிகொண்மா தினையுமே யவாவிற்
சேருதல் புரிந்து துறந்தன றொழிந்த
தேவிமார் தமையவர் சினம்பூத்
தேருலாம் புகழ்தோய் தந்தைமாட் டணுகி
யிந்தவா றியம்பலு மனையா
னேரிலாச் சசிதன் கலையெலாங் கலைய
நிகழ்த்தினான் கொடியகூ ணிலையே. 17

ஐந்துட னுருபான் கலைகளோர் பகற்கொன்
றாகியே யழியவோர் கலையோ
டிந்திரன் புடைபோய் நிகழ்ந்தன விளம்பி
யென்செய்கே னிதற்கென விசைப்பச்
சுந்தரக் கமலத் தயனொடு துரைக்கிற்
சொற்றரு தநயனை யிரந்துன்
வெந்துயர்ப் பெருஞ்சூ ளகற்றுமென் றவன்பால்
விடுத்தனன் குலிசவேல் விடலை. 18

சீதள கிரணத் தவிர்மதிக் கடவு
டிசைமுகத் தொருவனைச் சேர்ந்தாங்
கோதின னிகழ்ந்த வினைதுகான் முனைக்கி
துணர்த்திநோ யொழித்தியென் றுரைப்பப்
போதமில் கொடிய னெனதுரை மதியான்
புகலில்வெஞ் சீற்றமே புரியு
மாதுபா கனை நீ யடைதியென் றறைய
மருவினன் கயிலைமால் வரையில் 19

நந்தியெம் பெருமா னருளினல் விடுப்ப
நாதனை வணங்கிநின் றயன்சேய்
தந்தசூ ளதனுன் மெலிந்தன னிதனைத்
தவிர்த்தியென் றுரைத்தலுஞ் சடைமே
லிந்துவி னழியாக் கலைதனைத் தரித்தே
யிதனை நா மணிந்ததா லிதுதா
னிந்தனை பொருந்த வழிந்திடா திதனி
னீடுநின் கலையெலாங் கூடும். 20

ஐந்துட னுருபான் புகலெலாம் வளரு
மன்னநாட் பின்னரே சுருங்கு
மிந்தவா றெழுகு மெனவிடை கொடுப்ப
வெழின்மதி நிறைந்துவா னெழலுஞ்

சந்தணி நெடுந்தோட் டக்கனீ துணர்ந்து
தனதுரை தடுத்தலாற் பரனைப்
புந்தியின் முனிந்து புலகனு முனிசொல்
புந்தியாற் சினமொரீஇ யிருந்தான். 21

வேறு

நின்றிட வினையது நிமலன திடைசேர்
குன்றென வளரிரு குவிமுலை யுமையாள்
வென்றிய துறுசிறு விதிமக னெனவே
வன்றவ நிலைமையில் வருசெயன் மொழிவாம். 22

விண்டொடு கயிலையின் மிசையரி யணைமே
லண்டர்க ளழுவெழு மழல்விட மமுதா
வுண்டவ னுறைபொழு துமையவள் பணியா
மண்டிய வுனதுமெய் வகைபுக லெனவே. 23

செயல்குண முருவிவை செறிகில மெவனும்
மயலற நிறைகுவ மருவரு வுருவென்
றியல்பொடு பலவடி விசைகுவ மெனவண்
கயல்விழி யுமையொடு கழறின னிமலன். 24

ஈதிறை புகறலு மிவனுரு விலையென்
றோதினை பலவடி வுளதெனு மியல்பின்
றேதென வமையெம தருள்வடி வெனவிங்
கர்தலி னெனதுயர் வடிவவை யெனலும். 25

வேறு

உன்னை நம்மெதிர் மனந்தனில் வியந்தனை நயந்தா
யுனதிடத்தினு முனையலா தனைவர்க ளுள்ளு
மன்னி யாமிருந் தியற்றுவ மியற்றுத றவிர்ந்தால்
மதியெலாமொரீஇ மருவுவர் சடமதாய் மாதோ

வன்ன வாறுநீ தெரிதியென் றவனியுண் டவன்முன்
ஞன வானவ ரானவ ரேனையோ ரகத்துட்
டுன்னி யாங்குணர் வளித்திடு மியற்கையை விடுத்தான்
றேன்றல் பொன்றுத லின்றிவாழ் கின்றநந் தோன்றல்.

எங்க ளுயகன் கணப்பொழு தினையவா றிருப்ப
வேனை யோர்க்கெலா மெண்ணிலா வுகமதா யெவருந்
தங்கள் செய்கட னுகிய முறையெலாந் தவறிச்
சடம தாகியே சார்தலுங் கௌரியாந் தலைவி
கங்கை வார்சடைக் கருணையங் கடலடி பணிந்து
கடிய னேன்புரி பெரும்பிழை கருத்தினிற் கருதே
லெங்க ளுதவிங் கருள்சுரந் தெவரையு மெழுப்பென்
றறைந்தி ரந்திட வெழுப்பின னுருத்திர ரவரை. 27

ஒன்று மேவிய பதின்மரா முருத்திர ரெழுந்தே
யுவரி வாரணஞ் சூலவுபூ வுலகில்வந் துலவாப்
பொன்ற யங்கிய கொன்றையந் தொடைநெடுஞ் சடிலப்
புனித நாதனை யருச்சனை யருச்சுனப் புவிமாட்
டன்று செய்தலாற் பரம்பொரு ளவரையு மெழுப்ப
வனந்த ருதியோர் மனந்தெளிந் தெழுந்தன ரதற்பின்
சென்று வானிறக் கயிலையஞ் சைலமேன் மருவித்
திரிபு ராரியை வணங்கிநின் றிவையுரை செய்வார். 28

எண்ணரி கந்தநா ளறிவெலா மொருவியே சடமா
யெங்க டங்கடன் மறந்தள விறந்ததீ திசைந்தே
மண்ண லேயவை தீரவொன் றருடியென் றறைய
வனைய தீமைக ளுமையவ டனதிடத் தாகு
நண்ணு நும்பதத் தெனவிடை கொடுத்தன னதற்பி
னக்க ணரியைத் தக்கன்மா மகளென நணுகி
மண்ணில் வாழுதி வந்தியா மணத்துமென் றிசைப்ப
வணங்கி னுள்விடை கொண்டனள் கருணைசேர் வல்லி.

அணியு மிந்துவி ளிளநிலா வெறிப்பது கடுப்ப
வறல்ப ரந்தசெஞ் சடைமுடிக் கடவுளை யகன்று
மணியு மாரமுங் கரைகளிற் றிரைகள்வந் திறைப்ப
மருவு காளிந்தி வனசமேல் வலம்புரி வடிவாய்ப்
பணிகு வார்பிறப் பறுத்தருள் பரம்பொருளுமம்
பன்னி யன்னவன் பன்னியங் கிருந்தனள் பன்னு
டணிவி லாப்புகழ் மாசிமா மகப்புன லாடத்
தக்க னென்பவன் மறைக்கொடி யொடுமவண்
சார்ந்தான். 30

அண்டர் சூழ்தர மேவிய தக்கனந் நதிநீ
ராடி மீள்பொழு தாங்கொரு பாங்கரி னலர்மே
லெண்ட விர்ந்திடு முயிர்க்கெலா முயிரென விருப்போ
னிடம்பி ரிந்தவள் வலம்புரி யாகிவீற் றிருத்தல்
கண்டெ டுத்துழிக் குழவியா யினளவன் வியந்தே
கௌரி யெம்மக ளாகிவந் தனளெனக் களித்து
மண்டு சீருள மறைக்கொடி தளிர்க்கரத் தளித்து
மன்னு தன்னக ரன்னவ னடைந்தனன் மன்னோ. 31

காதன் மிக்கொளக் கௌரியை மறைக்கொடி வளர்த்தாள்
கருணை வாண்முக வையையை யாண்டவன் கடப்பச்
சித வாண்மதி யணிந்தருள் பரம்பொருள் வதுவை
செய்ய வேதவஞ் செய்வலென் றுமையுரை செய்யப்
போத நீடிய தந்தைதா யுளந்தனின் மகிழ்ந்து
பொருவி லாவொரு மாடமப் புரிக்கயல் புரிவித்
தாத ரம்பெறு கன்னிமா ரொடுமதில் விடப்போ
யாண்டு சென்றிருந் தருந்தவம் புரிந்தன ளமலை. 32

பத்தின் மேலுமங் கோரிரண் டாகிய பருவம்
பருவ ரற்பிறப் பறுத்தருள் பராபரரை படைப்பத்
தத்து வார்திரைக் கடற்கடு வடக்கிய மிடற்றோன்
றக்கன் மாபுரத் துமையவ ளிருந்திடுந் தலத்து

மெத்து சீரொரு மறையவன் போலவந் தணுக
மிகவு மெம்பிராற் கன்பரிங் கிவரென விருப்பு
வைத்த சிந்தைய ளாகியாங் கெழுந்தெதிர் நடந்து
வணங்கி யேத்துபு நின்றன ளறமெலாம் வளர்ப்பாள்.

எம்பி ராட்டியை யெம்பிரான் றெரிந்தொரு பொருள்வேட்
டீண்டு வந்தனந் தருதியே லுரைப்பமென் றிசைப்ப
நம்ப கேட்டியெற் கிசையுமேற் றருகுவ னதனை
நவிறி நீயென வுனைமணம் புரிந்திடு நயப்பா
லிம்பர் மேவின மதற்கிவண் மறுத்தினி யுரையே
லென்று கூறலு மிடர்நெடுங் கடலில்வீழ்ந் தெழுஞேய்
கும்ப மாமுலை செவித்துணை கரத்தினு லடைத்துக்
குமுத வாய்திறந் தமுதவா சகமிவை கூறும். 34

வேறு

பெய்தே னிதழித் தொடையும்
பிறையும் புனைவோன் வதுவை
செய்தே யருளத் தவமே
செய்வே னுடனீ திசைத்தாய்
பொய்தோய் மனத்தோய் கடிதே
போபோ வென்னப் புகன்று
வைதே யொருபா லகன்ருண்
மறுவில் கற்பின் மடவாள். 35

இவ்வா றமலை யகல
வெவருந் தெரியா வண்ண
மைவாழ் களநங் கடவுள்
வளர்தன் னுருவ மருவச்
செவ்வாய்க் கருங்கண் ணுமையா
டெரியா விழிநீர் சொரியா
வொவ்வா வன்பிற் றெழலு
முயர்கன் னியரீ துரைப்பார். 36

மன்னுங் காதன் மறையோன்
மாயம் வல்லன் கொல்லோ
வென்னே யிதுதான் கன்னி
யெம்மை நோக்கி லானென்
றன்ன நடையார் தம்மி
லங்கண் சிலவ ரோடித்
துன்னும் புகழ்சேர் தக்கன்
முன்ன ரிதனைச் சொன்னார். 37

அந்த வேலை யவனு
மறிவா லரனென் றறிந்தே
சிந்தை மகிழ்ந்து பரன்முன்
சென்றே போற்றி நின்றே
யெந்தை யெனது நகரி
னெய்த வேண்டு மென்றே
கொந்தார் குழலா ளொடுதன்
கொடிமா ளிகையுட் கொணர்ந்தான். 38

ஆதி முதல்வ னங்கோ
ரரியா தனமீ தமர
மாது தன்னை வேத
வல்லி புல்லி மகிழ்ந்தே
சோதி நன்னீ ராட்டித்
துலங்கு கலன்கள் சூட்டிக்
கோதி லுயிர்கட் குயிராங்
குழகன் பாங்கர் விடுத்தாள். 39

கருந்தா ழளகக் கௌரி
கருணைக் கடலின் புடைவந்
திருந்தா ளிருந்த வமையத்
திமையோ ரயன்மால் குறுகிப்

பொருந்தா தரவிற் பணிந்தே
புரைதீ ரிதழிப் பிரசஞ்
சொரிந்தார் சடையா னயலே
சூழ்ந்தார் நெஞ்சம் வாழ்ந்தார். 40

வேறு

தக்க னப்பொழு தெழுந்தனன் மறைக்கொ டிதளிர்க்
கைக்க ணுற்றகர கப்புனல் விடக்க வினுலாஞ்
செக்கர் பெற்றகம லக்கழல் விளக்கி நுதல்சே
ரக்க நக்கனை யருச்சனை புரிந்த னனரோ. 41

அருத்தி தன்னுட னருச்சனை புரிந்த பினரன்
கரத்தி லம்பிகை கரத்தினை யளித்தெ னதுகண்
வரத்தில் வந்துமக ளானவுமை யாளை மறையின்
சிரத்தி னிற்குமிறை நிற்குதவல் செய்த னனியான். 42

என்று கூறியுத கத்தினை விடுப்ப விமையோர்
வென்றி யன்பொடு புகழ்ந்தனர் மகிழ்ந்த னர்விரைக்
கொன்றை வேணியன் மறைந்தன னிறைந்த துயர்கொண்
டன்று சங்கரி வருந்திய துரைப்ப தரிதால். 43

மன்னு தக்கனிவை கண்டழ லெனச்சி னமரீஇ
நன்ன லம்பெறு கரத்துணை புடைத்த னனகைத்
தென்னை யெண்ணலன் மறைந்துவசை தந்த னனெனு
முன்ன வன்றனை மொழிந்தன னிகழ்ச்சி மொழியே. 44

பண்டு போலவுமை மாடம தடைந்து பரிவால்
மண்டு நற்றவ மியற்றின ளியற்ற மகிழ்வாய்
விண்டு வன்னதன மங்கையெதிர் வந்து விடைமேற்
கொண்டு போயின னெழிற்கயிலை மீது குழகன். 45

கன்னி மாரிது தெரிந்தயன் மகன்பு டைகலந்
தின்ன செய்கையுரை செய்யவிறை வன்ற னையிகழ்ந்
தன்ன நாண்முதல் மதித்தில னிருப்ப வதனைத்
துன்னு வானவ ரறிந்தறைகு வாரி னையசொல். 46

தக்க னக்களை மதிக்கில னிறத்தல் சரத
மிக்க வன்னவ னிடும்பணியி னிற்கும் வினையா
லொக்க யாமுமழி வாகவரு மென்ற வனுறும்
பொக்கின் மாநக ரடைந்தவனொ டின்ன புகல்வார். 47

## வேறு

பெற்றந்தனி லேறுபி ரானையுமே
குற்றுந்துமை தன்னையு முன்னலைநீ
குற்றங்க டெரிந்து குறித்திடினற்
சுற்றம்பெறு வாரெவர் சொல்லுதியால். 48

என்றேபல புந்தி யிசைத்திடலு
நன்றேயென வுன்னி நயந்ததனுக்
கின்றேது குயிற்றுவ தென்றிடலு
நின்றேயிது தன்னை நிகழ்த்தினரே. 49

விண்டோய்கயி லைக்கிரி மீதணுகித்
தண்டேன்மொழி யாளொடு சங்கரனைக்
கண்டேவரு கென்று கதித்தபுகழ்
கொண்டேசெறி யும்பர்கள் கூறினரால். 50

இவ்வாறிமை யோர்க ளிசைப்பவிசைந்
தவ்வானவ ரங்க ணமர்ந்திடவைத்
தொவ்வாரச தக்கிரி யுற்றனனுற்
செல்வாய்மறை வல்லி திருக்கொழுநன். 51

## வேறு

சின்ம யத்த னுவந்தி ருந்த
திருந்து மன்ன சிலம்பின்மேற்
பொன்ம லிந்திடு மந்தி ரத்திடை
முன்பு வாசல் புகுந்திட
நன்மை தங்குற வங்கு றுங்கண
நாதர் நாதனை யெள்ளிய
புன்மை யாயெம தீச னுக்கெதிர்
போக லென்று தடுத்தனர். 52

சீறு பூதர் தடுத்தல் கண்டு
சினம்பு ரிந்து திரும்பியே
வீறு தன்னகர் தன்னில் வந்திது
விண்ண வர்க்குரை செய்துபின்
னீற தேறிய சங்க ரன்றனை
யிந்த நான்முத லாகநீர்
மாறு கொண்டு மதித்தி டாதிரு
மௌவி சைந்தனர் வானுளோர். 53

என்சொல் கேளிதை யென்சொல் கேளெம
தீசன் மேன்மை யறிந்துமப்
பொன்செ யஞ்சடை யானை யெள்ளிய
புல்லர் பட்டது கண்டுநீள்
கொன்செ யுந்துயர் மாய வாழ்வு
குறித்தி தற்கு மிசைந்தனர்
பின்செய் வானவ ராத லால்வினை
வெல்ல வல்லவ ரில்லையே. 54

அன்ன போதிசை வான வானவ
ராரு மேக வறைந்தரோ
வின்ன பான்மை யிருக்கு நாளி
லிருக்கு நான்முக னோர்மகந்

தன்னை யங்க ணியற்ற வுன்னுபு
 தன்ன தேவல்செய் தநயரை
மன்னு மான்முத லும்ப ரைக்கொடு
 வம்மி னென்று விடுத்தனன். 55

மூளு கின்ற சினங்கொ டன்மகன்
 முன்னி சைத்தது முன்னியான்
மாள வேவரு மேனு மன்னது
 வருக வென்று மனந்துணிந்
தாளு நாயகன் வெள்ளி வெற்பி
 லடைந்து நந்தி விடுத்திடக்
காள கண்டனை முன்ப ணிந்திரு
 கைகு வித்துரை செய்குவான். 56

எந்தை கேளொரு வேள்வி யானதை
 யானி யற்றுவ னங்கணீ
வந்தெ னக்கருள் செய்தி யென்ன
 மகிழ்ந்து நம்முரு வானசீர்
நந்தி தன்னை விடுப்ப மேகென
 நான்மு கன்றெழு தேகியே
மைந்த னுக்கு முரைத்து நீதி
 மனேவ திப்புடை யுற்றனன் 57

மிக்க வேள்வி யவன்றொ டங்கலும்
 வீறு மான்முதல் விண்ணுளோர்
தக்க னோடு மடைந்து வேள்விசெய்
 சாலை யின்புடை சார்தலுஞ்
செக்கர் வேணியர் நூறு கோடியர்
 சீறு சாரதர் சூழவே
யக்க ணந்தனி னந்தி வந்தன
 னாதி தேவன தேவலால். 58

எந்தை வந்தது கண்டு வேத
னெழுந்து கைப்பது மங்குவித்
துந்து மாதன மீதி ருத்த
வுவந்தி ருந்தன னீதுகண்
டந்த மற்ற பவங்கொ டக்க
னழைத்து ளாரெவ ரென்றுதன்
சிந்தை யூடு குறித்து ணர்ந்து
செயிர்த்து வேதனொ டோதுவான். 59

சோதி முன்ன ரடைந்து வேள்வி
தொடங்கு கின்றது சொற்றனை
யாதி யுந்திய நந்தி யைத்தொழு
தன்பி னென்மு னிருத்தினை
வேத கேண்மதி தாதை யாதலின்
வெட்டி டாதுனை விட்டன
னீதி யோவிது செய்த தென்று
புகன்று பின்னு நிகழ்த்துவான். 60

எள்ளு நீர்மைகொள் பித்த னாகி
யிருக்கு மீசன் மகத்தவி
கொள்ளு தற்குரி யன்கொ லீது
குறித்தி டாது கொடுத்தனர்
தள்ளு மற்றதை விண்டு வேயுயர்
தானு வென்ன மதித்துநற்
கள்ளு றுங்கம லத்த முன்பவி
காத றன்னொடு மீதிநீ. 61

மற்றெ வர்க்கு மளித்தி யென்னலு
மன்னு நந்தி மனஞ்சினந்
துற்ற தக்கன் முகந்தெ ரிந்துணர்
வோடு நீதியில் பேதைநீ

பெற்ற மேலம லற்ப ழித்துரை
பேசி னையவ னன்றியே
கொற்ற வேள்வி குயிற்று வோர்முடி
போக வென்றுரை கூறியே. 62

சீற்றி யெம்பெரு மானை யெள்ளிய
தீய நின்றலை போகவென்
றீறி லாத பரம்ப ரன்றனை
யெள்ளு நின்னெ டிருந்திடும்
வீறு மான்முத லும்பர் யாவரும்
வீர மேவிய சூரனான்
மாற ருந்துய ரத்துமூழ்கி
வருந்த வென்று சபித்தனன். 63

இந்த வாறு புகன்று நந்தி
யெழுந்து சாரதர் சூழவே
யந்தண் மாமதி வேணி யானை
யடைந்த னைத்து மறைந்துபின்
மைந்து றுங்குண வாசன் மேவினன்
மன்னு வேதன் மகங்குலைந்
துந்தி டுந்துயர் கொண்டு தத்த
மிடத்தி யாவரு முற்றனர். 64

சொற்ற ரும்புகழ் நந்தி முன்பு
கனிந்து கூறிய சூளினை
லற்றை நாண்முதல் யாரும் வேள்வி
யியற்ற வஞ்சி யமர்ந்தனர்
மற்றை யோர்பக றக்க னென்பவன்
மாம கஞ்செய வுன்னியே
கொற்ற நற்றொழில் கற்ற வும்பர்கள்
கம்மி யற்கிது கூறுவான். 65

மகம்பு ரிந்திடு சாலை யொன்று
வகுத்தி யென்னலு மன்னவன்
நிகழ்ந்த கங்கை மருங்க டைந்து
திருந்து மாயிர யோசனை
யகன்ற சாலைய தொன்றி யற்றலு
மங்க ணேகி யயன்சுதன்
சகம்பு கழ்ந்திடு காமர் கண்டு
தனது எங்களி கொண்டனன். 66

பின்ன ரொற்றர் முகந்தெ ரிந்து
பிறைக்கொ ழுந்து மிலைச்சிய
மின்னி ருஞ்சடை யண்ண லல்லது
வேறு தேவர்கள் யாரையு
மன்னு மிவ்விடை யுய்த்தி ரென்னலும்
வல்லை யேகி யவர்க்கெலா
சொன்ன போதரி யாதி வானவர்
யாரும் வந்தனர் துன்னியே. 67

வந்து தக்கன தியாக சாலையின்
மாய னுங்கம லத்தனு
மிந்தி ரன்முத லான தேவர்கள்
யாரு மங்க ணிருந்தபோ
துந்தி டும்புகழ் மாத வத்த
ருவந்து சூழ்தர வந்தனன்
றந்தி ரம்புரி மாலை வென்றடன்
மாலை கொண்ட ததீசியே. 68

நன்றி கொன்றிடு தக்கன் மாமுனி
நண்ணு கின்றது கண்டரோ
வின்றெ னக்கிவ னஞ்சி வந்தன
னென்று சிந்தையி லெண்ணியே

வென்றி மாதவ வருக வென்றெரு
வீறு மாதன மீதலுந்
துன்று மாதவ ரோடி ருந்திது
சொல்லு வான்வினை வெல்லுவான். 69

எம்மை யிங்ங னழைத்த காரண
மென்ன வென்னலு மீசனெம்
மம்மை தன்னை மணந்த தற்பி
னிகழ்ந்த யாவு மறைந்தரோ
மைம்ம லிந்திடு கண்ட னுக்கவி
மாற்று வான்மக மாற்றுவே
னும்மை யிங்கு விளித்த தன்மையு
மின்றி தற்கென வோதினன். 70

ஊறகன்ற ததீசி தக்க
னுரைத்த பான்மை வினவியே
வீறு கொண்ட பராப ரன்றனி
மேன்மை தன்னை விளம்பியே
யேறு தங்கு பதாகை யண்ண
லெவர்க்கு மீச னவற்குநீ
மாறு கொண்டு மகஞ்செ யேலென
மாசி லானிது பேசினன். 71

மாசு றென்பு புனைந்து சேகர
மாலை யானது பூணுமோ
தேசு நீறது பூசு மோதசை
தீர்ந்த தீயுட லேந்துமோ
கேச மூங்கரு மாம ருப்பொடு
கேடு றுமைவி ளேடுமே
நேச மோடு தரிக்கு மோபர
மாகி நின்றிடு நின்மலன். 72

கோல ஞாலமொ டுயிர்கள் செற்றல்
குயிற்று மோபுலி தந்தியின்
றோலொ டங்கி கனிச்சி தாவுழை
சூல மின்ன சுமக்குமோ
சால வும்பலி கொள்ளு மோநட
மாடு மோமிகு சாரதர்
சீல மேவிய படையெ னும்படி
திரியு மோவுயர் தேவனே. 73

நஞ்செ யிற்றட னாகம் வெண்டலை
நவையெ னாது தரிக்குமோ
விஞ்சு கின்றதன் மேனி யல்லது
வேறு மோர்தனு மேவுமோ
வெஞ்சு ரூத விருந்தி றற்பெறு
மேறு தன்மிசை யேறுமோ
வஞ்சு மால மருந்து மோநிகர்
ரன்றி நின்றிடு மண்ணலே. 74

ஈம மாட லொருத்தி யைத்தலை
யெய்த வைத்த லொருத்தியை
வாம மீதினில் வைத்தல் பிள்ளை
மகிழ்ந்து பெற்றிடல் வெங்குணங்
காம ரண்ணல் படைக்கு மோவென
வேது வாகிய காதைகள்
தாம மார்புள தக்க னோடு
ததீசி மாமுனி பேசுவான். 75

வேதன் மான்முத லோரை நம்பன்
விதித்த ழித்திடு போதெலாந்
தீதி லங்கவ ரென்ப ணிந்து
சிரங்கள் கேச மணிந்துநீள்

கோதி லாதொளிர் சூல மீதுடல்
　　கொண்டு நீறது கண்டுபின்
மீது பூசு மியாவ ருந்தனை
　　மேவி யுந்திட வேண்டியே. 76

ஈது நின்றிட வாட கக்கண
　　னென்ப வன்புவி யுண்டுமுன்
பாத லந்தனி லேக மாலொரு
　　பார வேனம தாகியே
கோதி னூனை மருப்பி னைக்கொடு
　　கொன்று முன்பென வொன்றவே
பூத லந்தனை வைத்த கந்தை
　　பொருந்தி மண்ணை யழித்தனன். 77

அந்த வேலையில் வேலை நஞ்ச
　　மயின்ற நம்ப னவன்றனை
வந்தொர் கோடு பறிப்ப முன்புலன்
　　வந்து வந்தெனை செய்திட
வெந்தை யேன மருப் பணிந்தன
　　னெண்ணில் வானவ ரானவ
ருந்து மாழி கடைந்த வேலையின்
　　மந்த ரந்தளர் வுற்றதே. 78

மால வன்கம டத்து ருக்கொடு
　　மந்த ரத்தை வெரிந்தனிற்
சால வன்று பரித்த னன்கட
　　றந்த தங்கமு தந்தனை
நீல மாய னகந்தை கொண்டு
　　நிறைந்த வேலை யுழக்கவே
யால முண்டவன் வந்து பற்றி
　　யவன்றன் வன்மை யழித்தனன். 79

உற்ற முன்னுணர் வெய்தி மாய
னுவப்பி ளேடு புகழ்ந்திட
வற்றை நாளவ ளேடு மார்பி
லணிந்த னன்னது நின்றிட
முற்று வேள்விய தேத ரும்பர
மூத்தி யென்றுயர் புத்தியிற்
சற்று மெம்பரு மானை யெண்ணலர்
தாரு காவன மாதவர். 80

இன்ன பான்மை யறிந்து நம்ப
னிலங்கு சீருள மாலொடு
மன்னி டுங்கயி லாய வெற்பினை
வல்லை தன்னி லகன்றுபோய்த்
தன்னை யுன்னலர் துன்னி வாழ்வுறு
தாரு காவனந் தன்னினற்
கன்னி யாகி நடந்தி டும்படி
கண்ண னுக்கருள் செய்தனன். 81

மார வேளை யளித்த பச்சுரு
மாயன் மாதுரு வங்கொளாச்
சாரு நீடெழி லவ்வ னத்துறு
தாப தர்க்கெதிர் போகவிட்
டேரி ளேடவர் பன்னி மார்க
ளிருந்த வீதியி லெம்பிரான்
வார மோடு பலிக்க டைந்திடு
வார்க ளென்ன வணைந்தனன். 82

மாலை சேர்குழன் மாலை நோக்கினர்
மாலை யெய்தினர் மாதவர்
சால வெம்பெரு மானை மானினை
மானு கின்ற தடங்கணர்

கோல மோடெதிர் கண்டு மாமயல்
கொண்டு கொண்ட கலன்கள்போய்ச்
சூல பாணித னுது பின்றுய
ரத்தி னேடு தொடர்ந்தனர். 83

அந்த வேலையி லிந்து தாரி
யனேக மேனிய னுகியே
வந்து மங்கைய ரெண்ணு மாறு
மகிழ்ந்து செய்திட மாதரா
ரெந்தை யாலவ னுலு பத்துட
னெண்ணு கின்றவெண் ணுயிர
மைந்த ரைத்தர வந்த மைந்தர்கள்
வள்ள றன்னை வணங்கினர். 84

சங்க ரன்னமை யுன்னி நீவிர்
தவம்பு ரிந்திடு மென்னவே
யங்க ணின்றிடு மைந்த ரேகின
ரந்த வேலை முகுந்தனு
மங்கை வந்திட மாத வத்தர்
தொடர்ந்து வந்துதம் மாதரார்
பங்க முற்றுயர் கற்ப ழிந்திடு
பான்மை கண்டு சினந்தனர். 85

தீதின் மாதர்கள் கற்ப ழித்தவ
ளைச்செ குத்திடு வோமெனு
மாத ழற்கொண் மகம்பு ரிந்ததின்
வந்து வந்து பிறந்திடுங்
காது வெம்புலி பரசு நவ்வி
கடும்ப ணித்திரள் பூதர்கண்
மோது வெண்டலை திண்டி றற்றுடி
முயல கன்றனை யேவினர். 86

வேங்கை தன்னை யுரித்து டுத்தனன்
மிக்க சாரதர் தானையாய்ப்
பாங்கு றும்படி யோதி னொரு
பாத வண்கம லத்தினு
லேங்கு றும்படி முயல கன்றனை
யீடி னேடு மிதித்தனன்
வாங்க ருங்கவி னுற்ற மேனியின்
மற்றை யாவு மணிந்தனன். 87

ஈடு கொண்டிடு விண்ணு ளார்தொழ
வெந்தை நாடக மாடினன்
வீடி னுரென மாத வத்தர்
விழுந்து பின்னு மெழுந்தவங்
கூடு மெங்கள் கொடும்பெ ரும்பிழை
கொள்ள லென்று வழுத்தவே
நாடி யன்பருள் செய்து பின்கயி
லாய மாமலை நண்ணினன். 88

ஈது நின்றிட வானை மேனியொ
டூடு கொண்ட கயாசுரன்
வேத னல்கு வரத்தி னுலுயர்
விண்ணு மண்ணு மலைக்கவே
மாத வத்தின ராரு மஞ்சி
வளங்கொள் காசியி லோடினர்
பாத கன்னவ ரைத்தொ டர்ந்து
படர்ந்து காசி யடைந்தனன். 89

கண்டு மாதவர் காசி யின்மணி
கன்னி யாகிய வாலயத்
தண்ட நாத னருட்ப தத்தி
லடைக்க லம்புக வங்கணு

ஞெண்டி றற்கரி முன்ன ரேகி
யுரித்து மேனி தரித்தனன்
றுண்ட வாண்மதி போனு தற்பெறு
தோகை யும்பய மாகவே. 90

மற்றி வாறிவ ணிற்ப முற்பகன்
மாய னந்தணன் மேருமே
லுற்ற கான்முனி வோர்க ளும்ப
ருவந்து வந்து பணிந்துநீன்
வெற்றி பெற்றிடு மூவர் தங்களின்
வீறி ஞரெவ ரென்றிட
வற்றை வேலையின் வேத னனென
வரியு நானென வோதினன். 91

மாறு கொண்டிரு வோரு மெண்டவிர்
வைகல் பூசல் புரிந்திட
வாறு கொண்டிடு மண்ண லங்கொளி
யாகி யந்த வொளிக்குளே
வீறு கொண்டவ ணிற்ப மாயன்
விழுந்து போற்றி யகன்றன
னீறு கொண்டிடு மேனி யெந்தையை
நீடு வேத னிகழ்ந்தனன். 92

எந்தை யங்கு மனத்தி னலரு
ளெய்து காரியை நல்கவே
வந்து வேதன துச்சி யாமுடி
வள்ளு கிர்க்கொடு கிள்ளலுஞ்
சிந்தை நொந்து வழுத்த வங்கருள்
செய்து மாலுல கெய்தினு
னுந்து மாய னிறைஞ்சி மற்றிவ
னுற்ற தென்னென வோதினன் 93

உன்ற லைப்படு சோரி நீரை
யுகுத்தி யென்ன நகத்திறற்
றன்ற னெற்றி பிளந்து சோரி
தனைப்பொ ழிந்திட நம்பிரான்
வென்றி சேரய ஞர்பெ ருஞ்சிர
மீதி லேற்றன ஞாறுநா
றென்று கூறிடு மாண்டு செல்ல
விளைத்து மாயன் விழுந்தனன். 94

நீடு கைத்தலை பாதி யேனு
நிறைந்த தில்லை யவன்றனைப்
பீடு மேவிய காரி யன்பொடு
பின்பெ ழுப்பி நிறுத்தியே
யீடு கொண்டு பொருந்தி மேலுல
கெய்தி யண்ட மியாவையு
நாடி யங்க ளளித்தி ருந்தன
ஞதஞரு ளாலரோ. 95

பகர்ந்த வின்னது நிற்ப முற்பகல்
பண்ணை வர்க்கிறை யானவ
னகந்தை கொண்ட மனத்தொ டுங்கயி
லாய மந்திர முன்புற
வுகந்து சாரதர் போல வெண்குண
னுற்ற னன்குலி சத்திறன்
மிகுந்த பூதவ ரன்ற னக்கென
வேலை யென்று விளம்பினன். 96

வேலை கேட்டுழி வேலை வென்றவன்
வெஞ்சி னங்கொடு நின்றிடக்
கோளு றிந்திர னுஞ்சி னந்துயர்
குலிச வேலினை யெறியவே

வாளு மெம்பெரு மானை மேவி
யருந்து கட்பட வங்கணா
னீளு ருத்திர மேனி கொண்டு
நெடுஞ்சி னங்கொடு நின்றனன் 97

அன்ன காலையி லுன்றன் மாய
மறிந்தி லேனறி வற்றயா
னென்னி ரும்பிழை யெண்ணா லென்ன
விறைஞ்சி நிற்க விடுத்தரோ
யின்னு தன்சின மான தீயினை
மேலை வேலையில் வீசலு
மன்னு கின்ற சலந்த ரப்பெயர்
மைந்த னாகி வளர்ந்தனன். 98

வளர்ந்த பின்பவு ணக்கு லத்தொடு
மண்ணி லுற்றுயர் விண்ணுளோர்
தளர்ந்தி டும்படி செய்தி ரண்டு
சதங்கொ ளாயிர வற்சரம்
வளைந்து மாலொடு போர்பு ரிந்திட
மால்பு கழ்ந்து படர்ந்தனன்
கிளந்த வும்பர்க ளோடி னூர்கயி
லாய மாகிய கிரியின்மேல். 99

வெள்ளி வெற்பிடை விண்ணு ளாரவர்
மேவி யுற்ற தறிந்துபின்
றள்ளு தற்கரு மொய்ம்பு கொண்ட
சலந்த ரன்படை சூழவே
யெள்ள ரும்புகழ் மேவு றுங்கயி
லாய விண்டுவி லேகலும்
வள்ளல் வாசவன் வேண்ட வேதியன்
வடிவு கொண்டவண் வந்தனன். 100

எங்க ளுயக ளெங்க ணேகுதி
யென்று கூற வரன்றனே
டிங்க மர்ச்செய மேவி னேனென
வீண்டு நின்வலி காண்டுமென்
றங்கண் மண்ணிலொ ராழி தாளி
னமைத்தெ டுக்குதி யென்னவே
மங்கு தன்சிர மீதெ டுப்ப
வுடற்கி ழிந்து மடிந்தனன் 101

வீறு மின்னது நிற்க மாயன்
விளிந்து யாவு மழிந்தபோ
தூறி லாம லிருக்க நச்சி
யுரந்த ருந்தரு மத்திறை
யேற தாமுரு வெய்தி நாதன்முன்
னேகி வந்தனை செய்துசீர்
கூறி யிங்கெனை யூர்தி கொண்டரு
ளென்ன வப்படி கொண்டனன். 102

உற்ற வின்னது நிற்க வொற்கமி
லுந்து பாலுறு வேலையில்
வற்றி டாவமு தம்பெ றும்படி
மந்த ரந்தனை மத்தெனக்
கொற்ற வெம்பணி நாணெ னும்படி
கொண்டு மான்முத லண்டருந்
துற்ற தானவ ருங்க டைந்தனர்
தொன்மை வைகலின் வன்மையால். 103

நாக வாயினு மாழி வாயினு
நஞ்செ ழுந்து தொடர்ந்திட
மேக மேனிய னாதி யாகிய
விண்ணு ளார்கள் வெரீஇயிரிந்

தேக நாயகன் வாழ்பெ ருங்கயி
லாய விண்டுவி லேகியே
சோக மோடர னைப்ப ணிந்துறு
துக்க நக்கனொ டோதினர். 104

அந்த வேலையில் விண்ணு ளார்களு
மாரு முய்ய விரங்கியே
யுந்து மேவல்செய் சுந்த ரன்றனை
யொல்லை சென்று விடங்கொடே
வந்தி டென்ன நடந்து கைக்கொடு
வந்த ரன்கையி லுய்ப்பவங்
கெந்தை யுண்டன னுண்டி லானெனில்
யாவர் பின்ன ரிருப்பவர். 105

முக்க ணாயகன் மிகுமு யிர்த்தொகை
யகிலம் யாவு முடித்தபோ
தக்க ணந்தனி வீம மாயிடு
மன்ன தாகிய வீமமேன்
மைக்க ருங்கண் மடந்தை பங்குள
வள்ள லாடுமி தன்றியுந்
தக்க கங்கையை யோங்கு மாமுடி
தாங்கு கின்றது சாற்றுவாம். 106

முன்ன ரோர்பக லம்மை நம்பன்
முரண்ட ரும்விழி பொத்தலு
மன்ன காலையி லெங்கு முச்சுட
ரற்று வீறிரு ளாகவே
மின்னு நெற்றியி லுற்ற கண்ணை
விழிப்ப வெங்கும் விளங்கியே
தொன்மை போலுற வஞ்சி வஞ்சி
துணைக்க ரத்தை விடுத்தனள். 107

அம்மை தன்கர வங்கு லிப்புடை
யங்கு வேர்வை யெழுந்துபின்
செம்மை கொண்டிடு பத்த தான
திருந்து கங்கைக ளாகியே
வெம்மை யோடுல கங்கள் கொண்டிட
மேவ மான்முதல் விண்ணுளோ
ரெம்மை யாளுடை யண்ணல் வாழ்கயி
லாய வண்குவ டெய்திஞர். 108

கண்ணு தற்பர மற்ப ணிந்துல
கங்கள் கொண்டிடு கங்கையை
யண்ண லேயிவ ணீய ணிந்தெமை
யாள்தி யென்று வழுத்தலும்
விண்ணு லாவிய கங்கை தன்னை
விளித்தொ ளித்திரு வேணியிற்
றண்ணி லாவொ ருரோம மீது
தரித்த னன்றனை நேரிலான். 109

இன்ன தல்லது தொல்லை நாளி
லிலங்கு பங்கய வாழ்விஞன்
மன்னு கின்ற படைத்தி டுந்தொழின்
மாறி வீறிய மாயவன்
முன்ன ரேகி மொழிந்த போதவன்
முண்ட கத்திறை தன்னொடு
மின்னி ருங்கயி லாய முற்றர
னைப்ப ணிந்து விளம்புவான். 110

ஆதி நின்னரு ளால்வி திக்கு
மயன்றொ ழிற்சிதை வாயதா
லீதி யென்றிட மால யன்றனை
யெங்க ளையக னேக்கியப்

போது நீறது கண்டி டங்கொள்
புயந்த ரித்தன னவ்விடை
மாது தோன்றினள் பின்பெ ருப்பி
வரங்கொ டுத்து விடுத்தனள். 111

சொற்ற வின்னது நிற்க முற்பக
ரேன்மு கம்பெறு தானவ
னற்ற வம்பல நாள்பு ரிந்தர
னல்கு யர்ந்த வரத்தினு
லூற்ற சீரிமை யோர்கள் வந்துதன்
னேவல் செய்ய வுறைந்தனன்
மற்று மோர்பணி யிந்தி ராதிபர்
வந்து செய்திட வோதினன். 112

இங்கு நம்மு னடைந்து நுங்க
ளிருஞ்சி ரங்களின் மும்முறை
செங்க ரங்கொடு தாக்கி யேயிரு
செவிக ளுடு செழுங்கரந்
தங்க நின்று நிலத்தி லன்பொடு
தாழ்ந்தெ ழுந்திடு மென்றிடப்
பங்க முற்றிடு மன்ன புன்மொழிப்
பற்ப கற்புரிந் தாரரோ. 113

புரிந்த யர்ந்தயன் மாலி னேடிது
புகல வானவ ரைக்கொடே
திருந்தி டுங்கயி லாய மேவிய
சிற்ப ரன்றனை நண்ணியே
பரிந்தி றைஞ்சின ரும்ப ரின்னல்
பகர்ந்த போதொரு பாலனை
விரைந்த ளித்தவு னன்ற னைக்கொல
விடுவ மென்று விளம்பினன். 114

என்ற பின்பரன் மாதி ஞேடு
மிலங்கு சோலையுண் மேவவே
குன்று ருத பெரும்பு கழ்ப்பெறு
குடிலை தானிரு தந்தியா
யன்று நற்கல வித்தொ ழிற்செய
வைங்க ரத்த னுதித்துநீள்
வன்றி றற்பர ஞேடு மாதை
வணங்க மார்பி லணைத்தனர். 115

அந்த வேலையி லாதி நோக்கி
யருந்தி றற்பெறு தோன்முகன்
சிந்த வேபொரு தும்பர் தந்துயர்
தீர்த்தி யென்றருள் செய்திடத்
தந்தி மாமுக ஞேடு வெய்ய
சமர்ப்பு ரிந்தவ னைக்கொலா
வந்த னன்கயி லாய வெற்பினில்
வானு ளார்கள் வணங்கினர். 116

சிறு தோன்முகன் மாள வேயமர்
செய்த நிற்கடி யேங்கள்கைம்
மாறு செய்வதெ னென்று தாமவன்
முன்பு ரிந்திடு வன்பணி
யீறி லங்கரன் முன்பு ரிந்தவ
னேவ வானக ரேகினு
ரூறி லாத பரன்க ஞேர்குண
முற்ற தன்மை யுணர்த்துவாம். 117

மரும லிந்திடு பங்க யத்தனை
மாய வன்றனை நல்கியே
திரும லிந்திடு சாத்தி கத்தொடு
சீரி ராசத மாகிய

விருமை கொண்ட குணங்கொ டுத்தபி
னீத லோடு புரத்தலுந்
தருவன் யாவு மழித்தி டுஞ்செய
றன்ன தென்று தரிக்குமே. 118

ஏத மற்றிடு தான லாதவ
ராலு மற்றதி யற்றொணு
தாத லாலது செய்வ னன்னதி
லன்ன வன்புடை தாமத
மோது வாரல தங்க வன்க
ணுறைந்தி டுங்குண மன்றரோ
வேத மானவை சிற்கு ணத்தினன்
விமல னென்று விளம்புமால் 119

என்று பற்பல வாச கங்க
ளிருந்த தீசி யியம்பலும்
வென்றி நான்மறை நான்மு கன்றரு
வெய்ய தக்கன் விழைவியே
பொன்று கால மடுத்த லாலவை
புந்தி யென்று நினைந்திலன்
குன்ற வில்லி பதத்தி லன்புறு
கோதி லாநெடி தோதுவான். 120

பெண்ணி னுக்குரு நல்கு முங்கள்
பிரானெ வர்க்கு முயர்ந்தசீ
ரண்ண லாயினு மாக விங்கவி
யன்ன வற்குத வேனியா
னெண்ணி யாது மியம்பு றுதினி
யேகு வாயென வோதலுந்
துண்ணெ னச்சின முற்றெ ழுந்திது
சொல்லு வான்வினை வெல்லுவான். 121

இந்து லாவு நெடுஞ்ச டாடவி
யெம்பி ரானை விலக்கியிங்
குந்து சீரொடி யற்று மிம்மக
மொல்லை யின்னழி வாருக
யுந்தி யற்றிடு முன்ற ரோடு
பொருந்து மும்பரு மிவ்விடை
யந்த மேவுக வென்று பின்னிஃ
தந்த ணார்க்கு முரைத்தனன். 122

வீறு தங்கிய நுங்கு லத்தி
னியற்கை தன்னை விடுத்துநீ
ஏறு தங்கிய சென்னி யானையு
மன்ன வற்கடி யாரையு
நீறு கண்டிகை மாலை தன்னையு
நீங்கி வெந்துயர் தாங்கியே
பேறு தங்கிய வீடு றாது
பிறந்தி றந்திடு மென்றனன். 123

இன்னல் கொண்டிட வின்ன சாப
மெவர்க்கு மங்க ணிசைத்தபின்
மன்னு நன்னெறி மாத வத்தர்
மருங்கி ரண்டு நெருங்கவே
தன்னி ருக்கையி லேகி னனுயர்
சங்கு தங்கு கரத்தனை
முன்னர் வெந்நது கண்ட வன்பிறை
முடிய வன்றன தடியவன், 124

வேறு

மாசில் பெரும்புகழ்சேர் மாமுனிவன் போனதற்பி
னூசி லயினியளித் தாடகமு மாடைகளு
நேச முறைய நிறைய மறையோர்பால்
வீசி விதிபுதல்வன் வேள்வி புரிந்தனனே. 125

அவ்வாறு கண்டா னகல்வான் றனிற்றிரியுஞ்
செவ்வார் சடிலத் திருநா ரதமுனிவன்
மைவாழ் பெருங்குவட்டு வண்மைக் கயிலையிற்போய்ப்
பைவாழுந் துத்திப் பணியான் பதம்பணிந்து. 126

நின்றான் பரன்பாரா நீள்புவியி லேதுநிகழ்
வென்றா னெனலு மிறைவ வமரரொடு
மென்றா மரைமேல் விதிபுதல்வன் வேள்விபுரி
கின்றா னெனவெழுந்தாள் கெண்டையங்கட் காரிகையே.

எழுந்தாள் பரம னெழிற்கமலத் தாண்முன்
விழுந்தாண் மகந்தெரிந்து மீள்வே னெனுமாற்ற
மழுந்தா தரவா லவள்புகலப் பின்னர்ச்
செழுந்தா தகிச்சடிலத் தேவன் விடைகொடுத்தான். 128

பொன்றங்கு மானம் புகுந்தாள் புகழ்மாதர்
துன்றா வயலை சுலவத்தன் றாதையிடைச்
சென்றா ளனையான் தெரிந்திகழ்ந்து போதிகடி
தென்றான் பலநிந்தை யீசனையும் பேசினனே. 129

நக்கன் றனைப்பழிக்க நாரி யதுகேளா
மிக்க சினம்படைத்து வெள்ளிப் பொருப்படைந்து
முக்கட் பரன்பாத முன்பணிந்துன் றன்னையெண்ணாத்
தக்கனது வேள்வி தனையழிக்க வேண்டுமென. 130

அம்மை பணிந்திரப்ப வன்ன செயன்முடிப்பா
னெம்மையினி தாளு மிறையோ னினைத்திடலுஞ்
செம்மை நுதல்விழியிற் சென்னிகளோ ராயிரத்தோ
டிம்மெனவே வந்தா னெழில்வீர பத்திரனே. 131

அப்போது தன்னிலெம தன்னை பெருஞ்சினத்தாற்
கைப்போதி ராயிரமுங் காமர்முக மாயிரமுந்
துப்போ டிலங்கத் துலங்குவிறற் காளியுதித்
தொப்போரில் வீரன்பாற் றேவியா யுற்றனளே 132

அன்ன பொழுதரனே யன்ன நடை யம்பிகையைப்
பன்னருஞ் சீர்வீரன் பணிந்தே பணியடியேற்
கென்னே யெனலு மெமையெண்ணுத் தக்கன்மகந்
தன்னே மருவியவி தந்திடெனச் சாற்றுதியால். 133

தந்தா விவண்வருதி தாரானே லக்கொடியோன்
சிந்தா குலஞ்சேரச் சென்னிதடிந் தாங்கிருந்தோ
ருந்தாவி கொண்டுமக மொல்லே யழித்திடுதி
மைந்தா வியாமும் வருகின்ருே மென்றனனே. 134

என்ன விடைகொண் டெழின்மேவு காளியொடுந்
தன்னுருவில் வந்துதித்த சாரதர்கள் சேனேயொடு
மன்னுபுகழ்த் தக்கன் மகச்சாலே வந்தணுகிப்
பொன்னிலகு செஞ்சடிலப் பூதர்க் கிதுபுகல்வான். 135

ஆலமிடற் றெம்மானே யன்றிமகஞ் செய்யுமிந்தச்
சாலேயெயில் வாச றனேக்காவல் கொண்மினெனுச்
சீலமிகும் பூதர் சிலவர் சுலவவெழில்
வேலனகட் காளியொடு வேள்விக் களம்புகுந்தான். 136

தண்டா மரையான் றனயன் மகம்புரிதல்
கண்டான் வெகுண்டா னுருமே றெனக்கலித்தான்
வண்டார் நெடுந்தார் வயக்கொம் பிணக்குறிந்தாங்
கண்டார் வெருவ வடலோடு நின்றனனே. 137

ஈடுசேர் வீர னிசைத்த விசைகேளா
வாடினர் சிந்தை வருந்தினர் வல்லேயெழுந்
தோடினர் மீண்டா ருலேந்தா ருறுதுயரங்
கூடினர் விண்ணேர் கொடியோ னிதுதெரிந்தான். 138

வீரன் றனேநோக்கி வேதன் றருங்கொடியோ
னுரை யிவணீ யடைந்ததெவ னென்றிடலுங்
காரிலகு கண்டக் கடவுள்விட வந்தடைந்தே
னேரி லவனவிதீ நேர்வா யெனவுரைத்தான். 139

காவி நயனக் கலசமுலைக் காளியெனுந்
தேவியொடு நின்ற திறலாள னிதிசைப்பக்
கோவின் மிசையேறுங் கோவை யிகழ்ந்துமொழிந்
தாவி கொடுப்பா னவிகொடே னென்றனனே. 140

தன்னை மதித்தகொடுந் தக்கனிது சாற்றுதலு
மன்னுதிறல் வீரன் வானோர் தமைநோக்கி
யின்ன துமக்கு மிசைவோ வெனவிசைப்ப
வுன்னியொன்று மோதாம லூமர்போ லுற்றனரே. 141

வேறு

இவ்வாறு வாளவ ரிருப்பச்
செவ்வாய் திறந்துநகை செய்தே
மைவாழ் களத்தனருண் மைந்த
னவ்வா யியற்று மிவை யம்மா. 142

தண்டா விறற்குலவு தண்டால்
வண்டார் நறுந்துளவ மாலைப்
புண்டா னுறும்படி புடைப்ப
விண்டா னெனப்படி விழுந்தான். 143

மட்டுறு விரைக்கமல மன்முன்
கிட்டிநளி னத்தெழில் கொடுத்துக்
கட்டழகு தங்கிய கரத்தாற்
குட்டினன் முடித்திரள் குலுங்க. 144

வேறு

விழுந்தான் வேதனும் வெண்மை மாமதி
யெழுந்தா னேடலு மீசன் மாமகன்
செழுந்தாள் கொண்டுட னேயு மாறுசெய்
தொழிந்தார் தம்மையு மூதி யற்றினன் 145

அறந்தா னேவிய வண்டர் யாவரு
மிறந்தா ராயு மிலங் குணர்ச்சிகள்
மறந்தா ராயு மகக் களத்தின்வா
யுறைந்தா ராட லுகந்த வீரனல். 146

கண்டா னீது கலங்கி வெந்துயர்
கொண்டா னெஞ்சு குலைந்து மொய்ம்பினிற்
றண்டார் கொண்டுள தக்க னிற்றலு
மண்டார் கூற்றிஃ தாற்று வானரோ. 147

செறுத்தா னேறிய தேவை யெள்ளிய
மறுத்தா னெஞ்சுடை வஞ்சன் மாமுடி
யறுத்தா னங்கி யருந்த நல்கினன்
வெறித்தார் மொய்ம்புள வீர வீரனே, 148

மாலே தங்கிய வஞ்சன் மாய்தலும்
வேலே யன்னகண் வேத வல்லிதன்
பாலே மாதர் பரம்பி வந்திடக்
காலே போன்று கடிதின் மேவினன். 149

துன்பங் கொண்டு துளங்கி வந்துளாண்
முன்பங் கெய்தி முரன்கொள் காளித
னன்பன் னேர வணங்கின் வார்குழை
மின்கொள் கேள்வி யறுப்ப வீழ்ந்ததே. 150

பிடித்தாண் மற்றுள பேதை மாதரைக்
கடித்தார் கொண்ட கவின்கு ழற்றலை
வடித்தார் வாள்கொடு வல்லை கொய்துபந்
தடித்தா ளெம்மை யளிக்கு மன்னையே. 151

வேறு

வீர னேவலின் விரைந்தெயி லுடைத்தே
தாரு லாவுமகச் சாலையை யழித்தே
கோர மோடுபல் கொடுந்தொழில் புரிந்தார்
போரெ னிற்களி பொருந்தியிடு பூதர். 152

முந்து நொந்திடு முகுந்தனெனு மேலோன்
சிந்தை வெந்துயர் தெளிந்திவை தெரிந்தே
யுந்து கின்றவுவ ணத்தின்மிசை யுற்றே
மைந்து கொண்டகணை மாரிகள் சொரிந்தான். 153

நின்ற பூதரு நெருப்பெழ விழித்தே
துன்று வாளிகள் சொரிந்தமர் புரிந்தார்
வென்றி கொண்டபுய வீரனிது கண்டே
சென்று மாலொடு செருச்செய நினைந்தான். 154

அன்ன போதிலெம தண்ணலரு ளாலோர்
மின்னு தேரணுக வேதனதன் மீதே
துன்னு வீரனெதிர் சூதனென வந்தே
யின்ன வையமிசை யேறென விரப்ப. 155

வீறு காளியொடு வீரனதன் மீதே
யேறி ஞன்முக னிலங்கிரத முய்ப்ப
மாறு கொண்டுபொரு மாயனெதிர் வல்லே
சேற லோடுமிவை செப்புவன் முராரி. 155

வேறு

தன்னிக ரண்ணலை யெள்ளுந்
தக்கனை யட்டிட லல்லான்
மன்னிய விண்ணவ ரெல்லா
மாள வியற்றிய தென்னோ
வென்னலு மக்கொடி யோனே
டெய்துதல் கண்டுயிர் கொண்டோ
முன்னையு மின்னுயி ரின்னே
யுண்குவ மென்ன வுரைத்தான். 157

வண்டு படிந்த நெடுந்தார் மார்பின்
மிடைந்த வளைக்கைக்
கொண்டல் வெகுண்டு கரத்தே கொண்ட
நெடுஞ்சிலை கோட்டித்

திண்டிற ஞெனி காட்டித் தீய
சரம்பல பூட்டிப்
புண்டரு வெய்ய படைக்கைப் பூதர்கண்
மீது பொழிந்தான். 158

## வேறு

கண்டள ளிருண்ட கண்டன் மகனுந்து
கார்முக மிசைச்சி லீமுகமிசைத்து
வண்டுளமகிழ்ந்த வண்டுள வலங்கன்
மாயவன் விடுத்த வாளிகண் முருக்கி
யொண்டிறல் பொருந்த விண்டுநுத லின்க
ணோர்கணை யழுத்த வோகையி லிடுக்க
ணண்டின னகன்று மொய்ம்பனெதிர் பின்பு
மாசுக மளப்பி லாதன வுகைப்ப. 159

உத்தமனு மெத்து மத்திர முரத்தொ
டுந்தியரி யுந்து முந்துகணை சிந்தி
நத்துறு கரத்த னற்றனுவை யொற்றை
நன்கணை துரந்து நந்திடல் புரிந்து
கொத்து முவணத்த டற்சிறகை மிக்க
கொன்கணை யிரண்டு கொண்டரிதல் கண்டு
மைத்திரு நிறத்தன் மற்றிகிரி யுய்ப்ப
வந்தது விரைந்து மண்டல நடுங்க. 160

## வேறு

அங்காழிப் படைவருத றெரிந்தா
னடல்வீரன் கடிதுபிடித் தயின்றான்
கொங்காரு நறுந்துளவ நெடியோன்
கொடுவாள்கொண் டிறையோன்முன் குறுக

வுங்காரஞ் செய்தனனெம் பெருமா
    ஞேவியம்போன் மாயவனுங் குறைந்தான்
மங்காத பெருஞ்சினமென் னினைந்தோ
    மருவினு னுதல்விழியான் மதலை. 161

எம்பெருமான் சினந்திடலுஞ் சினவே
    லெனவிசும்பில் வாசகமொன் றிசைப்ப
வும்பர்பிரான் றனதுசுத னதுகேட்
    டுள்ளெழுவெஞ் சினமகன்றுங் குறலுஞ்
செம்பதுமத் தணங்குரத்தோன் புகழ்ந்தே
    சிதடனேன் புரிந்தபிழை செழுந்தீ
யம்பகநா யகன்புதல்வ பொறுத்தீண்
    டளித்தியென வருள்புரிந்தா னமலன். 162

அவ்வேலை வேலைவிட மருந்தி
    யமரர்தம துயிர்காத்த வமலன்
வைவேலை முனிந்தநெடுந் தடங்கண்
    மாதேடு வான்மீது வரலுஞ்
செவ்வேணித் திறல்வீரன் றெழுதான்
    றிருமாலு மயனுமமர் செய்யுங்
கைவேழ முரித்தபிரான் றிருத்தாட்
    கமலமல ரெதிர்பணிந்து களித்தார். 163

ஓங்குமகக் களத்தினிடை மடிந்தே
    யுறுகின்றோர் தமையெமையா ளுமைகண்
டிங்கிவர்க ளெனதுபொருட் டிறந்தா
    ரிறைவபிழை பொறுத்தெழுப்பென் றிரப்ப
நீங்கருந்திண் டிறல்புனைதன் சுதனு
    னிமலனெவ ரையுமெழுப்ப நிலமேற்
றூங்கியெழுந் தெனவெழுந்தார் மறையோர்
    துகடீரு முனிவரொடு சுரர்கள். 164

உஞ்செழுந்த வமரர்மா விடைமே
ஓயர்விசும்பி னிறைவனைமா தொடுங்கண்
டஞ்சிமிக நடுங்குதலு மதிகூ
டருளாள னஞ்சலிரென் றருள
நெஞ்சமகிழ்ந் தடிபணிந்தார் புகழ்ந்தார்
நெடுமலரோன் மகற்காணு நிமலன்
கஞ்சமலர்க் கழல்பணிந்தென் மகனுங்
கயவனெழுந் திலனென்னவே கழறி. 165

ஐயவவ னுய்யவருள் செய்யென்
றயனிரப்ப வுமைபாக னருளாற்
சையனிகர் புயவீரன் கடிதே
தக்கனுடன் மீதுமறித் தலையொன்
றுய்யவிசைத் தெழுதியென வெழுந்தாங்
குளநாணி வெருவவிட முமிழும்
வெய்யபணிச் சடையாளன் றக்க
வெருவேலென் றருள்புரிந்தான் மிகவும். 166

ஆசறுநல் லறிவொருவி மையா
மறிவுறலா லானமு மனைத்தாய்க்
காசினியி லெழுந்தவனம் பெருமான்
கழல்பணிந்து புகழ்ந்திடலுங் கருணை
நேசமொடு புரிந்தருளி யமர்க்கு
நிகரிலா வீரனொடு நிமலன்
வீசுபுகழ்க் கயிலையடைந் தடல்சேர்
வீரனுக்கோ ருலகளித்து விடுத்தான். 167

## வேறு

மற்றிது நிற்க மகக்களத்தி னூடே
யுற்றிடு மும்பரி லுந்துமலர் வேதன்
பெற்றிடு மைந்தன் முகந்தெரிந்து பேதா
யெற்றை யியற்றினை யென்றினைய கூறும். 168

சுசனை யெள்ளிய வின்னபிழை தீர
வாசறு மன்போ டவன்றனது பொற்றாள்
பூசனை புரிந்து புகழ்ந்திடுதி யென்றே
பேசுவ னிவ்வகை பின்னுமல ரோனே. 169

தேனமர் கொன்றைச் செழுஞ்சடைமு டித்த
வானவன் மேன்மை மறந்தொரு பகற்க
ணானிறை யென்றன னாரண னெவர்க்குந்
தானிறை யென்று தருக்குட னுரைத்தான். 170

வெஞ்சமர் செய்குதும் வென்றவ ரெவர்க்குந்
தஞ்ச மெனப்படு தானுவென வோதிக்
கஞ்ச மடக்கொடி காதலனும் யானு
நெஞ்ச முனிந்து நெடுஞ்செருவி ழைத்தோம். 171

அந்தரி தங்கிய வங்கனெமை யாள்வான்
வந்தெரி யாகியு மண்ணும்விண்ணு மொன்றாய்
யுந்துபு நின்றிட வொல்லையது கண்டே
வெந்திற லாடல் விளைப்பது விடுத்தேம். 172

திண்டிற லின்ன சிலம்பினடி சென்னி
கண்டவ ரேயுயர் காரண ரெனச்சீர்
கொண்ட பதத்தொடு கோதின்முடி தேடிக்
கண்டிலம் வன்மை கழிந்தகந்தை விட்டேம். 173

சம்புவை யன்பொடு தாழ்ந்தடி பணிந்தே
மெம்பிழை யெண்ணல னின்னருள் புரிந்தா
னம்புவி யின்புடை யன்னவனை நீயு
நம்பி வணங்குதி நல்குமரு ளென்றான். 174

இன்ன விசைப்ப விசைந்தடி பணிந்தே
கன்ன னெருங்கிய காசிநக ருற்றே
மன்னிய வாயிர வற்சர மரன்றாள்
நன்னெறி யர்ச்சனை செய்திடலு நம்பன். 175

வந்துக ணப்படை மன்னவ னெனுஞ்சீர்
தந்தன னும்பர்க டத்தமிடை யுற்றே
யிந்து நெடுஞ்சடை யெந்தைபெரு மானைப்
புந்தியி லன்பொடு பூசனை புரிந்தார். 176

என்றிவை யாவு மிருங்குலிச வேலாற்
குன்றி னெடுஞ்சிறை கொய்தவன் மகற்கு
வென்றி பொருந்து வியாழமெனு மேலோ
னென்றொழி யாம லுவப்புட னுரைத்தான். 177

## வேறு

கூறிது நின்றிட வேறொரு நாண்முசு
    குந்த னெனுந்தலைவன்
மாறுத லற்ற விசிட்ட மடைந்த
    வசிட்டனை வந்துபணிந்
தாறு முடித்த தருட்கட னல்கிய
    வாறு முடிப்பெருமான்
வீறு புகழ்ப்பெறு விரத முரைத்தரு
    ளென்று விளம்புதலும், 178

வெள்ளி யெனுந்தின மாரல தன்றியும்
    வென்றி யுறுந்துலையா
மொள்ளிய திங்களி லிந்து வளர்ந்திட
    வோங்குமுன் வைகன்முறை
வெள்ளரி தாமறு நாளு மெழிற்பர
    சேந்திய வேந்தறரும்
வள்ளன் மகிழ்ந்தருள் விரத மெனப்புகழ்
    மாதவ னோதியரோ. 179

அன்னதி யற்றலு மன்னது தன்னி
    லருத்தி பொருத்திமுடித்
துன்னரு மேன்மை யடைந்தவர் தம்மையு
    மோதின னோதுதலு

மின்னலின் மன்னவ னப்படி பற்பக
 லிப்புவி யிற்புரியா
வொன்னலர் வந்து பணிந்திட வைய
முவந்து புரந்தனனே. 180

மேவொரு நாடனின் மண்ணுல கத்தினும்
விண்ணுல கத்தனுகித்
தேவர் வணங்குறு கோவை வருத்து
திருக்கவு ணப்படைவென்
றேவில் பெரும்புக ழேழு விடங்கரை
யொண்புவி மீதுகொணர்ந்
தேவரு மன்பொடு காண விருத்தி
யிருங்கதி யுற்றனனே. 181

சொற்றிடு மின்ன திருக்க விருப்பொடு
தொண்டைநன் னுடதனின்
மற்றொரு வெற்பிடை பொற்புறு நற்சிவ
மாமுனி மேவியகா
னற்றிற நவ்வி யடைந்திட வன்னதை
நச்சின னச்சியதே
யுற்றிடு மோர்கரு வாயது நவ்வி
யுலாயதம் மால்வரைமேல். 182

குன்றலர் வள்ளியின் மூல மெடுத்த
குழிப்புடை வந்தனுகா
நன்றி பெறுந்திரு மங்கையை யங்கதி
னல்குபு தன்னதின
மன்றி யிருந்தது கண்டு வெருண்ட
தகன்ற தகன்றிடலும்
வன்றிறல் கொண்ட கிராதர் பெருந்தகை
வந்து தெரிந்தனனே. 183

தெரிந்து மகிழ்ந்து கரங்கொ டெடுத்துயர்
செல்வ மனைப்புடையிற்
றிருந்திறல் கொண்ட விருத்தர்கள் வள்ளி
யெனப்பெயர் சொற்றிடவே
பரிந்து சிறப்பொடு குன்றவர் மன்னது
பாரில் வளர்ந்திடுநா
டிருந்திய யாணை ரிளங்குயி லாதிரு
திருவய துற்றனளால். 184

ஏவை முனிந்தொளி ரெஃக நெடும்படை
யென்ன விலங்கியகட்
பூவையை வேடுவ ரானவ ரேனல்
புரந்திட வைத்திடலுங்
காவல் புரிந்தித ணத்துறு நாளுயர்
கந்த விலங்கலொரீஇச்
சேவ னெடுங்கொடி யண்ணல் பெருத்த
செருத்தணி யுற்றனனே. 185

வந்து செருத்தணி யற்புத வெற்பிடை
வள்ள லிருந்தருளச்
சுந்தர வள்ளியை நாரத னாகிய
தொன்மைகொண் மாமுனிகண்
டெந்தை குகன்க ணிணங்கி வணங்கி
யிசைத்திட மாமயல்கொண்
டுந்திய வேலவன் வேடுவர் போல
வுருக்கொடு சென்றனனே. 186

விண்டொடு வள்ளி விலங்கலி னேகி
விலங்க லிலாவெழிலோ
டண்டரி தாமித ணத்தி லிருந்த
வருங்குற மாதுதனைக்

கண்டனன் மாமயல் கொண்டிடர் கொண்ட
    கருத்தொடு நின்றுபுகழ்ந்
தொண்டிற லோன்விர கத்துரை பற்பல
    வோதினன் மாதிநெடும். 187

ஆங்கது காலையில் வேடுவ ரோடவ
    னத்த னடைந்திடலும்
வேங்கை யுரித்த பரம்பரன் மாமகன்
    வேங்கை யுருக்கொளவே
வாங்கில் புகழ்ப்பெறு கானவ ரானவர்
    வந்து வளைந்துசினந்
தீங்கிது வல்லை பறித்து முறித்திடு
    மென்று புகன்றனரே. 188

அன்னவர் தம்மை விலக்கி யவர்க்கிறை
    யன்பு மகட்டெரியா
வின்னதி யாதென வேது மறிந்தில
    னென்று புகன்றிடலு
மன்னிய வின்னது நின்றுனை யாகி
    வளர்ந்திவ ணிற்கவெனு
வந்திலை தன்னி லகன்றனன் முன்பென
    வண்ணலு நின்றனனே. 189

இன்பொடு நின்றவ னுன்றனை யன்றி
    யெனக்கொரு தஞ்சமிலை
யன்புட னுறுதி யென்றனை யென்றெம
    தன்னையொ டோதலுமே
பின்பு மிருங்குற வர்க்கிறை யான
    பெருந்தகை வந்திடவே
பொன்புனை சைவ விருத்த னெனும்படி
    போயின னங்கவனேர். 190

ஆதர விற்றிரு நீறு கொடுத்தன
      ளுசி புகன்றிடலு
மேதயில் கொற்றவ னச்சின தேதென
      விவ்வரை யிற்குமரி
தீதற வாடுற வந்தன மென்றருள்
      செய்யவ தாடுபுநம்
மாதி னெடுந்துணை யாயிரு மென்றவண்
      வைத்தகல் வுற்றனனே. 191

வள்ளியை நோக்கி விருத்த னெனும்படி
      வந்திடு மெந்தைபிரா
னுள்ளுறு நீரில் விடாயுடை யேனென
      வோதவத ற்கொருசா
ரெள்ளில் புகழ்க்கொடி நற்சுனை யின்கரை
      யெய்த மெலிந்தவர்போ
லள்ளி யரும்புன லுண்டெமை யாளுடை
      யண்ண லறைந்தருள்வான். 192

ஏதமி னீரின் விடாயை யகற்றினை
      யென்னை யினித்தழுவிக்
காத லகற்றுதி யென்று புகன்றிரு
      கைகள் குவித்திடலு
மாது சினந்து படர்ந்தன ளத்தியின்
      வத்திர னைக்குமர
னாதர வோடு நினைப்ப வெதிர்ந்தன
      னைய தாயெதிரே. 193

கண்டனள் வள்ளி வெருண்டு திரும்பினள்
      கந்தனை வந்துதழீஇக்
'காண்டன ளும்ப லகற்றிடி னீர்நகை
      கொண்டது செய்வனென

வண்டர் பிரானிரு கைகள் குவித்தன
　　னத்த வெழுந்தருளென்
றுண்டிறல் வேழமொ டோதலு மன்ன
　　துவப்பொடு சென்றதுவே. 194

அன்னது பின்பறு மாமுகன் வள்ளியை
　　யாசை யொடும்புணராப்
பன்னிரு கையொ டிருந்திட மங்கை
　　பணிந்து புகழ்ந்திடலு
மன்னு திணைப்புன மேகுதி யாமவண்
　　வந்திடு வோமெனவே
துன்னிய வேன லுறும்படி யுற்றன
　　டோழியு மெய்தினளே. 195

ஏனல ழிந்திட வெங்ஙன மேகினை
　　யென்று விளம்புதலும்
பூநறு மென்சுனை யாடி வரும்படி
　　போயின னென்றிடவே
மேனி வியர்ப்ப முலைத்துணை விம்ம
　　வெளுத்திட வாய்புரியு
மூன மிறண்சுனை யெவ்விடை யுற்றுள
　　தோதென வோதினளே. 196

நன்றிது நன்றி தெனக்கு மொர்குற்ற
　　நவின்றனை யென்றுவெகுண்
டொன்றி யிருந்துழி வேலவன் வேட
　　ருருக்கொடு வெய்யமதந்
துன்று விறற்கரி யொன்றெனை தம்பொடு
　　சோரி சொரிந்திடவே
யின்றிவண் வந்துள தோவென வோதின
　　னேதமின் மாதர்கண்முன். 197

அவ்விடை யிற்குகன் மங்கை புணர்ந்ததை
யங்கவர் பார்வையினுன்
மைவிழி நண்பி யறிந்து பிறிந்தயல்
வன்புன மீதுறலுன்
கவ்விய வேலவ னன்னவண் முன்பு
கலந்தெழில் வள்ளியையெற்
கிவ்விடை யீகுதி யல்லதி யான்மட
லேறுவ னென்றனனே. 198

என்னலு மன்னவள் வள்ளியை யெய்தி
யிணங்குறு மாறுரையா
மன்னிய வேல னிடைக்கொடு வந்திட
வள்ளியும் வேலவனு
மின்ன லறுங்கல வித்தொழில் செய்துபி
னேனல் புரந்திடவே
பொன்னுறு வேலன் விடுத்தலு மெம்மனை
போயினள் சேடியொடும். 199

வென்றிகொள் குன்றவ ரேன றடிந்திட
மேவினர் மாதினையிற்
சென்றிடெ னத்துணை மாதொடு வீடு
செறிந்து வருந்தியுறப்
பொன்றிகழ் வள்ளியை நாடி மெலிந்து
புலம்பி யிருட்பொழுதின்
வன்றிறல் வேலவன் மங்கை யிருந்த
மனைப்புற முற்றனனே. 200

வேலனை யன்பொடு கண்டனள் சேடி
விருப்புறு வள்ளிதனைக்
கோலமொ டுங்கொடு வந்தனள் பாணி
கொடுத்தன ளின்னவனைச்

சாலவு மன்பொடு காத்தரு ளென்றுரை
சாற்றலு நம்பிடைநீ
மாலை நறுங் குழல் வைத்திடு மன்பு
மறக்கில மென்றனனே. 201

என்று புகன்றவ னின்று மகன்றெழி
லெய்திய மாதிநெடுஞ்
சென்றிரு காவி லிருந்தனன் வைகறை
சேர்தலும் வள்ளிதனைத்
துன்றெயி னர்க்கிறை கண்டிலன் மண்டிய
சுற்றமொ டுங்குழுமிப்
பொன்றி லடிச்சுவ டொற்றி நடந்து
பொழிற்புடை யுற்றனனே. 202

கண்டனள் வள்ளி வெருண்டன ளன்பொடு
கந்தனை வந்தனைசெய்
தண்டினர் வேடுவ ரென்செய்வ தென்றிட
வன்றெதிர் சூருயிரைக்
கொண்டிடு மெஃக மிருந்துள தஞ்சலை
கொல்லுதும் யாமெனவே
மண்டிய வேடுவர் வந்து வளைந்து
வடிக்கணை வீசினரே. 203

மாரி யெனும்படி வாளி சொரிந்திட
வள்ள றனுதருளாற்
சீரிய கையி லுறுங்கொடி யாகிய
சேவ லொலித்திடவே
யாரு மிறந்தனர் வேலவ னங்க
ணகன்று நடந்திடலுஞ்
சோர்வி லெழிற்பெறு குன்றவர் மாது
தொடர்ந்து படர்ந்தனனே. 204

மேதகு நாரத னவ்விடை வந்தனன்
வேலவ னைப்பணியா
வோதுதி யிங்ங னியற்றிய தென்ன
வுவப்புறு வள்ளிபொருட்
டேதமில் வேலவ னிங்ங னியற்றிய
யாவு மறைந்திடவே
தீதறு நாரத னுகிய பேருள
சீர்முனி கூறுவனல். 205

எம்பெரு மானிவண் வேடுவர் யாரு
மிறப்ப வியற்றினையிக்
கொம்பினை வவ்வி யகன்றிட னீதி
கொலோவென வோதுதலு
மும்ப ரிடுக்க ணகற்றிய வேல
னுவந்து திரும்பியரோ
வம்புறு சோலையின் வந்தனன் மாதவன்
வள்ளி யொடுங்கடிதே. 206

ஒல்லையில் வேலவன் வள்ளி மடந்தையோ
டுன்றம ருய்ந்தெழவே
சொல்லுதி யென்னலு மன்னையு மவ்வகை
சொற்றனள் சொற்றிடலும்
வல்லை யெழுந்தன ராறு முகம்பெறு
வள்ளலை யன்பொடுகண்
டெல்லையி லாத வெருக்கொ டிறைஞ்சி
யிசைத்திடு வாரிவையே. 207

எங்கள் பிரானினி யெம்மனை யுற்றெழி
லெம்மனை தன்னைமணந்
தங்கொளு நின்பதி யேகுதி யென்னலு
மன்ன செயற்கிசையா

மங்கு நெருங்கிய குன்றுறை கானவர்
மன்னவ னிற்குறுகித்
துங்க நெடும்புலி யாதன மீது
துலங்க விருந்தனனே. 208

அங்கது காலையில் வள்ளியை யன்பினொ
டண்ணா றெரிந்திடலுங்
கொங்கு நறுந்தொடை வேடுவர் மாதர்
குயிற்றிய கோலமொரீஇ
மங்கில் வளம்பெறு தெய்வ வனப்புடன்
மன்னின ளின்ன துகண்
டிங்கிவ ளெம்புடை வந்தது நந்த
மிருந்தவ மென்றனரே. 209

கொற்றம துற்றிடு கானவ ரானவர்
கொற்றவன் முற்றெழிலான்
மற்றிணை யற்றுயர் வள்ளி கரத்தினை
வள்ளல் கரத்தினில்வைத்
துற்றிடு மென்மக ளைக்கும ரேச
வுனக்கருள் செய்தனனென்
றற்றமி லன்பொ டறைந்து சிறந்த
வரும்புன லுய்த்தனனே. 210

அன்னது காலையி லெஃக நெடுங்கர
வண்ணற றுதருளாற்
றன்னிகர் நாரதன் மன்றலி னுள்ள
சடங்கு புரிந்திடலுந்
துன்னிய விண்ணவர் கண்ண னயன்புடை
சுற்றி வழுத்திடவே
கன்னி மடந்தையொ டந்தர மீதிருள்
கந்தரன் வந்தனனே. 211

தந்தையு மன்னையும் வந்தது கண்டொரு
தந்தி முகற்கிளவல்
சிந்தை களித்தெவ ரும்முண ராவகை
செய்ய கரங்கள்குவித்
துந்து பெரும்புக ழும்பர் தமக்கு
முவந்தருள் செய்திடலும்
புந்தி மகிழ்ந்துயர் விண்ணவ ரோடு
புராந்தக னேகினனே. 212

சம்பு வகன்றுழி நாரத னுற்று
சடங்கு முடிந்திடலு
மம்பு நெடுஞ்சிலை வேடுவர் மாதர்க
ளாசி புகன்றிடவே
வம்பு பொருந்து கடம்பு தடம்புயன்
மங்கையொ டங்கணெழுந்
தும்பர் புகழ்ந்திடு குன்றவர் மன்னொ
டுரைத்திடு வானிவையே. 213

அருத்தி பொருந்திய வுன்ற னியற்கை
யனைத்து மியற்றுபுவிங்
கிருத்தி யெனக்கடி தங்க ணிறுத்தி
யிலங்கெழில் வள்ளியொடும்
பெருத்திடு மன்ன சிலம்பை யகன்று
பிறங்கு வளங்குலவுஞ்
செருத்தணி மால்வரை வந்தன னுந்திய
சேவ லுயர்த்தபிரான். 214

அண்டர்கள் கம்பிய னன்னதின் முன்ன
ரமைத்திடு மாலயமுற்
றெண்டொடி யோடு மிருத்தலு மங்கை
யுவந்து வணங்கியெழிற்

கொண்டிடு மின்ன சிலம்பி னியற்கைகள்
கூறுதி யென்றிடலு
மண்டிய வக்கிரி மேன்மை யனைத்தையும்
வள்ளல் புகன்றனனே. 215

உய்வகை தந்திடு கந்த னதற்பி
னூரக்கிரி வில்லுடையோ
னவகை மேனியி லோர்வடி வங்க
ணமைத்தமை யாமகிழ்வான்
மெய்வகை யர்ச்சனை செய்ததி னுள்பல
மேவி விளங்கெழில்சேர்
மைவிழி மாதொடு கந்த விலங்கலின்
மந்திர முற்றனனே. 216

வேறு

வண்டார் தொடைக்குழன் மருத்துவ னளித்ததிரு மங்கை
கண்டா ளெழுந்தெதிர் நடந்தாள் பணிந்தனள் கரத்தா
லண்டார் தமக்கரி யெடுத்தே யுரத்திடை யணைத்தான்
விண்டா னுறழ்ந்தவிடை வள்ளியவ டாண்மிசை
விழுந்தாள். 217

ஈறுன தற்றபுகழ் யாணருள வள்ளியை யெடுத்தே
மாறு நெடுங்கிரி யிரண்டுட னிரண்டுபொரு மாபோல்
வீறுன கொங்கையொடு கொங்கைக ணெருங்க வுரமீதே
பாறு னிகர்த்தமொழி புல்லிமுக மன்பல பகர்ந்தான். 218

மின்னு நுசுப்பனைய மாதரொ டரித்தவிசின் மீதே
யொன்னு ருடம்பிடி யுடம்பிடி பிடித்தவ னுறைந்தான்
பொன்னுடன் மங்கையிவள் வந்தபரி சென்னபுக லென்ன
வன்னு டனக்கிவை யுரைக்குமெமை யாளுடைய வண்ணல்.

முன்னூன் முகுந்தனிடை வந்தீ ரெமைத்தழுவ முன்னிப்
பன்னு ணெடுஞ்சர வணத்தே தவத்தொழில் பயின்றீ
ரந்நாளி னும்புடை யடைந்தே மகத்திறை யகத்து
மின்னூர் பண்டப்புளினர் கண்ணும்வளர் வீரென விடுத்தாம்.

மருந்தான வின்பமொழி யிந்திர னிடத்து மகளாய்நீ
யிருந்தா யிருந்துழி மணந்தா முனக்கிளைய வின்று
டிருந்தார் வணங்கெயினர் பால்வளர யாமினிது சென்றே
பொருந்தாசை யோடுபல செய்துவது வைத்தொழில்
புரிந்தாம்.

செந்தே னறும்பொழின் மருத்தரு செருத்தணி வரைக்கண்
பந்தே பொருந்திய கரத்தா யிருந்தொளி பரப்பு
மிந்தே புரிந்தமுக வின்னமட மங்கையொடு மிங்ஙன்
வந்தே மியாமென மகிழ்ந்தாண் மருத்துவன் மடந்தை. 222

சீரா ரடற்குலிச பாணிமக ளானதிரு மாதும்
வாரார் முலைக்குறவர் மாதுமிரு பாலினும் வயங்கப்
போரா ரரித்தவிசின் மீமிசை யினம்பரிதி போல
வேரா ரடற்குமர நாயக னுவப்புட னிருந்தான்: 223

மைந்துற்ற சேவலு மிருந்தகரு மொண்பணியை வவ்விச்
சிந்துற் றிடுந்திறன் மயூரமொடு வேலுமுயர் தேரு
மெந்தைக்கு நாடொறு மிடும்பணி புரிந்தவ ணிருந்த
கந்தப் புராணச் சுருக்கமு நிறைந்தது களிப்பால். 224

வேறு

வேல்வாழி மயில்வாழி சேவல் வாழி
வேறுமுள படைவாழி விளங்கு தண்டைக்
கால்வாழி யருள்பொழியும் விழிகள் வாழி
கவின்குலவு மீராறு கரங்கள் வாழி

மால்வாழி வாழியெனப் பணிந்து வாழ்த்து
மலைமாது தருமுருகன் மகிழ்ந்த வாறு
பால்வாழி யெனையாளுங் கருணை வாழி
பங்கிருந்த மங்கையர்தம் பதங்கள் வாழி. 225

வேறு

ஆதி வாழிய வஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே. 226

மெத்து மின்ப வியாபக மாகிய
முத்தி தந்தெனை யாட்கொண்ட முன்னவன்
பத்தர் மொய்த்தசம் பந்தன் கமலைவா
ழுத்தன் வாழி யடியவர் வாழியே. 227

வீர வேற்கை விமலன் மகிழ்ந்திடப்
பாரி னோர்கள் பரிந்து புகழ்ந்திடச்
சீரு லாவிய செந்தி னகரிடை
யேரி னோடரங் கேற்றிய திந்தநூல். 228

வேறு

துய்யதா மறைக ளாலுந் துதித்திட வரிய தான
செய்யவே ளடிகள் வாழ்க சேவலு மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க வன்னோன்
பொய்யில்சீ ரடியார் வாழ்க வாழ்கவிப் புவன மெல்லாம். 229

தக்ஷகாண்ட முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் 1049

கந்தபுராணச் சுருக்கம் முற்றுப்பெற்றது.

உ

குருபாதம்

## கந்த புராணச் சுருக்கம்

# பாட்டு முதற்குறிப்பு அகராதி


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| அ | | அங்கிருந்த | 144 |
| | | அங்கிவையாதி | 105 |
| அக்காலைதன்னில் | 174 | அங்குலவு | 169 |
| அக்காலைவேழ | 75 | அங்குளகடன் | 44 |
| அங்கணாவ | 115 | அங்குறுதாரக | 109 |
| அங்கணித்து | 61 | அங்குற்றபேர் | 83 |
| அங்கணிறந்தவ | 106 | அங்கொருபூந் | 12 |
| அங்கணிலைய | 43 | அடித்தகரங்களை | 108 |
| அங்கதற்கிசைவு | 93 | அடித்துமுதைத்து | 104 |
| அங்கதன்மிதில் | 93 | அட்டதுபின்னர் | 104 |
| அங்கதுகாலையில் | 252 | அட்டவதற்பினரங்கு | 104 |
| அங்கதுசூரன் | 84 | அண்டாகம்மிய | 191 |
| அங்கதுபின்னர் | 89 | அண்டர்கள்கம்மிய | 253 |
| அங்கதுபின்னை | 34 | அண்டர்சூழ்குமர | 93 |
| அங்கதுபோதினி | 108 | அண்டர்சூழ்தர | 208 |
| அங்கதைவிளவி | 40 | அண்டர்புகழ் | 46 |
| அங்கவர்கண் | 50 | அண்டர்பொய் | 162 |
| அங்கவள | 50 | அண்டர்போற்ற | 196 |
| அங்கவனுருயிர் | 107 | அண்டர்வெருண்டிடு | 108 |
| அங்கவன்தனது | 94 | அண்ணனிலைந் | 18 |
| அங்கவன்மிடற் | 61 | அணியார்முரு | 34 |
| அங்காரும் | 99 | அணியுமிந்து | 208 |
| அங்காழிப்படை | 239 | அத்தகரைப் | 33 |

| | பக்கம் |
|---|---|
| அத்தநிலை | 31 |
| அத்தமுஞ் | 5 |
| அந்தணனுக் | 34 |
| அந்தநாகத் | 198 |
| அந்தமகலோக | 61 |
| அந்தமில்வளங் | 47 |
| அந்தரமீதுறு | 29 |
| அந்தரிதங்கிய | 242 |
| அந்தரியோடு | 28 |
| அந்தவமையத்தின் | 44 |
| அந்தவமையந்தனி | 46 |
| அந்தவேலை | 116 |
| அந்தவேலை | 166 |
| அந்தவேலை | 171 |
| அந்தவேலை | 210 |
| அந்தவேலையிலவன் | 156 |
| அந்தவேலையிலாதி | 231 |
| அந்தவேலையிலிந்து | 222 |
| அந்தவேலையில்விண் | 228 |
| அந்தவேலையில் | 148 |
| அந்தவேலையில் | 220 |
| அந்தவேலையிற் | 126 |
| அந்தவேலையிற் | 158 |
| அந்நகரிலுள்ளவ | 44 |
| அந்நாளின் | 71 |
| அந்நிலைதன்னின் | 26 |
| அந்நேரத்தினி | 30 |
| அப்படி | 112 |
| அப்பான்மை | 35 |
| அப்பொழுதுதொல் | 51 |
| அப்பொழுதுமாயனொரு | 60 |
| அப்பொழுதுவேலவ | 42 |
| அப்போதினில | 35 |
| அப்போதினின் | 185 |
| அப்போதுசீறி | 144 |
| அப்போதுதன்னி | 174 |

| | பக்கம் |
|---|---|
| அப்போதுதன்னி | 234 |
| அப்போதுபற்பல | 110 |
| அப்போதுமகனுகி | 83 |
| அப்போதுமாகாளர் | 82 |
| அம்புவியழுந்தவரு | 37 |
| அம்மொழிவழங்கலு | 52 |
| அம்மைபணிந் | 234 |
| அம்மைதன்கர | 229 |
| அம்மையெடுத்துழி | 28 |
| அரிமுகன் | 69 |
| அருத்திபொருந்திய | 253 |
| அருத்திதன்னுட | 211 |
| அருந்தவன் | 55 |
| அருந்திறல் | 47 |
| அருமறையின் | 14 |
| அல்லிமாமலர் | 201 |
| அல்லோடுநிகர் | 78 |
| அவ்வாறுகண்டா | 234 |
| அவ்விடையிற் | 249 |
| அவ்விடையின் | 62 |
| அவ்வேலையோர் | 75 |
| அவ்வேலைவேலைவிட | 240 |
| அறந்தானேவிய | 237 |
| அறிந்த | 124 |
| அறிந்து | 125 |
| அறைகின்றவிவை | 80 |
| அறைந்துபோர்க்கவன் | 158 |
| அற்றமதற்றா | 109 |
| அற்றமறு | 49 |
| அற்றமறும் | 60 |
| அற்றமற்ற | 118 |
| அற்றமற்ற | 192 |
| அற்றமி | 113 |
| அற்றவேலை | 118 |
| அற்றவேலை | 140 |
| அற்றவேலைதனி | 143 |

| | பக்கம் |
|---|---|
| அற்றைவேலையிற் | 157 |
| அனையகாலையிற் | 168 |
| அனையசினகரமதனின் | 6 |
| அனைவர்க்கு | 189 |
| அன்பினொடு | 53 |
| அன்பொடுமற் | 32 |
| அன்பொடுவிடுத்தலு | 164 |
| அன்னகாலைய | 119 |
| அன்னகாலைய | 198 |
| அன்னகாலையில் | 125 |
| அன்னகாலையில் | 226 |
| அன்னகாலையில் | 165 |
| அன்னகாலையிற் | 164 |
| அன்னசெயல்கண்டன | 44 |
| அன்னதியற் | 243 |
| அன்னதுகாலையில் | 252 |
| அன்னதுகாலையில் | 108 |
| அன்னதுதெ | 202 |
| அன்னதுபின் | 248 |
| அன்னதுபின்னர் | 86 |
| அன்னதோர் | 162 |
| அன்னபொருள் | 55 |
| அன்னபொழுதரனை | 235 |
| அன்னபோ | 151 |
| அன்னபோதிசை | 213 |
| அன்னபோதிலீ | 122 |
| அன்னபோதிலெம | 238 |
| அன்னபோதினி | 194 |
| அன்னமாதவரை | 20 |
| அன்னமைந்தர்கள் | 69 |
| அன்னவஞ்சனது | 139 |
| அன்னவனுரைத்த | 199 |
| அன்னவனையட்டபின் | 97 |
| அன்னவரொ | 183 |
| அன்னவர்தம்மை | 246 |
| அன்னவாகனத் | 202 |

| | பக்கம் |
|---|---|
| அன்னுனிலங்கையை | 110 |
| **ஆ** | |
| ஆகமீது | 123 |
| ஆங்கதற்கிடை | 64 |
| ஆங்கது காலையில் | 246 |
| ஆங்கதுபின் | 10 |
| ஆங்கமலனிங்குதலு | 16 |
| ஆங்குதன்மனை | 116 |
| ஆசறுநல்லறி | 241 |
| ஆசிலருள் வேலவனை | 43 |
| ஆசிலாமகுட | 21 |
| ஆசைகொண்டு | 190 |
| ஆடல் கொண்டவர் | 130 |
| ஆடான முகமூற்ற | 83 |
| ஆண்டுற்ற | 76 |
| ஆதரவிற் | 247 |
| ஆதலா லவனே | 201 |
| ஆதலா னீயு | 113 |
| ஆதிக்குகனவன் | 96 |
| ஆதி நின்னருளால் | 229 |
| ஆதி முதல்வனாங் | 210 |
| ஆதிமைந்தன் | 102 |
| ஆதியருளுங்குமர | 170 |
| ஆதியாகி | 102 |
| ஆதிவாழிய | 256 |
| ஆயகாலை | 119 |
| ஆயகாலை | 123 |
| ஆயகாலை | 153 |
| ஆயகாலையில் | 166 |
| ஆயதொரு வேலைதனி | 46 |
| ஆயபோது | 143 |
| ஆயவுடன் | 50 |
| ஆயிரங்கணைகடு | 149 |
| ஆயிரஞ்சரமகல | 158 |

| | பக்கம் |
|---|---|
| ஆயிரம்பெருந் | 125 |
| ஆயிரமியோசனை | 164 |
| ஆரன்மா தினையு | 204 |
| ஆர்த்தபோதி | 119 |
| ஆலமிடற் | 235 |
| ஆலமுங்கால | 90 |
| ஆலயத்தின் | 33 |
| ஆலவன மாகிய | 45 |
| ஆவியெனவொன்றிலை | 59 |
| ஆளிகளி | 179 |
| ஆறுந்திய | 189 |
| ஆறுமுகத்த | 176 |
| ஆறுலாவு | 22 |
| ஆனகாலையிலார் | 194 |
| ஆனகாலையில் | 156 |
| ஆனை தன்பின்னவன் | 150 |
| ஆனவிச்செயலினை | 147 |

**இ**

| | |
|---|---|
| இக்கால | 111 |
| இங்கு நம்முனடைந்து | 230 |
| இங்கு நினை | 32 |
| இங்குநீயெமை | 63 |
| இச்செயல் | 147 |
| இது நிற்க | 76 |
| இத்தன்மை | 36 |
| இந்தமொழி | 34 |
| இந்தவகை | 41 |
| இந்தவாறிவ | 126 |
| இந்தவாறுக | 124 |
| இந்தவாறு புகன்று | 213 |
| இந்தவேலையிந் | 62 |
| இந்திரகுமரன் | 88 |
| இந்திரற்பிடி | 70 |
| இந்திரன் | 112 |

| | பக்கம் |
|---|---|
| இந்திரன்ற | 192 |
| இந்துலாவு | 233 |
| இப்படியிப்படிவானத் | 15 |
| இப்பணியை | 9 |
| இப்பான்மை | 172 |
| இப்பான்மை | 188 |
| இப்பான்மை | 100 |
| இயம்புபோது | 140 |
| இரவியைத்த | 116 |
| இருங்கிளைப் | 17 |
| இருதிறத்தரு | 155 |
| இருந்தகாலை | 157 |
| இலக்கவீரரும் | 155 |
| இலங்குதத்தம | 152 |
| இவ்வகை | 115 |
| இவ்வா றமலை | 209 |
| இவ்வா றுகுஞ் | 106 |
| இவ்வாறிமையோர் | 212 |
| இவ்வாறுகொடுத்து | 36 |
| இவ்வாறு வானவர் | 236 |
| இவ்வேலை தன்னின் | 172 |
| இறந்தபேர்களுந் | 154 |
| இறந்தமிகு | 43 |
| இற்றைவரை | 12 |
| இன்பமான கயிலாய | 80 |
| இனபானவமுதங் | 74 |
| இன்பாகிய | 185 |
| இன்பான | 80 |
| இன்பான | 111 |
| இன்பாகி | 145 |
| இன்பா ரரன்சுதனி | 106 |
| இன்புறுபரன்றரு | 181 |
| இன்புறு முருகனை | 161 |
| இன்பொடு | 246 |
| இன்னசெயல் | 182 |
| இன்னசெய்கை | 130 |

| | பக்கம் |
|---|---|
| இன்னதல்லது | 229 |
| இன்னதன்மையின் | 197 |
| இன்னது நிகழ்ந்த | 89 |
| இன்னதையறிந்து | 164 |
| இன்னபடி | 179 |
| இன்னபரி | 6 |
| இன்னபரி | 183 |
| இன்னபான்மை | 198 |
| இன்னபான்மை | 221 |
| இன்னபான்மையிற் | 151 |
| இன்னபான்மையிற் | 154 |
| இன்னபான்மையின் | 69 |
| இன்னபோல | 195 |
| இன்னமொழி | 18 |
| இன்னருளரன் | 58 |
| இன்னல் கொண்டிட | 233 |
| இன்னவா | 114 |
| இன்னவாசகம் | 64 |
| இன்னவாணகர் | 66 |
| இன்னவாறது | 127 |
| இன்ன விசைப்ப | 242 |
| இன்னவைநிற்க | 90 |
| இன்னறீர் | 112 |

ஈ

| | |
|---|---|
| ஈங்கிது | 145 |
| ஈசனை யெள்ளிய | 242 |
| ஈடானசிங்க | 173 |
| ஈடு கொண்டிடு | 223 |
| ஈடுசெறி பூதரு | 40 |
| ஈடுசேரவரு | 132 |
| ஈடுசேர் | 235 |
| ஈண்டாகை | 111 |
| ஈதம்மையிசைத்திட | 36 |

| | பக்கம் |
|---|---|
| ஈதறிந்திடரின் | 91 |
| ஈதிறை புகறலு | 206 |
| ஈதுகண் | 120 |
| ஈதுகண்டரி | 127 |
| ஈதுகண்டவன் | 156 |
| ஈதுகண்டவுண | 137 |
| ஈதுகண்டனன் | 167 |
| ஈதுகண்டு | 131 |
| ஈது கூரறிந்து | 70 |
| ஈது செய்தலும் | 153 |
| ஈதுநின்றிட | 20 |
| ஈதுநின்றிட | 191 |
| ஈதுநின்றிட | 220 |
| ஈதுநின்றிட | 223 |
| ஈதுபுரிந்து | 23 |
| ஈதெலாங் | 149 |
| ஈதெலாந்திற | 152 |
| ஈதையுமறிந்து | 204 |
| ஈமமாடல் | 219 |
| ஈரேழதான | 175 |
| ஈருன்தற்ற | 254 |

உ

| | |
|---|---|
| உஞ்செழுந்த | 241 |
| உஞ்செழுந்த | 31 |
| உதிரமோடுதன் | 155 |
| உத்தமனு மெத்து | 239 |
| உந்திடு மாயிர | 105 |
| உந்துநந்திபடை | 142 |
| உந்துற்றவொரு | 81 |
| உம்பரை | 181 |
| உம்பர்மன்னவ | 191 |
| உய்வகை தந்திடு | 254 |
| உள்ளுற்ற | 173 |
| உற்றகிரி யீதுகிர | 37 |

| | பக்கம் |
|---|---|
| உற்றசிர்முடியுற | 161 |
| உற்றசிரவீரவாகு | 94 |
| உற்றதூதனு | 133 |
| உற்றபொழுது | 33 |
| உற்றமுன்னுளைர் | 221 |
| உற்றமைந்தனை | 68 |
| உற்ற வின்னது | 227 |
| உன்றம்பியான | 178 |
| உன்றலைப் படு | 225 |
| உன்றனேடு | 135 |
| உன்ன வக்கினி | 21 |
| உன்னை நம்மெதிர் | 206 |

ஊ

| | |
|---|---|
| ஊறகன்ற | 218 |
| ஊறில்வீரன் | 130 |

எ

| | |
|---|---|
| எங்கட்குநீ | 79 |
| எங்க ளுயகளெங்க | 227 |
| எங்களுயகனெதி | 164 |
| எங்களு யகன்க | 207 |
| எங்கள் பிரானினி | 251 |
| எங்குந்தன | 188 |
| எங்கோனுமாலும் | 80 |
| எடுத்தெ றிந்தனன் | 168 |
| எண்டரும்புகழ் | 154 |
| எண்டவிரவரை | 85 |
| எண்ணுர்வழுத்துந் | 82 |
| எண்ணரிகந்த | 207 |
| எண்ணரிலொற்றர் | 193 |
| எண்மரி | 182 |
| எந்தை கேளொரு | 214 |
| எந்தை தின் | 202 |
| எந்தை யங்கு | 224 |
| எந்தை யனனை | 196 |
| எந்தையான | 117 |
| எந்தை வந்தது | 125 |
| எந்தை வேலுக்கு | 102 |
| எம்பரம | 181 |
| எமபிராட்டியை | 209 |
| எமபெருமானிவண் | 251 |
| எம்பெருமான்சினந் | 240 |
| எம்பெருமானமுனி | 16 |
| எம்மை யிங்ஙன | 218 |
| எம்மொடு | 201 |
| எய்தியாயிர | 100 |
| எல்லவ ரிடத்து | 204 |
| எழுந்தாள் | 234 |
| எழுந்துதந்தைதன் | 157 |
| எழுந்துதன்ம | 85 |
| எள்ளரு நீர்மை | 215 |
| எழுந்துமாயை | 139 |
| எனவிதி | 201 |
| என்சொல்கேணிதை | 213 |
| என்றபின்பரன் | 231 |
| என்றயன் | 200 |
| என்றலுமரிமுக | 163 |
| என்றிடலு | 14 |
| என்றிடலு | 170 |
| என்றிடலு | 19 |
| என்றிடலு | 48 |
| என்றிடவயனை | 84 |
| என்றிடவனையர் | 84 |
| என்றிவைகுமரவேளி | 162 |
| என்றிவை யாவு | 243 |
| என்றீது | 111 |
| என்றீது | 173 |
| என்றுகூற மிகுந்த | 101 |
| என்று கூறியுத | 211 |

| | பக்கம் |
|---|---|
| என்றுசொற் | 147 |
| என்றுபல வேலவ | 41 |
| என்று பற்பல | 100 |
| என்று பற்பல | 232 |
| என்றுபினடற்பெறு | 37 |
| என்றுபுகன்றவ | 250 |
| என்றுவன | 114 |
| என்றுமியளித்தன | 162 |
| என்றே பல | 212 |
| என்னலு மன்னவள் | 249 |
| என்னவிடை | 235 |
| என்னவிது | 38 |
| என்னவே | 112 |

ஏ

| | |
|---|---|
| ஏகித்திறல் | 186 |
| ஏங்குறவிடை | 22 |
| ஏதமறநிடு | 232 |
| ஏதமினீரின் | 247 |
| ஏதுபுரி | 33 |
| ஏருறுமருந்தவ | 56 |
| ஏவல்செய்து | 68 |
| ஏவை முனிந் | 245 |
| ஏழையேன்ற | 116 |
| ஏறதேதின | 21 |
| ஏறிநின்றவதி | 126 |
| ஏறுற்ற | 145 |
| ஔலழிந்திட | 248 |

ஐ

| | |
|---|---|
| ஐந்துட னொருபான்க | 205 |
| ஐந்துட னொருபான்ப | 205 |
| ஐயவ வனுய்ய | 241 |
| ஐயனை யிழந்தவர் | 53 |

| | பக்கம் |
|---|---|
| ஐயன்சினந்து | 175 |

ஒ

| | |
|---|---|
| ஒப்பானதற்ற | 75 |
| ஒருதருப்பை | 7 |
| ஒல்லையில் வேலவன் | 251 |
| ஒற்றரிது | 38 |
| ஒற்றனுகியடைந்த | 102 |
| ஒன்றுபங்குனியி | 20 |
| ஒன்று மேவிய | 207 |
| ஒன்னலார் | 7 |

ஓ

| | |
|---|---|
| ஓங்கியவிதுபுகன் | 163 |
| ஓங்குதுயர் | 178 |
| ஓங்குபூதர்கள் | 155 |
| ஓங்குமகக் | 240 |
| ஓங்குமறை | 9 |
| ஓடிய விண்ணவர் | 26 |
| ஓடியுற்ற | 138 |
| ஓதிதுநின்றிட | 27 |
| ஓவிலாவதனிடை | 163 |

க

| | |
|---|---|
| கடியதிரி | 3 |
| கடைகின்ற | 79 |
| கண்டசண்ட | 118 |
| கண்டமிது | 118 |
| கண்டனர்வெருண்டனர் | 37 |
| கண்டனள் வள்ளி | 250 |
| கண்டனள் வள்ளி | 247 |
| கண்டனனிருண்ட | 239 |
| கண்டனன்வீரவாகு | 94 |

| | பக்கம் |
|---|---|
| கண்டானிது | 186 |
| கண்டானீது | 237 |
| கண்டான் | 144 |
| கண்டிதண்டர் | 132 |
| கண்டுதிண்டிறல் | 100 |
| கண்டுமாதவர் | 223 |
| கண்டுவீரனை | 153 |
| கண்டுவென்றிசேர் | 155 |
| கண்ணனதுபோது | 60 |
| கண்ணுதலகன்றிட | 58 |
| கண்ணுதற்பரமற் | 229 |
| கண்ணுதற்பரன் | 124 |
| கதிர்கொள் | 153 |
| கந்தமாமலர்ப் | 124 |
| கந்தனிருந்திடு | 108 |
| கந்தனைந்தை | 122 |
| கந்துகங்கண | 117 |
| கரங்களை | 169 |
| கரந்தானிழந்திட்ட | 82 |
| கரந்துமாயை | 144 |
| கருக்கடல்கடப்பவருள் | 45 |
| கருக்கடன் | 5 |
| கருந்தாழளகக் | 210 |
| கல்லாமனத்த | 174 |
| கள்ளவஞ்சகன் | 159 |
| கற்பெருஞ்சிறை | 196 |
| கனத்ததேரினெடு | 133 |
| கனமாதிடம் | 78 |
| கன்னற்சிலைவே | 24 |
| கன்னிமாரிது | 212 |
| கன்னியிடநண்ணுமிறை | 41 |

கா

| | |
|---|---|
| காசினியி | 184 |
| காசிலேழு | 120 |
| காதன்மீக்கொள | 208 |
| காரிலகுபூதரொடு | 168 |
| காரிலேகுவன | 141 |
| காலிற்கொன்றிடு | 155 |
| கால்கொண்ட | 100 |
| காவிநயனக் | 236 |

கி

| | |
|---|---|
| கிட்டவந்திடுஞ் | 160 |

கு

| | |
|---|---|
| குதித்துவந்து | 119 |
| குந்தவேலினை | 165 |
| குப்புற்றிடுதலும் | 95 |
| குன்றத்தைவென்ற | 73 |
| குன்றலர் | 244 |
| குன்றுநின்றவ | 31 |

கூ

| | |
|---|---|
| கூடரியவாயிரவோ | 59 |
| கூடிவாயுவொடு | 134 |
| கூவிளைத்தழை | 193 |
| கூறிதுநின்றிட | 243 |
| கூறுதற்கிசைவு | 20 |
| கூறுபிரமகைவர்த்த | 10 |
| கூற்றுமென | 187 |

கே

| | |
|---|---|
| கேடற்ற | 72 |

கை

| | |
|---|---|
| கைத்தனுவ | 87 |

| | பக்கம் |
|---|---|
| கைத்தனுத்தனை | 129 |
| கையன்விடுவெங்கணைக | 41 |
| கையுடைத்தவள | 89 |

கொ

| | |
|---|---|
| கொண்டவில் | 129 |
| கொங்குப்பொழிற் | 74 |
| கொற்பகட்டிலூற்று | 66 |
| கொற்றமதுற்ற | 29 |
| கொற்றமதுற்றிடு | 252 |
| கொற்றமுறு | 52 |
| கொன்பாவுதிறல் | 99 |
| கொன்னுர் புகழ்குலவு | 110 |
| கொன்னுறுந் | 140 |

கோ

| | |
|---|---|
| கோடிகணைபட்டுழி | 41 |
| கோடிவெம்பரி | 125 |
| கோரமான | 122 |
| கோலஞாலமொ | 219 |

ச

| | |
|---|---|
| சங்கத்தியின் | 188 |
| சங்கரன்முன் | 14 |
| சங்கரன்னமை | 222 |
| சங்கோலிடுந் | 72 |
| சண்டவெம் | 86 |
| சந்துறுமுகக்கைநெடி | 42 |
| சம்புவகன்றுழி | 253 |
| சம்புவை அன்பொடு | 242 |
| சற்றுந்தகவில் | 25 |

சா

| | |
|---|---|
| சாரதத் | 145 |

| | பக்கம் |
|---|---|
| சாரதற் | 146 |
| சாற்றிய இங்கிது | 98 |

சி

| | |
|---|---|
| சிங்காரமேவு | 176 |
| சித்திரங்கொள் | 122 |
| சிந்தைமகிழ்வோடு | 98 |
| சிரத்தினை | 162 |
| சிலைவளைத் | 149 |
| சிறந்தவீரரை | 157 |
| சின்மயத்தனு | 213 |

சீ

| | |
|---|---|
| சீகரமுலாவு | 180 |
| சீதளக்கிரணத் | 205 |
| சீரணியுநுதலின்விழி | 4 |
| சீராரடற் | 255 |
| சீரிணெடுமன்னிவளர் | 46 |
| சீருலாவுதன் | 161 |
| சீர்கொண்ட | 1.78 |
| சீர்புரிந்திடு | 125 |
| சீறியெம்பெருமானை | 216 |
| சீறுதோன்முகன் | 231 |
| சீறுபூதர் | 213 |

சு

| | |
|---|---|
| சுந்தரங்கொ | 117 |

சூ

| | |
|---|---|
| சூதமுனியீதறிந்து | 7 |
| சூரன்மைந்தனு | 121 |
| சூரன்மைந்தன் | 121 |

| | பக்கம் |
|---|---|
| **செ** | |
| செங்கமல | 179 |
| செந்தேனரும்பொ | 255 |
| செம்மைகொளாறு | 25 |
| செயல்குண | 206 |
| செய்கையின்னது | 135 |
| செல்லாரும | 13 |
| செறிந்ததோள்களிற் | 168 |
| செறிந்து | 141 |
| செறுத்தானேறிய | 237 |
| செற்றமேவிய | 157 |
| செற்றமோடு | 103 |
| செற்றவெங்கணை | 153 |
| செற்றாராகுந் | 106 |
| சென்றிடுவீரன் | 93 |
| சென்னிமுடி | 38 |
| சென்னியாறுள | 192 |
| **சே** | |
| சேர்ந்த | 125 |
| சேயினார் | 203 |
| சேயெனமுன் | 32 |
| சேனையான | 117 |
| **சை** | |
| சையமொத்த | 141 |
| **சொ** | |
| சொற்றருமக் | 13 |
| சொற்றரும்புகழ் | 216 |
| சொற்றவாசகங் | 64 |
| சொற்றவின்னது | 230 |
| சொற்றிடு | 244 |
| சொன்னவை | 92 |
| **சோ** | |
| சோதிமுன்ன | 215 |
| சோரியொடு | 42 |
| **த** | |
| தக்கனக்கனை | 212 |
| தக்கனப் பொழு | 211 |
| தடந்திகழ் | 54 |
| தடுத்து | 136 |
| தண்டருகொண்டல் | 30 |
| தண்டருந்தொடை | 67 |
| தண்டாதகொண்ட | 99 |
| தண்டாதவிறல் கொண்ட | 99 |
| தண்டாமரை | 235 |
| தண்டா விறற் | 236 |
| தந்தாலிவண்வருதி | 235 |
| தந்திரங்கொண் | 119 |
| தந்திரமுறும் | 185 |
| தந்தை யிருந்திடு | 105 |
| தந்தையு மன்னையும் | 253 |
| தந்தையுமில்லை | 86 |
| தந்தையை வணங்கி | 90 |
| தம்பிமடி வானமொழி | 44 |
| தருமகோபனே | 156 |
| தலைமைகொண்ட | 117 |
| தவள நித்தில | 197 |
| தற்றவுணர் | 60 |
| தனக்கிணை | 5 |
| தன்பதத் தாலவன் | 146 |
| தன்னிக ரண்ணல் | 238 |

| | பக்கம் |
|---|---|
| தன்னூருவிற்கொண்டு | 78 |
| தன்னை மதித்த | 236 |

தா

| | |
|---|---|
| தாதார் மலர்க்கை | 73 |
| தாரகன றன் | 128 |
| தாரணியினப்பதி | 46 |
| தாவிலும்பர் | 197 |
| தானவத் | 140 |
| தானவனவரை | 85 |
| தானவன்விடுத்தலுந் | 163 |

தி

| | |
|---|---|
| திண்டிற லின்ன | 242 |
| திண்டிறற் | 164 |
| திருமருவு கயிலைமிசை | 12 |

தீ

| | |
|---|---|
| தீங்கினர் கண்டு | 105 |
| தீதிலா வீரனீ | 151 |
| தீதில்வீரவா | 121 |
| தீதில்வீரனு | 170 |
| தீதின் மாதர்கள் | 222 |
| தீயவர் பண்ணை | 104 |
| தீயவனன்னபின் | 163 |
| தீயிடை மடிந்தது | 57 |

து

| | |
|---|---|
| துங்கமுறுசேனையொடு | 62 |
| துங்கவெம் | 150 |
| துண்டங்கொடு | 187 |
| துண்டமாமதி | 62 |

| | பக்கம் |
|---|---|
| துதியார்கடத்து | 76 |
| துய்யதாமறை | 256 |
| துறக்கவேந்த | 198 |
| துற்றசோப | 123 |
| துன்பங்கொண்டு | 237 |
| துன்பந்தரும் | 77 |
| துன்றுங்கரநிரை | 97 |
| துன்றோர்வளை | 76 |
| துன்னுவானவர் | 191 |

தூ

| | |
|---|---|
| தூயவீரனுக | 120 |
| தூவியங்கதனில் | 131 |

தெ

| | |
|---|---|
| தெண்டிரைக | 38 |
| தெண்டிரைக்கு | 117 |
| தெண்டிரை வாவிநம் | 109 |
| தெரிந்துமகிழ்வாகி | 40 |
| தெரிந்து மகிழ்ந்து | 245 |
| தென்பால் | 22 |
| தென்றிசையினேகியுயர் | 43 |

தே

| | |
|---|---|
| தேடி மயல் | 50 |
| தேரழிந்திடலும் | 128 |
| தேரழித் | 149 |
| தேரழியமுன் | 184 |
| தேரழிய வேறுமொரு | 42 |
| தேரின்மீதொரு | 167 |
| தேரிடுெ வாரிமிசை | 45 |
| தேரைஞ் ஞாறு | 106 |
| தேரொடு வானி | 107 |

| | பக்கம் |
|---|---|
| தேவர்குலப் | 2 |
| தேவர் தங்கள் | 101 |
| தேனமர்கொ | 242 |
| தேவர்வணங்கு | 104 |
| தேனுலாந்தொடை | 198 |

தொ

| | |
|---|---|
| தொழுதுவிரநீ | 152 |

ந

| | |
|---|---|
| நக்கன்றனைப் | 234 |
| நஞ்செயிற்றட | 219 |
| நண்ணலன் | 124 |
| நண்ணரினைய | 40 |
| நண்ணுதேரி | 120 |
| நத்துறுகடம் | 54 |
| நந்தம் பெரும்பதியி | 110 |
| நந்தா நாகர் | 111 |
| நந்தா நாகவு | 110 |
| நந்தியெம் | 205 |
| நலந்திருந்து | 138 |
| நலனுற்ற | 72 |
| நல்லதோர் நாணி | 88 |
| நற்போதமவர்படைத்து | 9 |
| நற்றருமம் | 56 |
| நற்றொழில் புரிந்திடு | 41 |
| நன்புவியிடத்துமிக்க | 4 |
| நன்றிகொன்றிடு | 217 |
| நன்றிதுநன்றி | 248 |

நா

| | |
|---|---|
| நாகத்திலும்பர் | 177 |
| நாகவாயினு | 227 |

| | பக்கம் |
|---|---|
| நாடுபுகழ் | 32 |
| நாட்டியபுகழ் | 92 |
| நாயகனும் | 19 |
| நாரவேணியா | 20 |
| நாலம்பால் | 31 |

நி

| | |
|---|---|
| நிற்கேது | 71 |
| நின்றபூதரு | 238 |
| நின்றான்பரன் | 234 |
| நின்றிட | 206 |
| நின்றுபுகழ் | 8 |

நீ

| | |
|---|---|
| நீடுகடற்கரை | 30 |
| நீடுகைத்தலை | 225 |
| நீடுபல்படைகள் | 86 |
| நீலன்மீது | 118 |
| நீவிர்களெவரு | 203 |
| நீனிறக்கடமழை | 67 |

நூ

| | |
|---|---|
| நூறுனபத்து | 175 |
| நூறுகொண்ட | 103 |

நொ

| | |
|---|---|
| நொந்தனைந்தீர் | 33 |

ப

| | |
|---|---|
| பகர்ந்த வின்னது | 225 |
| பங்கமுளகொடும் | 97 |

| | பக்கம் |
|---|---|
| பட்டுழி யோரிறை | 107 |
| பண்டு போலவுமை | 211 |
| பண்டெனவடாது | 57 |
| பத்தின் | 208 |
| பரிந்திடு வளங்கிளர் | 47 |
| பற்றினன்சில | 166 |
| பற்றுறு தந்தை | 105 |
| பன்னிருமொய்ம்பு | 26 |

பா

| | |
|---|---|
| பாகுற்றமொழி | 81 |
| பாங்குகொண்டு | 160 |
| பாங்குறுங் | 150 |
| பாதக ராயிரர் | 105 |
| பாருலக மீதிலுமை | 37 |
| பாலன | 181 |
| பானுவின்மாற்றலன் | 162 |

பி

| | |
|---|---|
| பிடித்தாண் | 237 |
| பிணங்கள் | 126 |
| பிலத்திளிடை | 183 |
| பிள்ளைச்சந்திர | 14 |
| பிள்ளைத் தண்மதி | 31 |
| பின்புநாவலந் | 65 |
| பின்புனதுதிரு | 99 |
| பின்புமுன் | 122 |
| பின்னரொருநா | 24 |
| பின்ன ரொற்றர் | 217 |
| பின்னுனதன் | 74 |
| பின்னிரதி | 18 |
| பின்னுமக்கினி | 68 |
| பின்னுமவு | 184 |
| பின்னுமோர் | 122 |

பு

| | பக்கம் |
|---|---|
| புண்டரிகக் | 9 |
| புண்டரீகமா | 155 |
| புரமூன்று | 10 |
| புரிநத யர்ந்தயன் | 230 |
| புரிந்திடலு | 16 |
| புல்லியே தங்கை | 90 |

பூ

| | |
|---|---|
| பூசைபுரிந்து | 23 |
| பூண்டபோரிடை | 152 |
| பூமணம்புரி | 195 |

பெ

| | |
|---|---|
| பெண்ணினுக் | 232 |
| பெய்தேனி | 209 |
| பெருகுசோரிநீர் | 159 |
| பெற்றசீர்க்குலிச | 92 |
| பெற்றந்தனி | 212 |

பே

| | |
|---|---|
| பேரன்புபொருந்திய | 35 |
| பேராவிறலுறு | 96 |
| பேராவிறன்மலை | 95 |

பொ

| | |
|---|---|
| பொங்குகந்த | 1 |
| பொங்குகிரி | 3 |
| பொற்சகட | 39 |
| பொங்குதானையுந் | 70 |

| | பக்கம் |
|---|---|
| பொன்றங்கு | 234 |
| பொன்ருங்கு | 19 |
| பொன்ருங்கு | 234 |
| பொன்ருட | 173 |

போ

| | |
|---|---|
| போதமுறு | 4 |
| போயமரர்க் | 16 |
| போர்புரிந் | 148 |
| போரினிலெதிர் ந்துழி | 38 |

ம

| | |
|---|---|
| மகம்புரிந்திடு | 217 |
| மகவேந்தன் | 32 |
| மகிழ்ந்து | 143 |
| மங்கலமொடங்களுறு | 47 |
| மங்கலில் கங்கையு | 26 |
| மங்காத | 174 |
| மங்குல்புரை | 49 |
| மங்கைதன்ஞெடு | 195 |
| மங்கையீசன் | 198 |
| மஞ்சநெஞ்சக | 157 |
| மஞ்சுவாகன | 70 |
| மட்டுலாவு | 134 |
| மட்டுறுவி | 236 |
| மண்டபகோபுரம் | 105 |
| மண்டிருதிறத்தின் | 87 |
| மண்டுபவக் | 17 |
| மண்டுதீ | 146 |
| மண்டெழில்கொள் | 56 |
| மண்ணதனில் | 58 |
| மண்ணுகியும் | 87 |
| மண்ணிலுலாவுறும் | 29 |
| மண்ணிலோடு | 121 |

| | பக்கம் |
|---|---|
| மருந்தானவின்ப | 255 |
| மருமலர்த்தொடை | 67 |
| மருமலிந்திடு | 231 |
| மருவாரிதழி | 24 |
| மற்றதனை | 31 |
| மற்றதிஞெளித்திடலும் | 39 |
| மற்றதுபினுந்திறல் | 43 |
| மற்றதுபின் | 7 |
| மற்றதுபின் | 51 |
| மற்றவர்தங்களை | 28 |
| மற்றவன் மனைவி | 203 |
| மற்றவன்றனை | 159 |
| மற்றிணையில்வேலவன் | 45 |
| மற்றிது நிற்க | 241 |
| மற்றிது நின்றிட | 108 |
| மற்றிதைப் | 62 |
| மற்றிவாறிவ | 224 |
| மற்றிவ்வேலை | 118 |
| மற்றிவ்வேலை | 138 |
| மற்றிவ்வேலை | 171 |
| மற்றிவ்வேலை | 190 |
| மற்றுநூறு | 123 |
| மற்றுமுள்ள | 65 |
| மற்றெவர்க்கு | 215 |
| மற்ருருதேரில் | 88 |
| மற்ருெரு பெருந்தேவி | 59 |
| மற்ருேர் | 126 |
| மனந்தனின் | 52 |
| மன்றற்சடங்கு | 23 |
| மன்றன்மாமது | 64 |
| மன்ஞகனம் | 145 |
| மன்னிடும்புகழ் | 161 |
| மன்னியதவம் | 52 |
| மன்னியிடு | 49 |
| மன்னுகணைமேனிபட | 42 |
| மன்னுகுடிலை | 34 |

| | பக்கம் |
|---|---|
| மன்னுங்காதன் | 210 |
| மன்னுதக்கனிவை | 211 |
| மன்னுதனு | 180 |
| மன்னுபற்பகல் | 63 |
| மன்னுவெற்பில் | 197 |
| மன்னுவெற்றி | 133 |

மா

| | |
|---|---|
| மாசறு மன்னவர் | 27 |
| மாசி லிமக்கிரி | 28 |
| மாசில்பெரும்புகழ் | 233 |
| மாசுறென்பு | 218 |
| மாணனவெழில் | 80 |
| மாணுறுந் | 147 |
| மாதவங்கொளிம | 20 |
| மாதவமெழில் | 51 |
| மாதிறல் வச்சிர | 106 |
| மாயமேசெயு | 153 |
| மாய்ந்த வஞ்சக | 154 |
| மாரவேளை | 221 |
| மாரியெனும்படி | 250 |
| மாருதவலவ்வன்விடு | 45 |
| மார்பிற்பொருந்தி | 177 |
| மாலவன்கம | 220 |
| மாலவன்றனை | 65 |
| மாலைசேர் குழன் | 221 |
| மாலேதங்கிய | 237 |
| மால்படைத்த | 132 |
| மால்விட்ட | 177 |
| மாவேலையாலமதை | 2 |
| மாறவுணர் | 169 |
| மாறுகொண்டிரு | 224 |
| மாற்கரிய | 2 |
| மாற்றருங்கட | 152 |
| மாற்றிவஞ்சகன் | 159 |

| | பக்கம் |
|---|---|
| மான்மகன் | 161 |

மி

| | |
|---|---|
| மிக்கதேரின் | 171 |
| மிக்கமாயவள் | 154 |
| மிக்கவின்னது | 193 |
| மிக்கவெற்பகை | 142 |
| மிக்கவேள்வி | 214 |
| மிடல்கொண்ட | 77 |
| மிண்டுகொண்ட | 118 |
| மின்னுசுப்பனைய | 254 |
| மின்னுரை | 111 |
| மின்னிகர் | 115 |
| மின்னுலாந்தனிவாள் | 95 |

மீ

| | |
|---|---|
| மீனஞ்சுமந்து | 111 |

மு

| | |
|---|---|
| முக்கணாயகன் | 228 |
| முச்சிரமுள்ளவன் | 145 |
| முடிவான கொடியோர் | 74 |
| முந்திவந்துயர் | 130 |
| முந்துநொந்திடு | 238 |
| முந்துறநிகழ்ந்தன | 163 |
| முந்தேபொருந்துற்ற | 77 |
| முப்பகல் | 55 |
| மும்மையாயிரம் | 154 |
| முரண்டரும் | 142 |
| முறித்தபிணியிரு | 107 |
| முற்காலத் | 8 |
| முற்றுணர் | 113 |
| முன்பொரு | 200 |

| | பக்கம் |
|---|---|
| முன்னமொருவைகலின் | 46 |
| முன்னமோர் | 63 |
| முன்னரோர்பக | 228 |
| முன்னூண் | 255 |
| முன்னெனவடங்கு | 57 |

மூ

| | |
|---|---|
| மூடுசாலிகை | 126 |
| மூண்டகோப | 135 |
| மூதண்ட | 186 |
| மூளுகின்ற | 214 |

மெ

| | |
|---|---|
| மெத்தமுரு | 39 |
| மெத்துமத்திர | 128 |
| மெத்துமின்ப | 256 |
| மெய்த்தவம் | 203 |
| மெய்ப்பாணி | 175 |

மே

| | |
|---|---|
| மேகவாகன | 193 |
| மேதகுநாரத | 251 |
| மேதகுமரிக்குமலர் | 40 |
| மேயுமப்படை | 142 |
| மேவுற்றவிது | 82 |
| மேவொருநா | 244 |
| மேனலங்கொள் | 117 |

மை

| | |
|---|---|
| மைந்துற்ற | 255 |
| மையலதொழிந்திட | 42 |
| மையவுணர் | 180 |

| | பக்கம் |
|---|---|
| மையறுதடங்கண்மட | 44 |
| மையிலாத | 119 |

மொ

| | |
|---|---|
| மொய்ம்புடைய | 39 |
| மொய்வள | 200 |

யா

| | |
|---|---|
| யாவரேனும்மர் | 136 |

வ

| | |
|---|---|
| வஞ்சனிதுசொல | 136 |
| வண்டார் தொடைக் | 254 |
| வண்டு படிந்த | 238 |
| வண்டுலாவரும் | 124 |
| வண்மைகொண்ட | 137 |
| வந்த சரங்களை | 107 |
| வந்தபடை | 185 |
| வந்தமதன் | 17 |
| வந்த வச்சிரம் | 156 |
| வந்தவந்த | 123 |
| வந்தளப்பில் | 120 |
| வந்து கணப்படை | 243 |
| வந்துசிலபுந்தி | 54 |
| வந்து செருததணி | 245 |
| வந்து தக்கன | 217 |
| வந்துதந்தை | 152 |
| வந்து நந்தியுறு | 21 |
| வந்துவிரைந்து | 104 |
| வந்துபட்ட | 132 |
| வந்துபரனைப் | 22 |
| வந்துமன்னவன் | 101 |
| வந்தெதிர்பு | 39 |

| | பக்கம் |
|---|---|
| வந்தெதிர்ந்த | 119 |
| வரையற்று | 176 |
| வரையிலோடுமா | 160 |
| வல்லியமிடற்பதன் | 45 |
| வளங்குலவு | 11 |
| வளர்ந்த பின் | 226 |
| வளருகின்றதுங் | 66 |
| வள்ளியை நோக்கி | 247 |
| வற்றுதுறுகடல் | 95 |
| வன்புற்றகூலத்தை | 81 |
| வன்மைதங்கு | 190 |
| வன்றவ | 53 |
| வன்னிசேர் | 151 |

வா

| | |
|---|---|
| வாங்கழன்மிடற்புரவி | 47 |
| வாரணத்திரு | 194 |
| வாரணமுகததவுணர் | 38 |
| வாரிமன்ன | 116 |
| வாலுற்ற தண்புனல் | 110 |
| வாவிநாறு | 123 |
| வாளதுபிடித்து | 169 |
| வாளிபட்டிடப் | 158 |
| வாள்கொண்டிடுநெடு | 97 |
| வானகத்தெழு | 68 |
| வானோர் தமைச்சிறையில் | 109 |

வி

| | பக்கம் |
|---|---|
| விடுத்தவை | 169 |
| விட்டபோது | 122 |
| விட்ட வாளிகள் | 103 |
| விட்டவாளிபட் | 156 |
| விட்டவிட்டபடை | 127 |
| விட்டவின்னவை | 166 |
| விட்டவெம்படை | 137 |
| விட்டிடலு | 32 |
| விண்டுவரு | 18 |
| விண்டொடு | 245 |
| விண்டொடு | 206 |
| விண்டோய் கயிலை | 212 |
| விண்ணவர்கண் | 8 |
| விண்ணோர்கள் | 79 |
| விண்ணுலாமிமை | 197 |
| வித்தகமங்கைய | 27 |
| விந்தஞ்சினந்து | 72 |
| விரிகின்ற | 6 |
| விரித்திடும் | 69 |
| விரிபதுமத் | 15 |
| விருத்தையுயிர் | 56 |
| விரைத்தார்மிடைந்திடு | 110 |
| வில்லார் | 144 |
| விழுந்தனள் | 54 |
| விழுந்தான் | 236 |
| விழுந்துமண்மிசை | 156 |
| விற்றுணித் | 120 |

வீ

| | |
|---|---|
| வீசலுற்ற | 120 |
| வீசுபுகழாறுமுக | 32 |
| வீரம்வீரர் | 121 |
| வீரரில் வீரன் | 108 |
| வீரவாகுஎன்னுமொரு | 98 |
| வீரவாகுவும் | 139 |
| வீரவாகுவெதிர் | 134 |
| வீரவேற்கை | 256 |
| வீரனேவலின் | 237 |
| வீரன்றனை நோக்க | 235 |
| வீழுமன்னதை | 131 |

| | பக்கம் |
|---|---|
| வீரமல்வெற்பி | 73 |
| வீருமொருகிரி | 96 |
| வீருனதண்டு | 177 |
| வீருன தாரகனை | 109 |
| வீறியமகவான் | 88 |
| வீறிவந்திடு | 126 |
| வீறிவந்திடு | 165 |
| வீறிவரு | 179 |
| வீறுகாளியொடு | 238 |
| வீறுகின்ற | 170 |
| வீறுகின்ற | 136 |
| வீறுகொண்ட | 116 |
| வீறுசிங்கனது | 128 |
| வீறுதங்கிய | 233 |
| வீறுமின்னது | 227 |
| வீறுவெற் | 153 |
| வீறென்று | 72 |

வெ

| | |
|---|---|
| வெங்கணை களும்பல | 40 |
| வெங்குருவிற் | 3 |
| வெஞ்சமர் | 242 |
| வெந்திறல் | 138 |
| வெந்திறல் | 182 |
| வெந்திறல்கொள் | 43 |
| வெந்திறல்கொள் | 121 |
| வெம்பதி னுயிர | 107 |
| வெய்யசூர் | 171 |
| வெய்யவத | 33 |
| வெய்யனுக் | 148 |
| வெவ்வேளாக | 30 |
| வெள்ளியெனுந் | 243 |
| வெள்ளிவரை | 15 |
| வெள்ளிவெற்பிடை | 226 |
| வெள்ளைவாரணத் | 87 |
| வெற்றிகொள | 84 |
| வெற்றியனி கஞ்சுலவ | 47 |
| வெற்றிவேலுடை | 152 |
| வென்றிகொண்ட | 134 |
| வென்றிகொள் குன் | 249 |
| வென்றிபுனையெஃகமது | 43 |
| வென்றியுற | 37 |
| வென்றியுறு | 13 |
| வென்றியுறு | 34 |

வே

| | |
|---|---|
| வேங்கை தன்னை | 223 |
| வேதமேவுதிரு | 21 |
| வேதனாரினிற் | 167 |
| வேதனொடு | 178 |
| வேதன் மான் முத | 219 |
| வேதன்முன் | 121 |
| வேலனேவலின் | 195 |
| வேலனையன்பொடு | 249 |
| வேலன்சொரி | 187 |
| வேல்வாழி | 255 |
| வேளைகேட்டுழி | 225 |
| வேளையெரித்த | 25 |
| வேறுபதினுயிரம் | 58 |
| வேறு மனேக | 106 |
| வேறுதேரவுண | 129 |

வை

| | |
|---|---|
| வைத்துமெய்ப்பணிகள் | 21 |
| வையமிசை | 183 |